# "பல்துறை வித்தகர்"
# உயர்திரு. சரா. புவனேஸ்வரன்



# மணிவிழா மலர்
## 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60
1963 - 2023
years
Diamond Jubilee

# மணிவிழா

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் கௌரவ பொதுச் செயலாளரும்
தற்போதைய ஆலோசகரும் சிரேஷ்ட விரிவுரையாளரும் நல்லூர், அரியாலை
சயன்ஸ் அக்கடமியின் இயக்குநரும் வெற்றித்தேர்வு வெளியீடுகளின் பிரதம ஆசிரியருமான

## உயர்திரு. சரவணமுத்து புவனேஸ்வரன்
## (சரா) அவர்கள்

# மணிவிழா மலர்

**18.06.2023**

சரா மணிவிழாச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | |
|---|---|
| தலைப்பு | : "பல்துறை வித்தகர்" சரா. புவனேஸ்வரன் மணிவிழா மலர் |
| பதிப்பு | : 2023.06.18 |
| அளவு | : B5 |
| பக்கம் | : xxxvi + 218 |
| வெளியீடு | : சரா மணிவிழாச் சபை, சயன்ஸ் அக்கடமி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| தொலைபேசி இலக்கம் | : 077 5388471 |
| பதிப்புரிமை | : மணிவிழாச் சபையினருக்கு |
| அச்சுப்பதிப்பு | : எஸ்.எஸ். ராஜா பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம். 0776545713 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரா மணிவிழாச்சபை



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)** :- திரு. L. யஸ்ரின் அன்ரனிற்றோ, திரு. V. தயாபாலன், திரு. S. தர்மரட்ணம், திரு. P. தனபாலசிங்கம், திரு. S. கணேசலிங்கம், Dr. லயன் V. தியாகராஜா (தலைவர்), திரு. S. சர்வானந்தன் (செயலாளர்), திரு. K. இந்திரன் (பொருளாளர்), திரு. S. ஸ்ரனிஸ்லாஸ் (ஆலோசகர்), திரு. ஐ. குமரதாசன் (மலராசிரியர்), திரு. P. தமிழ்மாறன் (உப தலைவர்)

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)** :- திருமதி. S. சாந்தினி, திரு. R. சிவபுத்திரன் (உப செயலாளர்), திரு. S. பாலச்சந்திரன், திரு. N. செல்வேந்திரா, திரு. P. உதயராசா, திரு. M. சசிக்குமார், திரு. T. பாலகணேஸ், திரு. M. பிரியந்தன், திரு. S. சிவபாலசுந்தர், திரு. S. சத்தியரூபன், திருமதி. S. உதையச்செல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரா மணிவிழாச் சபை

## விழா அமைப்பாளர்கள்

| | |
|---|---|
| தலைவர் | கருமத்திருதி Dr.லயன் V.தியாகராஜா<br>நூற்றாண்டு ஆளுநர், (2016/ 2107)<br>சர்வதேச லயன்ஸ் கழகம். |
| உப தலைவர் | திரு. P. தமிழ்மாறன்<br>சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி. |
| செயலாளர் | திரு.S.சர்வானந்தன்<br>பழைய மாணவன், சயன்ஸ் அக்கடமி. |
| உப செயலாளர் | திரு.R.சிவபுத்திரன்<br>சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி |
| பொருளாளர் | திரு.K.இந்திரன்<br>நிதிச் செயலாளர்,<br>இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். |
| கௌரவ ஆலோசகர் | திரு.S.ஸ்ரனிஸ்லாஸ்<br>சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி |
| நிர்வாக உறுப்பினர்கள் | திரு.S.கணேசலிங்கம்<br>கௌரவ பொதுச் செயலாளர்,<br>இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.<br>திரு. S. தர்மரட்ணம்<br>யாழ். மாவட்டத் தலைவர்,<br>இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.<br>திரு. P. தனபாலசிங்கம்<br>யாழ். வலயத் தலைவர்,<br>இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. P. உதயராசா

**சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி.**

திரு. V. தயாபாலன்

**விழா நாயகனின் நெருங்கிய நண்பர்.**

திரு. L. ஜஸ்ரின் அன்ரனிற்றோ

**விழா நாயகனின் நெருங்கிய நண்பர்.**

திரு. M. பிரியந்தன்

**சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி.**

திரு. N. செல்வேந்திரா

**சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி.**

திரு. T. பாலகணேஸ்

**சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி.**

திரு. S. பாலச்சந்திரன்

**சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி.**

திரு. M. சசிக்குமார்

**துணைத் தலைவர்,**

**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**

திரு. S. சிவபாலசுந்தர்

**துணை நிதிச் செயலாளர்,**

**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**

**மலராக்கம்**

**மலராசிரியர்** — திரு. I. குமரதாசன்

**சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி.**

**உறுப்பினர்கள்** — திரு. S. சத்தியரூபன்

**சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி.**

திருமதி. S. சாந்தினி

**சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி.**

திருமதி. S. உதையச்செல்வி

**சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாத் தலைவரின் உள்ளத்திலிருந்து...



**தனக்குவமையிலாதான்**

நேர்மையும், அன்பும், கருணையும், இனிமையும், நிறைந்த சரா. புவனேஸ்வரன் அவர்கள் அறுபதாவது அகவையினைப் பூர்த்தி செய்வதும் அவர்தம் மணிவிழாக் குறித்து மலர் பிரசுரமாவதும் மட்டிலல்லா மகிழ்ச்சியைத் தருகின்றது.

எந்தக் காரியங்களை கையிலெடுத்தாலும் சிறப்பாகவும், திறமையுடனும் ஒழுங்குற நிறைவேற்றுகின்ற தனக்குவமையில்லாத "சரா" அவர்களின் மணிவிழாச் சபையின் தலைவராக விளங்குவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள சம்பூர்க் கிராமத்தில் சீரும், சிறப்புடனும் வாழ்ந்த சரவணமுத்து அவர்களின் புதல்வராக உதித்து வடக்குக்கு ஒளிபாய்ச்சும் புவனேஸ்வரன் அவர்கள் உடற்கல்வி ஆசிரியராக நியமனம் பெற்று நெற்றி வியர்வை நிலத்திற்சேர வருந்தி உழைத்து விரிவுரையாளராகி எந்த விடயங்களையும் தனித்து நின்று சாதிக்கும் நெஞ்சுரம் பெற்றவராக திகழ்கிறார்.

பல ஆண்டுகளாக இவரது செயற்பாடுகளை அருகிருந்து அவதானித்தவன் என்ற வகையில் நெருங்கிப் பழகி நான் வழங்கும் நல்லாலோசனைகளை இணங்கிக் கேட்டு தமக்கே உரித்தான பாணியில் செயற்பட்டு பிறருக்கு உதவுகின்ற பண்புகளால் பலராலும் மதிக்கப்படும் கைங்கரியங்கள் பலவற்றையும் சாதித்துக் காட்டிய மாண்புடையவராக விளங்குகின்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராக தசாப்தம் கடந்து தன் பதவிக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்த இவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை மற்றும் பாடசாலை நிகழ்வுகள் பலவற்றிலும், இவரது நுணுக்கமான செயலொழுக்கத்தையும் கண்ணியத்தையும் அருகிருந்து பார்த்துப் பெருமையடைந்திருக்கின்றேன்.

"சயன்ஸ் அக்கடமி" நிறுவனத்தினூடாக உயர்ந்த கல்வியினையும், ஒழுக்கத்தையும் போதித்து சிறந்த பண்பாளர்களை உருவாக்குகின்ற சரா அவர்கள் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த கணிசமான மாணவர்களுக்கு இலவசக் கல்வியினை வழங்குகின்ற நல்லுள்ளங் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியராக, விரிவுரையாளராக, சமூக சேவையாளராக, கலைஞராக, அறிவிப் பாளராக என்னினிய நண்பராக விளங்கி மணிவிழாக் காணுகின்ற புலமையாளரான சரா அவர்கள் நூற்றாண்டு விழாக் கண்டு தொடர்ந்தும் நற்பணிகள் ஆற்றவும் நீண்ட ஆரோக்கியத்துடன் வாழவும் எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தனைப் பிரார்த்தித்து என்னினிய வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

லயன் Dr. வை. தியாகராஜா
தலைவர்,
சரா மணிவிழாச்சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாச் செயலாளரின் சிந்தனைகளிலிருந்து...



"இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்"

எனும் சினிமாப் பாடல் வரிகள் என் காதில்படும் போதெல்லாம் என் மனக் கண்ணில் தோன்றும் விம்பமாக விளங்கும் பல்துறை ஆளுமை, வாழ்க்கைப்பாதையில் நல்லதோர் குருகுலம் காட்டிய தகப்பன் , எந்தை என என் சிந்தையில் எழுந்தருளியிருக்கும் குருநாதர், என் தாயை நிகர்த்த தலைவன், அருமையும் பெருமையும் பெரும் கௌரவத்தையும் ஒருங்குசேரப் பெற்ற பெரியவர் உயர்திரு.சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு இன்று மணிவிழா.

திரும்பிப் பார்க்கிறேன், திகைத்துப் போகிறேன்,

எத்தனை தடைகள், எத்தனை சவால்கள், எத்தனை போராட்டங்கள் அவை அனைத்தையும் விஞ்சும் எத்தனை எத்தனை வெற்றிகள் , சாதனைகள், மகுடங்கள் இவை எல்லாம் சொல்வதற்கு தனி ஒரு நூலே என்னால் எழுத முடியும். அந்தளவிற்கு நான் பார்த்து, வியந்த ஓர் அதிசயப் புத்தகம் எங்கள் மணிவிழாநாயகன். அதன் ஒவ்வொரு பக்கமும் காலத்தை வென்ற காவியங்களாகவே திகழ்கின்றன. இத்தகையதோர் பெருமகனிற்கு இன்று மணிவிழா

தேரோடும் கனவுகளை தெருவோடு விட்டு போராட வந்த தலைவன்!

அவர் வாழ்க்கை எவ்வளவு பேராட்டம் மிகுந்ததோ பின்னாளில் எதற்கும் போராடும் திறனாகவே தன்னை செதுக்கிக் கொண்ட போராளி, எதற்கும் தயங்காத முற்போக்குச் சிந்தனையாளர், கர்வமும் , வீரமும் இவருடன் கூடவே பிறந்திருக்கின்றன. தன்னலம் பாராது பிறர் நலம் பற்றும் நேர்த்தியான பார்வை விநாடி தோறும் வியப்பை தருகின்ற தலைமை. காலால் நடக்கும் உலகை நாவால் நடந்த பெருந்தகை. தன்பேச்சாற்றலால் அனைவரையும் கட்டிப்போடும் ஆற்றல்மிகு தொழிற்சங்கவாதி, சிங்கத்தமிழ்நடை, சங்கத்தமிழ்நடை, தங்கத்தமிழ் நடை கொண்ட தத்துவத்தின் தேரோட்டம். நாவிலும் பேனாவிலும் கலைமகளை கொண்டிருக்கும் பிரம்மாவாய் திகழும் புதுமை செய் படைப்பாளி, வித்தகஞானம் கொண்ட மாண்புறு எம்தலைமகனுக்கு இன்று மணிவிழா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா கண்டு மாட்சிமை பெறும் மாண்புறு நாயகன் எங்கள் இயக்குநர் பெருமான்.

தன் வாழ்நாளில் பெரும் பகுதியை கல்விக்காய் அர்ப்பணித்த செயல்வீரன் , கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் கவிதைகளைப்பாடி அடக்கம், பொறுமை எனும் அணிகளைச் சூடி வரும் கல்விக்காவலன் அப்பழுக்கற்ற ஒப்பற்றதலைவர், எம்மை எல்லாம் வாழ வைத்த தெய்வம், சரா. புவனேஸ்வரனார் இன்று மணிவிழாக் கண்டு மாண்புறும் வேளையில் இவ்விழாவை நடாத்த வேண்டும் என்று பற்றுறுதியுடன் முன்வந்த சரா மணிவிழாச்சபையினர் அனைவரையும் மனதார வாழ்த்தி இந்நூலின் வாயிலாக மணிவிழா நாயகனின் வியத்தகு வாழ்வையும் வியத்தகு பணிகளையும் வெகுவாக பதிவு செய்ய முடிந்ததை இட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு மணிவிழா மலரை வெளிக்கொணர உழைத்த அனைவருக்கும் நன்றி கூறி மணிவிழா நாயகனின் வாழ்வும் வளமும் ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி எட்டுத்திக்கெங்கும் பரவி பெரும்புகழ் பெற்றிட என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து அன்பான வாழ்த்துக்களைக் கூறி அமைகின்றேன்.

செ. சர்வானந்தன்,
செயலாளர்,
சரா. மணிவிழாச்சபை,
சரா. பொன் விழாச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

திறமை, துணிவு, அர்ப்பணிப்பு ஆகியவற்றை அணிகலன்களாகக் கொண்டு மணிவிழாக் கண்ட உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களின் வியத்தகு பணிகளை நயந்து மணிவிழா எடுப்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

தன்னலம் கருதாது பிறர் நலன் நோக்கி இடர்படும் கல்விச் சமூகத்திற்கு தன் பணிக் காலம் வரை அயராது உழைத்த சரா. புவனேஸ்வரன் அவர்களின் சேவையை வியந்தும் நயந்தும், நினைந்தும் கல்விச் சமூகமானது இம் மணிவிழாவை கொண்டாடுவது அவரின் இணையற்ற சேவைக்கு சூடுகின்ற மணிமகுடமாகவே கருத முடிகின்றது.

ஆற்றல் மிகு ஆசானாக கல்விப் பணியில் அடியெடுத்து வைத்த மணிவிழா நாயகன் அவர்கள் விரிவுரையாளராக, வினைத்திறன் மிக்க வளவாளராக , வெற்றிக்கு வழிவகுக்கும் வெற்றித்தேர்வின் பிரதமஆசிரியராக நல்லூர், அரியாலை "சயன்ஸ் அக்கடமி"யின் நிர்வாகத்திறன் மிக்க இயக்குநராக, துணிச்சல் மிக்க தொழிற்சங்கவாதியாக பல பரிமாணங்களில் மிளிர்ந்துள்ளார்.

மணிவிழா நாயகனின் மகத்தான சேவைகளைத் தாங்கி மலரும் இவ் மணிவிழா மலரினூடாக ஓர் வரலாற்று ஆவணமாக்கிக் கொள்வது மிகவும் காத்திரமான ஒரு செற்பாடேயாகும். அதற்கமைய பல்துறையாளர்களும் இணைந்து அவரின் தன்னலமற்ற சேவைகளை மற்றும் தமது உள்ளக்கிடைக்கைகளை இம் மலரினூடாக வெளிப்படுத்திபிருப்பது சிறப்புக்குரியதாகும்.

உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலராக மலர்ந்திருக்கும் "பல்துறை வித்தகர் சரா புவனேஸ்வரன்" என்ற மலர் உருவாக்கத்திற்கு உழைத்த அனைவரும் போற்றுதற்குரியவர்களாவர்.

ஐ. குமரதாசன்,
இதழாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரினுள்ளே......

- அருளாசிச்செய்திகள்
- வாழ்த்துச்செய்திகள்
- விழா நாயகன் சரா. புவனேஸ்வரன் அவர்கள் மீதான பன்முகப் பார்வைகள்
- விழா நாயகர் பற்றிய ஆக்கங்கள்
- பல்துறைசார் ஆக்கங்கள்
- பின்னிணைப்பு
- என்றென்றும் நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60

1963 - 2023

years

Diamond Jubilee

# மணிவிழா மலர்

## அருளாசிச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குருமணியின்

# ஆசிச்செய்தி



அன்புள்ளவர்களுக்கு!

கல்விசார் பெருந்தகையீர்!......

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளராக பணியாற்றி இன்று ஓய்வு பெறும் சரா என்னும் புவனேஸ்வரனின் மணிவிழா கண்டு அனைவரும் மகிழ்வடைய இருப்பது மகிழ்ச்சியினைத் தருகின்றது. கல்வித்துறையில் பல சாதனைகளை புரிந்து கல்வித் துறையில் பல மாணவர்களை உருவாக்கி, கல்வித்துறையும் தமிழர்களுடைய அடையாளத்தினையும் உண்டாக்கி கல்வித்துறையில் தனக்கென ஒரு சாதனையினை படைத்துக் கொண்டிருக்கும் சராவினுடைய மணிவிழா அனைத்து மக்களையும் மகிழ்வித்துக் கொண்டிருக்கின்றது. அவர் ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து கல்விப் பணிக்காகவும் சமூக பணிக்காகவும் தன்னை அர்ப்பணித்து குடும்பத்தினருடன் சுக தேகியாக வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம். கௌரவித்து மணிவிழா எடுக்கும் மணிவிழா சபையினரையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். வெளிவரும் மலர் சிறப்புடன் அமைய இறையருளை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்ட குருமுதல்வரின்

# ஆசிச்செய்தி



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கான ஆசிச்செய்தி வழங்கு வதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றேன்.

இயற்கையிலே பருவகாலங்கள் மாறி மாறி வந்து கொண்டிருக்கும். ஆனால் மனிதர்களது வாழ்விலே இப்பருவங்கள் சென்றது சென்றது தான் அவை மீண்டும் ஒரு முறை வரா. இக்காலத்தில் ஒவ்வொரு மனிதராலும் ஆற்றப்படுகின்ற செயல்கள் அவரவர் ஆற்றலுக்கு ஏற்றவாறு வெளிப்படுகின்றன. இவ்வாறு ஒருவரால் ஆற்றப்பட்ட பணிகள், சேவைகள், சாதனைகள் என்பவற்றை அவர் வாழும் காலத்திலேயே பாராட்ட வேண்டும். இச்செயல் ஏனையோருக்கு அவரை வழிகாட்டியாக்க பேருதவியாக அமையும்.

அந்த வகையில் ஆசிரியர் சரா புவனேஸ்வரன் தனது கல்விச் சேவையில் பல வடிவங்களில் பணியாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் சிரேஷ்ட உடற்கல்வி விரிவுரையாளராக, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியராக, நல்லூர், அரியாலை "சயன்ஸ் அக்கடமி"யின் இயக்குநராகவும், "வெற்றித் தேர்வு" வெளியீடுகளின் பிரதம ஆசிரியருமாக கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலான கல்விப்பணியை ஆற்றி வருகின்றார் என்பதை அறிந்து நான் உளமார அவரை வாழ்த்துகின்றேன். கல்விப் பணியுடன் சமூக சேவையாளராகவும் அவர் செயற்படடு வருகின்றார் என்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. எனவே இந்நாளில் அவரை வாழ்த்தி தொடர்ந்து அவரது பணி சிறக்கவும் அவர் உடல் – உள நலத்துடன் மகிழ்ந்திருக்கவும் இறையாசி வேண்டுகின்றேன்.

அருட்பணி. P.J. ஜெபரட்ணம்
குருமுதல்வர்,
யாழ். மறைமாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சொற்செல்வரின்

# ஆசிச்செய்தி



சம்பூர் மண்ணில் பிறந்து, தனது விடாமுயற்சியால் கல்வியில் உயர்ந்து விளங்கியர் திருமிகு. சரா. புவனேஸ்வரன் அவர்கள். ஆசிரியர்களுக்கான தொழிற்சங்க முயற்சியில் அயராது உழைத்து தனது பெயரை நிலைநாட்டியவர். ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக விளங்கிய இவரை யான் நன்கு அறிவேன். மூத்தோரை மதிக்கும் பண்புடைய ஆசிரியர், அகவை அறுபது நிறைவு பெற்று, மணிவிழாக் காண்பது மகிழ்ச்சி தருகிறது. சகல நலன்களுடனும், கோணேஸ்வரப் பெருமானின் நல்லருளால் நீடு வாழப் பிரார்த்திக்கின்றேன். தொடர்ந்தும் சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு, எமது சமூகத்தின் எதிர்கால விருத்திக்கு துணை செய்ய வேண்டும். மணிவிழா எடுக்கும் அவரது மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும் நன்றி கூறுவதோடு எனது நல்லாசிகளையும் வாழ்த்தினையும் தெரிவித்து அமைகிறேன்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்,
தலைவர், ஸ்ரீ. துர்க்காதேவி தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை திருக்கோவில் சிவாச்சாரியாரின்

# ஆசிச்செய்தி



"சிம்மாத்துவாயஜ வித்மஹி சூலகஸ்தாய
தீமஹி தன்னோ காளிப் பிரஜோதஜா"

வில் நதிக்கரையோரம் காட்டு நிழல் மரம் அருகே குடி அமர்ந்து தரணியெல்லாம் ஆளுகின்ற சம்பூர் பதியுறையும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் துணை கொண்டு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு மணிவிழா காணும் இவ்வேளை உங்களுடைய பணியும் பொதுச் சேவைகளும் இந்த வையகத்தில் பிறவியெடுத்த ஒவ்வொரு உயிர் ஜீவனுக்கும் கல்வியெனும் அகத்தை ஆரம்பித்து சிறந்த ஆசிரியராகவும் நல்ல பண்பாளனாகவும் விளங்குகின்ற நீங்கள் மென்மேலும் உங்களுடைய பணி தொடரவும் சமூகப்பணி, சமுதாயப்பணி இவற்றுக்கு மேலாக சம்பூர் மண்ணின் சிறந்ததொரு காளியாட்சியின் பிள்ளையாகவும், பிறந்த மண்ணின் பெருமையையும் வாழ்வு தந்த மண்ணின் பெருமையையும் பேணுகின்ற நீங்கள் நிலையான உள்ளமும், நிமிர்ந்த பார்வையும் கொண்டு இன்னும் பல பணிகள் செய்து சிறப்பாக வாழ வேண்டும் என்றும், வறுமை ஒழிப்புக் கல்வி திட்டத்தை ஊக்கப்படுத்தி இன, மத பேதமின்றி பல மாணவர்களின் எதிர்காலத்திற்கு கல்வி வழிகாட்டிய நீங்கள் வாழும் போதே உம் சேவைகளை வாழ்த்தி அதில் பெருமை கொள்வதே சிறப்பாகும். உங்களுடைய அறுபதாவது மணி விழா சிறக்க வேண்டும் என்று சம்பூர் பத்திரகாளி அம்பாளுடைய பரிபூரணமான ஆசியுடனும், திருக்கோவில் ஹீ சகல கலை அம்பாளுடைய ஆசியும் உங்களுக்கு உரித்தாக வேண்டும் என்று அடியேனின் மனசா பக்தியா பரிபூரணமான ஆசீர்வாத வாழ்த்துக்கள்.

சிவஸ்ரீ. தேசமானிய, தேசபந்து, தேசகீர்த்தி,
கி. கிருஸ்ண கவி கீர்த்து குருக்கள்
திருக்கோவில் அம்பாறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதித் தென்றல் இயக்குனர் அருட்தந்தை அவர்களின்



# ஆசிச்செய்தி

என் நண்பர், இலங்கைத்தமிழ் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் உயர்திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலரிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். 1986ம் ஆண்டு நான் யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது இவரின் அறிமுகம் எனக்கு கிடைத்தது. கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு மேலாக நாங்கள் இருவரும் ஆரோக்கியமான தொடர்பில் இருக்கின்றோம். அனைவரோடும் நட்புரிமையோடு பழகுவது இவரது இயல்பான குணமாகும். இவர் சிறந்த விளையாட்டு வீரன் மட்டுமல்லாது சிறந்த பயிற்றுவிப்பாளரும் கூட. இவரிடம் பயிற்சி பெற்ற பல மாணவர்கள் தற்பொழுது சிறந்த விளையாட்டு வீரர்களாக இருப்பது நானறிந்த உண்மையாகும்.

யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரியில் நான் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த காலத்தில் கல்லூரியின் மெய்வல்லுனர் போட்டியின் ஓட்ட ஆரம்பிப்பாளராகவும் தனது பணியினை நீண்டகாலம் திறம்பட ஆற்றியுள்ளார். அதுமட்டுமல்லாது பலதுறைகளில் மிகவும் ஆர்வத்துடன் செயற்படக்கூடிய செயல்வீரனாகவும் தன்னை அடையாளப் படுத்திக்கொண்டுள்ளார் அனைவருடனும் நட்புரிமையோடு பழகும் குணம் கொண்டவராக இருப்பதால் பரந்துபட்ட நண்பர் சுற்றுவட்டத்தை தன்னகத்தே கொண்டுள்ளார். கல்விப் புலத்தில் இவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புக்கு தமிழ் சமூகம் நன்றிக் கடன்பட்டுள்ளது. நண்பன் சரா உடல் ஆரோக்கியத்துடனும், ஆன்மீக நிறைவுடனும் ஓய்வு காலத்தில் சிறப்பாக வாழ இறைவனை பிரார்த்திப்பதோடு இறையாசியையும் கூறி நிற்கிறேன்.

அருட்தந்தை எஸ். ஏ. பொன்சியன் அமதி,
இயக்குநர், அமைதி தென்றல்,
உண்ணாப்புலவு, முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60
1963 - 2023
years
Diamond Jubilee

# மணிவிழா மலர்

## வாழ்த்துச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ வடக்கு மாகாண ஆளுநரின்

# வாழ்த்துச் செய்தி



இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.சரா. புவனேஸ்வரன் அவர்கள் தனது 60 ஆவது அகவை நிறைவில் மணிவிழாக் காணும் தருணத்தில் அவரை மனதார வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

1988 ஆம் ஆண்டு முதல் ஆசிரியப் பணியில் சிறப்புடன் செயலாற்றி பின் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றி பல ஆசிரிய மாணவர்களுக்கு வழிகாட்டியும் கல்விச் சமூகத்திற்கு பெரும் பணியாற்றியுள்ளார்.

திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் நூலாசிரியர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர், வினாத்தாள்களின் பிரதமஆசிரியர் என பன்முகப்பட்ட முகங்களில் தனது பணிகளை ஆற்றியுள்ளார். அத்துடன் "வெற்றித்தேர்வு" வெளியீடுகளின் பிரதம ஆசிரியராக இருந்து ஆரம்ப வகுப்பு மாணவர்களின் வெற்றிக்கு ஊன்று கோலாக இருந்துள்ளார்.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிதிச்செயலாளராகவும், தற்பொழுது வரை பொதுச் செயலாளராகவும் பணியாற்றியதோடு சமூகப்பணியிலும் தனது பங்களிப்பை அளித்து வருகின்றார். கற்றலுக்கான அடிப்படை வசதியற்ற மாணவர்களும் சமூகத்தில் கல்வி அறிவோடு திகழ வேண்டும் என்பதற்காக அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், கையேடுகள் என்பவற்றை இலவசமாக வழங்கி ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுள்ளார். அத்துடன் சமூக சேவை வழங்கும் நிறுவனங்களில் முக்கிய உறுப்பினராக இருந்து பல சேவைகளை தனது வாழ்நாளில் முதற் கடமையாக ஆற்றி வருகின்றார்.

இந்நாளில் மணிவிழாக் காணும் திரு.சரா.புவனேஸ்வரன் அவர்களை மண்ணுலகிற்கு ஈன்ற இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டு இவர் வழியாக கல்விச் சமூகம் பெற்ற அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறி இவர் அனைத்து நலமும் பெற்று வாழ்வில் திகழ எனது இறை யாசிகளோடு கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சாள்ஸ் நிர்மலநாதன்,**
**கௌரவ ஆளுநர்,**
**வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிமேதகு ஜனாதிபதியின் மேலதிக செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி



ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினுடைய பொதுச்செயலாளராகவும் பொதுப்பணியாற்றி தற்போது ஓய்வுபெற்று மணிவிழாக் காணும் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் தொழில் சங்க கடமைகளின் போது மாணவர்கள் நலனில் அதீத அக்கறையுடன் கூடிய தொழில் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டமையினை நான் வட மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த கால கட்டத்தில் நன்கறிந்திருந்தேன். குறிப்பாக அரச நிர்வாகத்தின் கடமைகளின் பொறுப்புக்களை உணர்ந்தவராகவும் அதே நேரத்தில் தொழிற்சங்க நடவடிக்கையாக தன்னுடைய அங்கத்தவர்களுடைய நலன் சார் நடவடிக்கைகளையும் ஒரு சமாந்தரமாக நடாத்திச் சென்றமையும் கல்விச் சமூகம் என்ற வகையில் எதிர்கால சந்ததியினரை உருவாக்குகின்ற பணிகளில் இருக்கின்ற ஆசிரியர்களினுடைய பணியை கௌரவிக்கின்ற அந்த நடைமுறையோடு மாணவர்களை முழுமையாக கல்வி மட்டுமின்றி கல்விக்குப் புறப்பான நடவடிக்கைகளையும் மற்றும் சமூகத்திலே ஒரு சிறந்த வழி காட்டியாகவும் இந்நாட்டினுடைய சிறந்த குடிமகனாக மாற்றுகின்ற வகையிலே பணி யாற்றுகின்ற ஆசிரியர்களினுடைய நலன்களை பேணிக்கொண்டு அதே போன்று நிர்வாக ரீதியாக பல்வேறு தடங்கல்களிற்கு மத்தியில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களுடைய விசேட தேவைகளை உணர்ந்து அதன் அடிப்படையில் தன்னுடைய ஆக்கபூர்வமான தொழிற்சங்க நடவடிக்கைகளின் ஈடுபட்டமையினை அறிந்தவன் என்ற வகையில் இந்த வேளையில் வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

யுத்த காலங்களில் ஆசிரியர் நலன்களுக்கு அதிகமாக மாணவர் நலன்களின் அதீத அக்கறையினை வெளிப்படுத்தி தொழிற்சங்க நடவடிக்கைளில் ஈடுபட்டமையும் இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது தன்னுடைய சமூக பணிகளின் ஊடாக வசதி வாய்ப்பற்ற வறிய மாணவர்களுக்கு வழங்கிய சேவையினை தொடர்ந்தும் அவருடைய ஓய்வு காலத்திலும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு திரு சரா புவனேஸ்வரன் அவர்களின் ஒய்வுக்காலம் சிறக்க வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் மணிவிழா மலர் வெளியிடுகின்ற அந்த குழுவினர்களுக்கும் வாழ்த்துக்களையும் தெரித்துக்கொள்கின்றேன்.

இ.இளங்கோவன்,
மேலதிக செயலாளர்,
ஜனாதிபதி செயலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் கௌரவ பொது செயலாளர் உயர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

முன்னாள் சம்பூர் கிராமசபை தலைவர் உயர்திரு சவைணமுத்து இரத்தினம் தம்பதிகளின் புத்திரன் திருவாளர் புவனேஸ்வரன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை திருகோணமலை சம்பூர் மகாவித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டவர். கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையிலும் யாழ் பல்கலைக்கழகத்திலும் பயின்று யா/ அரியாலை கிழக்கு அ. த. க பாடசாலையில் ஆசிரிய பணியை ஆரம்பித்தவர். தொழிற்சங்க பணியின் அதீத ஈடுபாட்டால் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் நிதிச் செயலாளராகவும், கௌரவ பொதுச் செயலாளராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

“வெற்றித்தேர்வு” வெளியீட்டின் பிரதம ஆசிரியராகவும் சமூக சேவையில் ஈடுபாடு கொண்டவராகவும் அறியப்படுகிறார்.

“எழுத்தறிவித்தவன் இறைவன்” என்பதற்கு அமைய வறிய மாணவர்களுக்கு பாடசாலைகளுக்கான இலவச கற்றல் உபகரணங்களையும், கற்றல் கையேடுகளையும் தனியார் கல்வி நிலையத்தினூடாக கற்பித்தல் சேவையினையும் வழங்கி வருபவர்.

திருவாளர் சரா. புவனேஸ்வரன் அவர்களின் சமூக சேவையினை ஆவணப் படுத்தும் நோக்கோடு சரா மணிவிழா சபையினர் மணிவிழா மலரினை வெளியீடு செய்வது பாராட்டுதல்களுக்குரியது.

“தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்”

என்னும் வள்ளுவனின் வாக்குக்கமைய தாம் இன்புறுவதற்கு காரணமான கல்வியால் உலகும் இன்புறுவதைக் கண்டு கற்றறிந்த அறிஞர் மென்மேலும் அக் கல்வியை விரும்புதல் போல் இவரது பணி மென்மேலும் சிறக்க இறைவனை வேண்டி மலரும் மணிவிழா மலர் சிறப்புடன் வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

அ. சிவபாலசுந்தரன்
மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பல்கலைக்கழக வேந்தரின்
# வாழ்த்துச் செய்தி



அரியாலையூருக்கு பெருமை தேடித்தந்து கொண்டிருக்கும் சராத்தம்பியென நான் அன்பாக அழைக்கும் சரா. புவனேஸ்வரனின் மணிவிழா மலரிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

கல்விப்புலத்தில் உயரப் பறக்கும் சரா அவர்கள் ஆயிரமாயிரமாக மாணவர்களை உருவாக்கி வரும் "சயன்ஸ் அக்கடமி"யின் இயக்குநரும், தமிழ் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளரும், "வெற்றித்தேர்வு" வெளியீடுகளின் பிரதம ஆசிரியரும், சிரேஷ்ட விரிவுரையாளருமாவார். அவை மட்டுமன்றி தலை சிறந்த சமூக சேவையாளருமாவார். அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இருந்து இன்று வரை சமூகப் பணியாற்றி வருகிறார்.

இவர் தனது கல்வி நிறுவனத்தில் வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பதற்கான வாய்ப்பினை வழங்கி வருகின்றார். அது மாத்திரமன்றி கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கு விசேட கவனம் செலுத்தி உயரிய பெறு பேறுகளெடுக்க வழிகோலுகிறார். மற்றும் கெட்டிக்காரப் பிள்ளைகளைத் தட்டிக் கொடுத்து மேலும் சிறப்பாகச் சித்திபெற வழிவகுக்கிறார். மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் சிறந்த கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். இதனால் அவருடைய பிள்ளைகள், உற்றார் உறவினர், ஊரவர் ஏன் இந்தப் பிரதேசமே நன்மையடைகிறது. நாமும் அவருடன் கைகோர்த்து செயற்பட விரும்புகிறோம் என்பதுடன் மணிவிழா நாயகனுக்கு மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் சு. மோகனதாஸ்
வேந்தர், வவுனியாப் பல்கலைக்கழகம்
முன்னாள் துணைவேந்தர்,
யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின்



# வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராகவும் பதவி வகித்த திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் இவ்வேளையில் அவரது ஓய்வுக் காலம் ஒளிமயமானதாக அமைய வேண்டுமென வாழ்த்தி இச்செய்தியை வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. சரா. புவனேஸ்வரன் சிறந்த குருவுக்கான எல்லா அம்சங்களையும் கொண்டிருந்தார். அவரது தோற்றம் மிகவும் கம்பீரமானது. காண்பவரின் கவனத்தை ஈர்த்திருக்கவல்லது. அவரது கிருபையும் நல்லாசிகளும் பல சந்ததி மாணவர்களைச் சான்றோர்களாக்கியது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக அவர் செயற்பட்ட காலங்களில் மிகச் சிறந்ததொரு தொழிற்சங்கவாதியாக மிளிர்ந்ததை நாம் எல்லோரும் நன்கறிவோம். ஆசிரியர்களின் உரிமைக்காகவும், அவர்களுக்கான நலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் அவர் தன்னைத் தியாகம் செய்தார். தன்னால் இயலுமானவரை அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

பாடசாலை மாணவர்களை மாத்திரமல்லாமல் மாணவர்களை வழிப்படுத்தும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பேறுபெற்ற ஒரு சிலருள் திரு. சரா. புவனேஸ்வரனும் ஒருவர் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை எனினும், அவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலும், எமது பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி டிப்ளோமாக் கற்கை நெறி முதல் அணி மாணவனாகப் பயின்ற காலத்திலும் நான் அவரை நன்கறிவேன்.

அவர், ஆசிரியராகவும் மாணவனாகவும் துடிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒருவர். வயது அவருக்கு அரச சேவையில் இருந்து ஓய்வைப் பெற்றுக் கொடுத்தாலும், அவர் உழைப்பால் ஓயாமல் இருப்பார் என்று நம்புகிறேன். அவரது உடலுக்குத் தான் வயது அறுபது. ஆனால் அவர் மனது இன்றும் இருபது. துடிப்பு மிக்க அவரது ஆற்றலும் அர்ப்பணிப்பும், ஓய்வு காலத்திலும் மகிழ்ச்சியோடு இருக்கும் வல்லமையை அவருக்குக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

அவரது ஓய்வு காலம் ஒளிமயமானதாகவும், அவர் நீண்ட ஆயுளோடும், ஆரோக் கியத்தோடும் வாழ எல்லாம் வல்ல அம்பிகையின் நல்லாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா,
துணைவேந்தர்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



ஆசிரியராக, விரிவுரையாளராக, தனியார் கல்வி நிலைய இயக்குநராக, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளராக பல்வேறு பரிமாணங்களில் தன்னுடைய ஆளுமையை வெளிப்படுத்தி, பலரது மனங்களிலும் நீங்கா இடம் பிடித்த நற் சேவையாளர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஆசிரியராக, விரிவுரையாளராக சேவையாற்றி பல நன் மாணவர்களையும், நல் ஆசிரியர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர். மாணவர்களுடைய கல்வி வளர்ச்சியில் அதிக ஆர்வம் கொண்ட திரு சரா.புவனேஸ்வரன் அவர்கள் பல வருடங்களாக "சயன்ஸ் அக்கடமி" எனும் கல்வி நிலையத்தின் இயக்குநராகச் செயற்பட்டு, மாணவர்களுக்கு மேலதிக கல்வியை வழங்குவதற்கு தன்னாலான காத்திரமான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

இதற்கு மேலதிகமாக, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவரையாளராக சேவையாற்றி பல நல் ஆசிரியர்களை உருவாக்கிய பெருமையும் இவரைச் சாரும். அத்துடன், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளராக பல வருடங்களாக கடமையாற்றி ஆசிரியர்களுடைய அர்ப்பணிப்பான சேவைக்கும், அவர்களது நலனுக்கும் தன்னுடைய பங்களிப்பை வழங்கிய பெருமைக்குரியவர். இவ்வாறு கல்விப்புலம் சார்ந்த செயற்பாடுகளுக்கு மட்டுமல்லாது சமூக மற்றும் பொது நலம் சார்ந்த செயற்பாடுகளின் வளர்ச்சியிலும் தன்னிகரில்லாப் பங்களிப்பை வழங்கிவரும் ஒரு சமூக சேவையாளர் என்றால் அது மிகையாகாது.

2006ம் ஆண்டு யாழ்ப்பாண குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை துண்டிக் கப்பட்டிருந்த போது, இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கி இருந்த மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி, தனது அர்ப்பணிப்பான சேவையால் இடம் பெயர்ந்திருந்த மக்கள் மனங்களில் நிறைந்திருந்தார். அத்துடன் கொரோனா தொற்று காலத்தில் தனதும், தனது நிறுவனம் சார்ந்தும் தன்னாலான பங்களிப்பினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கல்வி, சமூகப் பணிகளூடாகத் தன்னை அர்ப்பணித்த திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்கவும், அவரது கல்வி, சமூகப் பணிகள் தொடரவும், இன்று போல் என்றும் இளமைத் துடிப்புடன் செயற்படவும் இறைவனின் அருளாசியை வேண்டி நிற்கின்றேன்.

மருதலிங்கம் பிரதீபன்,
மேலதிக அரசாங்க அதிபர் / மேலதிக மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின்



# வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக கடமையாற்றி 01.06.2023 முதல் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களின் சேவையினைப் பாராட்டி வெளியிடப்படவுள்ள மணிவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

01.06.1963 இல் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தின் சம்பூரிலே பிறந்து தனது ஆரம்ப இடைநிலைக் கல்விகளினை தி/ சம்பூர் மகா வித்தியாலயத்திலே சிறப்புறக் கற்றுத் தேர்ந்திருந்தார். உடற்கல்வித் துறையில் பட்டப்படிப்பினை மேற்கொண்டு பட்டம் பெற்றிருந்தார். தான் கற்ற கல்வியினை ஏனையவர்களும் பெற்றுக்கொள்ளும் பயனாக யா/ அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலையில் தனது ஆசிரியர் கடமையினை பொறுப்பேற்று சிறப்பாக கடமையாற்றியிருந்தார். தொடர்ந்து யா/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் கடமையாற்றியதுடன் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற தேசிய பாடசாலைகளில் ஒன்றான யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் தனது பணிகளினை சிறப்பாக ஆற்றியிருந்தார்.

ஆசிரியர் பணியுடன் நின்றுவிடாது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை போன்றவற்றில் விரிவுரையாளராக கடமையாற்றியிருந்தார். தொடர்ந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிதிச் செயலாளராக 2011 வரை கடமையாற்றியிருந்ததுடன் 2011 முதல் ஓய்வு பெறும் வரை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். சங்க செயற்பாடுகளில் முன்னின்று உழைத்து ஆசிரியர்களின் நலனோம்பு விடயங்களில் அக்கறை கொண்டு திறம்பட செயற்பட்டிருந்தார். ஆசிரியர் பணியுடன் மட்டுமன்றி நூல் ஆசிரியர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர் போன்ற பல்துறைகளிலும் தனது திறமைகளை வெளிக்கொணர்ந்து பலரும் அறியச் செய்துள்ளார். அத்துடன் பல்துறைசார் சமூகப் பணிகளிலும் இவரது ஈடுபாடுகள் குறிப்பிட்டுக் கூறத்தக்க இடத்தினை பெற்றுள்ளன.

இவரது அளப்பரிய சேவையினை பாராட்டுவதுடன், தனது ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திப்பதுடன் விழாவினை ஒழுங்கமைப்பு செய்யும் விழா குழுவினர் மற்றும் மலர் வெளியீட்டு பணியினை ஆற்றும் குழுவினர் அனைவரையும் பாராட்டுவதுடன் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற மனதார வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ. உமா மகேஸ்வரன்,
செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



கல்விப் புலத்தில் பல்வேறுபட்ட தளங்களில் நின்று சிறப்பாக பணியாற்றி அகவை 60 காணும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச்செயலாளர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் பணியினை நயந்து வாழ்த்துச் செய்தியினை வழங்கு வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியர், மாணவர் நலன் சார்ந்த விடயங்களை தனது ஆற்றலினாலும் கல்விச் சிந்தனைகளினாலும் வழிநடத்திச் சென்ற இவர் கடந்த யுத்த காலங்களில் வடக்கில் தனித்துவமாக நின்று பணியாற்றிய பெருமைக்குரியவர். இவ்வாறாக ஆசிரியர் நலனிலும் கல்விச் செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்தி ஆசிரியர் உரிமைகளை வென்றெடுக்க இவரூடாக செய்யப்பட்ட பணிகள் ஆசிரியர் சமூகம் உள்ளவரை நினைவுபடுத்தப்படும்.

இவ்வாறாகக் கல்வியுடன் தம்மை அர்ப்பணித்து மாணவர்களினதும், ஆசிரியர் களினதும் நல்வாழ்வுக்காக உயர்வான சேவையாற்றிய இவரின் சிறந்த சாதனை களைப் பாராட்டுவதுடன் இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

A. ஜோண் குயின்ரஸ்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி



மணிவிழாக்காணும் திரு. சரா புவனேஸ்வரன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பிறந்த மண்ணுக்கும் மக்களுக்கும் சமூகப் பணியினையும் கல்விப் பணியினையும் ஆற்றி வருகின்ற இவரது தன்னகரில்லாச் சேவையினை பாராட்டுவதுடன் இவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மூலம் ஆசிரியர்களின் இன்னல் பொழுதுகளில் அவர்களின் சார்பாக குரல்கொடுப்பதுடன் அது தொடர்பாக முன்னேற்றகரமான முடிவுகளை எட்டுவதற்கு தனது அர்ப்பணிப்பான சேவையினை வழங்கியுள்ளார். கல்விப்புலம் சார்ந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அவர்தம் உயர்ச்சிக்கும் தனது ஈடில்லா அளப்பெரும் சேவையினை வழங்கி வருகிறார். விரிவுரையாளராகவும் சமூகக் காவலனாகவும் கல்விச் சமூகத்தின் விருட்சமாகவும் "வெற்றித்தேர்வு" கல்விசார் வெளியீட்டின் ஆசிரியராகவும் தனது பல்பரிமாணத்தன்மையினை வெளிப்படுத்தி நிற்கிறார்.

இவரது இச்சேவையினை கௌரவிக்கும் முகமாக கல்விச் சமூகத்தினால் மணி விழாச்சபை ஸ்தாபிக்கப்பட்டு இவ் அரிய கைங்கரியத்தினை மாணவர்களும் ஆசிரியர்களும் நலன் சார் உள்ளத்தினரும் முன்னெடுப்பதற்கு எனது பாராட்டினைத் தெரிவிப்பதுடன் மேலும் சிறப்புற்று நீடூழி காலம் வாழ வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. எ. அன்ரன் யோகநாயகம்
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பிரதேச செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி



இயற்கை எழில்கொஞ்சும் கோணேசர் பூமியாம் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்திலுள்ள சம்பூர் கிராமத்தின் முன்னாள் கிராம சபைத்தலைவரான திரு நா. சி சரவணமுத்து மற்றும் இரத்தினம் தம்பதிகளுக்கு மகனாக 1963 ஆம் ஆண்டு ஆனி மாதம் 1 ஆம் திகதி திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்கள் பிறந்தார். இவர் திருகோணமலை சம்பூர் மகாவித்தியாலயத்தில் தனது இளமைக் கல்வியை பயின்று பின்னர் உடற் கல்வித்துறையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை, மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கற்றுத் தேர்ந்தார். இவர் ஆரம்ப காலத்தில் ஆசிரியராக யா/ அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலையிலும், தொடர்ந்து யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்திலும் அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலும் பணிபுரிந்தார். அதன் பின்னர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மற்றும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் நிதிச் செயலாளராக 2011 வரை பணி யாற்றியதோடு அக்காலப் பகுதி முதல் ஓய்வு பெறும் வரை கௌரவ பொது செயலாளராகவும் பணியாற்றி தொழிற்சங்கத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவர் தனது பிரத்தியேக கல்விப்பணி ஊடாக "சயன்ஸ் அக்கடமி"யில் கல்வியில் துறை தேர்ந்த ஆசிரியர்களை நியமித்து ஆயிரக்கணக்கான மாணவர்களிற்கு கல்வியினைப் புகட்டிவரும் (நல்லூர்,அரியாலை) கல்வி நிலையத்தின் இயக்குநராக 35 ஆண்டுகள் பயணிப்பதுடன் நூல் ஆசிரியராகவும்,பதிப்பாசிரியராகவும் வெளியீட்டாளராகவும் (வெற்றித் தேர்வு வெளியீட்டகம் – ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கானது) "வெற்றித்தேர்வு" வினாத்தாள் பிரதம ஆசிரியராகவும் இருந்து இலங்கை பூராகவும் மாணவர்களது கல்விக்காக அளப்பரும் பணியாற்றி வருவதை கண்கூடாக காணமுடிகிறது.

அது மட்டுமல்லாமல் சனசமூக நிலையங்கள், அறக்கட்டளைகள், அன்னதான சபைகளில் இணைந்து பல சமூகப்பணிகளை ஆற்றிவருவதுடன் மட்டுமல்லாது கற்றலுக்கான அடிப்படை வசதியற்ற மாணவர்களுக்குரிய இலவச கல்வி நடவடிக்கைகளை தனது "சயன்ஸ் அக்கடமி" நிறுவனத்திலே செயற்படுத்தி வருகின்றார். அத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்தங்கிய கிராமங்களில் காணப்படுகின்ற பாடசாலைகளுக்காக இலவசமாக கற்றல் உபகரணங்கள் மற்றும் கற்றல் கையேடுகளையும் வழங்கி பாடசாலை கல்விச் செயற்பாட்டிற்காக பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றார். அத்துடன் அரியாலை அபிவிருத்தி சங்கத்துடன் இணைந்து பல வறிய மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்து சமூகத்தில் அனைவரது உள்ளத்திலும் அழியா இடம்பிடித்தவர் என்றால் மிகையாகாது.

தொடர்ந்து இவரது சேவையானது எமது மாணவர்களின் கல்வித்துறையின் வளர்ச்சிக்கு பெரும்பங்களிப்பினை ஆற்றியுள்ளதுடன் , இவர் ஆற்றிய கல்விப்பணி மற்றும் சமூக பணிகளை பாராட்டும் முகமாக 18.06.2023 அன்று சேவை நயப்பு விழா ஒன்றினை ஏற்பாடு செய்திருக்கும் சரா மணிவிழாச் சபையினருக்கு மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன், விழா நாயகனான உயர்திரு சரா புவனேஸ்வரன் அவர்கள் நீண்ட ஆயுளுடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

திரு. எஸ்.சுதர்சன்,
பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



அகவை அறுபது அடைந்து ஆளுமை பொலிவில் மிளிர்ந்து சீர்மிகு சிறக்க மணி விழாக்காணும் வடபுலத்தின் செயற்றிறன் மிக்கதோர் ஆசிரியர் உரிமைக்காக குரல் கொடுத்த பாரம்பரிய சங்கமாகிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளரும் விரிவுரையாளருமாகிய உயர்திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

"விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கிணங்க கிழக்கின் திரு மலையின் தென்கரையில் சம்பூரில் இருந்து ஆசிரியப் பணிக்காய் புறப்பட்டு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற வேளையில் ஆசிரியர் உரிமைக்கான குரல் ஓங்கத் தொடங்கியதெனலாம். அப்போதைய அரசின் இராணுவ, பொருளாதார அரசியல் நிலமைகளுக்கு கொஞ்சமும் பயப்படாமல் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து தன்னை இனங்காட்டிய ஒருவர் எனலாம் ஆசிரியராக, தொழிற்சங்கவாதியாக என கல்விப் பணி செய்த காலங்கள் மூன்று தசாப்தங்களை கடந்து விட்ட அனுபவ முதிர்ச்சி பணி நிறைவில் பார்போற்ற வைத்துள்ளது.

கடந்து வந்த காலங்கள் கடும் சவால்களைக் கொண்ட கரடுமுரடானவையாக இருந்தாலும் நற்குணமும் சீரிய சிந்தையும் ஆற்றலும் பொருந்திய செயற்றிறன் கல்விக் களத்தில் வெற்றிகளை வென்று தந்தது.

உள்ளத்தின் நேர்த்தி உயர்வைத் தரும் என்பதற்கிணங்க உன்னத சேவை யினை வழங்கி ஓய்வு பெறும் அன்பருக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள். அன்புடன் பிணைந்த இல்லாளும் உதித்தெழுந்த நன்மக்கட் செல்வமும் உறு துணையாய் இருந்து உயர்வைத் தரட்டும், வாழ்க வளமுடன்.

முத்து. இராதாகிருஷ்ணன்
வலயக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாண கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



சரா.புவனேஸ்வரனும் நானும் ஆசிரியர் பயிற்சியில் ஒன்றாக இணைந்தவர்கள். அந்தக் காலத்திலேயே சிறந்த தலைவனாக, தொண்டனாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். ஆசிரிய மாணவர்களுக்கு போதிய வசதிகள் கிடைக்காத வேளைகளிலெல்லாம் அவர் தலைமைதாங்கி போராடி அவர்களது உரிமைகளைப் பெற துணை நின்றார்.

அக்காலத்திலேயே சிறந்த விளையாட்டு வீரனாகவும் அவர் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். விளையாட்டுத்துறை மூலம் ஆசிரியர் மாணவர்கள் அனைவருமே அறிந்த ஒருவராக அவர் பிரபலம் பெற்றிருந்தார்.

அதன் பின்னர் நான் சராவை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளராக தான் சந்தித்தேன். ஆசிரியர்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்த பதவி. அதனை சரா மிகுந்த அர்ப்பணிப்புடன் செய்தார். ஆசிரியர்கள் பாதிப்புக்கு உள்ளாகும் போது அச்சமின்றி குரல் கொடுத்தார்.

நான் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் வந்து கல்விப் பணிப்பாளர் ஆகிய பின்னர் வலய இடமாற்ற சபை கூட்டங்களில் நானும் அவரது சங்கமும் எதிரெதிர் நிலைகளில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் நான் மேற்கொண்ட இடமாற்றங்கள் எனக்கு சரியாக இருந்தன. ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்று அறிந்த போது அவர்கள் மேற்கொண்ட தீர்மானங்கள் அவர்களுக்கும் சரியாகவே இருந்திருக்கும் இரண்டு சரிகளுக்கும் இடையில் நின்று நானும் சராவும் கண்ணியமாக போராடி இருக்கின்றோம்.

வலய பிரதிநிதியால் ஒரு விடயத்தை செய்ய முடியாது போகும் போது அந்தத் தகவல் சராவுக்கு சென்றடையும். அடுத்த நிமிடமே அவரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வரும் ஆசிரியர்களின் விடயங்களில் நாங்கள் முரண்பட்டாலும் எங்களின் அன்பும், நட்பும் ஒருபோதும் பாதிக்கப்பட்டதில்லை. அதற்கான பக்குவமும் புரிந்துணர்வும் இதுவருக்குமே இருந்தது.

நண்பனின் மணிவிழா செய்திகேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். அவரது பிறந்தநாளுக்கு வீடு தேடிச் சென்று வாழ்த்தியது எனக்கு மகிழ்ச்சியை தருகின்றது. இவரது ஓய்வுகாலம் மிகுந்த மகிழ்ச்சியுடனும் உடல், உள ஆரோக்கியத்துடனும் குடும்பத்தினருடன் இனிதே வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் ஆசி கிடைக்க வேண்டுவதுடன் ஓய்வுகாலம் சிறக்க இனிதே வாழ்த்துகின்றேன்.

பொ. ரவிச்சந்திரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச்செயலாளராகக் கடமையாற்றி 01.06.2023.முதல் அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களது சேவையினை மதிப்பளிக்கும் முகமாக வெளிவரும் "மணிவிழா" மலருக்கு வாழ்த்துச்செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருகோணமலையினை பிறப்பிடமாகக் கொண்ட திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலையில் தனது ஆசிரிய பணியினை ஆரம்பித்தார். அதன் பின்னர் யாழ்/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, யாழ்/மத்தியகல்லூரி ஆகிய பாடசாலைகளில் தனது கல்விச்சேவையினைத் தொடர்ந்து மாணவர்கள் மத்தியில் தனக்கென ஓர் இடத்தினை நிலைநிறுத்தியிருந்தார்.

பின்னர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றில் விரிவுரையாளராகவும் கடமையாற்றி வினைத்திறனான பல ஆசிரியர்களை எமது மாவட்டத்திற்கு உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

இவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் 2011ஆம் ஆண்டு வரை நிதிச் செயலாள ராகவும், அதனை தொடர்ந்து 12 வருடங்கள் ஓய்வுபெறும் வரை அச்சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி வந்தார்.

35 வருடங்கள் தனியார் கல்வி நிலைய இயக்குனராகக் கடமையாற்றி வந்ததுடன், வெற்றிதமதேர்வு வெளியீட்டகத்தினால் வெளிவரும் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான வினாத்தாள்களின் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றினார்'.

தனது ஆசிரியச் சேவைக்கு அப்பால் அறக்கட்டளைகள், சனசமூக நிலையங்கள் , கழகங்கள், அன்னதான சபைகள் என சமூகத் தொண்டுகள் ஆகியவற்றினுள்ளும் தம்மை இணைத்து மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிகளை பெற்று வந்தார்.

தனது கல்விச் சேவையினை சிறப்பாக நிறைவேற்றி ஓய்வுபெறுகின்ற திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களை மனதாரப்பாராட்டுவதுடன், அவரது ஓய்வுக்காலம் குடும்பத்தினருடன் மகிழ்வாக அமைய எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்தித்துக்கொள்வதோடு, இவரது திறமை மற்றும் அவரது அர்பணிப்பான சேவை ஆகியவற்றை மதித்து வெளிவரும் மணிவிழா மலருக்காக உழைத்த மலர்வெளியீட்டுக்குழுவினருக்கும் இந்நேரத்தில் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கி. கமலராஜன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரின்

# வாழ்த்துச் செய்தி



**பல்துறை செயல்வீரன்.....**

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் உயர்திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக அவருடன் பழகும் வாய்ப்பும், அவரின் செயற்பாடுகள், குணநலன்களை அறியும் சந்தர்ப்பங்களும் எனக்குக் கிடைத்துள்ளன. அவர் பல்துறைகளில் சிறப்புற்று விளங்கியவர். சிறந்த ஆசிரியராகவும், தொழிற்சங்க வாதியாகவும் விளங்கும் அவர் தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்குப் பல சேவைகளைப் புரிந்துள்ளார். மேலும் தமிழ் ஆசிரியர்களின் நலன்களைப் பேணி அவர்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உழைப்பதிலும், அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் சிறந்த தொழிற்சங்கவாதியாகச் செயற்பட்டவர், செயற்பட்டு வருபவர்.

மேலும் தமிழ் மக்களின் மேம்பாட்டிற்கு உழைக்கும் அரசியல் ஆர்வம் கொண்டவராகவும் யுத்தத்தாலும் மற்றும் பல்வேறு இடர்பாடுகளாலும் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு மற்றும் புதுவாழ்வுக்கும் பாடுபடுபவராகவும் செயற்படுபவர். மேலும் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களின் சுக துக்கங்களில் பங்குபற்றி தன் கடமையைச் செய்யும் பண்பினர்.

திருகோணமலை பாராளுமன்றத் தொகுதியில், தமிழர் ஐக்கிய முன்னணியில் கௌரவ சம்பந்தர் ஐயாவுடன் இணைந்து போட்டியிட்டு குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்றவர். அவரைத் தேசியப் பட்டியல் பாராளுமன்றப் பிரதிநிதியாக நியமித்திருந்தால் கொட்டியாரத் தமிழ் மக்களுக்குப் பெரும்பணியாற்றி இருப்பார் என்பது திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்களது கருத்தாக இருந்தது. சரா. புவனேஸ்வரனின் செயல் திறன்களைப் பயன்படுத்த கௌரவ சம்பந்தர் ஐயா தவறிவிட்டார் எனப் பலரும் கவலைப்படுவதுண்டு.

தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு – குறிப்பாக விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டிற்குப் பாடசாலைக் கூட்டமைப்புக்குள்ளும் அதற்கு வெளியாலும் – நல்லூர், அரியாலை "சயன்ஸ் அக்கடமி" மூலம் சிறப்பாகச் செயற்பட்டு சாதனைகள் படைத்த பெருமைக்குரியவர் சரா. புவனேஸ்வரன் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சிறப்புக்களையும் ஆற்றல்களையும் உடைய அவர் அரச சேவை யிலிருந்து ஓய்வு பெற்றாலும், தொடர்ந்து தமிழ் மக்களின் சமூக – பொருளாதார அரசியல் மேம்பாட்டிற்காகத் தனது உழைப்பைக் கொடுக்க வேண்டும் என அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

சமூக சேவகனான சரா. புவனேஸ்வரன் அவர்கள் நீண்ட ஆயுளுடனும், ஆராக்கியத்துடனும் தன் குடும்பத்தாருடன் இனிதே வாழ வாழ்த்துகின்றேன்.


பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்/ முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதியின்

# வாழ்த்துச் செய்தி



### பன்முக ஆளுமை கொண்ட ஆசிரியர்......

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் உயர்திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எனது நண்பரும், சிரேஷ்ட விரிவுரையாளரும், "சயன்ஸ் அக்கடமி"யின் இயக்குநரும், "வெற்றித்தேர்வு" வெளியீடுகளின் பிரதம ஆசிரியரும், இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்தின் பொதுச்செயலாளருமான உயர்திரு. சரா. புவனேஸ்வரனின் பன்முக ஆளுமையினைக் கண்டு நான் பலமுறை வியந்திருக்கிறேன். மிகப்பெரிய கல்விச்சமூகத்துடன் அவர் தொடர்புபட்டிருந்த காரணத்தினால் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கும் கடினமான பணியை அவர் எதிர்கொண்டிருந்தமையை நான் அறிவேன். ஆனாலும், எந்தவிதமான பிரச்சினைகளையும் ஆசிரியர் என்ற நிலையில் நின்று தீர்த்துவைக்கும் ஆற்றல் கொண்டவராக மணிவிழா நாயகன் காணப்பட்டமை எனக்கு வியப்பினை ஏற்படுத்துவதாக இருந்தது எனக் கூறினால் அது மிகையாகாது.

உயர்திரு. சரா. புவனேஸ்வரன் தொழிற்சங்கம் சார்பில் ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் அதேநேரம் கல்வித்திணைக்கள அதிகாரிகளை வெற்றிகொள்ளும் வகையில் தந்திரோபாயங்களை கையாளும் திறன் கொண்டவராகவும் காணப்பட்டார். அதேபோல், "சயன்ஸ் அக்கடமி"யின் இயக்குநர் பொறுப்பினைக் கொண்டிருந்த காரணத்தினால் ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கையாளும் திறன்கொண்டவராகவும் அவர் காணப்பட்டார். தனியார் கல்லூரிகளுக்கு எடுத்துக்காட்டாக காணப்படும் "சயன்ஸ் அக்கடமி"யின் நிர்வாகம் மாணவர் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சமகாலத்தில் எவ்வாறு மேம்பட வைக்கலாம் என்ற மணிவிழா நாயகனின் வெற்றிகரமான நிர்வாகத்திற்கான எடுத்துக்காட்டாகும். குறிப்பாக இக் கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நான் கலந்துகொள்ளும் காரணத்தால் மணிவிழாநாயகனின் வெற்றிகரமான ஒழுங்கமைப்பைக் கண்டு பெருமை கொண்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்திரு. சரா புவனேஸ்வரன் அவர்களின் குடும்ப நண்பராக நான் இருந்த காரணத்தால் அவரின் தனிப்பட்ட வாழ்க்கையை நான் நன்கறிவேன். பிள்ளைகளுக்கு உயர்கல்விக்கான வழிகளை ஏற்படுத்தி வைத்திய அதிகாரியாக பட்டம்பெற வழி கோலியதுடன் தனது குடும்பத்தவர், உறவினர்கள், நண்பர்கள் என எல்லோருடனும் நல்லுறவை பேணி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இத்தகைய பெருமைக்குரிய நண்பன் மணிவிழாக் காண்பது மகிழ்ச்சியைத் தருவதுடன் அவர் தனது குடும்பத்தினருடன் நலமாக பல்லாண்டு காலம் வாழவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன் என வாழ்த்தும்,

பேராசிரியர் க.தேவராஜா
முன்னாள் பீடாதிபதி முகாமைத்துவ
கற்கைகள் வணிகபீடம்
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண சபை அவைத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் உயர்திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு நல்லாசிரியனாகவும், ஆசிரிய கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், சிறப்புற கல்விப் புலத்தில் தமது சேவையை நிறைவுச் செய்த பெருந் தகையாக திரு. சரா புவனேஸ்வரன் அவர்களை நாம் பார்க்கிறோம்.

தாம் உண்டு தம் குடும்பம் என்றில்லாது தாம் சார்ந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர்களின் நலன்களுக்காக தொழிற் சங்கமான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக மிக நீண்ட காலம் சேவையாற்றிய பெருமை அதன் முன்னாள் பொதுச் செயலாளர் திரு. மகாசிவத்தை தொடர்ந்து திரு. சரா. புவனேஸ்வரனையே சாரும்.

ஒரு சீரிய தொழிற்சங்கவாதியாக அர்ப்பணிப்புடனும், துணிச்சலுடனும் சேவை யாற்றியது மட்டுமன்றி தன்னலமற்ற தமிழ்த் தேசிய உணர்வாளராகவும் திகழ்ந்துள்ளார். கிழக்கிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டதால் வடக்கு கிழக்கு மக்களின் உறவுப் பாலமாகவும் இவர் இருந்துள்ளார். அவ்வாறே இனியும் இருப்பார்.

கல்விப்புலச் சேவைகளுக்கு அப்பால் சமூக சேவையிலும் தீவிர ஈடுபாடு கொண்டவராக நலிந்தோர்க்கு உதவுவதில் மிகுந்த அர்ப்பணிப்புடன் தம்மை வெளிக் காட்டாமல் சேவையாற்றியவர். பாடசாலை சேவைகளுக்கு மேலாக "சயன்ஸ் அக்கடமி" என்ற தனியார் கல்வி நிறுவனத்தை உருவாக்கி நிர்வகித்து பல்லாயிரம் மாணவர் களின் கல்வி முன்னேற்றதிற்கு பேருதவி செய்து வரும் பெருமகன் ஆவார்.

நல்ல குடும்பத் தலைவனாகவும் நல்ல தந்தையாகவும் நல்ல நண்பனாகவும் மனிதத்துவம் மிகுந்த மனிதனாகவும் ஏனையோர்க்கு சிறப்பான முன்னுதாரணமாக வாழ்ந்து வரும் சரா. புவனேஸ்வரன் வயது காரணமாக கல்விப்புலச் சேவையிலிருந்து ஓய்வு பெறுவது தவிர்க்க முடியாதது. எனினும் தமது ஓய்வு காலத்தில் எமது இனத்துக்கும், மொழிக்கும், கலாசாரத்திற்கும், தாயகத்திற்கும் ஓய்வின்றி உற்சாகத்துடன் சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு அருள வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

சீ.வீ.கே. சிவஞானம்
அவைத்தலைவர்,
வடக்கு மாகாண சபை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரின்



# வாழ்த்துச் செய்தி

"மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், கருமமே கண்ணாயினார் ....." என்ற நீதிநெறி விளக்கப் பாடலை நினைக்கும் போதெல்லாம் என் மனக்கண்முன் திரு சரா.புவனேஸ்வரன் அவர்களே ஞாபகத்திற்கு வருவார். எமது கலாசாலையில் அவர் விரிவுரையாளராகச் செயற்பட்ட காலத்தில் பன்முக ஆளுமைமிக்க ஆசிரியர்களை உருவாக்க அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார்.

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் அநேகமானவை வசதி குறைந்தவை. அதிலும் குறிக்கப்பட்ட பாடத்திற்கென ஆசிரிய வளம் குன்றிய பாடசாலைகளுமாகும். குறிப்பாக வகை III பாடசாலைகளில் உடற்கல்விக்கென பாடத்துறை சார்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. பாடத்துறைக்கு அப்பால் விளையாட்டுப் போட்டி, உடற்கல்விச் செயற்பாடுகள், நாடகங்கள், கலைவிழாக்கள் போன்றவற்றை ஆசிரிய கலாசாலைகளில் பயின்ற ஆசிரியர்களே அங்கு முன்னின்று நடாத்தி வருகின்றனர்.

இவ்வாறாக ஆளுமை உள்ள ஆசிரியர்கள் உருவாகக் காரணம் பன்முக ஆளுமை கொண்ட விரிவுரையாளர்களின் வழிகாட்டல் என்றால் மிகைப்படாது. திரு சரா.புவனேஸ்வரன் அவர்கள் உடற்கல்வித் துறை சார்ந்த விரிவுரையாளராக விளங்கியதுடன் நாடகத்துறை சார்ந்த நிகழ்ச்சிகளிலும், கலாசாலை சஞ்சிகை வெளியீட்டு முயற்சிகளிலும் தன்னை அர்ப்பணித்து ஈடுபடுத்திக் கொண்டார்.

அவரது கற்பித்தல் திறமையால் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு சுற்றாடல்சார் செயற்பாடுகள் மற்றும் பொது அறிவு சார்ந்த திறன்களை வழங்கினார். தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வழங்கும் நாடறிந்த புகழ்பூத்த ஆசிரியர் அவர் என்பது யாவரும் அறிந்ததே.

ஆசிரியரது நீதிக்காக எவருக்கும் அஞ்சாமல் குரல்கொடுக்க வேண்டும் என்ற சிந்தனை கொண்டவர். இதனால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் 2011 ஆம் ஆண்டில் இவரை பொதுச் செயலாளராகத் தெரிவு செய்தது. பொதுச் செயலாளர் பணியின் காரணமாக கலாசாலைப் பணியில் இருந்து தன்னை முழுமையாக விடுவித்துக் கொண்டார். இருப்பினும் கலாசாலைக்கும் அவருக்குமான உறவு ஆசிரியர்களின் நலன்களை மையப்படுத்தியதாக இன்றும் இருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகப் பணிகளில் விருப்புடன் உழைக்கும் திரு சரா.புவனேஸ்வரன் அவர்களை எமது சமூகம் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஓய்வின் பின்னரும் அவரது குரல் ஆசிரியர் நலன்களுக்காகவும், இனத்தின் உரிமைக்காகவும் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

மணிவிழாக் காணும் நாயகருக்கு இனிய நல்வாழ்த்துகளை எமது கலாசாலைக் குடும்பத்தின் சார்பில் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்

திரு. சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூ சயன்ஸ் ஹோல் நிர்வாக இயக்குநரின்



# வாழ்த்துச் செய்தி

பன்முக ஆளுமையாளர் தம்பி சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு மணிவிழா மலரினூடாக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

சரா புவனேஸ்வரன் அவர்களுக்கும் எனக்குமான தொடர்பு நீண்டகால வரலாறு கொண்டது. சிறந்ததொரு ஆசானாக, நிர்வாகியாக, விரிவுரையாளராக துணிச்சல் மிக்கதொரு தொழிற்சங்கவாதியாக, பல பரிமாணங்களில் சராவை நான் கண்டு கொண்டேன். மிகச் சிறந்த நிர்வாகத்திறன் கொண்ட சரா. புவனேஸ்வரன் அவர்கள் இன்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு மேலாக "சயன்ஸ் அக்கடமி" என்ற கல்வி நிறுவனத்தை பொறுப்பேற்று ஒழுக்க கட்டுப்பாட்டுடனும், சிறந்த வினைத்திறனுடனும் நடாத்தி வருவது பாராட்டப்படக் கூடியதொன்றே. ஆண்டு தோறும் பல சாதனை மாணவர்களை உருவாக்கி சரித்திரம் படைத்து வரும் நிறுவனமாக "சயன்ஸ் அக்கடமி" மிளிர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நல்லைக் கந்தனின் அருளாசியுடன் சாதனை படைத்து வரும் "சயன்ஸ் அக்கடமி"யானது மணிவிழா நாயகனின் கட்டுப்பாடான இறுக்கமான நடைமுறைகளால் ஒரு சிறந்த கல்வி நிறுவனமாக இன்றும் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

மணிவிழா நாயகன் சரா. புவனேஸ்வரன் அவர்களின் கல்விப் பணிகளுக்கோ சமூகப் பணிகளுக்கோ வரையறை வகுக்க முடியாது. சேவையே இலக்காகக் கொண்டு செயற்படும் சரா. புவனேஸ்வரன் மாணவர்களின் நலன்களுக்காகவும், ஆசிரியர்களின் உரிமைகளுக்காகவும் எந்நேரத்திலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து குரல் கொடுக்கும் ஒருவராக மிளிருகின்றார். அகவை அறுபதில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் இவர் தம் பணிகள் என்றும் ஓயப்போவதில்லை. இவர் நீண்ட ஆயுள் பெற்று தமது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வாழ நல்லைக் கந்தனை வேண்டுவதுடன் மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இரா. அருட்செல்வன்,
நிர்வாக இயக்குநர்
நியூ சயனஸ் ஹோல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி
உப பீடாதிபதியின்

# வாழ்த்துச் செய்தி



காலத்தை வென்ற சரா....

தனது அர்ப்பணிப்பு மிக்க சேவைகளால் தமிழர் கல்வி வரலாற்றில் மிகப் பெரும் வரலாற்று நாயகனாக நண்பர் சரா. புவனேஸ்வரன் அவர்கள் மிளிர்கின்றார். கிழக்கே உதிக்கும் சூரியன் எட்டுத் திக்கும் ஒளியைப் பாய்ச்சுவது போல இலங்கையின் எல்லாத் திக்கிலும் அவரின் பணிகள் பரந்து விரிந்துள்ளன. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தினூடாகத் தமிழ் ஆசிரியர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவர் ஆற்றிய பணிகள் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடியன.

17.08.1988 இல் நாம் இருவரும் ஒன்றாக ஆசிரிய நியமனத்தைப் பெற்று ஆசிரியத்துவத்தின் பல்வேறு பரிமாணங்களில் கடமையாற்றியிருக்கின்றோம். அன்று தொட்டு இன்று வரை எனது சிறந்த நண்பனாக, வழிகாட்டியாக அவர் திகழ்ந்து வருகிறார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சரா விரிவுரையாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் 2001 இல் இக்கல்லூரி தேசிய ரீதியில் முதன்மைக் கல்லூரியாக அறிவிக்கப்பட்ட வரலாற்று நிகழ்வில் சராவின் பங்களிப்பு மிகவும் பாராட்டத்தக்கது. ஆசிரிய மாணவர்களிடம் எவ்வித பணமும் அறவிடாமல் கப்பலில் அழைத்துச் சென்று 21 நாட்கள் பல்வேறு சிரமத்தின் மத்தியில் மாணவர்களை பல்வேறு போட்டிகளில் பங்குபெற வைத்து சாதனைகள் நிலை நாட்ட உறுதுணையாக இருந்தார்.

“ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்” என்பதற் கிணங்க அவரது பிள்ளைகளின் கல்வி சாதனைகள் மிகவும் பாராட்டத்தக்கது.

நண்பர் சரா சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் இருந்து தொடர்ந்து சமூகப் பணி யாற்ற இறைவனை வேண்டி நிற்பதுடன் மணிவிழா நன்நாளில் அவருக்கு எனது மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

S.R. சத்தியேந்திரம்பிள்ளை
உப பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின்
## முன்னாள் அதிபரின்



# வாழ்த்துச் செய்தி

துடிதுடிப்பான ஆளுமை மிக்க நிர்வாகி.....

எனது பேரன்பிற்கும் விசுவாசத்திற்கும் ஏற்றதொரு மாணவன் தம்பி சராவின் மணி விழாச் செய்தி அறிந்து புளகாங்கிதம் அடைகின்றேன். இவரது மணிவிழா சபை என்னிடமிருந்து வாழ்த்துச் செய்தி ஒன்றை எதிர்பார்த்து இருந்தமை மேலும் மகிழ்ச்சியைத் தருகிறது.

1991 இல் ஆசிரிய மாணவனாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அறிமுகமான சரா நீண்டதோர் ஆசிரிய வளர்ச்சிப் பணிகளில், அவர்களின் உரிமைகளில் மேலும் ஆசிரிய இடர்பாடுகளில் துடிதுடிப்பான ஆளுமைத்திறனோடு ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பணிக்கு மேலதிகமாக பிரமிக்கத்தக்க இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் பதவியில் அமர்ந்து ஆசிரியர்களுக்காக போராடியதை, சாதித்ததை சீர்தூக்கிப் பார்க்கும் போது சராவின் கடின உழைப்புக்காக ஆசிரிய உலகமே தலைகுனிந்து வணங்கி நிற்கின்றமையை எனது உள்ளம் கண்டு மகிழ்ச்சி அடைகின்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவர்களின் பயிற்சிச் செயற்பாடுகளில் பன்முகக் கோணங்களில் தனது திறமையான ஆற்றல்களை வெளிக்காட்டி சிறந்ததோர் விரிவுரையாளராக மிளிர்ந்தார். அவருடைய சிறப்பான சேவைக்காக அக்கலாசாலையின் அதிபராக இருந்தவன் என்ற வகையில் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சராவினுடைய வாழ்வியல் நீரோட்டம் பூத்துக் குலுங்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையோடு அவரது குடும்ப உறுப்பினர்கள் எல்லோரிடமும் பழகிக் கொள்ள கிடைத்த சந்தர்ப்பமும் இறை செயலாகவே பார்க்கின்றேன். இவரது பணி சிறக்க ஏற்றமுடன் ஒத்துழைக்க குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டிக் கொள்கின்றேன்.

தனிப்பட்ட முறையில் எனது ஆசிரிய கலாசாலை கல்வியலாளர் பயணத்திலும் எனது குடும்பம் சார்ந்தோருக்கும் அர்ப்பணிப்புடன் நல்கிய உதவிகள் யாவற்றையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

சராவின் எதிர்வரும் நாட்கள் மீளவும் கல்விப்புலத்திற்கு அரும்பணி ஆற்றக் கூடிய உடல் வலிமையையும், ஆற்றல்களையும் இறைவன் வழங்கிட வேண்டும் என பிரார்த்திப்பதோடு இவரின் புகழ் பூத்த கல்விச் சேவையை சிறப்பாகப் பாராட்டிக் கொள்கிறேன்.


வே. கா. கணபதிப்பிள்ளை,
முன்னாள் அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி



உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதினையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

அரியாலை அபிவிருத்திச் சங்கம் மூலம் கடந்த 7 வருடங்களாக மணிவிழா நாயகனுடன் நெருங்கிப் பழகக்கூடிய அரிய சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்திருந்தன. அந்த வகையில் உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்கள் கீழ்ப்படிவுள்ள பண்பாளராகவும் இளகிய மனம் படைத்தவராகவும், நீதியைத் தட்டிக் கேட்டு, நியாயம் பெற்றுக் கொள்பவராகவும், கல்விக்காக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பல உதவிகளைப் புரிபவராகவும், மிக வறிய கற்க ஆர்வமுள்ள மாணவர்களுக்கு இலவசமாக கற்பதற்கு உதவி புரிபவராகவும், கல்விப் பற்றுநராகவும், நன்கு திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளை நிகழ்த்தக்கூடிய சிறந்த நிர்வாக விற்பனராகவும் மற்றும் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்து வருகிறார் என்றால் மிகையாகாது.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் கல்வித்துறை தலைவராகவும், உப தலைவராகவும், நிர்வாக சபை உறுப்பினராகவும் பல பதவிகளை வகித்து வந்த காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் நன்கு திட்டமிட்டு ஒழுங்கமைத்து நடாத்தி பலரது பாராட்டினையும் பெற்றுள்ளார். அது மாத்திரமன்றி எந்த வேலையையும் செய்து தருமாறு கோரும்போது, உடனடியாக சிறப்பாக செய்து அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் சிறப்புறுவதற்கு தன்னாலான பங்களிப்புக்களை செய்து வருகின்றார். மேலும் எமது சங்கத்தின் புலமைப் பரிசில் திட்டத்திக் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மாதாந்த கல்விக் கட்டணத்தில் 25 % கழிவினை வழங்கி வருவதுடன், அம் மாணவர்களுக்கு கல்வி மற்றும் ஒழுக்கத்தில் விஷேட கவனம் செலுத்தி வருவதற்கும் இச் சந்தர்ப்பத்தில் சங்கம் சார்பாக நன்றியினை குறிப்பிட விரும்புகின்றேன்.

"சயன்ஸ் அக்கடமி" நிறுவனத்தின் இயக்குநராக இருந்து, அதனை நன்கு திட்டமிடப்பட்டு ஒழுங்கமைத்து நடாத்தி வருவதுடன், பல சவால்களுக்கு மத்தியிலும் அம்மாணவர்களின் கல்வி ஊட்டலுக்கு மாத்திரமன்றி அம் மாணவர்களின் ஒழுக்கத்திலும் மிகவும் கடும் போக்கைக் கொள்வதால், அம் மாணவர்களைத் தவறான பாதையில் செல்லாதிருப்பதற்கும், கல்வியில் மேன்மையடைவதற்கும் உறுதுணையாக திகழ்கின்றார். வருடாந்தம் பல ரூபா செலவில் பரிசளிப்பு விழாவை நடாத்தி மாணவர்களை கௌரவித்து ஊக்கமளித்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழர் ஆசிரியச் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராக நீண்ட காலமாக மிகத் திறமையாக செயற்பட்டு ஆசிரியர்களின் தேவைகளையும், சேவைகளையும் உரிய முறையில் பெறுவதற்கு முழு நேர சேவைகளைச் செய்து வருவது மாத்திரமன்றி தனக்கு அறிமுகமாகாத ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு அநீதி விளைவிக்கும் பட்சத்தில் அதில் தலையிட்டு நீதியைப் பெற உதவி புரிந்த பல சந்தர்ப்பங்களை நான் அவதானித்துள்ளேன்.

இவ்வாறு மேலே குறிப்பிட்ட பல பண்புகளையும் சேவைகளையும் புரிந்து மணிவிழா காணும் உயர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் மென்மேலும் பல சேவைகளைச் செய்து வருவதற்கும் சுகதேகியாக நீண்ட ஆயுளை வழங்குவதற்கும் என இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

சு. சண்முகரட்ணம்
ஓய்வு நிலை பிரதம கணக்காளர்,
யாழ் மாவட்ட செயலகம்.
தலைவர்,
அரியாலை அபிவிருத்திச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக் காருண்யன், பொன்மனச் செம்மல் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



மணிவிழா நாயகனே வாழி! வாழி!.....

என் அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரியவராகத் திகழ்கின்ற உயர்திரு.சரா புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவுவகை அடைகிறேன்.

திருவாளர் சரா. புவனேஸ்வரன் அவர்கள் சிரேஸ்ட விரிவுரையாளர், இலங்கைத் தமிழர், ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர், நல்லூர் அரியாலை “சயன்ஸ் அக்கடமி”யின் இயக்குநர், “வெற்றித்தேர்வு” வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் என பல் பரிமாணங்களில் தன்னை முன்னிறுத்திக் கொண்டவர். ஆசிரியர் சங்க செயலாளராக இருந்து ஆசிரியர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரும்பாடுபட்டவர். அவரது கல்விச் சேவை பாராட்டத்தக்கதாகும்.

எனது மணிவிழா நிகழ்வில் இவரது ஒத்துழைப்பு சிறப்பாக அமைந்திருந்தது. கல்விப்புலம் சாராத என்னை கல்விக் காவலனாக மதிப்பளித்து மாலை மரியாதை களுடன் மேன்மைப்படுத்தியமை இன்னும் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றது.

இவரது ஓய்வு காலம் சீரும் சிறப்புடன் அமையவும் அவரது கல்விப்பணி தொடர்ந்தும் எம் சமூகத்திற்கு கிடைக்கவும் நல் உடற் சுகத்துடன் நீண்ட ஆயுளோடு வாழ எல்லாம் வல்ல நல்லூரானைப் பிரார்த்திக்கின்றேன்.

கல்விக் காருண்யன், பொன்மனச் செம்மல்
கலாநிதி ESP நாகரத்தினம்
பிரபல தொழிலதிபர்,
கஜமுகன் ஹாட்வெயார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவரின்



# வாழ்த்துச் செய்தி

**தன்னிகரற்ற தொழிற்சங்கத் தலைவன் ........**

மனிதனது பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலுள்ள காலத்தில் வாழும் வாழ்க்கையே மனிதனை உலகில் மறக்க முடியாத மானுடனாக மாற்றி விடுகின்றது. இதனால் தான் ரஷ்ய இலக்கிய மேதை மாக்ஸிம் கோர்க்கி மனிதனை எத்தகைய அற்புதமானவன் ' என குறிப்பிடுகின்றார்.

முன்னாள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயலாளருடன் எனக்கு 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்தே அதிகம் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. இனிய சுபாவமும் கலகலப்பான பேச்சும், எளிமையாக பழகும் தன்மையும், அனைவரையும் ஒன்றிணைத்து செல்லும் இயல்பும் கொண்ட ஒரு மாபெரும் ஆளுமை அவர்.

எந்தவொரு இடத்திலும் தனக்கான இடத்தையும் தனது சமூகத்திற்கான உரிமை களையும் விட்டுக் கொடுக்காத சிறந்த தொழிற்சங்கத் தலைவன்.

தொழிற்சங்கமொன்றின் போராட்ட வெற்றியானது தனியே அச்சங்கத்தின் உறுப்பினர்களில் மட்டும் தங்கியிருப்பதில்லை. கோரிக்கைகளின் நியாயத் தன்மை, அக்கோரிக்கை தொடர்பாக மக்களின் அபிப்பிராயம், போராட்டத்திற்கான மக்களின் ஆதரவு போன்றவையும் தொழிற்சங்கமொன்றின் வெற்றிக்கு இன்றியமையாதது. இதனை தனது பழுத்த அனுபவத்தின் மூலமும் தீர்க்கதரிசனமான பார்வை மூலமும் அறிந்து கொண்ட முன்னாள் செயலாளர் அண்மைக்கால ஆசிரிய தொழிற்சங்க போராட்டங்களின் போது ஆசிரியர்களின் சம்பள உயர்ச்சிக்கான குரலை சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வலுப்படுத்திய அதேவேளை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளையும் முதன்மைப் படுத்தியதன் விளைவாக அண்மைக்கால தேசிய பரீட்சை முடிவுகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களும், அதிலடங்கும் மாவட்டங்களும் தேசிய தரப்படுத்தலில் முதன்மை நிலைகளை அடைந்துள்ளன.

எனது பார்வையில் எமது முன்னாள் செயலாளர் தொழிற்சங்க போராட்டங்களின் போது உரிமைக்காக போராடும் தீவிர தொழிற்சங்கவாதியாகவும், தனிப்பட்ட முறையில் பாசம் கொண்ட சகோதரனாகவும், ஆசிரிய கலாசாலையில் சிறந்த விரிவுரையாளராகவும் மொத்தத்தில் சிறந்த ஆளுமை கொண்ட தலைவனாகவும் பல முகங்களில் மிளிர்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Age cannot wither him" என்னும் ஷேக்ஸ்பியரின் கூற்று இவருக்கும் பொருந்தி வர இவரது நலம் பேணி பொதுத்துறையில் இவரது பணி சிறக்க பல வகைகளிலும் உதவிய இவரது அன்புத் துணைவியாரையும் இவ்விடத்தில் வாழ்த்தி, தனது பணி முதிர்வினாலும் உடல் தேவையின் பொருட்டும் அவர் ஓய்வு பெற்று சென்றாலும் என்றும் அவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்திருப்பார் என்ற நம்பிக்கையுடன் அவரது இனிவரும் காலம் சிறப்பாக அமைய வேண்டும் என இறைவனை வேண்டிக்கொள்கின்றேன்.

கனக நிரஞ்சன்
தலைவர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கௌரவ பொதுச் செயலாளரின்



# வாழ்த்துச் செய்தி

நண்பனும் தோழனுமான சராவிற்கு மணிவிழா வாழ்த்துக்கள்

கல்விப்புலத்தில் ஒன்றாகவே காலடி எடுத்து வைத்த நானும் சாராவும் இன்னும் பல நண்பர்களும் இன்றுவரை ஒன்றாகவே பயணிக்கின்றோம். முப்பத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டன.

நாம் அனைவருமே கல்வி பணிக்காகவே எம்மை அர்ப்பணித்துச் சேவை செய்து வருகினறோம். ஆனால் சரா பல கலைகளைக் கற்று எம்மில் ஒரு படி உயர்ந்தவனாக, ஒரு நடிகனாக, கலைஞனாக, கவிஞனாக, விளையாட்டு வீரனாக, பயிற்றுவிப்பாளராக உன்னதமான உணர்வு கொண்டவனாக தன்னை ஆக்கிக் கொண்டான்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராக எங்கள் எல்லோருடைய மனமும் ஒருமித்து நிற்க ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டான். அதனை நாங்கள் எல்லோரும் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டோம். கல்வித்துறை சார்ந்த எவராக இருந்தாலும் அவர்கள் படுகின்ற துயரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து எம்மோடும், தனித்து நின்றும் பன்னிரண்டு ஆண்டுகளாக சரா. புவனேஸ்வரன் செய்ததை எம்மால் மறக்கவே முடியாது. பல விடயங்கள் எமக்குத் தெரியாமலேயே நன்மையாக நடந்திருக்கின்றன. அதிகாரிகளாக இருந்தாலும் அவர்களோடு எவ்வாறு அணுக வேண்டும் என்பது சராவுக்கு மட்டுமே தெரியும். பல்வேறு காரியங்களை தானே தனித்து நின்று நடாத்தக்கூடிய வல்லமை சராவிற்கு மட்டுமே உண்டு. மற்றவர்களுடைய மனம் மகிழ்வடைய அவர்களை வசப்படுத்தி அவர்களோடு நல்லுறவைப் பேணி அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த போதும் தனக்காக தன் குடும்பத்திற்காக வாழாது எமக்காக நமது தமிழ் சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்த நண்பன் பெருமகன் உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்கள்.

சரா. புவனேஸ்வரன் நீண்ட ஆயுளோடு சிறப்பாக வாழ வேண்டும் என்றும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தோடு வாழும் வரை பயணிக்க வேண்டும் என்றும், அறுபதாவது அகவையில் வாழ்த்தி மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொளிகின்றேன்..

*சி. கணேசலிங்கம்*
*கௌரவ பொதுச் செயலாளர்,*
*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனின் ஆசிரியருடைய

# வாழ்த்துச் செய்தி



அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் என்னால் உருவாக்கப்பட்ட முத்துக்களில் ஒருவராக 15.02.1982 இருந்து இன்று வரை தொடர்புகள் வைத்திருந்து ஆண்டு தோறும் ஆசிரிய தினத்தில் என்னை கௌரவப்படுத்துவதுடன் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளும் மாணவன் சரா சார்பாக வெளிவரும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமலை மாவட்டம் மூதூர் தொகுதி சம்பூர் கிராமத்தில் பிறந்து இன்று அகில இலங்கைக்கும் சேவையாற்றும் ஆன்ற புலமையும், அகன்ற உள்ளமும் உடையவராகவும் மானிடத்தை இதய சுத்தியுடன் நேசிப்பவராகவும் பிறர் ஈனநிலை கண்டு துள்ளிக் கொதிப்பவராகவும் நிபுணத்துவ ஆலோசகராகவும், பொறுப்பு மிக்க பல்வேறு பதவிகளை ஏற்றுத் திறம்பட நிர்வகிக்கும் சிறந்த நிர்வாகியாகவும், நல்லோரை இனங்கண்டு போற்று பவராகவும் பகைவனுக்கு அருள்புரியும் நெஞ்சினராகவும் உயர்ந்தோங்கி விளங்கும் அவரிடம் அன்று கண்ட சாதனைப்போக்கு இன்றும் அதே வழவில் காணும் போது

"ஆன்ற விந்த சிந்தையர் அவர் நிற்க"

தமது தனித்துவம் மிக்க ஆளுமையாலும், நற்குண நற்செய்கைகளாலும் "உடுக்கை இழந்தவன் கைபோல்" பிறரின் இடுக்கண்களையும் சுபாவத்தினாலும் அறுபதாண்டு அகவை பலருக்கும் கிட்டலாம் ஆயினும் மணிவிழாக் காணும் பேறு தக்கார் ஒரு சிலருக்கே கிடைக்கின்றது. அத்தகையவர்களில் ஒருவராக விளங்கும் சரா பல்லாண்டுகள் வாழ்ந்து எம் எல்லோரதும் விழிப்புணர்வுக்கும் எழுச்சிக்கும் விழவிற்கும் முன்னேற்றத்திற்கும் தொடர்ந்து நற்பணிகள் ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்க வேண்டும் என இதயம் நிறைந்த வாழ்த்துக்களை வழங்குவதில் இறும்பூது எய்துகின்றேன்.

திரு. சி. சோதிலிங்கம்
(ஓய்வு பெற்ற பிரதி அதிபர்)
யா/ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி
வித்தியாசாலை அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



அகவை அறுபதில் மணிவிழாக் காணும் உயர்திரு சரா. புவனேஸ்வரன் ஆசிரியர் அவர்கள் பல்திறன் கொண்ட ஆளுமை மிக்க செயற்பாட்டாளர். இவரது பன்முகங்களிலே விளையாட்டுத்துறையே எனக்கு முதலில் அறிமுகமானது. இவர் தனது சிறு பராயத்திலிருந்தே சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்திருக்கின்றார். இதன் காரணமாக ஒரு விளையாட்டுப்பயிற்றுவிப்பாளராக, ஆசிரியராக, மத்தியஸ்தராக, போட்டி ஏற்பாட்டாளராக, நிர்வாகியாக, விரிவுரையாளராக விளையாட்டுத் துறையிலே தனது சிறப்பான செயற்பாட்டை மேற்கொண்டமையினால் அனைவராலும் மதிக்கப்படுகின்றவராக விளங்கினார். யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய காலப் பகுதியிலும் மாணவர்களைச் சிறப்பாக பயிற்றுவித்து பல வெற்றிகளையும் சாதனைகளையும் ஏற்படுத்தியதோடு பாடசாலையின் வள விருத்தியிலும் முன்னின்று செயலாற்றியுள்ளார். விளையாட்டுத் துறையில் இவரது சிறப்பான செயற்பாட்டின் காரணமாக ஆசிரியராக இருந்து பின்னர் விரிவுரையாளராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலே தனது பணியைத் தொடர்ந்து சிரேஸ்ட விரிவுரையாளராக நிறைவு செய்திருக்கின்றார்.

விளையாட்டுத் துறையில் மட்டுமன்றி தான் ஆற்றுகின்ற பணிகள் யாவற்றிலும் முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டு அவற்றில் செயல்வீரராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார். இவ்வாறு பல்திறன் ஆளுமை கொண்ட இவரது பணி ஓய்வு காலத்திலும் சிறப்பாகத் தொடர வேண்டும். அதற்காக இவருக்கு நீண்ட ஆயுளையும் நோய் நொடியற்ற வாழ்வையும் வழங்க வேண்டுமென எல்லாம் வல்ல பரம் பொருளைப் பிரார்த்தித்து குடும்பத்தாரோடு இன்புற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்

திரு. செ. மகிந்தன்,
அதிபர்,
யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60
1963 - 2023
years
Diamond Jubilee

# மணிவிழா மலர்

விழா நாயகன்

## சரா. புவனேஸ்வரன்

அவர்கள் மீதான

## பன்முகப் பார்வைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த்தேசியப் பற்றாளர்

திரு சரா. புவனேஸ்வரன் அவர்களை அகவை அறுபதை நிறைவு செய்த நிலையில் வெளிவரும் மணிவிழா மலரூடாக வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். மிகவும் இக்கட்டான நிலையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் பதவியை பொறுப்பெடுத்து சேவையாற்றிக் கொண்டிருந்தார். அத்துடன் இவர் தான் சார்ந்த பிரதேசத்தின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டிற்கும் பணியாற்றி வந்துள்ளார். தமிழ் தேசிய பற்றுள்ள இவர் அரசியலிலும் தனது பங்களிப்பை வழங்கி வருகிறார்.

மிக நீண்ட காலமாக இலங்கை முழுவதும் அரச சேவையை யாழ்ப்பாணத் தவர்கள் அலங்கரித்தனர். குறிப்பாக ஆசிரிய சேவையில் மிக அதிகமான இடங்களிற்கு எம்மவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரம், குடும்ப செலவுகள் காரணமாக சொந்த இடங்களை நோக்கி எம் ஆசிரியர்கள் வரத் தொடங்கினார்கள். இவ்வேளையில் அவ்வப்பகுதி சுதேசிகள் வெற்றிடங்களை கைப்பற்றினர்.

இன்று எமது ஆசிரிய உத்தியோக வாய்ப்புகள் வடபகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் வன்னி மாவட்டத்தினரும் எம்மை துரத்தத் தொடங்கி விட்டனர். இதனால் யாழ் மாவட்டத்தில் படித்த மாணவர்களிற்கு ஆசிரியப்பணி மட்டுமல்லாது ஏனைய அரச உத்தியோகங்களும் எட்டாக்கனியாக மாறிவிட்டது.

இந்த நிலையை மாற்றுவதற்கு திட்டமிட்ட முறையில் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம் சமூக பொறுப்புடன் எதிர்காலத்தில் சேவையாற்ற வேண்டிய கட்டாயமாக கடமைப்பட்டுள்ளது.

சரா அவர்கள் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில் சிறப்புடன் சமய, சமூக, பொருளாதார, அரசியல் மேம்பாட்டில் எம்மவர்களை வழிப்படுத்த இறைவன் நல்ல தேக ஆரோக்கியத்தை கொடுக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**ப. விக்கினேஸ்வரன்,**
**ஓய்வு நிலை வடமாகாண கல்விப் பணிப்பாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்பரிமாண ஆளுமை சரா

உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்கள் எனது நெருங்கிய நண்பன் அவர்களுக்கு மனமார்ந்த மணிவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்பரிமாண ஆளுமை உடைய நண்பன். ஒரு நல்லாசிரியன். ஒரு விளையாட்டு வீரன், இராஜதந்திரி, சாணக்கியன், ஒரு சமூகப் போராளி, மனித உரிமைப் போராளி, மொழிப்பற்று, இனப்பற்றுடன் சேவையாற்றிய தமிழ் ஆசிரிய தொண்டன்.

கை லஞ்சம், தீய பழக்கவழக்கங்கள், குறைபாடுகள் காணப்படாத ஆளுமை உடைய தானைத் தலைவன். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றமே என்று கூறும் தலைவன். இரவு பகல் என பாராமல் ஓடி ஓடி உழைத்த கல்வித் தொண்டன்.

1995 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட மக்கள் முழுமையாக இடம் பெயர்ந்து மீளக் குடியேறிய பின்னர் எமது சங்கத்தின் சிரேஸ்ட துணைப் பொதுச் செயலாளர் அமரர் த. பஞ்சலிங்கத்துடன் எவ்வித பதவியுமில்லாது இணைந்து சங்கச் செயற்பாட்டுக்கு தோளோடு தோள் கொடுத்து தொண்டாற்றிய தோழன். இதன் காரணமாக சங்கத்தின் வரலாற்றில் முதன் முதலாக பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத் தலைவன்.

அது மாத்திரமல்ல அதன் பின்னரும் சங்கத்தின் எல்லா தேர்தல்களிலும் ஏகமனதாக பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டமை அவரின் தன்னலமற்ற பொதுச்சேவைக்கு கிடைத்த கல்விச் சமூகத்தின் அங்கீகாரம் எனலாம்.

"பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் எனற வாக்கியத்துக்கு அமைவாக தன் பிள்ளைகளின் தன் குடும்பத்தில் அதீத அக்கறை காட்டாது எமது மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் முழுமையாகக் கவனம் செலுத்தினார்.

இவரின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு பின்புலத்தில் பூரணமாக முழு ஒத்துழைப்பு வழங்கிய அவரின் வாழ்க்கைத் துணைவியாருக்கும் தமிழ் சமூகம் விசேடமாகத் தமிழர் ஆசிரியர் சமூகம் என்றென்றும் நன்றி செலுத்தும்.

அவரின் இளைப்பாறிய கால வாழ்க்கை சகல வளத்துடனும் சுகத்துடனும் சௌகரியமாகவும் செழுமையாகவும் அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**தம்பியையா மகாசிவம்,**
**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகரும்**
**சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Appreciation

Sara Puvaneswaran our General Secretary of Ceylon Tamil Teachers Union has come to say Goodbye to his post..It is very hard to believe that the time has come for him to say Goodbye.

He has done an excellent work as a lecturer and a teacher.

As a General Secretary of CTTU he had contributed over the years He has worked hard in the union, members of our union will miss his dedication and enthusiasm.He would have experienced many hardships during his work as a General Secretary.He faced many obstacles,but with his ability he was able to identify and overcome them.He learnt many lessons through his secretary work .He tried hard to solve the problems of the teachers.He guided the members of the executive committee in the positive ways.

He had a strong ability to be organised professional communication skills clear and friendly communication.He had the following abilities.Flexibility, determination, discipline, Analytical thinking and dedication.

He couldn't set a side for his family and friends.

He was elected as the advisor of the union at the Annual General Meeting of CTTU.God will give him the strength to continue his service in the union.

May God bless him and his family with heath and prosperity.


**Mrs. E.J.Mahendra**
BSc. Dip in Ed SLPS 1
Advisor Women Network CTTU
Advisor Educational International




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா மணித்துளிகள் சரா புவனேஸ்வரனுக்கு ........

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நண்பரும் சமூக கல்விச்சேவையாளருமாகிய திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டும், வயது அறுபதை பூர்த்தி செய்தமையை கருத்திற்கொண்டும் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் சமூக கல்விப் பணிகளில் ஈடுபட அவரது குடும்ப உறுப்பினர்களது ஆதரவும், ஆரோக்கியமான வாழ்வும் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு சரா. புவனேஸ்வரன் அவர்கள் ஆசிரியராக, ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளராக ஆசிரியர், அதிபர் நலன்புரிச் சேவையில் இணைந்து கொண்ட தொழிற்சங்க வாதியாக சிறந்த சமூக சேவையாளராக அரசியல் சார் ஈடுபாடு கொண்டவராகவும், குடும்ப நலலுறவு பேணுபராகவும் விசேடமாக விருந்தோம்பல் பண்பினையும் தனித்துவமாக கொண்டிருந்தவராகவும் விளங்கியமைக்கு பல சான்றுகள் உள. இத்தகைய சாதனையாளனுக்கு மணிவிழா எனும் போது சில வரிகள் தன்னும் பெருமையாகக் கூறித்தான் ஆகவேண்டும்.

கல்விச் சேவையினையும் முதலில் ஆசிரியர் என்ற நிலையில் மாணவருக்கு கல்விசார் அபிவிருத்திக்கு உதவுவது, வழிகாட்டுவது என்பதுடன் மாணவர்களின் நலன்புரிச் சேவையிலும் அக்கறை கொண்டு செயற்படுதல் மற்றும் மேலதிக கற்றல் நடவடிக்கைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குதல், ஒழுக்க விழுமியங்களுடன் ஆளுமை மிக்க மாணவரை உருவாக்குதல் என ஆரம்பித்து தொடர்ந்து மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களது வாண்மை விருத்தியை உயர்த்துவதிலும் வளப்படுத்துவதிலும் ஆசிரிய கலாசாலையினூடாக விரிவுரையாளர் என்ற பங்குபற்றுதலுடன் நடைமுறைப்படுத்தியும் இருக்கின்றார். இவ்விரு அனுபவங்களும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.

எல்லோருக்கும் கிடைக்குமா இத்தகையதொரு சந்தர்ப்பம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் தொழிற்சங்கவாதியாக, பொதுச் செயலாளராக இணைக்கப்பட்டு அதனூடாக ஆசிரியர், அதிபர் வாண்மை விருத்தி மட்டுமல்ல அவர்களது நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் அவர்களது உரிமைகள், சலுகைகள் அனைத்தையும் பெற்றுத் தருகின்ற கடமையினையும், பொறுப்பையும் தனதாக்கி சேவையின் உச்ச நிலைக்கு தன்னை அர்ப்பணிக்கின்ற தொழிற்சங்க வாதியாக செயற்பட்டு வந்துள்ளார். ஆசிரிய இடமாற்றக் கொள்கையினடிப்படையில் ஆசிரியர்களின் நலனில் மட்டுமல்ல அவர்களிடம் கல்வி பெறுகின்ற மாணவர்கள் நலனிலும் அக்கறை கொண்டு வெற்றி - வெற்றி (Win -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Win) எனும் கொள்கையுடன் இணைந்து பல நடவடிக்கைகளை இடமாற்றத்தின் போது சாதமாக்கிய செயல் வீரன் இலங்கையின் பல பாகங்களிலும் இச் சேவை தொடர்ந்து நடைபெறுவதற்கு அவரது குடும்ப உறுப்பினர்கள் அனுசரணையாக இருந்தமை பாராட்டுக்குரியது.

விசேடமாக ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கென்றே ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைத் தேர்வில் அனைத்து மாணவர்களும் தேர்ச்சியடைய வேண்டுமென்ற பாகுபாடற்ற சிந்தனையின் அடிப்படையில் "வெற்றித்தேர்வு" நிகழ்ச்சித் திட்டத்தினை சிறந்த, வளவாளர்களின் பங்குபற்றுதலுடன் உருவாக்கி மாணவர்கள் பயிற்சியினைப் பெறுவதற்கு தொடர்ந்து வழிகாட்டி வருகின்றமை. இது மட்டுமல்ல சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுடன் ஒன்றிணைந்த பல நிகழ்வுகளை ஏற்படுத்தல், கலந்து கொள்ளல் மூலமும் தன்னையும் தான் சார்ந்த சமூகத்தினையும் வளப்படுத்திக் கொள்ளுதல், "கொரோனா" நோய்த் தொற்றுக் காலங்கள் அதனைத் தொடர்ந்து வந்த பொருளாதார ரீதியான சிக்கல்கள், எரிபொருள், அத்தியாவசிய உணவுப் பொருட் தட்டுப்பாட்டுக் காலங்களில் பல தகவல்களையும் வழங்கி உதவி புரிந்தமையும் கண்கூடாகத் தெரிகிறது. சிறந்த சமூக சேவையாகவே நான் இதனைப் பார்க்கின்றேன். நன்றி பாராட்டுக்கள்

சமய ஈடுபாடு என்கின்ற போது அதனையும கூட விட்டு வைக்கவில்லை நல்லூர்த் தேர்த் திருவிழாவின் போது பல்வேறு இடங்களிலிருந்தும் பக்த அடியார்கள் ஒன்று கூடுகின்ற போது "அன்னதானம்" எனற விடயத்தில் "சயன்ஸ் அக்கடமி" ஒழுங்கையினை மறக்க முடிவதில்லை. இதனை மறக்க முடியாத இன்னும் பலர் இருப்பார்கள் என்றே எண்ணுகின்றேன்.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் மணிவிழா மகுடம் சூடிக் கொண்டாலும் தொடர்ந்து மாணவருக்கான கல்வியினை வழங்குவதிலும் சமூக அக்கறையென்ற உணர்வுடன் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கு தங்களுக்கு நீண்ட ஆயுளும் நல் ஆரோக்கியமும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இவ்வாறே தங்களது துணைவியார், பிள்ளைகளது அனுசரணையும் குறைவின்றிக் கிடைக்க அவர்களுக்காகவும் பிரார்த்திக்கின்றேன்.

**நடேசலிங்கம் விஜேந்திரன்,**
*ஓய்வு நிலை வலயக் கல்விப்பணிப்பாளர்,*
*திருகோணமலை.*
(கிழக்கு மாகாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாசிரியர்களை உருவாக்கும் பணிக்குரியவர்

கல்விப்புலத்தில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அரும்பெரும் பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வு பெறும் மணிவிழா நாயகன் உயர்திரு. சரா.புவனேஸ்வரன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் தனது சேவைக்காலத்தில் ஒரு சிறந்த ஆசிரியராகவும், பின்னர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகவும், சம காலத்தில் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராகவும் பன்னிரண்டு வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவரது பணியினை மாணவர்களின் கல்வியை வளர்க்கும் பணி, நல்லாசிரியர்களை உருவாக்கும் பணி, ஆசிரியர், அதிபர்கள் ஆகியோரின் தொழில் உரிமையைப் பாதுகாக்கும் பணி எனப் பார்க்க முடியும்.

நான் தீவகக் கல்வி வலயத்தில் பணியாற்றும் காலத்தில் இவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. தொழிற்சங்க வாதியாக இருந்து எம்முடன் நல்லுறவினைப் பேணி ஆசிரியர்களின் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு உதவியமை பாராட்டுக்குரியது. பிரதானமாக வடக்கிலும் கிழக்கிலும் பெருமளவு தமிழ் ஆசிரியர்களை அங்கத்துவமாகக் கொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொறுப்புமிக்க பொதுச் செயலாளர் பதவியில் பன்னிரண்டு வருட காலம் சிறப்பாகப் பணியாற்றி யமையை இவ்வேளையில் நினைவுகூர்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மணிவிழா நாயகன் உயர்திரு திரு.சரா.புவனேஸ்வரன் அவர்கள் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஓய்வுக் காலத்தில் சமய சமூக, கல்விப்பணிகளில் தொடர்ந்தும் ஈடுபடவேண்டுமென கேட்டுக் கொள்வதுடன் எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வழங்கவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**வ. இராதாகிருஸ்ணன்**
**ஓய்வு நிலை வலயக்கல்விப்பணிப்பாளர்**
**தீவகக்கல்விவலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரா ஒரு சகாப்தம்....

**"எடுத்த காரியம் யாவிலும் வெற்றி**
**விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி"**

எனும் பாரதியின் வரிகளுக்கு தன் வாழ்நாளில் வலுச்சேர்த்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளரும், என் அன்பிற்கும், அபிமானத்திற்குமுரிய, **"சரா"** என அன்பாக அழைக்கப்படும் திரு. சரவணமுத்து புவனேஸ்வரனின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அக மகிழ்கின்றேன்.

ஆசிரியர், ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர், ஆசிரியர் சமூகத்தின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் தொழிற்சங்கவாதி என பல்வேறு படிநிலைகளில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தன் ஆற்றல்மிகு சேவையால் கல்விச் சமூகத்தினர் மனங்களில் நீக்கமற நிறைந்தவர் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய **"சரா"** அவர்கள்.

அவை அஞ்சாமை, **"சரா"** வின் விசேட குணவியல்பு எனலாம். சரியென நினைத்ததை எதுவித அச்சமின்றி துணிவுடன் சபைதனில் எடுத்துரைத்து வாதிட்டு நியாயத்தை நிலை நாட்டக்கூடிய சிறப்பு அவருக்கே உரித்தானது. இதுவே அவரை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராக வினைத் திறனுடன் சிறப்பாக செயலாற்ற உறுதுணையாக அமைந்தது.

மணிவிழாக் காணும் சிங்கம் **"சரா"** தொடர்ந்தும் எம் மக்களுடன் குறிப்பாக ஆசிரிய சமூகத்துடன் பயணிக்கவும், தன் குடும்ப உறவுகளுடன் கூடிக்கழித்திருக்கவும் சந்நிதியான துணையிருப்பானாக.

**"சேவையாலிங்கு மேனிலை சேர்வோம்"**

**யோகசாமி ரவீந்திரன்,**
வலயக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு நிலை),
வடமராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பன்முக ஆற்றலாளர்

எனது அன்புக்குரிய மாணவியின் கணவராக ஆரம்பத்தில் என்னால் அறிந்து கொள்ளப்பட்ட தம்பி சரா. புவனேஸ்வரன் என்மீது அன்பும் மதிப்பும் கொண்டவராக இருந்து வந்துள்ளார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சகவிரிவுரையாளராகப் பணியாற்றிய காலப்பகுதியில் அவரது திறமைகளை அறிந்து கொள்ள முடிந்தது. நல்லாசிரியராக, சிறந்த விளையாட்டு வீரனாக, ஆற்றல் மிகு நிர்வாகியாக, எடுத்த கருமத்தை எவ்வாறாயினும் முடித்து கொள்ளும் மன உறுதி கொண்டவராக அவரது பல் பரிமாணங்களை இனங்காண முடிந்தது. அவரைச் சூழ்ந்து நட்பு வட்டம் ஒன்று எப்போதும் காணப்படும். சமூக ஊடாட்டம் மிக்கவராயும் சமூகச் செயற்பாடுகளில் பங்காளியாகவும் தன்னை இனங்காட்டியுள்ளார். மனதில் பட்டவற்றை நேரடியாகத் தயக்கமின்றிக் கூறும் இயல்புடையவராயும் காணப்படுகிறார். இவற்றோடு சிறந்த குடும்பத் தலைவனாக அதனை வழிப்படுத்தி வெற்றி கொண்டவராக இருத்தலும் இன்னுமொரு சிறப்பாகக் குறிப்பிடலாம். துடிப்பான இளைஞருக்கு மணிவிழா எடுப்பதற்கு முற்படும் அன்புள்ளங்களோடு இணைந்து நானும் மகிழ்வடைகிறேன். பழக இனிய பண்பாளரான தம்பி சரா இன்னும் பல காலம் பணிகளைத் தொடர்ந்திடவும் சமூக மேம்பாட்டுக்கு உதவவும் வல்லமை பெற்றுயர வாழ்த்துகிறேன். குடும்பத்தின் குதூகலம் தொடர்ந்திடவும் நலங்கள் பெருகிடவும் இறையருளை பிரார்த்தித்து மணிவிழா சிறப்புறவும் வேண்டுகிறேன்.

**திரு. இ. மருதலிங்கம்**
**(மேனாள் பலாலி - கோப்பாய்**
**ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புக்கு நான் அடிமை

சேவையில் இருந்து தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெறும் அன்புக்குரிய சரா. புவனேஸ்வரன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அரசசேவையில் அறுபது வயது ஓய்வு வயதாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் ஓர் இளைஞனின் ஓய்வை ஏற்க வேண்டியுள்ளது. உயர் மனதாலும் உடலுறுதியாலும் திடமான போக்கினைக் கொண்ட சரா அவர்கள் என்றும் ஓர் இளைஞனே!

சரா இது அவரது தந்தையின் பெயர் சரவணமுத்து புவனேஸ்வரன் சரா. புவனேஸ்வரனாகி இன்று எல்லோராலும் சுருக்கமாக சரா என செல்லமாக அழைக்கப்படுகின்றார். அவருக்கு தந்தையின் மீது கொண்ட அதீத பற்றுதலால் அதையே தனது நாமமாக வரவேற்கின்றார். அதுவே அவருக்கு பெருமையும் மகிழ்வுமாகும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மரியாதைக்குரிய பொதுச் செயலாளராக பொறுப்பை ஏற்று ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் துயர் துடைப்பதில் மிகவும் பங்காற்றியுள்ளார். இவர் ஆசிரியராக, கலாசாலை விரிவுரையாளராக ஆசிரிய தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளராக பல பரிமாணங்களை எடுத்து அந்தந்த வகுதிக்கேற்ப தனது சேவையை அர்ப்பணிப்புடன் ஆற்றியுள்ளார்.

இவர் ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளராகபொறுப்பெடுத்த காலத்தில் மிகவும் இடர் மிகுந்த நிலையில் காணப்பட்ட சங்கத்தை மீட்டெடுப்பதில் மிகவும் பங்காற்றி யுள்ளார். இவரோடு இணைந்து நானும் மாவட்டச் செயலாளராக, நிர்வாகச் செயலாளராக, தலைவராக இருந்து பணியாற்றியதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இக்காலத்தில் சங்கத்தின் அங்கத்துவத்தை அதிகரிக்கச் செய்தமை, ஆசிரியர்கட்கான வாண்மை விருத்தி மற்றும் தொழிற்சங்க முக்கியத்துவம் தொடர்பாக பல செயலமர்வுகளை சகல வலயங்களிலும் மேற்கொண்டமை, ஆசிரியர் தின நிகழ்வுகளை நடாத்தியமை, “ஆசிரியன்” பத்திரிகை வெளியிட்டமை என பல செயற்பாடுகளை மேற்கொண்டு அதிபர் ஆசிரியர்களை ஊக்குவித்தமையை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

அதைவிட தனிப்பட்ட ரீதியில் இவருடனான நட்பு மிகவும் உன்னதமாக காணப் பட்டது. பல முக்கியமான விடயங்களை என்னுடன் பகிர்ந்து கொள்வதுடன் சில விடயங்களில் ஆலோசனையும் பெற்றுக் கொள்வார். இது தவிர பல முக்கியமான நிகழ்வுகளில் பங்கு கொள்ளச் செய்வார். திருகோணமலை சம்பூர் வருகின்ற போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாமல் வரும்படி அழைப்பை விடுப்பார். நானும் அவரது வார்த்தைக்கு கட்டுப்பட்டு அவருடன் கலந்து கொள்வேன். என்போன்று அவரது பல நண்பர்களுக்கு அவர் திருகோணமலை வருவதென்றால் குதூகலம் இவ்வாறாக தமது நண்பர்கள் கிராமம் என்பதை மறக்காமல் அடிக்கடி சென்று பல நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிப்பார். இவரோடு நான் வைத்துக் கொண்ட நட்பு காரணமாக அவரது நண்பர்கள். உறவினர்கள் அனைவரும் என்னுடன் நட்பைப் பேணுவதையும் மறக்க முடியாது.

இவ்வாறான உயர்குணம் கொண்ட பெருமகனாருக்கு மணிவிழாக் காண்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இவருக்கான மணிவிழா சிறப்பாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**க. நல்லதம்பி**
ஓய்வுநிலை கோட்டக் கல்வி பணிப்பாளர்,
முன்னாள் தலைவர் இலங்கைத் தமிழர்
ஆசிரியர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாசில்லா மன்னவனே வாழ்க வளமுடன் பல்லாண்டு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கௌரவ பொதுச் செயலாளர் அன்பு நண்பர் சரா புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்து தெரிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மணிவிழா நாயகன் இலங்கைத் தமிழ் ஆசிரியர்களின் நலன்களை இதுவரை காலமும் கவனித்ததில் தன்னிகர் அற்ற தலைவனாவார்.

கலியுக காலமான இக் காலத்தில் உண்மையான மனிதத்தை மணிவிழா நாயகனிடம் நான் கண்டு வியந்திருக்கின்றேன்.

ஏழை மாணவர்களின் தன்னிகர் அற்ற தோழன். சிறந்த கொடையாளன்.

நாடாளும் சந்தர்ப்பம் நயவஞ்சகத்தால் பறிக்கப்பட்ட போதும் கொள்கை மாறா தன்மானத் தமிழன் ஆக நான் பார்க்கின்றேன். வாழ்த்துகின்றேன்.

"நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே" என, கொள்கைக்காக வாதிடும் சிறந்த குணாளன்.

வாழ்க வளமுடன்

**சி. மாணிக்கராஜா,**
**ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ் கல்வி வலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தலைமைத்துவத்துவத்துக்கோர் விளக்கு சரா!**

அவனியில் பல்துறை புலமையாளர். அறிவியலையும் ஒழுக்கத் தையும் பண்பாட்டினையும் ஒருங்கிணைத்து செழுமைப் படுத்திய கல்வியை இளைய தலைமுறைக்குக் கொடுத்த தொலை நோக்கு கொண்ட ஆழ்ந்த சிந்தனையாளர். வாழ்வியலில் மகிழ்ச்சியாக பணி தொடர இறைவன் ஆசீர்வதிப்பாராக..

**ஐ. புவனேந்திரன்,**
(SLEAS)



மணிவிழா நாயகன் உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களின் நீண்டகால நண்பன். நான் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில். ஆசிரியர்களின் இடமாற்ற கூட்டங்களில் ஆசிரியர்களின் நலன்களில் மிகவும் ஆணித் தரமாகவும், கண்டிப்பாகவும் செயற்படுவதைப் பார்த்து வியந்திருக்கிறேன். உண்மையில் அவரைப் போல சேவையாற்றுவதற்கு அவருக்கு அவரே தான் என நிரூபித்துக் காட்டியவர். இவர் நீண்டகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சு. சண்முககுலகுமார்**
**ஓய்வு நிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**உடுவில்.**



திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். திரு. சரா அவர்கள் ஒரு விசேட நிபுணத்துவம் வாய்ந்த தலைவர். ஆசிரியர், அதிபர் அவர்களின் நலன்களைக் காக்கும் காவலன். இடமாற்றச் சபையில் அவரின் தர்க்கிக்கும் ஆற்றலைக் கண்டு அனைவரும் தலை சாய்க்கும் நிலை தோன்றும் அவர்களின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகிறேன்.

**சு. சண்முககுமார்**
**ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடின உழைப்பால் சிகரம் தொட்ட ஆசிரியர்

நண்பர் சரா. புவனேஸ்வரன் என்னுடன் பட்டப்படிப்பினை ஒன்றாக மேற் கொண்டவர் என்பதுடன் நட்புக்கு இலக்கணமான நல்ல நண்பரும் கூட. கடந்த எட்டு ஆண்டுகளாக யாழ்ப்பாணக் கல்விவலய ஆசிரியர் இடமாற்ற சபையில் சேர்ந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றியவர். முகம் தெரியாத பல ஆசிரியர்களது உரிமைக்காக கடுமையாக வாதிட்டு அறவழியில் போராடி அவர்களது உரிமைகளை நிலை நாட்டிய போதெல்லாம் முகம் தெரிந்த உயர் அதிகாரிகளுடன் நிரந்தரப் பகை ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களையும் என் கண் கூடாகக் கண்டுள்ளேன். ஆனால் நண்பர் சரா. புவனேஸ்வரன் இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பற்றி சிந்திப்பதுமில்லை, சிறிதேனும் கவலை கொள்வதுமில்லை. கடமை தவறும் ஆசிரியர்களை வழிப்படுத்தி ஆசிரியம் சிறக்க வழிகாட்டிய பெருந்தகை. எல்லோருடனும் அன்பாக பழகும் சுபாவம், விடாமுயற்சி , கடின உழைப்பு தியாக வாழ்வு பொறாமையற்ற பரந்த மனம் என்பவற்றால் வாழ்வில் உயர்நிலையடைந்து சிகரம் தொட்ட ஆசிரிய பணியாளர்.

இவ்வாறான இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க கௌரவ பொதுச் செயலாளர் நண்பர் சரா. புவனேஸ்வரன் தனது ஓய்வு காலத்தில் எல்லா நலன்களும் பெற்று குடும்பத்தாருடன் நூறாண்டு காலம் இனிது வாழ வாழ்த்துகின்றேன்.

**நா. சிவனேசன்,**
*கோட்டக்கல்விப் பணிப்பாளர்,*
*கோட்டக்கல்வி அலுவலகம்,*
*கோப்பாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாங்கள் கண்ட ஆளுமைகளில் கல்வி, விளையாட்டு, நிர்வாகச் செம்மை, மீயுயர் தலைமைத்துவப் பண்பு, கேட்போரை கூர்ந்து கவனிக்க வைக்கும் பேச்சாற்றல், நகைச்சுவைப் பண்பு, தன்னை தேடி வந்தோரின் துன்பம் தீரப்பாடுபடுதல், தொழிற்சங்கப் போராளி, தமிழின் உரிமைத்தாகம், பிறந்த மண்ணை மறவா தீவிர ஊர்ப்பற்று என பல பரிமாணங்களை ஒருங்கே கொண்டமைந்த ஒரு பேராளுமை "சரா" ஆசிரியர் அவர்கள். இவரிடமிருந்து இளையோர் கற்றுக்கொள்ள வேண்டிய தலைமைத்துவப் பண்புகள் இன்னும் ஏராளம் உண்டு. "சரா" ஆசிரியர் மூலம் எங்கள் மண் மேலும் பயனுற வேண்டி அவருக்கு நீண்ட சுகவாழ்வு கிடைக்க ஊரவர், உறவினர் சார்பாக வேண்டுகின்றோம்.

**ம. அருங்கரன்**
வைத்தியர்,
யாழ் போதனா வைத்தியசாலை.



**கல்வி உலகின் கலங்கரை விளக்கு**

மண்ணின் மீதும், மாணவர்கள் மீதும் அளப்பரிய பற்றுதல் கொண்ட கல்வி ஆசான். மனிதநேயம் கொண்ட பண்பாளன். கருணைக்கும், கண்டிப்புக்கும் கைவந்தவன், உதவி செய்ய துடிக்கும் உத்தமன். விளையாட்டின் விற்பன்னன், கலை கலாசாரத்தின் காவலன். இத்தகைய பல்துறைசார் ஆளுமை மிக்க வெற்றி நாயகன் காலத்தில் ஈழ மண்ணில் கல்விக்காகவும், உரிமைக்காகவும் போராடும் மாணவச் செல்வங்களின் கனவு மெய்ப்படட்டும்.

இவர் தனது ஓய்வு காலத்தில் நோயின்றி தனது குடும்பத்தினருடன் சந்தோசமாக வாழ எல்லாம் வல்ல எங்கள் குல தெய்வம் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளை பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. V. மகாலிங்கம்,**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லதோர் ஆசிரியராய் மத்தியில் மிளிர்ந்தார்

நண்பர் சரா புவனேஸ்வரன் அவர்கள் 1990 களில் எமது கல்லூரியில் ஆசிரியர் குழாமில் இணைந்து கொண்டார். அவரது இளமை, சுறுசுறுப்பு ஆளுமை என்பன விரைவாகவே எமதாசிரியர் குழாமில் அந்நியோன்னியம் மிக்க நட்பு வட்டத்துக்குள் ஈர்த்துக் கொண்டது.

துணை ஆசிரியராக உள் வந்த சரா அவர்கள் அவரது விளையாட்டுத்துறை சம்பந்த ஈடுபாடு காரணமாக முதலில் கரப்பந்தாட்டப் பயிற்சியாளராக எமது வட்டத்துக்குள் வந்து பின்னர் தனது தடகள அனுபவம் மற்றும் ஆற்றல் காரணமாக கல்லூரி விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கமைக்கும் குழுவுடன் இணைந்து பாடசாலை விளையாட்டுக் குழுவில் தவிர்க்க முடியாத ஒரு உறுப்பினராகத் தன்னை மாற்றிக் கொண்டார்.

எமது கல்லூரியின் அப்போதைய அதிபர் அமரர் நா. க. சண்முகநாதபிள்ளை அவர்களின் விருப்பத்துக்குரிய ஆசிரியராகவும் பாடசாலை ஒழுக்காற்று நடவடிக்கைகள், பாடசாலை முக்கிய நிகழ்வுகளில் ஒரு செயல்திறன் வாய்ந்த உறுப்பினராகவும் விளங்கியவர்.

அவரது கல்லூரி தொடர்பான ஈடுபாட்டுக்குரிய ஒரு நிகழ்வினை இச் சந்தர்ப்பத்தில் நினைத்துப்பார்க்க முடிகிறது. அதாவது தொண்ணூறுகளில் யுத்த சூழ்நிலையில் ஏற்பட்ட இடப் பெயர்வின் பின்னர் நாம் மீண்டும் பாடசாலைக்குத் திரும்பியபோது கல்லூரியின் தளபாடங்கள் உட்பட பல உடமைகள் கல்லூரியின் சுற்றுப்புறங்களில் சிதறியிருந்தன. குறிப்பாக மேசைகள், கதிரைகள் இராணுவ காவலரண்களாக நாவற்குழி வரை கொண்டு செல்லப்பட்டும் பல்வேறு இடங்களில் பரவிக் கிடந்தன. இவற்றை சரா உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து மீண்டும் சேகரித்து ஒன்றிணைத்து பாடசாலை மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான முயற்சிகளில் பங்கு கொண்டமை நினைவு கூரத்தக்கது.

இது தவிர பாடசாலை இரும்புக் கதவுகள், விடுதி உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பன கோட்டை அகழிவரை சிதறிக் கிடந்தன. அவற்றை சேகரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறையிற்கு கொண்டு வர என்னுடன் சரா அவர்களும் மாணவர்கள் சிலரும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் ஈடுபட்டதனை நினைத்துப் பார்க்க முடிகிறது.

அவரது பணிகளும், ஒத்துழைப்பும், ஆற்றலும், அனுபவமும், ஆளுமையும் அவரை ஒரு தொழிற்சங்கத்தின் செயலாளர் என்ற உயர் இடத்துக்குக் கொண்டு வந்துள்ளமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது.

சரா அவர்களது ஓய்வுக்காலம் மேலும் சமூகத்துக்கும் கல்வித்துறைக்கும் பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

**L. Ongaramoorthy** BA, SLPS, SLEAS
ஓய்வுநிலை அதிபர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்திக்கு வெற்றிவாகை சூட்டிய சரா

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மதிப்பார்ந்த முன்னாள் ஆசிரியர் திருவாளர் சரா.புவனேஸ்வரன் அவர்கள் மத்தியின் மைந்தர்களின் மனங்களை வென்று வெற்றி வாகை சூட்டியவர். மத்தியின் புகழ்பூத்த அதிபர் அமரர் இராசதுரை காலத்தில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.போர்மேகம் சூழ்ந்திருந்த அந்தக் காலப்பகுதியில் மாணவர்களுக்கு கல்வி மட்டுமல்ல உயிர்பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டது. பொருளாதார தடையென்ற பெயரில் அத்தனை துன்பங்களையும் மாணவர் எதிர்நோக்கி கல்விகற்ற காலம். கொத்துக்கொத்தாக வகுப்பறையைவிட்டுச்சென்று மண்மீட்புக்காய் தம்மை ஆகுதியாக்கிய காலப்பகுதியது. இவையெல்லாம் ஆசிரியப்பணிக்கு பெரும் சவாலாக இருக்கும்போது பலர் நாட்டைவிட்டு தப்பியோடிய தருணங்கள் அப்போது. இத்தகைய உயிருக்கு உத்தரவாதமற்ற சூழலில் கல்லூரி மாணவர்களின் நலனிற்காக பணியாற்றியவர்களில் முதல்வனாக சராவைப் பார்க்கிறேன்.

ஆசிரிய வகிபாகத்தின் அன்றைய பரிமாணம் பரந்து விரிந்து காணப்பட்டது. சூழலுக்கேற்ப தனது வகிபாகத்தில் வெற்றிகண்டவர் சரா.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டுத்துறை மிகநீண்ட வரலாற்றைக் கொண்டது. விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராகவும்,சிறந்த பயிற்றுவிப்பாளராகவும் அந்த சூழலில் இருந்த சவால்களையும் வென்று சிறப்பாக பணியாற்றியதால் அன்று கல்லூரி எல்லா துறைகளிலும் முதன்மையடைந்தது. இதற்கு இவர் மாணவருடன் இருந்த கண்டிப்புடன் கலந்த நட்பு விளையாட்டுத்துறையில் ஆர்வத்தை அதிகரிக்க செய்தது. இதனால் மாணவர் சிறந்த ஆளுமைப்பண்புள்ளவர்களாக இவரால் உருவாக்கப்பட்டார்கள். இன்றும் புலம்பெயர்ந்து வாழும் மத்தியின் மைந்தர்கள் சென்ற இடங்களின் சிறப்பாக வாழ்வதற்கு கல்லூரிபெற்றுக்கொடுத்த ஆளுமைப்பண்பே காரணமாகும். இதற்கு விளையாட்டுத்துறையும்,ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளும் காரணமென்றால் மிகையாகாது. இதில் அன்று இத்துறைகளில் உணர்வுடன் பங்காற்றி வெற்றிவாகைசூடுபவர் ஆசிரியர் சரா. புவனேஸ்வரன் ஆவார். கல்லூரியின் செயற்பாடுகளில் பெரும்பங்கு விளையாட்டுத்துறை, ஏனைய இணைப் பாட செயற்பாடுகளின் வெற்றிக்கும் அயராது உழைத்தவர் சரா. அவரது சிறந்த சினேக மனப்பாங்கு எல்லா ஆசிரியர்களையும் நண்பர்களாக்கி பணிக்கு ஊக்குவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஒழுங்கமைப்புத் திறன், சிறந்த திட்டமிடல் எல்லா நிகழ்வுகளையும் வெற்றிக்கு இட்டுச்சென்றது. இவரது சவால்களுக்கு முகம்கொடுக்கும் ஆற்றல் நிர்வாகத்துக்கும் சக ஆசிரியர்களுக்கும் பக்க பலமாகவும் ஊக்குவிப்பாகவும் இருந்தது .இதனால் மாணவர் வெற்றியாளராயினர்.

கடின உழைப்பாழியாகவும் மனிதநேயம் மிக்கவராகவும் மணிவிழாக்காணும் சரா மற்றவர்களுக்கு உதவுவதிலும் முன்வைத்தகாலைப் பின்வைக்காதவர். பிறரை வாழவைத்து பார்த்து மகிழும் சுபாவம் கொண்டவர். "பிறர் பிள்ளை தலைதடவ தன்பிள்ளை தானே வளரும்" என்ற பழமொழிக்கமைய அவரது பிள்ளைகளது உயர் நிலையும் உயர்பண்பும் "தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்ற பொய்யமொழிக்கமைய வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இன்று அறுபது அகவைகண்டு மணி விழாக்காணும் சரா சகல செல்வங்களும் பெற்று இன்னும் பல்லாண்டு வாழ வாழ்த்தி நிற்கிறேன். வாழ்கபல்லாண்டு.

**கலாநிதி க.எழில்வேந்தன்**
முன்னாள் அதிபர்
யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னலம் கருதாச் சேவையாளன்

மணிவிழா நாயகன் சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆலோசகர் திருவாளர் சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தியினைப் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழர்களின் வாழ்வியலில் சடங்குகள், சம்பிரதாயங்கள், கௌரவிப்பு விழாக்கள் எனப் பல்வேறு வகையான நிகழ்வுகள் பண்டு தொட்டு வழங்கி வருவது கண்கூடு. இவை எம்மக்களிடையே நன்றி தெரிவித்தல், ஒற்றுமை, புரிந்துணர்வு, கூட்டுச்செயற்பாடுகள், மனிதாபிமானம் போன்ற பல விடயங்களை வெளிப்படுத்துவதோடு நல்ல சிந்தனை களையும் ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் இம் மணிவிழா நிகழ்வும் கடந்த அறுபதாண்டு காலங்களில் இவரால் சமூகத்துக்கு ஆற்றப்பட்ட பல நல்ல விடயங்களை நினைவுபடுத்துவதோடு மட்டுமல்லாமல் புகழுரைக்கும் தருணமாகவும் அமைகின்றது. இது எல்லோருக்கும் வாய்ப்பதில்லை.

புவனேஸ்வரன் ஆசிரியர் என்று எம்மூரவர்களால் அழைக்கப்படும் இவர் தன்னலங் கருதாது எம் கிராமத்துக்கு ஆற்றிய பணிகள் ஏராளம். நாம் மாணவர்களாக இருந்த காலங்களில் விஞ்ஞான, ஆங்கில பாட ஆசிரியர்களை வரவழைத்துத் தந்தமை, கரப்பந்து விளையாட்டில் பயிற்சியளித்தமை, ஐந்தாந்தர மாணவர்களுக்கு புலமைப்பரிசில் மாதிரி வினாப்பத்திரங்களை யாழ்ப்பாணத்தில் இருந்து இலவசமாக வரவழைத்துக் கொடுத்தமை போன்ற பல செயற்பாடுகளை இவர் செய்தமை இன்றும் நினைவில் உள்ளது.

சம்பூர் கிராமத்தில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகள், கலைவிழாக்கள், கோயில் திருப்பணிகள் எனப்பல செயற்பாடுகளைக் கலந்துரையாடும் வேளைகளில் தானாக முன்வந்து தனது ஆலோசனைகளை வழங்கியும், நிதியுதவி அளித்தும் பங்கெடுப்பது இன்றளவும் நடந்து கொண்டே இருக்கின்றது என்பதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வசித்து வருகின்ற போதிலும் எந்நாளும் தான் பிறந்த சம்பூர் பற்றியே உரையாடிக் கொண்டிருப்பது இவருடைய வழக்கமான செயலாகும். ஊரிலுள்ள கோயில்களில் ஏதாவது விசேடம் என்றால் அங்கு இவரைக் காணலாம். அதுபோல எமது உறவுகளாகட்டும், பாடசாலை மாணவர்களாகட்டும் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் வேளைகளில் இவரை நாடுகின்ற போது நம்முடைய வேலைகளை தன்னுடைய வேலைகள் போலச் செய்து தருவதோடு, தொடக்கம் முதல் முடிவு வரை எம்முடனேயே இருந்து எம்மை வழியனுப்பும் பழக்கத்தை நான் வேறு எவரிடமும் கண்டதில்லை.

தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கும் எம்மவர்கள் மத்தியில் இவ்வாறான சமூகப் பொறுப்புகளை தன் பொறுப்பாகச் செயற்படுத்தும் மனம் யாவருக்கும் அமைவதில்லை. அந்த வகையில் இவை சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு அமைந்ததால் பேறடைந்தவர்கள் நாமே என்று கூறுவதோடு, நடைபெறும் மணிவிழா நிகழ்வு சிறப்புற அமைய வாழ்த்துகிறேன். அத்தோடு இதனை ஒழுங்கு படுத்தும் மணிவிழாச் சபையினரையும் பாராட்டுகின்றேன்.

**வைத்தியர் அருமைநாதன் ஸதீஸ்குமார்,**
பொது வைத்தியசாலை,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Sara Puvaneswaran Sir....

fondly called as Sara, Secretary General of Tamil Teacher's union so far, furnished union with clear direction as well as uplifted it continuously. Bidding goodbye to him is a major setback for the organization! However, as it is unavoidable everyone desires the best for him in the days to come! Sara's efforts toward the success of the organization has been superb, and that will be kept in memory. The members of the union felt consistently motivated by Sara's optimistic perspective and amicable attitude while working together. It is an appreciable stand of him for being an outstanding guide on his finale. He has provided everyone with mentorship in a way that no other secretary general could. He has always kept himself to be a beacon of light in his path of choice. An outstanding teacher is not always an exemplary mentor. A fantastic mentor is not always a superb leader. A marvellous leader is not always a superior teacher. However, Sara always maintained himself as an admirable mentor, teacher, boss, and leader, all combined into one package! He instructed others to be excellent in their jobs, provided direction along the path, and consistently treated others in a cordial way. We will keep that experience permanently etched in our memories. We desire the most favourable fortune in your retirement, family, and wellness. Good bye. I sincerely wish that you stay well blessed.

**K.Subramaniam**
**Former ADE English**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு விருட்சத்தின் விழுதுகள்

1985 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியாக இருக்கலாம்...

சில துணிமணிகள் அடைத்த ஒரு சிறு பையுடனும் கூடவே நிறைய உடல் உபாதைகளுடனும், உள காயங்களுடனும் அரியாலை மண்ணில் வந்து இறங்கினார். அரசு என்றும் நெருங்கிய நண்பர்களால் அரசர் என்றும் அழைக்கப்படும் சரா மாஸ்டர்.

யார் அந்தப் பெயரை வைத்தார்கள் என்ற ஊகத்தை விடுத்து, தான் சார்ந்த துறைகளில் அரசோச்சும் ஆளுமை அவரிடம் இருந்தமை அறிந்து தான் அரசு என்ற பெயரை வைத்தார்கள் என்பதை இப்போதைக்கு நினைவு கொள்ளலாம்.

சம்பூர்ண வளங்களும் நிறைந்த, சுத்தமான தமிழ்க் கிராமமான சம்பூரில் இருந்து இனவெறியர்களாலும் ஒட்டுக் குழுக்களாலும் இவர் இடம் பெயர்க்கப்பட்ட போது இவரது குடும்பத்தில் நான்கு அநியாய இழப்புகள் நிகழ்ந்து விட்டிருந்தன.

வந்த புதிதில் தமக்கையாரின் வேண்டுகோளுக்கு இணங்க, ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் வழிபடும் விதத்தைக் கண்டு நெகிழ்ந்து போன ஆலய அருட்தந்தை இவரை அழைத்து விசாரித்தார். பின்னர் மணியம் தோட்டப் பகுதியில் உள்ள வசந்தபுரம் என்ற இடத்தில் ஆலயத்தால் நடாத்தப்படும் வறிய பிள்ளைகளுக்கான பாடசாலையில் படிப்பிக்குமாறு கேட்டார். அவருக்கு வழங்கப்பட்ட மாதச் சம்பளம் 320 ரூபா மட்டுமே. ஆனால் பெரும் விருட்சம் ஒன்றின் விதை அங்கு தான் நாட்டப்பட்டது.

ஊரில் நாங்கள் "லெக்சர் அன்டி" என அழைக்கப்பட்ட ஒரு புண்ணியவதியே இவரை வழிப்படுத்தி, நெறிப்படுத்தி ஆசிரியர் தொழிலுக்கான சோதனைகளை எடுக்கச் செய்தார். இவருக்கு அவர் இரண்டாவது அம்மா.

ஆசிரியர் தொழிலில் அவருக்குக் கிடைத்த முதல் நியமனம் கிழக்கு அரியாலை தமிழ் கலவன் பாடசாலை. அப்போது மாணவர் வரவு குறைவாக இருந்த காலம். இவர் அங்குள்ள ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று பெற்றோர்களிடம் பேசி மாணவர்களைச் சேர்த்து அவர்களை நல்வழிப்படுத்தினார். பாடசாலையும் சீரும், சிறப்புமாக இயங்கத் தொடங்கியது. இன்றும் இவரது வாகனம் கிழக்கு அரியாலை வீதி வழியே போகும்போது மாணவர்கள் சைக்கிளை விட்டிறங்கி மரியாதை செய்வதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை சுதேசிய விழாவின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் போது கலைப்போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுவதால் சில நாட்கள் கல்வி நிலையத்துக்கு விடுமுறை விடுமாறு கேட்டபோது "கண்டிப்பானவர்" என அறியப்பட்ட இவர் மனமுவந்து ஒத்துழைப்பு தந்ததை மறக்க முடியாது.

இந்த கண்டிப்பானவரின் மனதுக்கு மிக நெருக்கமானவன் என்ற வகையிலும் இவருடன் மனம் விட்டுச் சிரித்து மகிழும் சிலரில் நானும் ஒருவன் என்ற நிலையிலும் அரசர் நீடு வாழ இறைவனை யாசித்து நிற்கிறேன்.

**ப. ஸ்ரீஸ்கந்தன்**
**கனடா நண்பர்கள் சார்பாக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பூர் மண் பெற்றெடுத்த தவப்புதல்வன்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் கௌரவ பொதுச் செலாளரும் தற்போதைய ஆலோசகரும், சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களை மணிவிழாக் காணும் இன்றைய தினத்தில் வாழ்த்துவதில் எமது உள்ளமும் உடலும் புளகாங்கிதமடைகிறது. சம்பூர்மண் பெற்றெடுத்த தவப்புதல்வர்களில் ஒருவரான சரா அவர்கள் தமது சமயம், மொழி, சமூகம் என்பவற்றில் அளவிட முடியாத ஆர்வமும் பிணைப்பும் கொண்டவர். எங்கெல்லாம் துணிந்து நின்று குரல் கொடுக்க வல்லவர் என்பதை மறுக்கமுடியாது. ஆலயப்பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பல ஆலயங்களுக்கு தம்மாலான உதவிகளை வழங்கியுள்ளதை நாம் அறிவோம். கல்வியே ஒருவருக்கு பெருஞ்செல்வம் என்பதை மனதில் கொண்டு ஆசிரியராக, விரிவுரையாளராகப் பணிபுரிகின்றபோது மாணவர்களை வழிப்படுத்தியதோடு ஆசிரிய சங்க பொதுச் செயலாளராக இருந்தபோது ஆசிரியப் பெருமக்களுக்கும் வழிகாட்டியாகவிருந்து அவர்களது நன்மதிப்பைப் பெற்றவர்.

இவரது தந்தையாரைப் பொறுத்தரை சம்பூர் கிராம சபைத் தலைவராகவும் பாடசாலையில் பெற்றார் ஆசிரியர் சங்கச் செயலாளராகவும் இருந்த காலத்தில் ஊருக்குச் செய்த சேவைகளை மறக்கமுடியாது. அதே போன்று தந்தையின் வழியில் தனயன் என்பதற்கமைய சரா அவர்களும் திகழ்கிறார் என்று கூறுவதோடு தொடர்ந்து சமூகப் பணிகளில் ஈடுபட அவருக்கு நீண்ட ஆயுளும் உடல் நலமும் கிடைக்க வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து மணிவிழாக் காணும் அவரை கொட்டியாரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியத்தின் சார்பில் மனப்பூர்வமாக வாழ்த்துக்கள் பகிர்ந்து அமைகின்றேன்.

**அன்புடன்**
**கலாபூஷணம் அருளம்பலம் குகராஜா** J.P
**பொதுச்செயலாளர்**
**கொட்டியாரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியம்.**
**அ. குகராஜா** J.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆற்றல்மிகு தொழிற்சங்கவாதி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் ஓய்வு பெறுகின்றார் என்பதை விட அவருடைய கல்வி, சமய, சமூக சேவைகள் மேலும் பலமடையும் என்பது எனது எதிர்பார்ப்பு.

இலங்கைக் கல்வி வரலாற்றில் பேசப்பட வேண்டிய ஒரு கல்விப்புலம் சார்ந்த சிறந்த நிர்வாகி, துணிச்சல் மிக்க செயல் வீரன், நிதானமான முடிவுகளை செயற்படுத்தும் கல்வியலாளன். ஓய்வு பெற்ற பின்பும் "இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆலோசகராக இலங்கை நாட்டின் நாலாபுறமும் இருந்து வருகை தந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சஙகத்தின் பிரிதிநிதிகளால் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டார். இது அவருடைய கல்விப் பணி சங்கத்தினூடாக தொடர வேண்டு மென்பதைக் காட்டி நிற்கின்றது.

திருகோணமலை மாவட்டம் கொட்டியாரப் பற்றின் சம்பூர் மண்ணில் அவதரித்த இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வரும் வேளையில் சங்கத்தின் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டு தசாப்த கால தொழிற்சங்க சேவையை வெற்றிகரமாக பூர்த்தி செய்தார். இவ்வாறான "இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எனும் உன்னதமான கலப்படமல்லாத தமிழர் நலன் சார்ந்த ஒரு கல்வியலாளர் அமைப்பின் செயற்பட்டாளர். இதன் தலைமையை இவருடைய காலத்தில் நானும் ஐந்து வருடம் ஏற்று பணியாற்றி உள்ளேன் என்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

எமது உரிமைப் போராட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திய சரா. புவனேஸ்வரன், தமிழர் கல்வி சார்ந்த விடயத்திலும் மிகப்பெரும் பணியாற்றி தமிழர் தேசத்திற்கும், தேசியத்திற்கும் பங்களித்தமை வரலாற்று தடயங்களாக இலங்கை வரலாற்றில் தடம் பதிந்துள்ளார்.

இவருடைய கல்வி, சமய, சமூகப்பணிகள் இன்னும் தொடர வேண்டும். ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக அமைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

திரு. இரா . சச்சிதானந்தம்
முன்னாள் தலைவர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு நண்பனின் இதயத்திலிருந்து வரும் மணிவிழா வாழ்த்துகளுடன்....

எனது நண்பன் சரா புவனேஸ்வரன் அவர்கள் இன்று மணிவிழா காணுகின்றார். இவர் ஒரு ஆசிரியராக, விரிவுரையாளராக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக பல பதவிகளில் சேவையாற்றி சாதனைகள் பல படைத்த ஒரு சாதனையாளர். இத்துடன் நின்று விடாது நல்லூர், அரியாலை ஆகிய இடங்களில் "சயன்ஸ் அக்கடமி" என்ற பெயரில் இரு கல்வி நிறுவனங்களை இயக்கி பல்லாயிரக் கணக்கான நன் மாணவர்களை உருவாக்கி சேவையாற்றியதுடன் இன்றும் அதே வழியில் தனது சேவையைத் தொடர்ந்து செய்ன்கிறார்.

"வெற்றித்தேர்வு" என்ற பெயரில் தரம் 05 மாணவர்க்கான புலமைப்பரிசில் வழிகாட்டி கருத்தரங்குகள் இலங்கை பூராவும் நடாத்தி பல்லாயிரக்கணக்கான மாணவர் களினதும் பெற்றோரினதும் பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்றவர். சரா புவனேஸ்வரன் ஆவர்.

இல்லற வாழ்வில் அரியாலையை சேர்ந்த வசந்தினி எனும் பெண்மணியை தனது துணைவியாக்கி நான்கு பிள்ளைகளின் தந்தையாக மிளிர்கிறார். அவர்களில் ஒருவர் வைத்தியராகவும் ஏனையவர்களும் அவ்வாறே சிறப்புத்தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளாவும் திகழ்கின்றனர்.

யாழ். மத்திய கல்லூரியில் ஓர் ஆசிரியராக இணைந்த காலம் முதல் எனது நட்புக்கு பாத்திரமாக விளங்கிய இவர் எனக்கு பலவழிகளிலும் உறுதுணையாக நின்று கைகொடுத்துள்ளார். இவரின் ஆளுமையினாலும் நிர்வாகத் திறமையினாலும் இன்று "சயன்ஸ் அக்கடமி" புதிய பரிமாணம் பெற்று பல நூற்றுக்கணக்கான மாணவர்களையும் திறமைமிக்க பல ஆசிரியர்களையும் கொண்ட நிறுவனமாக திகழ்வதுடன் அரியாலையில் உள்ள இவரது இல்லத்தில் "சயன்ஸ் அக்கடமி" அரியாலை என்ற பெயரில் ஒரு கிளை நிறுவனத்தையும் ஆரம்பித்து அங்கும் பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு திறம்பட சேவையாற்றி வருகின்றார். ஒழுக்கத்துடன் கூடிய சிறந்த மாணவர்களை உருவாக்கும் இவர் வசதி குறைந்த பல மாணவர்களுக்கு இலவசக்கல்வியை வழங்குவதற்கும் பின் நிற்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சயன்ஸ் அக்கடமி"யின் வளர்ச்சியிலும் சரா.புவனேஸ்வரன் அவர்களின் உயர்ச்சியிலும் என்றுமே அக்கறை கொண்ட நான் எனது கல்வி நிறுவனமான இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் பாவனையில் இருந்த பல தனித்துவமான சொத்துக்களை மனமுவந்து "சயன்ஸ் அக்கடமி"க்கு வழங்கியுள்ளேன்.

"சயன்ஸ் அக்கடமி" மேலும் பல சாதனைகளை படைத்து நல்ல மாணாக்கர்களை உருவாக்கவும் சரா. புவனேஸ்வரன் அவர்களும் அவரது. குடும்பத்தினரும் எல்லா நலன்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழவும் நல்லூர் கந்தனை வேண்டி நிற்கின்றேன்.

**அன்புடன் நண்பன்**
**த.வரதராஜா**
**இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபரும்**
**முன்னாள் யாழ்-மத்திய கல்லூரி**
**ஒழுக்காற்று சபை முதல்வரும், கணித ஆசானும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமையின் அடையாளம் எங்கள் சரா

பன்முக ஆளுமையின் அடையாளமாகத் திகழும் மணிவிழா நாயகன் திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்கள் மாணவர்கள் மத்தியில் கலங்கரை விளக்காக இருந்து கல்விப்பணியை முன்னெடுத்து வருபவர். எடுத்த காரியத்தை எவ் வித தயக்கமும் இன்றி துணிவுடன் வெற்றிகரமாக செயற்படுத்தும் செயற்றிறன் மிக்கவர்.

கல்விப்புலத்தில் மாத்திரமன்றி சமூகப்பணி, சமயப்பணி என பல்வேறு புலங்களிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தி கல்விச் சமூகத்தில் மாத்திரமன்று சமூக மட்டத்திலும் இன்று "சரா சேர்" எனப் பலராலும் அறியப்பட்டு மதிக்கப்படும் ஒருவராக விளங்குகின்றார்.

இவரின் அயராத உழைப்பு, அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, நிமிர்ந்த நடை, நேரான பார்வை, நேர்மையான செயற்பாடு, உறுதியான பேச்சு என்பன அவரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக உயரத்திற்கு இட்டுச் சென்றுள்ளது என்றால் அது மிகையாகாது எனலாம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் பல தசாப்தங்களை கண்டு பல்வேறு பணியில் பதவிகளை அலங்கரித்து தற்போது பொதுச் செயலாளராக பணியாற்றிய அவர்கள் சங்கமானது பல்வேறு துயரங்களை சந்தித்தபோது அச்சுமைகளை தாங்கி தொழிற்சங்கத்தின் பெயரை காப்பதற்காக அயராது பாடுபட்டார். இவரது தொழிற்சங்கப் பணியினை யாரும் ஈடுசெய்ய முடியாது.

தொழிற்சங்கத் தோழர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருந்து தனது பாதையில் பல தோழர்களை உருவாக்கியுள்ளமை அவரின் சீரிய சேவைக்கு எடுத்துக்காட்டாகும். சங்கத்தின் பணிக்காக தன்னை அர்ப்பணித்து அவரது அவரின் சேவை நிறைவு பெறும் இவ்வேளையில் அவரின் பணிகளை மனதாரப் போற்றுவதுடன் அவரின் குடும்பமும் சகல செல்வங்களையும் பெற்று சிறப்படையவும் அவரின் கல்வி, சமூகப்பணிகள் மென்மேலும் சிறக்கவும் அதனூடு சிறந்த பயன்பெறவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக் கின்றேன்.

**திரு. சொ. லோகேஸ்வரன்,**
**ஓய்வுநிலை அதிபர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னலமற்ற சேவையாளன்

திரு சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். பல்துறை ஆளுமை கொண்ட "சரா" அவர்கள் நல்லாசியராக, விரிவுரையாளராக, சிறந்த நிர்வாகியாக துணிச்சல் மிக்க தொழிற்சங்கவாதியாக, சமூக சேவையாளராக பெரும் பணியாற்றியவர். இவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராகி பன்னிரு ஆண்டுகள் கல்விச் சமூக மேம்பாட்டிறகாக பணிபுரிந்தார். அவரது பணி மாணவர் திறன் மேம்பாட்டிற்காகவும், ஆசிரியர்களின் உரிமையை பாதுகாப்பதற்காகவும், கல்விச் சமூக உயர்வுக்காகவும் அர்ப்பணிக்கப்பட்டது எனின் மிகையாகாது. கல்விச் சமூகத்தின் நன்மதிப்பை பெறவும் தனித்துவமான நிலையை பிரபலிக்கவும் அவரது அயராத சேவை காரணமாயிற்று.

அவர் தம் அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆலோசகராக சங்கத்தை வழி நடத்தவும் நேர்மையான துடிப்புள்ள தனது துணிச்சலான செயற்பாட்டினால் தமிழரின் விடிவை நோக்காகக் கொண்டு அரசியல் செயற்பாட்டினை மேற்கொள்ளவும் வல்லமையை எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டுமென பிரார்த்தித்து ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றேன்.

ந. நகுலநாதன்
ஓய்வு நலை பிரதி அதிபர்,
முன்னாள் இ. த. ஆ. சங்க யாழ் மாவட்ட செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிவிழா நாயகன் சரா. புவனேஸ்வரன் அவர்கள்!

மணிவிழா காணும் நாயகன் அர்ப்பணிப்புடன் கூடிய கல்விப் பணியிலும், சமூகப் பணியிலும் மகத்தான சேவையாற்றியதுடன் தொழில் சங்க மகத்துவத்திற்கும், புலமைப் பரிசில் "வெற்றித்தேர்வு" வித்தகனாகவும், "சயன்ஸ் அக்கடமி" இயக்குநராகவும் செயற்பட்ட சரா புவனேஸ்வரன் அவர்களின் எதிர்காலத்தில் சீரும் சிறப்புடனும் பெருமையுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**கந்தையா தேவநேசன்,**
*ஓய்வு நிலை அதிபர்,*
*முன்னாள் தமிழர் ஆசிரியர்,*
*சங்க நிதிச் செயலாளர்.*



சிறுவயது முதலாய் நிறைந்த நட்புரிமை
காலம் கடந்து ஓய்வு வந்ததுசீராய்
பணி பல கண்டு பெருமை கண்டேன்
மகிழ்ச்சி நிறைந்து ஓய்வுக்காலம் சிறந்திட வாழ்த்துகின்றோம்.

**சம்பூர் க. யோகானந்தன்**
ஓய்வுபெற்ற அதிபர்



தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளராய், விரிவுரையாளராய், குறுந்தூர ஓட்ட சாதனையாளராய், தமிழ் மீதும் தமிழர் மீதும், ஆன்மீக அறத்தோடும், அக்கறை கொண்டு மாணாக்கரின் கற்றல் திறனை வழிப்படுத்தி, பிறந்த மண்ணையும் வாழும் மண்ணையும் இரு கண்ணெனக் காணும் சரா புவனேஸ்வரனை மணிவிழாவில் வாழ்த்தி, சக தோழனாய், வீரனாய், உறவினனாய், சம்பூரானாய், நானும் இணைந்திருப்பதில் பூரிப்படைகிறேன்.

**சம்பூர். ம. சச்சிதானந்தம்,**
*அதிபர், பத்திரிகை செயலாளர்,*
*இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விச் சேவையாளன்

செயற்றிரனின் சிகரம்
இதனை இதனால் இவன் உன்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்

காலத்தின் தேவை கருதி கல்விச் சேவை ஆற்றிய சேவையாளர் திரு. சரா. புவனேஸ்வரன் sir அவர்கள். ஆசிரிய சேவையின் மகத்துவம் உணர்ந்து வாழ்க்கைக் காலத்தின் பெரும் பகுதியை கல்வி வளர்ச்சியின் மேம்பாட்டுக்காகவும் ஆசிரியத்துவத்தின் நலனுக்காகவும் உழைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறந்த சேவையாளன். இதனை உணர்ந்து தாள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் என்ற உயர்ந்த பதவி இவருக்கு கிடைக்கப்பெற்றது எனலாம். இதனையே, மேலே கூறிய திருவள்ளுவரின் 517 ஆவது குறளான

"இதனை இதனால் இவன் முடிக்கும் ..........." என்ற குறள் இவருக்கு பொருத்தமாக அமைந்துள்ளது.

இவர் வயதிற்கே மணிவிழா கொண்டாடப்படுகிறது. இவர் தொடர்ந்தும் பல சாவல்களை எதிர்கொண்டு வடமாகாணத்தின கல்விப் புலத்தின் வளர்ச்சிக்கு சேவையாற்றக்கூடிய ஒரு நல்ல பலத்தினை நல்லூரான் வழங்கி துணை நிற்பார். தொடர்ந்தும் இவர் பணி தொடரட்டும்.

வாழ்க வளமுடன்

**திரு. கு. அகிலன்**
**அதிபர்,**
**யா/ இடைக்காடு மகாவித்தியாலயம்,**
**அச்சுவேலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரா என்ற மக்கள் சேவையாளன்

மணிவிழா காணும் எனது அன்புக்குரிய நண்பன் சரா என்று அழைக்கப்படும் சரா. புவனேஸ்வரன். தமிழ் மக்களின் சேவையாளன். இருவரும் மத்தியில் இணைந்தோம். விளையாட்டுத்துறை மத்தியில் வளர உழைத்தவர். அது மட்டும் அன்றி ஒழுக்கம் நல்ல முறையில் சீர்தூக்க தன்னை அர்ப்பணித்தவர். நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். ஒவ்வொருவரது துன்பத்திலும் சந்தோஷத்திலும் தன்னையும் முழுமையாக இணைத்தவர். மாணவரின் கல்வியில் படி வளர்ச்சி அவசியம் என்பதை மாணவர்களுக்கு புரிய வைத்து அவர்கள் முன்னேற்றத்தில் தோளோடு தோள் நின்று கல்வி வளர்ச்சிக்காக உழைத்தவர். அவர் குடும்பம் என்னுடன் ஒரு தாய் பிள்ளைகள் போல் எனது பல்வேறு செயற்பாடுகளில் இணைந்து செயற்படும் பொது சிந்தனையும் அர்ப்பணிப்புக்கும் சொல்ல வார்த்தைகள் இல்லை. இவரை பற்றி எழுத ஆயிரம் பக்கங்கள் காணாது. சுருங்கக் கூற வேண்டிய நிர்ப்பந்தத்தால் மணிவிழா நாயகனும் அவர் குடும்பத்தவர்களும் பல்லாண்டு பல்லாண்டு காலம் நோய் நொடி அற்று தனது மக்கள் சேவையைத் தொடர எல்லாம் வல்ல இறைவன் என்றும் துணை இருப்பார் என்று கூறி வாழ்த்துகின்றேன்.

**இணைபிரியா நண்பன்**
**வி. தயாபாலன்**
**(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சினங்கொள்ளாச் சேவையாளன்

ஆசிரியர் படையணிகளின் காவலனே, காப்பரனே உம்மைக் கருவில் சுமந்த உம் தாய்க்கு முதல் வணக்கம்.

திருமலையில் பிறந்து, கல்வியில் சிறந்து, கவலைகள் மறந்து, ஆசிரிய சேவையில் இணைந்து, மாணவருக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் சேவையாற்றிட நுழைந்தீர் தொழிற்சங்கத்தில். மிகப்பெரும் ஆளுமை மகாசிவம் ஐயாவின் வழியில் சங்கத்தைச் சுமந்த சிங்கம் நீங்கள்.

பக்கவாதத்தைத் தூக்கி ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு பக்காவாக வாதம் செய்தீர் ஐயா ஆசிரியர் நலன் காக்க. வன்னி லிஸ்ட் வந்துவிட்டால் உணவில்லை, உறக்கமில்லை. ஓயாது ஒலிக்கும் உங்கள் தொலைபேசி. எத்தனை மணிக்கு எடுத்தாலும் எத்தனை தடவை எடுத்தாலும் சினங் கொள்ளாச் சேவையாளன்.

அதிகாரத்தரப்போடு பேரம் பேசுவதில் சோரம்போகாத எம் சொந்தக்காரன். ஓய்வு எடுக்கப் போகிறேன் என்ற போதெல்லாம் ஒருவர் கூட ஏற்கவில்லை உங்களைப் பிரிவதற்கு. காலம் வந்து நின்று காணும் என்று கூறியதால் பிரியாவிடை தருகின்றோம் பிரியமனமின்றி.

சரா! மும்மொழிகளையும் சரளமாகப் பேசும் ஓர் ஆளுமை மிக்க உயிரோவியம். உங்களது சேவை ஓர் உன்னத காவியம். மணிவிழா நாயகரே வணங்குகின்றேன் உங்களை. வாழ்க வாழ்க என வாழ்த்துகிறேன் நலமுடன் வாழ்ந்திடவே.

**திரு. சோ. இராமநாதன்,**
**தலைவர்,**
**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,**
**வலிகாமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகன் பற்றி ஒரு சில வார்த்தைகள்

உண்மையில் இவர் பற்றி சொல்வதற்கு ஐந்து வரிகள் போதாது. எங்கள் ஆயுள் முழுவதும் கூறலாம். இருந்தும் ஒரு சில வார்த்தைகள். சரா sir மண் மீதும் மக்கள் மீதும் அதீத பற்றுக் கொண்டவர். யார் என்ன உதவி கேட்டாலும் தனது சொந்த பிரச்சனையாக கருதி முன்னின்று செய்து முடிப்பவர். எந்தவித சுயலாபமும் கருதாது பொதுநலன் கருதி செயல்படும் நல்லவர். இவர் பல மாணவர்கள் உயர்நிலை அடைய வித்திட்டவர். இவரை சமூக சேவகன், விளையாட்டு வீரன், சிறந்த நிர்வாகி , சிறந்த கொடையாளி என்று தெரிந்த பலருக்கு இவர் சிறந்த கவிஞர் என்பது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இவரது கவிதைகள் மிகவும் கருத்தாழம் மிக்கவை மிகவும் இரசிக்க கூடியவை. மற்றும் 1990 ஆம் ஆண்டு தரம் (ஆண்டு) 5 வகுப்பு எங்களுக்கு எடுக்கும் போது இவரிடம் பல திறமைகள் இருப்பதைக் கண்டு வியந்தோம். அது இன்று பெரு விருட்சமாகி "வெற்றித்தேர்வு" என்னும் நாமத்துடன் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் புலமைப் பரீட்சையில் வெற்றி பெற உதவும் ஒரு மார்க்கமாக உள்ளது.

அந்த வகையில் பல திறமைகளைக் கொண்ட ஆசிரியர், விரிவுரையாளர், கவிஞர், விளையாட்டு வீரர், சமூக சேவகன் ஓய்வு காலத்தில் சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

நீடூழி வாழ்க் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

**திரு திருமதி. ஜசிந்தினி பிரதீபன்**
**அரியாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறவுகளின் காவலன்

அன்பான தம்பி/ மைத்துனர் சரா. புவனேஸ்வரன் நீண்ட ஆயுளுடன் சிறப்பாக வாழ வேண்டும் என்று பத்திரகாளி அம்பாளை முதலில் வேண்டிக் கொள்கின்றோம்.

உண்மையாகச் சொன்னால் உடன்பிறவாத சகோதரனாக இருந்தாலும் எனக்கு அவன் உடன் பிறந்த தம்பியாக என் கணவருக்கு நல்ல மைத்துனராக என் பிள்ளைகளுக்கு உரித்தான மாமனாக எப்பொழுதுமே எங்கள் மீதும் பற்றும் பாசமும் கொண்டவனாக வாழ்ந்து வருகின்றான். இவன் தான் பிறந்த ஊரான சம்பூரிலே உற்றார் உறவினர்கள் எவருடைய நிகழ்வாக இருந்தாலும் பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்து ஓடி வருவது எங்கள் மீது கொண்ட பற்றுதலால் ஆகும். ஊரில் என்ன நல்லது கெட்டது நடந்தாலும் அவனை அங்கே காண்போம். படிப்பதற்கு ஆர்வமுள்ள பல நூறு குழந்தைகளுக்கு இப்பொழுதும் உதவி செய்து கொண்டே இருக்கின்றான். எங்கள் குலதெய்வமான பத்திரகாளி அம்மாள் மீது தீராத பற்று கொண்டவன். அந்தத் தாயை உயிராக மதிப்பவன். தனது மனைவி பிள்ளைகளோடு தனது உறவுகளை காண்பதற்காக மாதம் ஒருமுறை அல்லது வாரம் ஒருமுறை அவன் வராமல் விட்டதே இல்லை. அத்தகைய பற்றும் பாசமும் அன்பும் கருணை உள்ளமும் கொண்ட எனது தம்பி மைத்துனனுக்கு மணிவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு அவன் நீண்ட ஆயுளோடு வாழ்ந்து எங்களை வாழ வைக்க வேண்டும் என்று பத்திரகாளி அம்பாளை வேண்டுகின்றோம்.

**திரு/ திருமதி. திரவியராஜா சந்தானலட்சுமி,**
**சம்பூர் - 3**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணியம் கடமை தவறாதவர்

கல்லினை உளியால் வெட்டிக் கவின் கலை உருவம் ஆக்கும் கலைஞனைப் போல் நல்கிடும் அன்பு கொண்டு நலமான கல்விச்சமுதாயத்திற்கு மேலுயர் பணிகள் செய்தவர் சரா ஆசிரியர்.

கண்ணியம் கடமை அதனை கர்சிப்பாய் எவ்வித சவால்களையும் தாண்டி களிப்புடன் வாழ்ந்த ஆசான். எல்லா ஆசிரியர்களையும் சுற்றம் போல் பேணி மகிழ்வாய் வாழ்ந்தவர்

நிமிர்ந்த நடை நேர் கொண்ட பார்வை இளமையின் இறுமாப்பு என்றும் குறைந்தது இல்லை இவரிடம். கள்ளம் கபடமற்ற உள்ளம் நெறிமுறையான வாழ்வியலை மட்டுமே வாழவேண்டும் என்ற எண்ணம், ஏழைகளுக்கும் கல்வி இலவசமாய் கிடைக்கவேண்டும் என்பதில் உறுதி இவை அவரது வாழ்வின் குறிக்கோளும் செயல்வழியாகவும் அமைந்தது.

அறிவினால் உயர்ந்த நெஞ்சு அறுபதை அடைந்தாலும் அழிவில்லாத இனிய இளமை குறைந்தது இல்லை. தமிழர் வழியிடை யுத்தசரித்திரத்தில் பெருவலி கண்ட சமர் வீரர்களின் உறவும் நெருக்கமாய் இருந்தது மண்ணின் காதலால். அரசியல் களமும் கண்டுரைத்த ஞான ஆசான். திசையழிந்து போகா இளைய சமுதாய விருத்திக்காய் தனியார் கல்வி நிறுவப்பணியையும் கைவிட்டதில்லை அதிலும் தலைமை நிருவாகி.

ஆசிரியராய் விரிவுரையாளராய் ஆசிரியர் சங்கப்பொதுச்செயலாளராய், வளவளராய் முப்பதைந்து ஆண்டுகள் முழு நிறைவைக்காண்பது என்பது எத்தனை தடங்கல்களை சமாளித்த திறன் வேண்டும்.

அத்தனை திறன் உள்ள மனிதரால் எத்தனையோ ஆசிரியர்கள் பயன் பெற்றனர். எத்தனையோ , எத்தனையோ நல்ல மாணாக்கர் கரை சேர்ந்தனர். அது மடடுமன்றி குடும்பத்தின் கடமையிலும் தன் மனையாளின் அன்புக்குரியவாராய் தன் பிள்ளைகள் கல்வியின் கரையிலே சிறந்த துறை வல்லுனர்களாய் ஆக்கிய பெருமைக்குரியவர். பாரெல்லாம் அறிவினால் ஒளிவீச பாங்குடனே அவர் ஆற்றிய சேவைகள் வாழ்நாட்களை கடந்தும் வாழக்கூடியது. வாயார அவரை வாழ்த்த எனக்கு வயதில்லை ஆனாலும் சீரோடும் சிறப்போடும் பார் ஆண்ட ஊரின் மைந்தன் திருகோணமலையில் பிறந்தாலும் தான் குடியேறிய மண்ணிற்காய் வாழ்ந்த புனிதன் . தேசம் விழிப்படைய அறிவூட்டியவர். போலிகளுக்கு அஞ்சா சிங்கம். மணிவிழா காண்பது மட்டுமல்ல நூற்றாண்டு விழாவும் கண்டு சிறக்க இதயபூர்வமான வாழ்த்துக்கள் ஆசானே!

**திருமதி.றஜீபன் தர்மினி,**
**சமூகசேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**நல்லூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனதார வாழ்த்துகின்றேன்

அன்புக்கு அன்பாகி அருகிருந்து வளர்ந்தோம்
அரிச்சுவடி முதல் அனைத்தையும் ஒன்றாகி கற்றோம்

உற்ற துணையாய் ஊர் வீதிகளில் நடந்தோம்
உறவுகளில் புனிதமாய் வளர்ந்தோம்
ஊரார் பார்க்க ஒன்றாகவே திரிவோம்

தன்னை உருக்கி ஒளிதரும் திரிபோல
உன்னை ஊருக்கியே ஊருக்கும் உலகுக்கும்
உழைத்தாய்
உயர்வுள்ளம் கொண்ட ஆசிரியனாய் திகழ்ந்தாய்
ஈன்றில் ஆசிரியச்சங்கமும் கொண்டாய்
எண்ணிலா சேவைகள் செய்தவா உன்

வாழும் நாட்கள் யாவிலுமே
ஆனந்தமே பெருக ஆண்டவனை வேண்டுகிறேன் நண்பா

ஆண்டுகள் ஆனபோதும் ஒன்றாக
உயிரில் இணைபிரியா நட்பாகி நாம்

விதியின் வசம் வாழிடம் பிரிந்தாலும்
விரும்பியே தேடி ஓடிவரும் என் நண்பனை
மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகிறேன்
சம்பூர் பத்திரகாளி அம்மாவின் துணையோடு
பல்லாண்டு நலமோடு ஊர்போற்ற வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

**அன்புடன்,**
**க. சந்திரானந்தம்,**
**சம்பூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நக்கீர ஞானம் கொண்டவரே

"நக்கீர ஞானம்" கொண்டீர்
நலமோடு என்றும் வாழி!

ஆசானாய் விரிவுரையாளராய் அரும்பணியாற்றிய செம்மலே!
பணி ஓய்வு காலம் சிறந்து பார் போற்ற வாழ்க
இடைவெளி இல்லாத யுத்தமும் அடிக்கடி மாறும் அரசியல் மாற்றமும் கல்விப் புலத்தில்
தாக்கத்தை ஏற்படுத்த ஊசி வழி நூல் போல் ஆசிரியர்களுக் கெதிரான பிரச்சினைகள்
அணிகோர்த்து நின்ற சவால்கள் நிறைந்த யுகத்தில் தளராது பணிசெய்த
நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றேன். நும் சேவை கண்டு பெருமிதம்
கொள்கின்றேன்.

நாளைய சந்ததியின் நாற்றுக்களம்
மாணவக் குருத்துக்களை பட்டை தீட்டும்
உத்தமப் பணியில் உயரம் தொட்டவரே!

தமிழ் ஆசிரியர் நலன்களுக்காய் அவர்தம் உரிமைகட்காய்
கருத்து வழி யுத்தம் செய்து அழுத்தங்கள் பல சுமந்தீர்
அத்தனையும் நன்கறிவேன் ஆளுமையே வாழி! வாழி!

சீறியெழும் சிங்கமதாய் கனிவுடன் கண்டிப்பும் கொண்டு
நேரெதிரே பிழை சுட்டும் "நக்கீரஞானம்" கண்டேன்
மாறிவரும்புதுமைகள் முன் மார்தட்டி நின்றவரே
நூறு ஆண்டு கண்டும் வாழ நும் சேவை மூப்பில் வாழ்த்துகின்றேன்!

செம்மலே நீர் வாழி வாழி!
சீர் நிறைந்து என்றும் வாழி !

**திரு.கி.இந்திரன்,**
நிதிச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முயற்சியும் உயர்ச்சியும்

"வெள்ளத்து அணையது மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்து அணையது உயர்வு" என்றார் தமிழ் மறை தந்த வள்ளுவப் பேரரசன். தாமரை, அல்லி, ஆம்பல் அன்ன நீர்த்தாவரங்களது தண்டுகளின் நீளத்தை தீர்மானிப்பது நீர்மட்டமாகும். அதாவது நீர் நிலையில் நீர்மட்டம் ஐந்து அடி உயர்ந்தால் நீர்த்தாவரங்கள் தமது தண்டுகளை ஐந்து அடிக்கு வளர்த்து தமது இலையை நீருக்கு மேலே கொண்டு வந்து போடும். நீர்மட்டம் பத்து அடிக்கு உயர்ந்தால், நீர்த்தாவரங்கள் தமது தண்டுகளை பத்து அடிக்கு வளர்த்து தமது இலையை நீருக்கு மேலே கொண்டு வந்து போடும். இவ்வாறு நீர்த்தாவரங்களது தண்டுகளின் நீளத்தை நீர்மட்டம் தீர்மானிப்பது போல மாந்தரது உயர்ச்சியைத் தீர்மானிப்பது அவர்களது முயற்சி என்று தெய்வப் புலவர் கூறுகின்றார்.

சம்பூரிலே பிறந்து வளர்ந்து யாழ்ப்பாணத்தில் வதியும் சரா புவனேஸ்வரன் அவர்கள் இக்குறளுக்கு இலக்கணமாக விளங்குகின்றார். சரா, ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்கல்வி வரை சம்பூர் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்தில் சிறந்த மாணவராகவும், விளையாட்டுத்துறையில் முன்னணியிலும் விளங்கியதை நான் அறிவேன்.

யாழ் மண்ணில் கல்விப்பணியாற்றிய காலத்தில் சிறந்த ஆசானாகவும், நல் வழிகாட்டியாகவும் விளங்கினார். 1992 தொடக்கம் 1994 வரையான காலத்தில் யா/ மத்திய கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில், என்னுடன் இணைந்து ஆசிரிய நலன்புரிப்பணிகளிலும், சமூகப் பணிகளிலும் சேவையாற்றியமையை நினைவு கூர்ந்து பார்க்கின்றேன். "Science Acadamy" எனும் பெயரில் யாழ் நல்லூரிலே தனியார் கல்வி நிறுவனத்தை நிறுவி பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு கல்விப் பசியை நீக்கியிருக்கின்றார்.

தரம் ஐந்து மாணவர்களுக்கு "வெற்றித்தேர்வு "எனும் பெயரில் புலமைப்பரிசில் வழிகாட்டியை உருவாக்கி வழங்கியமை சிறப்புக்குரியது. சித்தியடைந்த தரம் ஐந்து மாணவர்களுக்கு திருகோணமலையில் துவிச்சக்கர வண்டிகளை வழங்கி உற்சாகப்படுத்தியமை வரவேற்புக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராக பல வருடங்கள் பணியாற்றி ஆசிரியர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தமையையும் இம் மணிவிழா மலரில் பதிவிடுகின்றேன். அரச ஊழியன் ஒருவன் பொது நிர்வாக சுற்று நிருபத்தின் படி ஓய்வு பெறல் வேண்டும். என்ற நியதிக்கமைய ஓய்வு காலத்தில் சமூக நலப்பணிகளிலும் தொடர்ந்து ஈடுபடவேண்டும் என வாழ்த்தி எல்லாம் வல்ல சம்பூர் காளித்தேவதை சராவுக்கு அருள்பாலிக்க வேண்டும் என்று பிரார்த்தித்து எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**தேசகீர்த்தி, தேசமாணி, சமூக ஜோதி**
**லயன் கோ.செல்வநாயகம்**
**ஓய்வு நிலை கோட்டக்கல்விப்பணிப்பாளர்,**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விக்கலையின் கர்ம வீரன்

சீராக வெற்றி பெற்று சிரேஸ்ட விரிவுரையாளராய் ஆசிரிய சாலையிலே!
தேரோட்டி கிருஷ்ணரைப்போல் தர்ம வியூகம் அமைத்து சங்க பொதுச்
செயலாளர்!
பாராட்டுக்குரிய இயக்குநராம் மெய்ஞ்ஞானமிக்க "விஞ்ஞான அக்கடமி"
செயலாளர்!
நேராக நிமிர்ந்த நடையும் வெற்றி பெற்ற "வெற்றித்தேர்வு" பிரதம ஆசிரியர்!
பாரபட்சம் இன்றி கல்விச்சேவையிலே மூன்று தசாப்தம் தியாகமாய்!
பாரினிலே பாசமுடன், நேசமுடன் தேசத்தின் கல்வி வளர்ச்சியில் இடம் பதித்து!
கூர்மையான நேர்மை கொண்ட அறிவுடனே பார் போற்ற தடம் பதித்து!
பேரோடு நூறாண்டு வாழவேண்டும் கல்வி கலையின் கர்ம வீரனே!
தீராத ஆசையுடன் உம் சேவைக்காய் வாழ்த்துகின்றோம் போற்றுகின்றோம்
தர்ம வீரனே!
தீரா பாசம் கொண்ட தாய் மாமன் அரும் பெரும் சேவை தனை
வாழ்த்துகின்றோம்!

**அன்பு மருமக்கள் சார்பாக ந. டினேஸ்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனபருக்கு அன்பனே
நண்பருக்கு நண்பனே!
ஆளுமையின் இருப்பிடமே!
ஆதரவின் பிறப்பிடமே!
வாழ்க பல்லாண்டு
வாழ்க உம் சேவை

**அதிபர் S.R பாலச்சந்திரன்,**
**கிளி/ பூநகரி மத்திய கல்லூரி.**



சரா புவனேஸ்வரன் என்ற சாதனைச் செம்மலே
ஆசிரியர் சங்கமும் அளப்பரிய கல்விச் சாலையும்
இரப்போர்க்கு இன்னமுதாய் அறச்சாலையும் அமைத்தவனே
மறத்தமிழன் மாண்பு காத்த மன்னவனே
சிறக்க இன்னும் தம் பணியே சீரோடு வாழியவே!

**திரு. சி. தில்லைநாதன் (ஆசிரியர்),**
சம்பூர்.



கிழக்கில் உதித்து வடக்கில் வளைகரம் பற்றினீர்
பதினாறு பேறுபெற்று அதிபதியாக வாழ்வாங்கு வாழுகிறீர்
பாலர் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை மாணவரை நெறிப்படுத்தினீர்
ஆசிரியர் சங்க செயலாளராகப் பதவி ஏற்று குறைகளைக் களைந்தீர்
ஓய்வு பெற்றாலும் மக்கள் சேவையைத் தொடர ஆசிகள்

**திருமதி. கலா பிரகதீஸ்வர சர்மா**
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு தம்பி சரா புவனேஸ்வரன் இப்பொழுதும் என்னோடு ஒட்டி உறவாடும் நல்ல சகோதரன். எனக்கு என்ன உணவு விருப்பமானதோ அதை உடனே செய்து தருகின்ற திறமை உள்ளவன். இவனிடம் உள்ள பல திறமைகளை நாங்கள் பார்த்து வியந்து இருக்கின்றோம். உறவுகள் என்றாலே இவனுக்கு உயிர் அதனை அவன் ஒருபோதும் விட்டுக் கொடுத்ததில்லை. மணிவிழா காண்கின்ற என அன்புத் தம்பிக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**பே. இராமநாதன்,**
***இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி,***
***திருகோணமலை.***



அண்ணாச்சி என அன்பாக அழைக்கின்ற எங்கள் உரிமை உள்ள சரா புவனேஸ்வரன் அவர்கள் எங்கள் குடும்பத்தில் ஒருவராக இன்று வரை வாழ்ந்து வருகின்றார். அவரது அன்பும் பாசமும் என்னுடைய குழும்பத்தோடு எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். 60 வயதில் மணிவிழா காணும் அன்பு அண்ணனுக்கு எனது குடும்பம் சார்ந்த வாழ்த்துக்கள

சாதனையோ சரா. புவனேஸ்வரன்

சம்பூர் காளி ஈன்ற தலைமகன்
போதித்தான் ஆசிரியர்
சங்கத்தில் நீடித்தான்
கல்விப்புலம் நிறைந்து
கலைகள் பல நிறைய வைத்து
அரியாலைப் பதி அமர்ந்து
அனைவருக்கும் அன்பு செய்யும்
விடிகாலைப் பொழுதே நின்
விந்தை இன்னும் தொடரட்டும்
வாழ்க வளமுடன்

**சி. நாகேந்திரன்,**
***பொலிஸ் அதிகாரி,***
***திருகோமணலை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு ஒரு வாழ்த்து மடல் வரைவதில் நான் பெருமித மடைகிறேன்.

இவர் நல்ல ஆசானாக, விரிவுரையாளராக, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளராக அளப்பரிய சேவைகளாற்றி இன்று "மணிவிழா" நாயகனாக திகழும் உயர் திரு சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இவர் கல்விச் சமூகத்தோடு மட்டுமல்லாது சமூக சேவையிலும் சளைத்தவர் அல்ல. எங்கிருந்தாலும் அந்த இடம் சிறக்க அயராது பாடுபட்ட மாமனிதர். அது மட்டுடல்லாது அரியாலை அபிவிருத்திச் சங்கத்தில் வறிய மாணவர்களுக்கு ஊக்குவிக்கும் முகமாக பல உதவிகள் கிடைக்க உறுதுணையாக அமைந்தவர். எந்த இடத்திலும் நேரந் தவறா கடமையாளர். இவரின் சேவைகள் அளப்பரிது

**உதயன் (நண்பன்)**



சம்பூரின் மைந்தனாகப் பிறந்து
அரியாலை வாசியாக இணைந்து
"சயன்ஸ் அக்கடமி" இயக்குநராக - செயற்பட்டு
அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் கல்விக்குழு
தலைவராக, நன்மாணாக்கர்கள் பலரை உருவாக்கி
நற் பிரசைகளாக பிரகாசிக்க வழி சமைத்த
ஆளுமை மிக்க சரா புவனேஸ்வரன் அவர்களுக்கு
மணிவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மனநிறைவு அடைகின்றேன்.

**திருமதி. விமலராணி சிவம்**
**ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்**
**பொருளாளர், அரியாலை, அபிவிருத்திச்சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுமுகன் கோவிலருகில் அந்திமாலைப்பொழுதில்
ஆண்சிங்கமாக ஆணவமாய் நடைபயில்வீர்
ஆசிரியர் இடர்துடைக்க அருமையாகப் பாடுபட்டு
ஆசிரிய சங்கமதை அழகாக வளர்த்தெடுத்தீர்
ஆனந்தமாய் அகவை அறுபதை அடைந்த உமது
ஆயுள் நீடிக்க ஆண்டவனை வேண்டி நிற்றேன்

**சி. தர்மரத்தினம்**



**மணிவிழா காணும் ஆசானை வாழ்த்தி ஓரிரு வரிகள்**

மற்றவர்களின் தேவை அறிந்து
கேட்காமலே உதவி புரிந்து விட்டு
மௌனமாக அவர்களின் வளர்ச்சியைக் கண்டு
பெருமிதம் கொள்ளும் பேராசானும்
எனது வழிகாட்டியுமாகிய உயர்திரு சரா புவனேஸ்வரன் அவர்களை
வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

**திருமதி இ. சிவபவானி ஆசிரியர்**



எண்ணும் எழுத்தும்
எண்ணத்தில் விதைத்து
ஏணிப்படியாய் ஏற்றம் தந்த
உமக்கு பணி ஓய்வு என்றும்
பொருந்தாச் சொல்லே
ஆசானுக்கு என்றும் ஓய்வே
இல்லை

**லா.யஸ்ரின் அன்ரனிற்றோ**
**ஓய்வுநிலை ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகவை அறுபதில் கால் பதிக்கும் "மணிவிழா நாயகன்"
புவன ஈஸ்வரனுக்கு நல்வாழ்த்துக்கள்
அருந்தனமாம் கல்விப் பணிதனைத் தனதாக்கி
மென்மேலும் தொடர்ந்திட நல்லாசிகளும்
பாராட்டுக்களும் உரித்தாகுக!

**சி. வில்வநாதன்(தங்கன்)**



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராக மிளிரும் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் எமது மாணவச் செல்வங்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பல்வேறு வழிகளிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஓர் துணிச்சல் மிக்க தொழிற்சங்கவாதியாக விளங்கினார். ஆசிரியர்கள் சம்பந்தமான விடயங்களை பொறுப்புணர்ச்சியுடனும் திணைக்கள நடை முறைகளை அனுசரித்தும் செயற்படுத் துகின்றவராகவும் விளங்கினார். தனது பணிக்காலம் முழுவதும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி ஓய்வு பெற்று இன்று மணிவிழாக் காணும் திரு. சரா புவனேஸ்வரன் அவர்களுக்கு மணி விழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் நல்லைக் கந்தனின் இறையாசியையும் வேண்டுகின்றேன்.

**திருமதி. நந்தினி நற்குணராஜா,**
**நிர்வாக உத்தியோகத்தர்,**
**யாழ்ப்பாண கல்விவலயம்.**



தம்பி புவனேஸ்வரன் அவர்கள் தன் நலம் கருதா தந்தையின் வழியிலே பல விதமான மகத்தான சேவைகளை தொடர்ச்சியாக ஆற்றிக் கொண்டிருக்கின்றார். மற்றவரின் நலத்திலே அக்கறை கொண்டவர். இவ்வாறானதொரு சேவை யாளனை வாழ்த்து வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**ந. இராசலிங்கம்**
**ஓய்வுநிலை நூலகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையின் நிஜவடிவமே....
தற்துணிவு, அஞ்சா நெஞ்சம் உங்களுக்கே உரியது
நிர்வாகத்திறன் கண்டு வியந்து, கற்றுக்கொண்டோம் பல..
முதலாம் எண்ணுக்குரிய இயல்பான
அனைத்திலும் முதன்மையே....
உங்கள் தலைமைத்துவத்தில் நானும் பெற்றுக்கொண்டேன் பல.... மணி விழா வாழ்த்துக்கள் sara sir



P.R. **கயூரன்**



கிழக்கின் மூதூரின் சம்பூர்ப்பதியின் பிறப்பாளன் - இன்று
உளம் பலதையிழந்த ஏகப் புதல்வன்
களம் பல கண்ட வேங்கை
பல உயிர் காத்த தன் கை
வடக்குத் துணையின் கரம்பிடித்த துணைவன் - இவன்
நாற்த்துறைக்கும் நன் மக்களைப் பெற்ற தந்தை - அந் நாளில்
அதிசயிக்கத்தக்க வடமாகாண ஓட்டக்காரன்
ஆசிரியர் கலாசாலையின் அண்ணாவி
ஆசான் கூட்டத்தின் பொதுச் செயலன்
ஆபத்தில் கைகொடுக்கும் கண்ணன்
ஏழை எளியவர்க்கு கல்வியூட்டும் கர்ணன் - இன்று
பசித்த வயிற்றுக்கு சோறூட்டும் வள்ளல்
நண்பர்க்கு விருந்தூட்டி மனமகிழும் தோழன்
எமக்கு என்றும் எதிலும் துணை நிற்கும் எங்கள் மாமன்
வாழ்க நீ பல்லாண்டு பலமுடன் என்று வாழ்த்தும் அக்கை மகன்!

**திரு. சி. புலேந்திரன்,**
**சிரேஷ்ட சட்டத்தரணி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறத்தின் பணிதனையே
ஆணவம் ஏதுமின்றி செய்து
இன்முகத்துடன் பணி நல்க
ஈகையுடன் பல்வளம் சேர்த்து
உத்தமராய் வாழ வழிசேர்த்து
ஊக்கமுடன் சங்கப்பணி நயந்து
எந்நேரமுமே ஆசிரியர் இடர்களைந்து
ஏற்றம் மிகு சேவையால் சிறந்து
ஐயந்திரிபறவே அனைத்தையும் கற்று
ஒழுக்கமதில் சீர்திறன் பேணி
ஓங்கு நற்புலமைச் சேவையை எமக்களித்து வரும்
ஔசித்தியம் நிறை செம்மலே
இஃதுணை புகழுடன்
திரு சரா புவனேஸ்வரனே
வாழி பல்லாண்டு! வாழி பல்லாண்டு!

M. சசிக்குமார்



ஆசிரியர்களின் உரிமைக்காகவும்
மாணவர்களின் உயர்வுக்காகவும்
அர்பணிப்புடன் செயற்பட்டு - இன்று
மணிவிழாக்காணும்
எனது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய
சரா. புவனேஸ்வரன் சேர் அவர்களை வாழ்த்துகின்றேன்

S.சிவபாலசுந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் அன்புத் தம்பி சரா புவனேஸ்வரன் அவர்கள் மணிவிழா காண்பது மிக்க மகிழ்ச்சி. எங்களோடு எப்பொழுதும் குடும்ப உறவாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற உடன் பிறந்த சகோதரனாக, நல்ல பண்பாளனாக, ஆபத்தில் உதவக் கூடிய சிறந்த மனிதனாக இவர் இருப்பது எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி.

**வி. யோகநாதன்,**<br>**இளைப்பாறிய அதிபர்,**<br>**சம்பூர். 5.**



என் தம்பி சரா சாதனையாளன். இயல்பாக எல்லோரையும் இணைப் பவன். இரத்தினக் குஞ்சாத்தையின் இளைய மகன். கணிதத்தில் வல்லவன். கண்ணியம் மிக்க புண்ணியவான். சம்பூரில் மொட்டாகி யாழில் மலர்ந்து நாட்டிற்கு மணம் வீசும் நல்ல மனிதனிவன். மணிவிழா நாளில் மனதார வாழ்த்துகின்றேன்.

**இ. காளிராசா**<br>**இளைப்பாறிய களஞ்சியக் காப்பாளர்,**<br>**திருகோணமலை வைத்தியசாலை.**



மாணவர்களின் சிந்தனைகளை செம்மையாக்கிய வள்ளல் குரு பக்தியை கடந்த நட்பு வாழ்க்கைப் பாதையின் வழிக்குக் கொண்டு வந்த திறன் தோய்ந்த நண்பன் அவன். இவ்வுலக வாழ்வில் பெரும்பயன் செய்து வாழ்வை இன்னும் மெருகூட்டி அங்கீகாரத்தை மனதில் வைத்து இன்னுஞ் சிறப்பாய் பணிசெய்ய என் வாழ்த்துக்கள்.

**- தவம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சயன்ஸ் அக்கடமி உறவுகளின் அன்பான வாழ்த்துக்கள்



காலங்கள் தேய்ந்தாலும் உயர்வான கல்விப்பணி . ஒரு செயல் துணிந்து பல செயல் ஆற்றிய பக்குவம். அன்பாக வழிகாட்டி பண்பாக பணியாற்றி, கண்ணோடும் கருத்தோடும் கண்ணியமாய் நடை பயின்று வாழ்வின் வண்ணங்களை வாழ்வாக்க வந்தவரே வாழ்க

**S. ஸ்ரனிஸ்லாஸ்**



சம்பூரின் சரித்திரமே சாதனைச் சிகரமே
சரா நாமமுடைச் சூக்குமமே சுந்தரரே
அரியணையில் நூற்றாண்டு காலூன்றிக் களித்துப்
பிள்ளை முதற் பேரர் வழி பூட்டருடன்
குதூகலிக்க வேலவனை வேண்டுகிறேன்.

**P. தமிழ்மாறன்**



மாணவர் மனங்களில் என்றுமே நிறைந்தார்
மாண்புடன் கல்விச் சேவையே யாற்றினார்
ஆசிரியர் உரிமைக் காகவென்றுமே உழைத்தார்
அவனியில் மணிவிழா கண்டுமே மகிழ்ந்தார்

**I. குமரதாசன்**



எண்சாண் உடம்பிற்கு சென்னியே பிரதானம். பொன்சேர் இலங்கைக்கு யாழ்ப்பாணம் உயிர்நாடி. ஆசிரியர் என்பவர் உலக உயர்விற்கு மூலாதாரம். அந்த ஐக்கியத்தின் சூரியன் சரா. புவனேஸ்வரன். செம்மல்தான் யாழ் மண்ணில் வைத்தியத் துறைக்கு "விஞ்ஞான அக்கடமி"யின் ஊடாக உலகில் மிளிர்ந்தவர் சராசேர் தான். புலமைப் பரிசில் மாணவர்களின் புதுப்பொலிவும் நீங்கள் தான். மணிவிழாவில் உங்களுக்கு மகத்தான கௌரவிப்பு உரித்தாகட்டும்.

**M. பிரியந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரா sir அவர்களிடம் நான் உணர்வது அன்பு, அறிவு, ஆன்மீகம், ஆளுமை, இரக்கம் இயல்பான நடத்தை, இயலுமை, ஈகை, ஈட்டி (செயல் வீரன்), உண்மை, உறவு, ஏணி, ஏற்றம் (தன்னை நாடி வருவோரை உயர்த்துபவர்), ஏவல் (செயலாற்றல்), ஐக்கியம், ஒப்புரவாளன், ஒற்றுமையாளன், ஒற்றை சொல்லுடையவர் (வாக்குத் தவறாமை), ஓதிக் கொடுப்பவர் (நல்லாசிரியர்), ஔஷதம் (பிரச்சினைக்கு தீர்வு மருந்து) எஃகு (மனோதிடம்)

**V. சுந்தரராஜன்**



May the skies turn red
May the trees turn blue
So vibrant and colorful
May the flowers turn neon
May the oceans turn burgundy
So vivacious and flamboyant
May your life turn out to be

**J. A. மயூரேஸ்**



நேரமுகாமைத்துவமும் சிறந்த ஆளுமையும் கொண்ட செயல் வீரன் சராசேர் முகாமைத்துவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

**B. ஜெயரூபன்**



மணி விழா காணும் நாயகனே
மனம் மாறாத நண்பனே
உள்ளம் இலட்சியத்தின் இருப்பிடமே!
நேர்மையின் குணக் குன்றே
வரலாற்றில் ஓர் அடையாளமே
வாழ்வில் ஓர் நல் வழிகாட்டியே
நான் கண்ட அடையாளம் இவைதான்
வாழ்க வளமுடன் வாழ்க! வாழ்க!

**G. சிவபாலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நாளில் பல்துறையில் தேர்ச்சி பெற்றோரைக் காண்பது அரிது. நான் என்னாளும் காணும் இவர் ஓர் பல்துறை விற்பனன்.

**T. பாலகணேஷ்**



நல்லாசிரியாராக , விரிவுரையாளராக , முன்னணி தொழிற் சங்க வாதியாக பலபரிமாண கல்விச் சேவையை தனக்கு உரிய ஆளுமை வெளிப்பாட்டுடன் வினைத்திறனோடு கூடிய செயல் ஒழுங்கான ஆரோக்கியமான விளை திறனை உருவாக்கிய மதிப்பார்ந்த மணிவிழா நாயகன் திருவாளர் சரா. புவனேஸ்வரனின் ஓய்வு காலம் பொது சேவையில் பரிணமிக்க இறைவனை வேண்டி நிறைவு செய்கிறேன்.

**P. உதயராசா**



திருவாளர் சரா.புவனேஸ்வரன் அவர்கள் எண்ணம் சொல் செயல் என்பனவற்றில் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியானவர். தான் எடுத்துக்கொண்ட எந்தவொரு விடயத்தையும் மிகத்திறம்பட செய்ய வேண்டும் என்பதுடன் தன்னுடன் இணைந்து பணியாற்றுபவர்களும் அவ்வாறே செயற்படவேண்டும் என விரும்புபவர். அனைத்து ஆசிரியர்களுடன் நட்புணர்வுடன் பழகுவதுடன் அவர்களின் இன்பதுன்பங்களிலும் முன்னின்று செயற்படுவதில் அவருக்கு நிகர் அவரே.
இவ்வாறான தன்மை கொண்ட விழா நாயகனுக்கு மணிவிழா வாழ்த்துககளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**S. முகுந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓயாது ஒளி கொடுக்கும் முழுமதியாய்
பகலவனாய் வரையாது பணி செய்து
எக்காலத்திலும் எல்லோர்க்கும் அறிவைப் புகட்டி
அகிலத்தை ஆளும் தகுதியை மாணாக்கர் பெற்றுத்துலங்கிட
வழிகாட்டும் ஆசிரியர் பெருந்தகையே
நீடு புகழோடு நீடித்த ஆயுளோடு
வாழிய பல்லாண்டு வாழியவே!

K.M.நித்தி



அனுபவம் அறிவிலும் ஓர் ஒப்பற்றத்தன்மை
திருமலைச்சிறார்களின் அறிவுப் பசி நீக்க,
தொலைதூர சேவையை சிறப்பாக்கிய நாயகனே
ஆசிரியத்திற்கு ஓர் ஒளி விளக்காய்
ஆசிரியர் சங்கச் செயலாளராய் ஆசிரியர் இடர் தீர்த்த வித்தகரே
சயன்ஸ் அக்கடமியின் நிர்வாகச் சூரியனே
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

திரு. S. பாலச்சந்திரன்



சொல் வீரர்கள் உள்ள நாடதில்
நான் கண்ட செயல்வீரர்
சுருக்கமாக மானிக் பாட்ஷா

T.ஹரிசான்ந்



என்றும் மாணவர்களின் உயர்வுக்காய்
ஏற்றமுடன் பணிசெய்யும் நல்லாசானே
வென்றிடுவீர் எங்கள் மனங்களை நன்றாய்
கண்டீரே மணிவிழா களிப்புடன் வாழியவே!

R. சிவபுத்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லாசிரியராக, விரிவுரையாளராக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராக "சயன்ஸ் அக்கடமி"யின் இயக்குநராக சிறந்த சமூக சேவையாளராக பல்வேறு தளங்களை வென்ற மணிவிழா நாயகரை வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறேன்.

**S. வினோத்குமார்**



வானத்து நிலவொன்று
எம் தரணியில் நின்று
கல்வி எனும் படகில் ஏறி
கண்டிப்பையும் ஒழுக்கத்தையும்
கணைகளாக்கி பல மாணவச் செல்வங்களின்
அறியாமை நீக்க அன்பு கனித்த
ஆசிரியர் குழாம் அதனை படைதிரட்டி
சயன்ஸ் அக்கடமி எனும் களத்தில்
மாணவர்களின் பெறுபேற்றை வெற்றி
யாகச்சூடிய வெற்றி மகனே
எமது ஆசானே வாழி வாழி வாழி

**V. முகுந்தன்**



மணிவிழாக் காணும் மாண்புறு நாயகனே!
கல்விக் கடலில் பலரைக் கரைசேர்த்த
கலங்கரை விளக்காய் மிளிர்ந்திர்
என்றும் கல்விப் பணி காலமெல்லாம் தொடர்ந்திட
தோழமையுடன் வாழ்த்துகின்றேன்.

**C.A .தயாபரன்**



A special time to look back and celebrate your love, the dreams that have come true and all the memories you have created.congratulations and happy 60th anniversary

**A.T. R. நிசூதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆளுமை விருத்தியின் அற்புதமே
மத்திய கல்லூரியின் உடற்கல்விப் பொக்கிசமே
கல்விக் கல்லூரி விரிவுரை மகுடமே
ஆசிரிய கலாசாலை வித்தகமே - என்றும்
மகிழ்வுடன் வாழ்க மாணிக்கமே!

**T. பிரசாத்**



தன்னம்பிக்கையுடன் தளரா முயற்ச்சியும் கொண்டு
செயற்படும் எமது இயக்குநருக்கு எனது
மணிவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்

**R.C.அபிஷேகன்**



வண்டினங்கள் ஆர்ப்பரிக்க
வானகமும் வையகமும் - வாழ்த்தி
வாயாரப் பாட்டிசைக்க
தெங்கும் பலாவும் தேமாவும் தோன்றும்
நன்நாட்டில் ஆசிரியராய் விரிவுரையாளராய் தம் பணியை யாற்றி
பல சாதனைகள் நிகழ்த்தி
ஒரு விளக்காய்த் தோன்றி
பல விளக்குகள் ஏற்றி
கற்று வல்ல அறிஞர்களும் ஆசான்களுமென
பல மாணவர் சமுதாயத்தை உருவாக்கி
சூரியன் ஒளி தருவது போல் ஒளிபரப்பி
சுழன்று வந்த சேவைக்காலமும் சென்று மறைந்திட
ஓய்வுக் காலமதனில் சேவைதனை நினைத்து மகிழ்ந்திடவே
மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றேன்.

**ஆசிரியர் N .தவேந்திரராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லோர் மனங்களிலும் நிலைத்து
என்றும் பெருமையுடன் நிறைந்திருக்கும்
நிறுவன இயக்குநரே நீடுழி வாழ்க.

**P. பிறின்சன்**



கண்டிப்பான உருவத்தில் - நான்
கண்ட கனிவானவர் எமது இயக்குநர்

**N. செல்வேந்திரா**



சாதனைகளின் சரித்திரம் தான் சராசேர்
மணிவிழாக் கண்டு புதுப்பொலிவுடன் மிளிர
மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்

**A. றொணிக்ரன்**



ஆசு களையும் பறவைகளின் வானில்
மாசு களைத்து மானங்காக்கும் மரங்கொத்தி
கண்ணியத்தால் எங்கள் கண்களைத் திறந்து
காயங்கள் இன்றியே வாய்களை மூடச்செய்து - இன்று
மண்ணே செருக்கடைய விண்ணை முட்டும்
புகழ் படைத்த சரா புவனேஸ்வரனே வாழியவே!

**R. தனஞ்சயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகவை அறுபதை பூர்த்தி செய்யும்
எமது இயக்குநர் அவர்களுக்கு
எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

M. தேவகி



என்றும் மாணவர்களின் உயர்வுக்காய்
ஏற்றமுடன் உழைக்கும்
எங்கள் இயக்குநர் அவர்களுக்கு
மனம் நிறைந்த மணிவிழா வாழ்த்துக்கள்

S. சஜேந்திரன்



மணிவிழா காணும் நாயகனின்
மந்திர வார்த்தைகள் மனதில் ஒலித்திட
நீங்கா நினைவுடகளுடன்
நீங்கள் காட்டிய வழியில் நிற்போமே!

R பிரதீபன்



வாழ்க வாழ்க பல்லாண்டு
நல்வாழ்த்து நாமுரைத்து பலபல
பாமாலைகள் இசை மழைபொழிய பூமாலையாய் என்றும்
அன்புடன் வாழ்த்துகின்றேன்

S. சாந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி
தொகுத்த செல்வங்கெல்லாம்
மகத்தான வெற்றிகளால்
மாணவர் உலகில்
மங்காப் புகழோடு
என்றென்றும் வாழ அகவை அறுபதில்
அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

**S. உதயச்செல்வி**



ஆசிரியம் வளர அரும்பணி தந்தீர் - சயன்ஸ்
அக்கடமி அதனில் இயக்குநராகி - இளையோர்
மனங்களில் வெற்றித்தேர்வு எனும் ஆனந்தமானீர்
புவனம் எங்கணும் நும்பணி தொடர்ந்து - நீவிர்
காலமெல்லாம் வசந்தமுடன் வாழ்க.

**S. சத்தியரூபன்**



எண்ணிய எண்ணியாங்கு எய்தும் ஒரு திண்ணியன் - இவன்
எண் எழுத்து அமுதமளிக்கும் புண்ணியன் - பழகும்
எவர் மனத்தும் உயர்ந்திருக்கும் கண்ணியன் - இனி
எப்போதும் நலம் வாழ்வான் இந்த வயதுக்கு அன்னியன்

**K. கிருஸ்ணகாந்தன்**



கிழக்கு மண் தந்த
வளம் நிறை பொக்கிசம்!
சம்பூர் சரவண முத்துவின்
உளம் நிறை அற்புதம்!
மாட்சிமை கொண்ட பல்கலை வித்தகம்!
மணிவிழா நாயகனே! வாழ்க ! வாழ்க !

**K. சிவகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பும் பண்பும் கொண்ட அரியாலையின் மைந்தனாய்
ஆற்றிடும் உம் - தொண்டு
இல்லறம் மீது இனியவை செய்து
ஈன்றவர் மகிழ்ந்திட பெருமையும் பெற்று
உள்ளத்தே இறையருள் போற்றி
நல்ல பணிகள் செய்தே நம்பள்ளி உயர்ந்திட
நாளும் உழைப்பை அள்ளித்தந்த - எம் ஆசான்

சரா புவனேஸ்வரனே வாழ்த்துகின்றேன்.
நலம் பெற்றென்றும் வாழ்கவே
கற்பித்தல், நிர்வாகம் சகலத்திலும்
களங்கமற்ற சேவை செய்தாய்
கண்டிப்பும் அன்பும் கலந்து நீ கொடுத்தாய்.
கவினுடனே மாணவர் உயர்ந்திட உழைத்தாய்.
மணிவிழா வேளையில் வாழ்த்துகிறோம்.
வையகம் போற்றிட வாழியவே.

K. அஜிதா



கடமை தவறாத உதயசூரியனாய்
நடுவு நிலமை நாயகனாய்
அறிவைபுகட்டும் வெற்றித்தேர்வின் - மூலகர்த்தாவாக
தரணியில் இல்லையென்றாது உதவும்
பூமித்தாய் போல் கண்ணியம் மாறாத
கனவானாய் என் ஆசான் நீங்கள்

அறுபதாவது அகவையில் வீறு நடைபோடும்
இவ் இனிய நன்னாளில் குன்றாநலமும்
குறையாச் செல்வமும் நன்றாம் இன்பமும்
இல்லத்தில் நிலைத்து இனிமை பொங்கிட
இறைவன் ஆசி தந்திட வாழ்க பல்லாண்டு

G. நிஷாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பின் ஊற்றாய் அறிவின் சிகரமாய்
பண்பின் உறைவிடமாய் விளங்கும்
எங்கள் ஆசானை நீடூழி காலம்
வாழ்க என வாழ்த்துகின்றேன்.

**V. அபர்ணா**



ஆற்றல் மிக்க ஆசானாய்
துணிச்சல் கொண்ட தொழிற்சங்கவாதியாய்
ஆளுமை கொண்ட நிர்வாகியாய் திகழும்
திரு சரா. புவனேஸ்வரன் சேர் அவர்களுக்கு மணிவிழா
வாழ்த்துக்கள்

**S. சாத்வீகன்**



எந்தை என என் சிந்தையுள் நிறைந்த பெரியவர்
ஒப்புயர்வற்ற உயர்ந்த குணங்கள் ஒரு சேரப் பெற்ற அரியவர்
என் வணக்கத்துக்கும் மரியாதைக்கும் என்றும் உரியவர்
கல்வி உலகிற்கு என்றும் உரியவர் நிகரில்லா
தொண்டாற்ற வாய்த்தவர்
மணி விழா கண்டு பல்லாண்டு வாழ்கவே!

**S. சர்வானந்தன்**



உயிர் தந்த தாய் தந்தையரை காட்டிலும்
மேலாய் - முதலாய் போற்றும்
அறப்பணிக்கு என்னை அர்ப்பணிக்க ஊக்கப்படுத்தியோர் நீங்கள்

**V. சயந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60
1963 - 2023 years
Diamond Jubilee

# மணிவிழா மலர்

## விழா நாயகன் பற்றிய ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உலகிற்கு பெருமை சேர்த்திட்ட நல்லாசான்



கலாநிதி, பண்டிதர். செ. திருநாவுக்கரசு,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை,
ஓய்வுநிலை பிரதி அதிபர்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்" என்ற திருக்குறட்பாவினைப் படிக்கும் போது எனது நினைவிலே நிழலாடுபவர் உயர்திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களே தான். துணிவு, விடாமுயற்சி, எந்தச் சவாலையும் ஏற்று நின்று சாதித்துக் காட்டுதல், கொடுமை கண்டு பொங்கியெழல், ஆணவத்திற்கு அடி பணியாது அன்புக்கு அடிமையாதல், உயரிய நட்பினை உவந்தேற்றுதல், குருபக்தி, கற்றோரையும், சான்றோரையும், மூத்தோரையும் கனம் பண்ணுதல், சிறிதளவு நன்மை புரிந்தவரையும் என்றும் மறவாது இதயத்தில் இருத்திக் கொள்ளுதல், தனது நெஞ்சுக்கு நீதியான விடயங்களில் எத்தகைய தடைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து செய்யவேண்டியதைச் செய்து முடித்தல் முதலான உயரிய குணப்பண்புகள் அவரிடம் குடிகொண்டிருப்பதை அவருடன் அறிமுகமும், பழக்கமும் ஏற்பட்ட சுமார் கால் நூற்றாண்டு காலமாக நான் கண்டு வியந்துள்ளேன். என் மீது பாசமும் மதிப்பும் வைத்திருப்பவர் அவர். நாமிருவரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரை யாளார்களாகப் பணியாற்றிய காலங்களில் காலையில் எனது வீடு வந்து என்னையும் கூடவே பல நாட்கள் வாகனத்தில் ஏற்றிச் சென்றவர். ஒரு தடவை கலாசாலையில் நடை பெற்ற விழாவுக்காக மழைதூறிக் கொண்டிருந்த காலை வேளையில் அவரது, மோட்டார்ச் சைக்கிளில் நாமிருவரும் சென்று கொண்டிருக்கும்போது டச்சு றோட்டில் அதிவேகமாகச் சாரதி செலுத்தி வந்த ஆட்களற்ற மினிபஸ் ஒன்று எங்களைப் பந்தாட முயன்று உரசிவிட்டுச் சென்றதை இன்றும் நாம் நினைப்பதுண்டு. அவரது கடுமையான உழைப்பிற்குப் பரிசாகத்தான் இறைவன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் பதவி வரை உயர்த்திப் பெருமை செய்தார் என நான் நினைப்பதுண்டு. பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வியாசிரியராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றவராக விளங்கி ஆசிரியத்துவத்துக்கும், தமிழ் ஆசிரிய உலகினர்க்கும் பெருமை சேர்த்திட்ட நல்லாசன் அவரெனில் மிகையில்லை. காட்டின் நடுவில் தனித்து வளரும் சந்தன மரம் அதிக வாசனை தராது. ஆனால் ஏனைய மரங்களின் வேர்களுடன் நெருக்கப்பட்டுப் பின்னிப்பிணைந்து வளரும் சந்தன மரமே அதிக வாசனையைக் கொடுக்கும். அதுபோல எந்தச் சவால்களையும் ஏற்றுச் செயற்படுத்திய ஆற்றலாளர் திரு சரா. புவனேஸ்வரன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள இயற்கை வளமும் வனப்பும் நிறைந்த சம்பூர் என்னும் பதியின் உயர்சைவ மரபினராகிய நாகநாதி சிவசம்புவின் மைந்தர் சரவணமுத்துவுக்கும் அவரது மனைவியார் இரத்தினம் அவர்களுக்கும் பிறந்த ஆண்கள் ஆறு பேரும் பெண்கள் நான்கு பேருமாகிய பத்துப் பிள்ளைகளுள் ஒன்பதாவதாகப் பிறந்தவர்தான் புவனேஸ்வரன். உலகம் முழுவதையும் ஆளுகின்ற அன்னையாகிய சம்பூரின் குல தெய்வம் பத்திரகாளியை நினைத்துத்தான் மகனுக்கும் இப்பெயரைப் பெற்றோர் வைத்திருக்கக் கூடும். ஊரிலேயே மிகுந்த செல்வாக்குடையவர் சரவணமுத்து அவர்கள். இருபது ஆண்டுகள் சம்பூர் பிரதே சபைத் தலைவராயிருந்து அரும் பணியாற்றியவர். மண்ணையும், மக்களையும் நேசித்தவர். மூதூர் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த மர்ஹூம். ஏ. எல். அப்துல் மஜீத் அவர்களது நெருங்கிய நண்பர். பல உயிர்களைக் காவு கொண்ட கட்டைபறிச்சான் பாலத்தை அவரது ஆதரவுடன் போடுவித்தவர். சுமார் 50 ஆண்டுகளாக அந்தப்பாலம் வழியாக போக்குவரத்து மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. சம்பூர்ப் பிரதேசத்திலுள்ள 26 குளங்களைத் தூர்வாரி மக்கள் பயன்பெறச் செய்ததும், நன்னீர்க் கிணறுகளையமைத்துக் கப்பி போட்டு மக்களுக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் பேருதவி புரிந்ததும், மூதூர்ப் பிரதேசத்திலேயே முதலாவது கம நல சேவை நிலையத்தைச் சம்பூரில் அமைத்துக் கொடுத்ததும், சம்பூர்ப் பாடசாலையை அப்பிரதேச முதலாவது மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தித் தந்ததும், ஏராளமான இளைஞர்களுக்கு அரச உத்தியோகம் பெற்றுக் கொடுத்ததும் திரு. புவனேஸ்வரன் அவர்களது தந்தையாரின் காலம் மறக்க வொண்ணாத, சமூகப் பணிகளிற் சிலவாகும். அத்தகைய நாட்டுப் பற்றாளர் அரசியல் வன்முறைகளுக்கு 1986 ஆம் ஆண்டு பலியானார். புவனேஸ்வரன் குடும்பத்தில் அரசியற் காரணங்களினால் நான்குபேர் உயிர் துறந்தனர். தமது 13 வயதில் தாயாரையும், 23 வயதில் தந்தையாரையும் இழந்தவர் எமது மணிவிழா நாயகன்.

இவரது தொடக்கக் கல்வி சம்பூர் ம. வித்தியாலயத்தில் தொடங்கி க.பொ.த உயர்தரம் வரை அங்கு தொடர்ந்து இடையில் 7 ஆம் வகுப்பில் ஒன்பது மாதங்கள் பெரியப்பா மணஞ் செய்து வாழ்ந்து வந்த பருத்தித்துறையில் அவருடனும் பெரியம்மா வுடனும் தங்கியிருந்து ஹாட்லிக் கல்லூரியில் கற்க வேண்டியிருந்தது. திரு புவனேஸ்வரனின் இரண்டாவது தமக்கையார் குழந்தைகளில்லாத பெரியப்பா வீட்டிலேயே வளர நேர்ந்தது. பெரியப்பா சித்திரவேல் அவர்கள் ஹாட்லிக் கல்லூரியில் பகுதித் தலைவராகப் பணியாற்றியவர். எமது மணிவிழா நாயகன் 1983 ஆம் ஆண்டு க. பொ. த உயர்தரப் பரீட்சையை பல்வேறு சோதனைகளுக்கு மத்தியில் எழுதி முடித்தார். அக்காலம் நாட்டில் அசாதாரண நிலை தோன்றிவிட்டது. ஒவ்வொரு தமிழ்க் கிராமமும் பாதிக்கப்பட்டது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பூர்க் கிராமம் பற்றிச் சொல்லத் தேவையில்லை. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் வேகம் பெற்றது. இளைஞர்கள் இயக்கங்களை நாடிச் சென்றனர். கட்டாயமாகவும் இயக்கங்களில் இணைய வேண்டியிருந்தது. மறு புறத்தில் அரச வன் முறைகளும் அடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளும் உக்கிரம் பெற்றன. 20 வயது இளைஞனான புவனேஸ்வரன் தமிழ்த் தேசியப் பணிகளில் பங்காளியானார். பல பொறுப்புக்களை ஏற்கவேண்டியிருந்தது.

1983 - 1987 வரையுள்ள காலத்தில் தமது ஊரைப் பாதுகாத்தல், தமிழ்த் தேசிய விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படல் முதலான பணிகளில் ஈடுபட்டுழைத்தார். பல தடவைகள் உயிராபத்துக்களிலிருந்தும் தப்பினார். அவரது உடலின் பல பாகங்களில் ஈயக்குண்டுகள், பட்டுத் தெறித்த அடையாளங்கள் பலவுள. மார்பில், கழுத்தில், கை கால்களெல்லாம் சன்னங்கள் பட்டுத் தழுவிய போதிலும் உறுதி கொண்ட நெஞ்சினனாகிய அவரது உயிரைப் பறித்திட முடியவில்லை. கடுமையாகக் காயமுற்று யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த வேளையில் சிறிது காலம் ஓய்வில் இருக்குமாறு பணிக்கப்பட்டார். அச் சூழ் நிலையில் மீண்டும் தமது ஊருக்குச் சென்று, தான் கல்வி கற்ற மகா வித்தியாலயத்தில் தொண்டராசிரியராகப் பணிபுரியலானார். இவரது அரசியல் ஈடுபாடு, காதல் பற்றித் தமிழிலக்கியங்கள் கூறும் "சொன்னது பாதி, சொல்லாதது மீதி" என்பது போல் இங்கும் கூறப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு திரு. புவனேஸ்வரன் அவர்கள் போட்டிப் பரீட்சை மூலம் பயிற்றப்படாத ஆசிரியராக நியமனம் பெற்று, அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலையில் 1990 டிசம்பர் வரை கடமை புரிந்தார். 1991 ஜனவரி முதல் 1992 டிசம்பர் வரை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆரம்பக் கல்வித்துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியரானார். உடற் பயிற்சியில் இவருக்குள்ள அதீத ஈடுபாட்டையறிந்த, அப்போது யாழ்ப்பாணம் மத்தி கல்லூரி அதிபராயிருந்த நயினைக் கவிஞர் நாக. சண்முகநாத பிள்ளையவர்கள் இவரை வலிந்து தமது கல்லூரியில் இணைத்துக் கொண்டார். எந்த மாணவனையும் நயங்காட்டியும் பயங்காட்டியும் அரவணைக்கக்கூடிய திறன் இவரிடமிருந்து, நட்பு வட்டத்தையும் பெருக்கக்கூடியவர். மற்றவர்க்கு ஓடிச்சென்று உதவுவதனூடாக அவர்களது கரிசனையும் பெற்றுக் கொண்டவர். எட்டு ஆண்டுகள் யாழ் மத்திய கல்லூரியுடன் இரண்டறக் கலந்திருந்தாரென்றே கூறவேண்டும். 2001 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இணைக்கப்பட்ட விரிவுரையாளரானார். இதற்கிடையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா நெறியினைப் பூர்த்தி செய்திருந்தார். உடற் கல்வித் துறையில் அவரது முழுக் கவனமும் திரும்பியது. 2004 இல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர் பணியை ஏற்றுச் செயற்பட்டார். தான் பயிற்சி பெற்ற கலாசாலையில் எட்டு ஆண்டுகள் விரிவுரையாளர் பணிகளைக் கண்ணுங் கருத்துமாய் நிறைவேற்றினார். மாணவர்களின் அன்புக்கும் நட்புக்கும் உரிய விரிவுரையாளனார். கலாசாலை நிகழ்ச்சிகளில் முன்னணியில் நின்று உழைத்தார். உடலாளர் மன்றத்தின் காப்பாளர்களான திரு. வி. கே. கணபதிப்பிள்ளை, திருமதி அன்பரசி கருணாகரன் ஆகியோருடன் கை கோர்த்துச் செயற்பட்டார். 2009 - 2010 ஆம் ஆண்டுக்கான கல்வி நெறியில் 210 இற்கு மேற்பட்ட இஸ்லாமிய மாணவர்கள் வந்து சேர்ந்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை வரவேற்று, அந்த இக்கட்டான தருணங்களில் அவர்களுக்குப் பல விதத்திலும் உதவியாக நின்றார். இன்றுங்கூட அம் மாணவர்களில் பலர் அவருடன் நெருங்கிய நட்பும், அன்பும் கொண்டு, அடிக்கடி அவர் செய்த உதவிகளை நினைத்துப் போற்றுவதை நான் நேரடியாகவே அறிந்துள்ளேன். 2011 நவம்பரில் திரு புவனேஸ்வரன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டதும் முழு நேர விடுப்புடன் அதற்கான பணிகளை ஆற்றத் தொடங்கினார்.

ஏற்கனவே தமிழ் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகவிருந்த திரு. மகாசிவம் அவர்களுக்குப் பக்கபலமாயிருந்து கிழக்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் சங்கத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார் திரு புவனேஸ்வரன். வடக்குக்கும், கிழக்குக்கும் பாலமாக விளங்கி சங்கச் செயற்பாடுகளில் மும்முரமாக உழைத்தார். ஐந்து தடவைகள் மீண்டும் மீண்டும் பொதுச் செயலாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். 91 ஆசிரியர்களுக்கு மீள நியமனம் பெற்றுக் கொடுத்தமை, உடற்கல்வி டிப்ளோமா பெற்றவர்களுக்கு அங்கீகாரமும் ஆசிரிய நியமனமும் கிடைக்கப்பாடுபட்டமை, வன்னிப் பிரதேச தொண்டாசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் நிரந்தரமாகக் கிடைக்க அழுத்தங் கொடுத்தமை, புங்குடுதீவு ம. வி. மாணவி வித்யா படுகொலைக்கு நீதிகோரி யாழ்ப்பாணக் கச்சேரி முன்றலில் 50 ஆயிரம் ஆசிரியர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியமை, இதுவரையில்லாத அளவுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க அங்கத்தவர் எண்ணிக்கையை 37 000 பேராக அதிகரிக்கச் செய்தமை, அடிக்கடி சங்க நிர்வாக - பொதுக் கூட்டங்கள் பரவலாகக் கிழக்கு மாகாணத்திலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைபெற ஏற்பாடு செய்தமை, தமிழர் இன ரீதியாகப் பாதிக்கப்படும்போதும், தமிழாசிரியர்கள் பாதிக்கப்படும் போதும் பொருத்தமான முறையில் அறிக்கைகளை வெளியிட்டும், போராட்டங்களில் கலந்தும், தமிழதேசியவுணர்வையும் தமிழர் ஆசிரியர் உரிமையையும் நிலைநிறுத்தப் பாடுபட்டமை முதலான செயற்பாடுகள் இங்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தில் பணிகளில் அடங்குவன.

யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, பண்டாரவளை முதலான இடங்களில் சங்கத்தின் 06 மாநாடுகளை நடாத்தியும், கனடா, தாய்லாந்து (பாங்கொக்), இந்தியா உட்படப் பல நாடுகளுக்கு சங்கப் பிரதிநிதியாகச் சென்று மாநாடுகளில் கலந்து கொண்டும், சங்கத்தின் சார்பில் சில வெளியீடுகளை வெளியிட்டும், பாடசாலை மாணவருக்கான நூல்களை வெளியிட்டும், சர்வதேசக் கல்வியகத் தொடர்பகத்துடன் (International Education) பங்காளராக விளங்கியும், சார்க் ஆசிரிய சம்மேளனத்துடன் (S.T.F) அங்கத்துவம் வகித்தும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் செயற்பட்டதில் திரு. சரா. புவனேஸ்வரனின் பங்களிப்புப் பெரியது. தமிழர் ஆசிரியர் சங்கத்தில் முஸ்லீம் ஆசிரியர்கள் அங்கம் வகிக்காத போதிலும் தமது மாணவர்களாகிய இஸ்லாமிய ஆசிரியர்களது நன்மை கருதி அவர்களுக்கான உதவிகளையும் செய்து கொடுத்தவர் இவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக மணமுடித்த இளம் தம்பதியரில் கணவன் வடமாராட்சியிலும் மனைவி முல்லைத்தீவு மாவட்டத்திலும் ஆசிரியராகவும் பணிபுரிந்து வருகையில் பல வருடங்களாக இடமாற்றம் கிடையாத நிலையில் குடும்பத்தில் பிரிவு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதை அறிந்து அந்த ஆசிரியையின் பிரச்சினைக்குரிய தீர்வாக இடமாற்றத்தை ஊரோடு பெறச் செய்த மனித நேயம் இவருடையது. இதே போல் எத்தனையோ ஆசிரியர்களின் துயரங்களைத் தன்னால் முடிந்தவரை சட்டத்துக்கு அமைவாகவும், மனிதாபிமானத்தின் படியும் தீர்த்து வைத்த பெருமையும் இவருக்குண்டு. நன்றிக் கடனாகப் பல பேர் அன்பளிப்புக்களைக் கொண்டு வந்தபோது அவற்றைத் திருப்பிக் கொடுத்ததுடன் புத்திமதியும் கூறி, இப்படி இலஞ்சம் போன்ற வழிவகைகளைத் தேடாதீர்கள் என அறிவுறுத்தியவர் இவர். செல்வாக்குகளைப் பெற்று இடமாற்றத்துக்குத் தப்பி ஓடி ஒளிந்து திரிபவர்களைக் கண்டு பிடித்து நீதியின்படி செயற்படச் செய்த வரலாறும் உண்டு.

21.05.2023 இல் ஈச்சிலம்பற்றில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் தமது ஓய்வு காரணமாகச் சங்கத்தின் பொறுப்புக்களிலிருந்து விலகிக்கொள்ளும் நோக்குடன் உரிய ஆவணங்களை ஒப்படைத்து அனுமதி பெற்றுக் கொண்டார். 31.05. 2023 அன்று தமது 60 ஆவது வயது நிறைவைக் கண்டதுடன் குடும்பத்தவர், உறவினர், நண்பர்கள், ஆசிரிய சமூகத்தினர் அனைவரினதும் ஆசியையும் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டுள்ளார். தமது 36 ஆண்டு கால ஆசிரியப் பணிக்கு ஓய்வு கொடுத்துள்ள திரு. சரா புவனேஸ்வரனின் மூத்த சகோதரி 1968 ஆம் ஆண்டு அரியாலைக் கிராமத்தில் துறைமுக அதிகார சபை தொழில் நுட்ப உத்தியோகத்தரான திரு. தர்மராஜா. என்பவரைத் திருமணஞ் செய்த பின் யாழ்ப்பாணத்துக்கான ஈடுபாடு இவருக்கு அதிகமாயிற்று. 1988 இல் ஆசிரிய நியமனத்துடன் யாழ்ப்பாணம் வந்தவர். 1989 இல் தனியார் போதனை நிலையம் ஒன்றையமைத்து மாணவர் கல்வியை வளப்படுத்த முயன்றார். க.பொ.த உயர்தம் வரை அங்கு கற்பிக்கப்பட்ட போதும் 1996 இல் நல்லூர் முருகன் ஆலய எதிரில் பருத்தித்துறை வீதியில் திரு. அருட்செல்வன் என்பவரது ரியூட்டரியை வாங்கி நடத்தத் தொடங்கினார். வகுப்பு 6 முதல் க.பொ.த சாதாரணம் வரை மாணவர்களிற்கு வசதியேற்படுத்தப்பட்டது. பின்னர் தரம் ஒன்றிலிருந்து வகுப்புகள் நடத்தப்பட்டன. தற்போது அரியாலை, நல்லூர் ஆகிய இரு இடங்களில் "சயன்ஸ் அக்கடமி" நிறுவனம் பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு, அறிவொளி வழங்கி வருகிறது. ஆசிரியர்கள் பலரும் உற்சாகமாகக் கற்பித்து வருவதால் நிறுவனமானது நல்ல பேரும், புகழோடும் மாணவர்களை ஈர்த்து ஆண்டுதோறும் பரிசளிப்பு விழாக்கள் நடத்தப்பட்டு மாணவர்கள் ஊக்கப்படுத்தப் படுகிறார்கள். பெற்றோர் கலந்து சிறப்பிக்கிறார்கள். சமூக நலப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடருகிறது. ஏழை மாணவர்களுக்கு இலவசமாகவே கற்கும் வசதியையும் காலந்தோறும் கல்வி நிறுவன இயக்குநர் சரா. புவனேஸ்வரன் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

அரியாலையில் காலூன்றிய கையோடு 1990 நவம்பர் 28 இல் அவ்வூர் பத்மநாதன் (இ. போ. ச உத்தியோகத்தர்) உமா மகேஸ்வரி தம்பதியரின் இரண்டாவது மகளான வசந்தினியை திருமணம் செய்து கொண்டார். மூன்று பெண்களும் ஓர் ஆணும் பத்மநாதன் தம்பதியினரின் பிள்ளைகள். புவனேஸ்வரன் தம்பதியருக்கு மூன்று பெண்களும், ஓர் ஆணும் பிறந்தனர். கல்வியில் சிறந்தனர். மூத்தமகள் மருத்துவர், கணவர் பொறியியலாளர், ஓர் பெண் குழந்தை இவர்களுக்குண்டு. இரண்டாவது மகள் உள்ளக வடிவமைப்பாளர், மகன் Sofware Engineer, மூன்றாவது மகள் ஏ. ஏல். படித்துள்ளார். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பதற்கு இலக்கணமாகவும், நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள், நல்ல குடும்பம் தெய்வீகம்" என்பதாகவும் சரா அவர்களின் இல்லறம் நல்லறமாக விளங்குகிறது. இவருடன் கூடப் பிறந்தவர்களில் ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும் இன்று உயிரோடில்லாத துயரம் ஒரு புறம் அவரை வாட்டுகிறது. வேதனைகள், சோதனைகள், சவால்கள் யாவற்றிலும் அவரது மனைவி கைகொடுத்து, மறுகரமாயிருந்து குடும்பக் கடமைகளுடன், ரியூட்டறிப் பணிகளையும் மேற்கொண்டு வருவது அவருக்கு மன நிறைவைத் தருவதாகும்.

திரு. சரா. புவனேஸ்வரனின் இன்னொரு பக்கமாக அரசியல் வாழ்வும் அமைந்துள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு தலைவர் இரா. சம்பந்தன் அவர்களுக்கு அடுத்ததாக ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றிருந்தார். இருப்பினும் தமிழ்த் தேசியவுணர்வும் பற்றும் அதற்கான ஈடுபாடும் அவரை விட்டு விலகவில்லை. இவ்வாறு பன்முக ஆளுமைகளைத் தனது வாழ்வியலில் நிலைநிறுத்திய ஆசிரியப் பெருந்தகை மணிவிழாக் காணுவது பெருமையளிப்பதாகும். அவரது தூய நற்பணிகள் மீண்டும் இடைவிடாது தொடரும் என்றும் அவரது எதிர்காலம் மணிவிழாப் பொலிவுறும் இல்லறப் பெருமையுடனும் ஏற்றமாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்துறை ஆற்றலாளன்

இ. இராகவன்
ஒய்வு பெற்ற அதிபர்,
கோவிற் கடவை, கரவெட்டி.

சரா
அனைவராலும் அன்போடு அழைக்கும் அர்ப்பணிப்பான
ஆற்றலாளன்
ஆனால் அதற்குள்
அறுபதானதோ சரா.
பொன்விழாமலருக்கு எழுதிய மை காயவில்லை
அதற்குள்
மணிவிழாவா
காலம் மிக வேகமானது

மிகச்சிறந்த விளையாட்டு வீரனாய்
விளையாட்டுத்துறை ஆசிரியராய்
ஆசிரிய விரிவுரையாளராய்
தொழிற்சங்கவாதியாய்
தென்னாசியாவின் சிறந்த தொழிற்சங்க பொதுச்செயலாளராய்
பல் துறை ஆற்றலாளனாய்
பரிணமித்த சரா
கல்வி உலகின் வெளிச்ச வீடு

கிழக்கையும் வடக்கையும் உண்மையில் இணைக்கும் பாலம் சரா
தமிழர் ஆசிரிய சங்கத்தின்
நாடு தழுவிய துடிப்பான
செயற்பாட்டிற்கு உதாரண
புருஷர் சரா
பாதிக்கப்பட்ட ஆசிரியர்க்கு
ஆபத்பாந்தவனாய் களம் நின்று
உதவிய வேகம் கண்டு
திகைப்புற்றுள்ளேன்
நட்பு கடந்து நீதிக்காய் நெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று சரியான தடத்தில் தடம்பதிக்க உரியோரை
வழிகாட்டிய உத்தம தலைமைப்
பண்பு கொண்டவர் சரா

இது வரை பெற்ற அனுபவத்தினை
காய்த்தல் உவத்தலின்றி வழிகாட்டும் காலம் வந்து விட்டது
காலம் தோளில் தட்டி
அரச சேவையில் ஓய்வு என
அறிவித்து விட்டது
ஆனால்
புலமை மாணவரின்
புலமை வீச்சுக்கு
ஓய்வு கொடுக்க முடியாது
நாடு முழுவதும் இனி இன்னும்
வீச்சோடு
சுடர் ஒளி வீசும் வெற்றித்தேர்வு
நல்லை முருகனின் வாசலில்
குவியும் மாணவர்கள் பெற்றோர்க்கு சாட்டு சொல்லமுடியாமல்
சராவின் கல்விச்சாலை
வேகமெடுக்கும்.

தமிழ் இனத்தின் தலை நிமிர்
போராட்டத்திற்கு
அரசியல்வாதியாய் சராவின்
சிறப்பான பங்களிப்பு வெளிப்படும்
அதற்கான மக்கள் கூட்டத்தை
தட்டி எழுப்பு வோம்
சபையில் சராவின் சங்கநாதம்
கேட்கும் காலம் கனிந்து விட்டது

தகைமை சான்றோய்
வாழிய நீடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரா என்னுமோர் தெய்வீகப் பணியாளர்

பா. மகாலிங்கசிவம்,
ஆசிரிய ஆலோசகர்,
வடமாகாணக் கல்வித் திணைக்களம்.

நான் சரா சேரை முதன் முதலில் சந்தித்தது எனக்கு மேலிடத்தில் இருந்த தனிநபர் ஒருவரால் தொடர்ச்சியாகத் துன்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அத் துன்பத்திலிருந்து நான் மீள எவ்வளவோ முயன்றும் என்னால் மீள முடியாதபடி தனது அதிகாரத்தின் மூலம் அந்நபர் கிடுக்குப்பிடி போட்டிருந்தார்.

அவ்வேளையில் என்னுடன் மகாஜனாவில் கற்றவரும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் உயர் பதவியில் இருந்தவருமாகிய நண்பர் ஒருவர் என்னைச் சரா சேரிடம் அழைத்துச் சென்றார். யாரென்று தெரியாத என்னை உள்ளே அழைத்துத் தேநீர் தந்தது மட்டுமல்லாமல் எனது துயரத்தையும் தீர்த்து வைத்தார் சரா சேர். திக்கற்றவனுக்குத் தெய்வம் துணை என்பார்கள். என் துயர் தீர்த்த அந்தக் கணத் திலிருந்து என் கண்களுக்கு அவர் தெய்வமாகவே தோன்றினார்.

ஆசிரிய இடமாற்றங்கள் பொருத்தமின்றி அமைந்து ஆசிரியர்கள் பாதிக்கப்பட்ட வேளைகளெல்லாம் (நிச்சயம் நூற்றுக்கு மேற்பட்டவைகள்) நான் அவரின் வீட்டுக்குச் சென்று உதவி கேட்பேன். "மகா பயப்படாதே. நான் செய்து தருகிறேன்" என்று கூறுவார். உடனடியாக உரிய இடத்திற்குத் தொலைபேசி அழைப்புப் பறக்கும். உரிய தீர்வு கிடைக்கும்.

ஆசிரியர்களுக்கு உதவும் பணிகளின் உச்சமான சம்பவம் ஒன்று இப்போதும் எனக்கு ஞாபகத்தில் உள்ளது. எனது நண்பர் ஒருவரின் மனைவி சிறிது உளநலம் பாதிக்கப்பட்டவர். அவர் கற்பித்த பாடசாலையின் அதிபர் அவரைப் புரிந்து கொண்டு ஊக்குவித்து, பொருத்தமான வகுப்புக்களைக் கொடுத்து அவரைக் கவனமாகப் பாதுகாத்தார். ஆனால் இடமாற்றம் கிடைத்த பாடசாலையின் அதிபரோ மிகக் கடுமையானவர். இந்த இடமாற்றம் தனது மனைவியின் உள நலத்தை மேலும் மோசமாக்கிவிடும் எனறு நண்பர் பயந்தார்.

நான் நண்பரைச் சரா சேரிடம் அழைத்துச் சென்றேன். "பயப்படவேண்டாம் நான் இடமாற்றத்தை நிறுத்தித் தருகிறேன்." வழமையான வார்த்தை. ஓரிரு வாரங்களாக எந்தத் தகவலும் இல்லை. நான் நண்பரை மீண்டும் அழைத்துச் சென்றேன்.

"நான் இந்த இடமாற்றத்தை நிறுத்தாவிட்டால் எனது கழுத்தை அறுத்து உங்கள் கையில் தருகிறேன்". நாங்கள் திகைத்துப் போய்விட்டோம். இந்த வார்த்தைகளினூடாக சரா சேரின் தன்னம்பிக்கை, ஆசிரியர் துயர் தீர்க்கத் தனது கழுத்தையே கொடுக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரான அர்ப்பணிப்பு எனப் பல விடயங்கள் மிக உறுதியாக வெளிப்பட்டன. அடுத்த வாரம் இடமாற்றம் நிறுத்தப்பட்ட கடிதம் கிடைத்தது. இது தான் சரா சேர்.

வலிகாம வலயத்தின் சங்க செயலாளராக தெரிவுசெய்யப்பட்டேன். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அவர். ஏதோ ஒரு வலயத்தின் செயலாளர் நான். இதனால் மிகத் தூரத்தில் இருந்தே அவருடன் பழகினேன். எனது 50 ஆவது பிறந்த தினத்தன்று மாலை நேரம் எனது பிறந்த தினம் என்பதை எவ்வாறு அறிந்தாரோ தெரியாது. தனது வாகனத்தில் சங்கத்தின் முதன்மையான உறுப்பினர்கள் பலருடன் தனது மனைவியையும் அழைத்து வந்தார். பிறந்ததினம் என்று அவர்களுக்குத் தெரியாது என்று நான் நினைத்திருக்கக் குடும்பத்தாரோடு வந்து என் குடும்பத்தைப் பெருமைப்படுத்தினார். மிகமிகப் பெறுமதியான பரிசுப் பொருட்களை அள்ளி வழங்கினார். அப்போது தான் சரா சேர் சங்க உறுப்பினர்கள் மேல் வைத்திருக்கும் மதிப்பை நான் உணர்ந்து கொண்டேன்.

எனது தந்தையார் இறந்த போது தானே கவிதை எழுதி, பனர் செய்து முதல் நாள் இரவே வந்து தனது கைகளால் எனது வீட்டில் கட்டிய அந்தக் கௌரவத்தை எப்படி மறப்பேன்? அது தான் சராசேர்.

ஏனைய சங்க உறுப்பினர்கள் வலயத்திற்கு வெளியே பாடசாலைகளில் ஆசிரியர்களாக இருப்பவர்கள். அவர்கள் இடமாற்ற சபைக் கூட்டங்களின் சுதந்திரமாகச் செயற்பட முடியும். நானோ வலயக் கல்விப் பணிமனையிற் பணியாற்றுபவர். ஒரு புறம் சங்கம், மறுபுறம் நான் தினந்தோறும் பணியாற்ற வேண்டிய மேலதிகாரிகள். சிலவேளைகளில் சங்க விதிகளை, கொள்கை களை மீறியும் செயற்பட்டிருக்கின்றேன். அப்போதெல்லாம் கோபிக்காமல், என்னைப் புரிந்து கொண்டு, "நீ செய்தது சரிதான் மகா என்றாலும் சங்கத்தின் கொள்கை அப்படி இல்லை என்று தெரியும் தானே" என்று அரவணைத்து வழிநடத்தியவர் சரா சேர்

ஆசிரியருக்கு ஒரு பிரச்சினை என்றால் அவர் எங்கள் சங்க உறுப்பினராக இருக்கிறாரா? என்று ஒருபோதும் அவர் பார்த்ததில்லை. ஆசிரியர் பாதிக்கப்பட்டதை ஊடகங்கள் மூலமாக அறிந்தாலும் உடனே தொலைபேசி அழைப்பு வரும். "இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கு உங்களுக்குத் தெரியாதா? என்னென்று விசாரித்து உடனே சொல்லுங்கள்" என்று கட்டளை வரும். பாதிக்கப்பட்ட ஆசிரியருக்கு நீதி கிடைக்கும்.

எனக்கு உதவியது மட்டும் அல்லாமல் எனது வலய ஆசிரியர்கள் தொடர்பாக உதவி கேட்டு எப்போது சென்றாலும் அவர் உதவி செய்து தான் இருக்கிறார். ஆசிரியர் துயர் தீர்க்க அவர் இல்லக் கதவுகள் எப்போதும் அகலத் திறந்தே இருந்தன.

சரா என்ற பெரிய ஆளுமையின் நிழலிலே நானும் இருந்திருக்கிறேன் என்பதில் எப்போதுமே எனக்கும் பெருமை.

நீங்களும் உங்கள் குடும்பமும் எல்லா வளங்களும் பெற்று மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதருள் மாணிக்கம் "சரா"

திரு. P. தேவராஜா,
அதிபர்,
தி/ மூ/ கூடைக்குடா பாரதி வித்தியாலயம், சம்பூர்.

கள்ளங் கபடமில்லா நெஞ்சத்தான் உதவியென்று வருவோர்க்கு உயிரையும் கொடுக்கக் கூடிய வல்லாளன் உறுதியளித்துவிட்டால் உரிய காரியம் முடியும் வரை உறங்க மாட்டான். தனது மகிழ்ச்சியை விட பிறரது மகிழ்ச்சியில் இன்பங் காண்பவன். தான தருமத்தில் இடது கை கொடுப்பதை வலது கை அறியாது. கோபம் என்று வந்துவிட்டால் அனல் பொறி பறக்கும். ஆனால் அடுத்த நிமிடமே அழுகையுடன் கண்ணீர் வரும். ஏனெனில் நெஞ்சிலே வஞ்சமில்லை.

சராவும் நானும் உறவுகள் என்பது தெரியாத காலம். 1978 களில் எனது ஊரில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக சராவின் புகுந்த ஊரிற்கு வந்தபோது நான் கண்ட சரா சுதந்திரமாக சிறகடித்துத் திரியும் வயது. சுட்டித்தனங்களோ ஏராளம். இவனைச் சுற்றி ஒரு நண்பர் கூட்டம் எப்போதும் இருப்பதைக் கண்டேன். இன்று போல ஆனால் இருவரும் பேசியது கிடையாது. நான் கற்ற கல்விக்கூடமும் சரா கற்ற கல்விக் கூடமும் வேறு வேறு. இருவரும் அப்போது கனிஸ்ட இடைநிலை வகுப்பில் கற்றவர்கள். எனவே சுட்டித்தனங்கள் புரியும் வயது அது.

1985களில் அவனது அடுத்த பரிணாமத்தைக் கண்டேன். அதிலும் அதே சுட்டித்தனமும் வீர தீரச் செயல்களும் நிறைந்திருந்தன.

1990களில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் சென்ற போது நான் கண்டவை. யுத்தத்தின் கொடூரத்தினால் மக்கள் அஞ்சி ஓடிக் கொண்டிருந்த காலம். ஆனால் கழுத்தில் ஒரு புகைப்படக் கருவியுடன் ஒரு ஜீவன் சம்பவ இடத்தில் பிரசன்னமாகி அந்தக் காட்சிகளை தனது புகைப்படக் கருவியினுள் செருகிக் கொள்ளும். அடுத்த நொடி ஒரு துவிச்சக்கர வண்டி தன்னை நம்பியுள்ள மாணவச் செல்வங்களைத் தேடி, ஓடி கல்வி புகட்டும். வகுப்புக்கள் நிறைவு பெற்றதும் அங்கேயே மங்கிய குப்பி விளக்கின் ஒளியிலே வெற்றித் தேர்வுகள் தயாராகும். அதனை உடனடியாக அச்சேற்றி தனது பிரதேசம் மட்டுமல்லாமல் வெளி மாகாணங்களுக்கும் விமானம் மூலம் பறக்கும். தன்குடும்பப் பிள்ளைகள் என்பதைத் தாண்டி முழு நாட்டிலுமுள்ள தமிழ் குழந்தைகளுக்காக இரவு பகல், மழை, வெய்யில் என்றெல்லாம் பாராது உழைத்த ஒரு ஒப்பற்ற ஜீவன் சரா. விரிவுரையாளர்ப் பணி, ஆசிரியர் சங்கப் பணி என்று பல்வேறு சுமைகள் அழுத்திய போதிலும் "வெற்றித்தேர்வின்" வழங்கலில் ஒரு தொய்வும் எப்போதும் வந்தது கிடையாது.

2001 களில் வெற்றித்தேர்வோடு என்னையும் இணைத்து கிழக்கு மாகாணத்திலுள்ள அனேக மாணவர்களது கரங்களுக்கு இதனை கொண்டு சேர்த்து அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் வெற்றிக்கு உழைத்த பெருமை சாராவையே சாரும். இன்றும் பல ஆசிரியர்கள், பெற்றோர்களது உள்ளங்களில் நிலைத்து விட்ட ஒரு பெயராக "வெற்றித் தேர்வு" விளங்குகின்றது. ஆரம்ப வகுப்புகளிலே "வெற்றித் தேர்வை" தொட்டவர்களை அது கை விட்டதில்லை. இதற்கும் மேலாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக பல இலவச கருத்தரங்குகளை யாழிலிருந்து வளவாளர் களை அழைத்து வந்து நடாத்திய பெருமை மிக்க மனிதர் இவர்.

2018 இல் மூதூர் கல்வி வலயத்திலுள்ள தமிழ் பாடசாலை மாணவர்களை அழைத்து தி/மூ/கட்டைபறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்தில் ஒரு இலவச கருத்தரங்கு இடம்பெற்றது. அக் கருத்தரங்கில் நடாத்தப்பட்ட மாதிரிப் பரீட்சையில் தி/மூ/ தங்கபுரம் ஸ்ரீ கணேச வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவியொருவரே அதி கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தார். நிறைவில் மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் போது பிரதம வளவாளரான திரு. சரா அவர்கள் அந்த மாணவியை அழைத்து சிறப்பான சித்தி பெற வேண்டும். நான் உங்களுக்கு துவிச்சக்கர வண்டி வாங்கித் தருவேன் என உறுதியளித்திருந்தார்.

அவ்வாண்டு நடைபெற்ற பரீட்சையில் துர்அதிஸ்டமாக அம் மாணவி ஓரிரண்டு புள்ளிகளால் சித்தி பெறத் தவறிவிட்டார். மூதூர் வலயத் தமிழ் பாடசாலைகளில் அவ்வாண்டு 50 மாணவர்கள் சித்தி பெற்றிருந்தனர். இது அதி கூடிய சித்தியாக பதிவாகியது. அம் மாணவர்களை கௌரவிக்கும் முகமாக "நாளைய கல்வி அமைப்பு" எனும் பெயரில் ஒரு விழாவினை சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலய முன்றலில் ஒழுங்குபடுத்தியதோடு பல தனவந்தர்களையும், நலன் விரும்பிகளையும் அனுகி சித்தி பெற்ற மாணவர்களுக்கும், சித்தி பெறத்தவறிய அந்த ஒரு மாணவியையும் சேர்த்து 51 துவிச்சக்கர வண்டிகளையும், கற்பித்த ஆசிரியர்களுக்காக வெகுமதிகளையும் வழங்கிய பெரும் சீமான் இந்த சரா அவர்கள்.

நிறைவில் ஒன்று இன்று எனது பெயரின் பின்னால் BA என்றொரு பட்டம் மிளிர்கிறது என்றால் அது சராவினால் கிடைத்த பொக்கிஷம். 1983 களில் யாழ் பல்கலையில் இணைந்த நான் பல்வேறு இன்னல்கள், இடர்கள் காரணமாக பட்டம் நமக்கினி எட்டாக் கனி என்று விட்டுத் தள்ளியிருந்த வேளையில் தனது அளப்பரிய முயற்சியினால் 2003 இல் (20 வருடங்கள்) என்னை ஒரு பட்டதாரி ஆக்கிய பெருமைக்குரிய மகான் இந்த சராதான். இதன் பங்கு அவருக்கு கிடைத்த நல் வாழ்க்கைத் துணையையும் சாரும். எனக்கு கப்பல், விமானப் பயணங்களைத் தந்தவனும் அவனே. சரா இல்லையேல் நானில்லை என்று சொல்லுமளவிற்கு என் நெஞ்சத்தை கொள்ளை கொண்டவன் அவன்.

இரு பெரும் விபத்துக்கள் அவனை ஆக்கிரமித்த போதும் அத்தனையையும் தவிடு பொடியாக்கியது. அவனும், அவனது குடும்பமும் செய்த தருமமே என்பேன். இவன் சேவையை எழுத யாராலும் இயலாது ஏனெனில் ஒரு தெய்வீகப் பிறவி.

"இவர் பரம்பரைக்கே கேடில்லாமல் இறைவன் காப்பான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிசுத்தப் புகழுடன் வாழ்வாரே

ஆசிரியர்: ப. தமிழ்மாறன்,
சயன்ஸ் அக்கடமி,
அரியாலை, நல்லூர்.

பண்டாண்ட தமிழ்மரபின் ஏந்தலெனக்
கிழக்கினி லுதித்த வித்தகஞ்சேர்
மண்ணவனாய் நிமிர்ந்தேகி நிதமுழைத்து
யாழ்மண்ணின் செழுமைதனை காத்திடவே
விண்ணளாவ ஓங்கியதால் சீர்மேவும்
ஆசிரியப் பணிதனிலே ஒளிவீசி
மாண்புடனே பூரித்து ஓய்வுபெற்றார்
புலமைநிறை புவனேஸ் வரனாரே

கனிவுநிறை மனைக்கிழத்தி வசந்தினியும்
நற்றுணையாய் கவரியது வீசிடவே
இனியநாற் புதல்வரது சாதனை
சரித்திரத்திற் புகழினையே சேர்த்திடவே
தனித்துநின் கலைபுகட்டி தரணியாழும்
சயன்ஸ் அக்கடமி சீமானார்
நனிசிறந்து தன்மகவாய் மாணவரை
யேற்றித்தமக் குவமையின்றி திகழ்ந்தாரே

துணிவுடனே சோதனைகள் சாதனையாக
விமர்சகரும் வித்தகரும் விதந்துபோற்ற
பணிமுதலென ஏறுமுகங் கொண்டாளும்
பெரும்பேறு அவனருளால் பெற்றேகி
ஏணியென உயர்ந்தெவரும் போற்றிடவே
மாசறு மகுடங்கள் சூடியின்று
மணிவிழா நன்னாளில் ஊர்கூடி
ஏத்திநிற்கும் கீர்த்தியது பெற்றாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றோரின் நலங்காக்கும் நற்சிந்தை
நாசூக்காய் சாதிக்கும் நாவன்மை
கற்பனைக் கடங்கிடா காரியத்தை
கடிதெனவே யாற்றிடுங் கெழுதகைமை
வெற்றித் தேர்விலிணைந்திட்ட விழுதுகளை
வாகைசூடி விஞ்சிநிற்கும் விற்பனமாம்
சற்குருவாய் சதங்கண்டு சிந்தையினால்
செகமாளும் சோதரர் சராவானவரே

நல்லூரான் நல்லருளால் நாலும்பெற்றே
தேரோடும் வேலவனின் திருநாளில்
நல்லன்ன தானத்தாற் களித்துண்டே
மனமுவந்து வாழ்த்துவோர் புண்ணியமும்
கல்விக்கொடை தானூட்டி நலிந்தோரை
பேரறிவு மதிகோர்க்கும் காருண்யமும்
பல்லோரும் பரிந்தோம்பிப் போற்றுதலால்
பரிசுத்தப் புகழுடனே வாழ்வாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கல்லூரியில் இருந்து மணிவிழா வரை நானும் சரா ஐயாவும்.....



திரு.சி ஆனந்தராஜ்
ஆசிரியர்,
யா/ மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை.

நான் யாழ் மத்திய கல்லூரியில் ஆரம்பப் பிரிவிலே கற்று இடைநிலைப் பிரிவிலே கற்பதற்காக தரம் - ஆறு வகுப்புக்குச் சென்ற போது முதன் முதலாக சரா ஐயாவிடம் கற்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தக் காலப்பகுதியில் யாழ். கோட்டையின் அருகில் எமது கல்லூரி அமைந்ததால் பல்வேறு அனர்த்தங்களுக்கு நாம் ஆளானோம். கடும் ஷெல் தாக்குதல்களும், சுற்றித் திரியும் சீனச்சகடைகளின் குண்டுத் தாக்குதலாலும் நாம் பல இழப்புக்களைச் சந்தித்ததோடு சுமுகமான முறையில் கற்றலிலும் இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் ஈடுபட முடியவில்லை. அந்தக் காலங்களில் கூட மாணவர்களை கற்றலில் இருந்து விலகாதவாறு தனது அர்ப்பணிப்பான சேவை மூலம் அரவணைத்து வழிகாட்டிய நல்லதோர் ஆசான் இவராவார்.

அப்போது உடற்பயிற்சிக்கு ஆசிரியராக இருந்த எங்கள் சரா ஐயா விளையாட்டுத் துறையில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டவர். "மத்தியின் மணிக்கொடி நித்திலம் நிலைக்கும்" என்பதற்கேற்ப மத்திய கல்லூரியின் மகத்தான விளையாட்டுச் சாதனைகளுக்கு வழிகாட்டியாக விளங்கினார். கடும் யுத்த சூழலிலும் பயிற்சிகள் தடைப்படாத வகையில் மாற்று வழிகளைக் கையாண்டு மிகச் சிறப்பான முறையில் மத்தியின் மைந்தர்களை சிறந்த வீரர்களாக உருவாக்கி பல்வேறு சாதனைகளைப் படைத்து மகுடம் சூட வைத்த பெருமைக்குரிய ஆளுமைமிக்க ஆசான் ஆவார்.

"கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" எனும் முது மொழியை நன்கு அறிந்தவராக தான் கற்க வேண்டியவைகளை எல்லாம் தேடித் தேடிக் கற்று நவீன கற்பித்தல் உத்திகளையும் சிறந்த கற்பித்தல் பாணியையும் பின்பற்றத் தொடங்கினார். அவரின் சிறந்த ஆளுமையின் காரணமாக விரிவுரையாளராக யாழ் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு பதவியுயர்வு பெற்றார். அங்கு அவரது திறமையான கற்பித்தல் செயற் பாடுகள் மூலமாக ஆசிரிய மாணவர்கள் புடம் போடப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டனர். தமிழர் தேசத்தில் சிறந்த கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்பக்கூடிய நல்லதோர் ஆசிரியர் குழாம் வருடந்தோறும் பயிற்றுவிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் சரா ஐயா அங்கிருந்த புகழ் பூத்த சிரேஸ்ட விரிவுரையாளர்களிடம் இருந்து தனக்குத் தேவையான கல்விப் புலமையையும் இணைபாட நுட்பங்களையும் பெற்றுக்கொண்டு அவற்றை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து நல்ல ஆளுமையான ஆசான்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலச்சக்கரம் விரைவாக உருண்டோடியது. ஒன்றாய் இருந்த நாம் யுத்தம் உக்கிரமடைந்ததால் நான்கு திக்கும் இடம்பெயரும் சூழ்நிலை ஏற்பட்டது. சரா ஐயா ஆசிரியராக இருந்தபோது மாணவனாக இருந்த நான் அவர் விரிவுரையாளராக இருந்த காலத்தில் மன்னார் மாவட்டத்தில் ஆசிரிய நியமனம் கிடைக்கப் பெற்றேன். பூர்வ ஜென்ம பந்தம் போல கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கே பயிற்சிக்காக வந்தேன். முதல் இரண்டு வாரம் நூற்றுக்கணக்கான மாணவர்களுடன் விளையாட்டுப் போட்டி இடம் பெற்றது. யாழ் மத்திய கல்லூரியின் வளர்ப்பும் வன்னி மண்ணின் வீரமும் சேர்ந்து பல போட்டிகளில் என்னை முதலிடம் பெற வைத்து முதன்மை வீரனாக அடையாளம் காண வைத்தது. இதற்கும் நான் பாடசாலைக் காலத்தில் சரா ஐயாவிடம் பெற்றுக் கொண்ட ஆரம்பக்கட்ட பயிற்சிகள் உறுதுணையாய் இருந்தன.

விளையாட்டு நிகழ்வுகளை சிறப்பாக முடித்து ஒரு மாத கால பயிற்சியுடன் விடுமுறை அறிவிக்கப்பட்டது. நான் மன்னார் சென்ற வேளை பாதை தடைப்பட்டு என்னால் யாழ்ப்பாணம் வரமுடியாமல் போனது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் கொட்டகலை ஆசிரிய கலாசாலைக்கு மாற்றப்பட்டோம். அங்கு சென்ற பின் நான் எனது நிலைமையைத் தெரிவிக்க சரா ஐயா, கணபதிப்பிள்ளை ஐயா ஆகியோரது தீவிர முயற்சியால் மீண்டும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு அனுப்பப்பட்டேன். அப்போது யுத்தம் தீவிரமடைந்து இருந்த காரணத்தால் எனக்கு மிகவும் பயமாகவும் பதற்றமாகவும் இருந்தது. முதல் நாள் மிகவும் கஸ்ரப்பட்டு காரைநகரிலிருந்து பல பேருந்துகள் மாறி கலாசாலையை வந்தடைந்தேன். கலாசாலையில் ஐயா எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தந்ததோடு, அன்று மாலை எனது இக்கட்டான நிலையறிந்து தன்னுடனேயே என்னையும் சேர்த்து அழைத்து வந்து மானிப்பாய் வீதியில் வைத்து காரைநகர் பேருந்தில் அனுப்பி வைத்த நெஞ்சம் நெகிழும் நினைவுகள் இன்றும் என் மனதில் பசுமரத்தாணியாக பதிந்து போயுள்ளன. இவ்வாறாக ஏராளமானவர்களுக்கு, பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தன்னலம் கருதாது பலாபலன் எதிர்பாராது வேண்டும் உதவிகளைச் செய்து எல்லோர் மனதிலும் உயரிய இடத்தைப் பிடித்துக் கொண்டவர் ஆவார்.

இவ்வாறாக அனைவரது மனங்களிலும் இடம்பிடித்த சரா ஐயா, இரண்டு முறை எனக்கு கிடைக்கவிருந்த இரு முதல் இடங்களை இல்லாமல் செய்தார். எனக்கு அப்போது மிக மிக வேதனையாக இருந்தது. ஒன்று ஏராளமான மாணவர்கள் பங்கு பற்றிய வேக நடைப் போட்டி, கடும் போட்டியின் மத்தியில் முதலாவதாக வெற்றிக் கோட்டைத் தாண்டினேன். ஐயா என்னை அழைத்தார். "சுவட்டில் முன்னால் செல்லும் வீரனை முந்தும் போது அவனது வலப் பக்கத்தால் தான் முயற்சிக்க வேண்டும். இடது பக்க சுவட்டு ஓரங்களால் முந்தக் கூடாது. இது தவறு என்பதால் நீ வெற்றி வாய்ப்பை இழந்து விட்டாய்" என்று கூறினார். அடுத்தது சில மாதங்களின் பின் முத்தமிழ் விழாவில் தனி நடிப்புக்காகச் சென்று மிகக் கஸ்ரப்பட்டு முக பாவனைகளைக் காட்டி நீண்ட நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்தேன். எனது சகபாடிகள் என்னைப் பாராட்டினார்கள். முதலிடம் உனக்குத்தான் என அடித்துக் கூறினார்கள். ஆனால் இம்முறையும் இடம் கிடைக்கவில்லை. ஐயாவிடம் கேட்ட போது "போட்டிக்கு வழங்கப்பட்ட தலைப்பிலிருந்து நீ விலகிவிட்டாய். நடிப்பு நல்லாயிருந்தது. தலைப்புடன் பொருந்தவில்லை" எனக் கூறினார். இரு சந்தர்ப்பமும் எனக்கு நல்ல பாடங்களாக அமைந்தன. அவர் பாரபட்சமின்றியும் தவறைக் தவறு என நேரடியாகச் சுட்டிக்காட்டி தீர்ப்புக்களை வழங்கி நம்மை நல்வழிப்படுத்தி வழிகாட்டினார். நான் தற்போது நடுவராகக் கடமையாற்றும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவரிடம் கற்றவை உற்ற துணையாக இருந்து உயர்வடைய வழிவகுக்கின்றன.

ஆசிரியர் கலாசாலை காலத்தில் ஐயாவுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் இணைந்து கொண்டு கலாசாலைக்கான இணைப்பாளராகவும் மன்னார் மடு வலயச் செயலாளராகவும் சேவையாற்றினேன். அக்காலப் பகுதிகளில் ஆசிரியர்களது தீர்க்க முடியாத பல பிரச்சினைகள் ஐயாவின் தீவிர முயற்சியால் தீர்த்து வைக்கப்பட்டன. வலய, மாகாண கல்வி அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு மாணவர் களினதும், ஆசிரியர்களினதும், அதிபர்களினதும், பாடசாலைகளினதும் பல்வேறு பிரச்சினைகளை இலாவகமாகக் கையாண்டு நீதியான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தார். கல்விச் சமூகத்தின் நீதியைப் பெறுவதற்காக அஹிம்சை வழியில் போராடுவார். அநீதியை தடுக்க தன் நாவையும் எழுதுகோலையும் ஆயுதமாகப் பயன்படுத்தி உண்மைகளை நிலைநாட்ட உயர்மட்டங்களையும் உயிரைப் பணயம் வைத்து எதிர்த்து நிற்கும் வீரத் தமிழனாக விளங்கினார் தனது வயதையும் உடல் நிலையையும் பற்றி சிந்திக்காது இரவு பகல் பாராது எம் கல்விச் சமூகத்திற்காக உரத்துக் குரல் கொடுத்தவர் ஆவார். மும்மொழிப் புலமை சிறப்பாய் அமைந்த மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கினார். இங்கு மட்டுமன்றி வெளிநாடுகளிலும் தமிழினத்தின் கல்விக்காகவும் உரிமைக்காகவும் துணிச்சலுடன் பல பிரச்சினைகளை முன் வைத்து போராடி வெற்றி கண்டார். தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பல சவால்களை "அசகாயசூரனாக" எதிர்த்து தகர்த்தெறிந்த பெருமைக்குரியவர்.

சரா ஐயா அவர்கள் விரிவுரையாளராக இருந்த காலத்தில் தனியே விளையாட்டுத்துறையை மட்டுமன்றி சமயம் சார்ந்த பண்பாட்டு விழுமியங்களையும் கட்டிக் காத்தவராவார். கலாசாலையில் நடைபெறும் சமய விழாக்களில் வேட்டி கட்டியவாறு தானே முன்னின்று சமய மரபுகளை நெறிமுறை தவறாது மேற்கொண்டு யாவர்க்கும் எடுத்துக்காட்டாக விளங்குபவர். அத்துடன் நல்லூர் திருவிழாக் காலங்களிலும், கிழக்கு மாகாணத்தில் சமயம் சார்ந்த விசேட காலங்களிலும் அன்னதானப் பணியை சிறப்பாக மேற்கொண்டு அறிவுப் பசியைப் போக்குவதைப் போல வயிற்றுப் பசியையும் காலத்தின் தேவையறிந்து போக்கி வருபவராவார். அத்துடன் வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்காக எத்தனையோ வழிகளில் கற்றலுக்குத் தேவையான பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளைச் செய்து அவர்கள் வாழ்வில் உயர்ச்சி அடைவதைப் பார்த்து மனமகிழ்பவராக விளங்கினார். இன்றும் இது போன்ற உதவிகளை வறிய மாணவர்களை இனங்கண்டு செய்து வருகின்றார். அத்துடன் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் ஆளுமையை வளர்ப்பதற்கு வெளிக்கொண்டு வருவதற்குமாக கலாசாலையில் வைத்தே பல நுண்ணறிவு வினாத்தாள்களை இலவசமாக வழங்கி தொடர்ச்சியாக அவர்களின் கற்பித்தல் முறைமைகளை அவதானித்தார். நுண்ணறிவு வினாக்களுக்கு விடையளித்தல், வினாக்களை உருவாக்குதல் என்பன பற்றி மிகத் துல்லியமாகவும் நன்கு விளக்கத்துடனும் விளங்க வைத்தார். தற்போது வட மாகாணத்திலுள்ள முன்னணி ஆசான்களில் பலர் சரா ஐயாவின் நுண்ணறிவு வினாக்கள் செய்யும் இலகு வழிகளைக் கற்றவர்களாவார். ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் கலாசாலைக்கு காலடி வைத்த சிறிது காலத்திலேயே "வெற்றித்தேர்வு" வினாத்தாள்களை வழங்கி நீங்கள் இதை இலகுவாக செய்தால் தான் பிள்ளைகளை மகிழ்வாக தேர்வுகளை எதிர்கொள்ள வைக்க முடியும்" எனக்கூறி எல்லோரையும் நன்கு வளப்படுத்தி ஐயம் தீர சிறப்பாக வழிப்படுத்துவார். அத்துடன் தனி ஆளாக நின்று நூற்றுக்கும் மேற்பட்டோருக்கான கருத்தரங்குகள் அலுக்காமலும் சலிக்காமலும் நகர்த்திச் செல்வதில் அவருக்கு நிகர் அவரே தான். இதற்கு வருடம் தோறும் அவரால் நடாத்தப்படும் வெற்றித்தேர்வு வழிகாட்டல் கருத்தரங்குக்கு வரும் ஆயிரக்கணக்கான மாணவர்களும் பெற்றோரும் சிறந்த சான்றாக அமைகின்றனர்.

எம் தேசத்தின் கல்விச் சாதனைகளில் தரம் - ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மிக முக்கியமானதாகும். அந்த வகையில் தேசிய ரீதியான பல தொடர் சாதனைகளை சகோதர இனத்தவரையும் தாண்டி தமிழினம் படைத்த வரலாறுகள் நடந்தேறி வருகின்றன. அண்மைக் காலமாக "வெற்றித்தேர்வு" தொடர் பயிற்சியில் இணைந்திருந்து மாணவர்கள் தொடர்ச்சியாக தேசிய, மாகாண சாதனைகளைப் படைத்து வருவது கண்கூடான உண்மையாகும். நல்லூர்க்கந்தன் இறையருளுடன் "வெற்றித்தேர்வு" வழிகாட்டல்கள் எம் தேசத்தின் சாதனைகளை தொடரச் செய்யும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நான் கடந்த பத்து வருடங்களுக்கு முன் நூற்றாண்டு கடந்த பழைமை மிக்க யா/ மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலைக்கு ஆசிரியராகச் சென்றேன். அங்கு சேவையாற்றியபோது கோரோனா இடர்காலத்தில் 100% சிததியுடன் 13 மாணவர்கள் சித்தியடைய வைத்து வலிகாம வலய முதன்மைச் சித்தியாக சாதனை படைக்க முடிந்தது. பாடசாலையின் 120 வருட கால வரலாற்றில் பாரிய சாதனையாக இது அமைந்து மாகாணக் கல்விப் பணிப்பாளர் முன்னிலையில் விழாவாக இடம் பெற்றது. அத்துடன் அவ்வருடத்திற்கான தரம் - 1 கால்கோள் விழாவை எமது பாடசாலையிலேயே நடாத்தி வலயக் கல்வியலுவலகத்தின் பெருமையைப் பெற்றோம். இந்தச் சாதனை வெற்றிக்கு என்னைப் பெரிதும் வழிகாட்டி நல்ல நுணுக்கங்களைக் கற்றுத் தந்த சரா ஐயா அவர்களுக்கே இச் சாதனையை சமர்ப்பணம் செய்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்க்கின்ற மரத்திற்கு கல்லடி படுவதுபோல இவரது சேவையை சரியாக உணராதவர்கள் இவரைச் சீண்டியும், ஏனையவர்களைத் தூண்டியும் பல பிளவுகளை ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் யாவும் இவரது மதிநுட்பத்தாலும் பொறுமையாலும் தகர்த்தெறியப்பட்டன. தமிழர் ஆசிரியர் சங்கம் எண்ணிலடங்காத அங்கத்தவர்களுடனும் ஸ்திரமானக் கட்டமைப்புடனும் தரணி போற்ற தலை நிமிர்ந்தே நிற்கின்றது. இன வாதம், பிரதேச வாதம் எனப் புரளியைக் கிளப்பியவர்களுக்கு அவர் வடமாகாணம் போன்றே கிழக்கிலும், ஏனைய பிரதேசங்களிலும் எல்லோரையும் இணைத்து சரிநிகர் சமமாய் மதித்து, பாரபட்சமின்றி செய்த சேவைகள் சாட்டையடியாய் விழுந்தன. இருபது வயது இளைஞனாய் இருந்த காலம் முதல் அறுபது வயதிலும் இளைஞனாய் அவர் செய்த, செய்கின்ற, செய்யவிருக்கின்ற நற்செயல்களும், சேவைகளும் தொடர்ந்தே செல்லும். ஒரு மாணவனாய் கல்லூரியிலிருந்து அவரது மணிவிழா வரை கற்றும் பெற்றும் இருக்கின்ற மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன். இன்றுபோல் என்றும் சரா ஐயா அவர்களும், அவர் தம் பாரியார் மற்றும் நன்மக்களும் நலமே வாழ எல்லாம் வல்ல இறைவனை மனதார வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலங்கரை விளக்கு சரா. புவனேஸ்வரன்

இரா. மதிகரன்
சமூக முன்னோடி

திருமலையில் உதித்து நீண்ட பாரம்பரியமும், தொன்மையான மரபும் மிக்க யாழ்ப்பாணத்தின் அரியாலை என்னும் கிராமத்தில் வந்து இணைந்தவர் தான் சரா புவனேஸ்வரன் அவர்கள். அரியாலையில் அரிய சான்றோர், பெருமக்கள் சிறப்பாக வாழ்ந்துள்ளனர். கலை, கல்வி, விளையாட்டு, விவசாயம், பண்பாடு, கலாசாரம், ஆன்மீகம் அனைத்தும் மேலோங்கி நிற்கும் இடம் அரியாலை. வாழ்ந்தவர்கள் மறைந்து செல்ல வாழும் தமிழறிஞர்களின் வரலாற்றுப் பதிவில் சரா புவனேஸ்வரன் இன்றைய மாணவர் உலகத்திற்கு உதயமாகினார். அப்படிப்பட்டோரின் வாழ்வும், பணியும் பற்றிய தகவல்களை நூல் வடிவில் உருவாக்க எடுத்திருக்கும் முயற்சி பாராட்டுக்குரியது.

எழுத்தாளர், பேச்சாளர், நூல் ஆசிரியர், பதிப்பாசிரியர், நல்ல விளையாட்டு வீரர், நடுவர், வழிகாட்டி, சிறந்த தொழிற்சங்கவாதி, விரிவுரையாளர் என்ற பல வடிவங்களில் பன்முக ஆளுமை கொண்ட ஒருவர். வீழ்ச்சி கண்டு சென்ற பாடசாலைகளை மீள் எழ வைத்தார். இயங்காமல் இருந்த பல சன சமூக நிலையங்களை இயங்க வைத்தார். சனசமூக நிலையங்களில் மெய்வன்மைப் போட்டிகள் தொடர்பான சீரான ஒழுங்கமைவுகளை ஏற்படுத்திக் கொடுத்தார். அறிவிப்பு தொடர்பான ஒழுங்கு விதிகளை காட்டிக் கொடுத்தார். ஆசிரியர்களுக்கு இடையே இருந்த முரண்பட்ட நிர்வாக நடைமுறைகளை சீராக்கம் செய்து பின்னடைவைச் சந்தித்த ஆசிரியப் பணிக்கு உத்வேகத்தைக் கொடுத்தார்.

வசதி குறைந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் அக்கறை கொண்டார். அத்துடன் தனது சொந்த முயற்சியினால் வழிதவறிச் சென்ற மாணவர்களை இடைவிலகல் நிலையில் இருந்து மீட்டெடுத்து சமூகத்தில் அவர்களுக்கு வெறுப்புணர்வை ஏற்படா வண்ணம் அரவணைத்து பரிவைக் காட்டி, கல்வியூட்டி அதி உச்ச பெறுபேறுகளை பெற வைத்தார். பொருளாதார வசதி குறைந்த மாணவர்களை பருவத்தே பயிர் செய்ய வைத்து குடும்ப பொருளாதாரத்தை உயர வைத்து வசதி படைத்த மாணவர்கள் போல் பொருளாதார மேம்பாடடைய உயர்த்தி வைத்தார்.

கற்பித்தல் என்ற செயற்பாட்டின் ஊடாக சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். ஒரு கல்வி கற்கின்ற மாணவர் மீது பெற்றோர், பாதுகாவலர், நலன் விரும்பிகள் எவ்வாறு அவதானம் செலுத்த வேண்டும் என்பதை சாதாரண செயற்பாடுகளின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்தைச் செலுத்தி மாணவனின் கல்வி மேம்பாடு, ஒழுங்கு விதிகள், கீழ்ப்படிவு என்பவற்றைக் காட்டி, பாடசாலையில் ஒழுங்கு விதியில் மேம்பட்ட மாணவனாக அடையாளப்படுத்தி சமூக மாற்றத்தைக் கொண்டு வந்தவர். அறியாமையில் ஆரம்ப காலம் தொட்டு இருந்து வந்த சாதி, சமய, கிராம வேறுபாடுகளை கல்வி ஊட்டல் என்ற செயற்பாட்டின் ஊடாக மனமாற்றம் அடைய வைத்து எல்லோரையும் சமாந்தர நிலைக்கு கொண்டு சென்றவர்.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக கல்வி சார்ந்த தொடர்பின் ஊடாக எமது குடும்பத்தோடு மிக நெருங்கிய தொடர்பினை கொண்டிருக்கும் வகையிலும், அவரது நிறுவனம் சார்ந்த நிர்வாக செயற்பாடுகளிலும் ஊறித் திளைத்து போனவன் என்ற வகையிலும், எமது ஆலயம், பொது அமைப்புகள் வாயிலாக பிரதம விருந்தினராக, சிறப்பு விருந்தினராக, பிரதம பேச்சாளராக, பிரதம நடுவராக, கல்வித் திணைக்கள வாயிலாகவும், தொழிற்சாங்கரீதியாகவும், பெருமிதமான அனுசரணைகளை வழங்கிய வகையில் எத்திசையில் நின்று பார்த்தாலும் ஒளியோடு கூடிய திசைகாட்டியாக, விடிவு தேடும் ஈழ மண்ணின் மக்களுக்கு கல்வி என்ற செயற்பாட்டின் ஊடாக இழந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க, இழந்த உரிமையை மீட்டெடுக்க, வலி தாங்க முடியாமல் விழி பிதுங்கி ஓட முயலும் நல் உறவுகளின் வழித்தடமாக, வாழ வழி தெரியாமல் தட்டுத் தடுமாறி நிற்கும் வறிய மக்களின் வறுமை போக்கி, வரப்புயர்ந்து, நீருயர்ந்து, வசதி படைத்த கொடையாளர்களின் கரங்களைப் பற்றி செய்யும் தொண்டினாலும், தேச எல்லைகள் கடந்து, ஈழ மக்கள் எல்லை கடந்த ஏக்கப் பெருமூச்சை ஏங்கி, ஏங்கி கூர்ந்து நோக்கும் உடன் பிறவா உறவுகளின் கரம் பற்றி கல்வி எனும் அத்திவாரமிடும் தங்களை எத்திசையிலும் நின்று தெரியும் "கலங்கரை விளக்காக" தமிழ் சமூகத்தின் எண்ணம் போல் மிளிர வாழ்க வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரா சேர் எனும் சாரா ஓர் ஆலமரம்



**Dr. R. Sutharsan (MBBS col)**
பழைய மாணவன் சயன்ஸ் அக்கடமி.

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் நபர்கள் பற்பலர். சிலர் பிறப்பால் இணைந்தவர்கள். சிலர் பிணைப்பால் இணைந்தவர்கள். ஆனால் ஒரு சிலரே அவர்களது செயல்களால் எம் நினைவுகளில் இணைந்து என்றும் ஒரு ஹீரோவாக இருப்பார்கள். அவர்களுடன் தினமும் நாம் கதைப்பதில்லை. அவர்களுக்காக தினமும் நாம் எதையும் செய்வதும் இல்லை. அவர்கள் திரைப்பட கலைஞர்களோ அரசியல் தலைவர்களோ இல்லை. என்றாலும் நாம் துவண்டு போகும் பொழுதுகளில் அவர்களின் ஞாபகங்கள் வந்து எம்மை ஊக்கப்படுத்திச் செல்லும். நேற்றைய, இன்றைய, நாளைய இளைஞ மாணவ சமுதாயங்களின் அப்படிப்பட்ட ஒரு ஹீரோ தான் எங்கள் சரா சேர்.

வார்த்தைகளுக்கும் உணர்வு இருக்கும் என புரியவைத்த ஒரு வார்த்தை தான் சரா சேர். அந்த வார்த்தையை முதன் முதலில் கேட்கும் போது எனக்கு வயது ஒன்பது. கேட்டவுடனேயே அந்த வார்த்தையில் ஒரு கம்பீரம், கூடவே பயமும். அது போதாது என என் நண்பர்களும் அவர் இப்படி அப்படி என கூற, என் மனதில் பயம் பளிச்சிட்டது. நான் முதன் முதலாக "சயன்ஸ் அக்கடமி"யில் கால் வைத்த போது என் கண்கள் தேடிய ஒரே ஒரு விசயம் யார் அந்த சரா சேர்? என் துர்பாக்கியம் முதன்நாளில் அவரை காண கிடைக்க வில்லை. சில நாட்கள் கழிந்த பின் ஒரு நாள் அக்கடமிக்கு நுழையும் போது குண்டுசி விழும் அமைதி. எனக்கு விளங்கிவிட்டது. தூரத்தில் ஒரு உருவம் கையில் தடி, கனத்த குரல். தலைகுனிந்த படி வகுப்பிற்குள் சென்று விட்டேன். அந்த கனத்த குரல் எனது வகுப்பை தாண்டியபோது தான் நிமிர்ந்து பார்த்தேன். யாரும் அவரை அறிமுகப் படுத்தவில்லை. ஆனால் நான் மனதில் அவருக்கு கொடுத்த உருவமே அவரை அடையாளப்படுத்தி விட்டது. வார்த்தைகளுக்கும் உணர்வு இருக்கும் என புரியவைத்த தருணம். அந்த பயம், அது மரியாதையாகவும் அன்பாகவும் மாற நெடுகாலம் எடுக்கவில்லை.

"சயன்ஸ் அக்கடமி" புகழ் பெற முக்கிய காரணம் கல்வித்தரம் மாத்திரம் அல்ல, அதற்கு நிகராக மாணவர்கள் மத்தியில் கட்டியெழுப்பப்படும் ஒழுக்கமும் தான். அதற்கு ஒரே ஒரு தனிப்பெருங்காரணம் சராசேர் தான். அவரது உழைப்பு, கண்டிப்பு, ஒழுக்கத்திற்கு அவர் கொடுக்கும் முக்கியத்துவம், சீரான திட்டமிடல், தன்னிகரற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை இவை யாவும் சேர்ந்து "சயன்ஸ் அக்கடமி"யை குறுகிய காலத்தில் புகழ் பெற செய்தது. அவ் வளர்ச்சியை ஒரு மாணவனாக இருந்து நானும் கண்டு வியந்தேன். வேறு எந்த தனியார் கல்வி நிறுவனங்களைக் காட்டிலும் திறமையான ஆசிரியர்கள், நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்ட பாடவேளைகள், கிரமமாக நடத்தப்படும் பரீட்சைகள், நேரந் தவறாமை, சிறப்பாக முன்னெடுக்கப்படும் பரிசளிப்பு விழாக்களும், சமய விழாக்களும், இவற்றிற்கு அடித்தளமான சரா சேர் எனும் தலைமைத்துவம் "சயன்ஸ் அக்கடமி"யை பாடசாலைகளின் தரத்திற்கு இட்டுச்சென்றுள்ளது என்றால் மிகையாகாது.

அவரது கண்கள் யாரையும் கவனிக்காதது போல் இருக்கும், ஆனால் ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியாக கவனித்து வைத்திருக்கும். மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளில் கூட அவரது கைகள் உதவ முன்வந்து நிற்கும். இது என் தனிப்பட்ட அனுபவத்திலும் கூட கல்விற்கு பணம் ஒரு தடையாக இருக்க கூடாதென குறைவான கட்டணத்தில் முழுமையான கற்பித்தல், அதற்கும் கடினம் என்றால் இலவசமான கல்வி என வழங்கிவிட்டு, எவ்வித பெருமிதத்தையும் காட்டாத எளிமையான மனிதர் எங்கள் சரா சேர். அனைத்திற்கும் மேலாக அவர் மிகச்சிறந்த ஆசிரியர். அவரிடம் நேரடியாக கல்விகற்ற காலம் குறைவு எண்டாலும்கூட அவர் கற்பித்த ஒவ்வொரு நிமிடமும் வாழ்க்கையில் மிக சுவாரஸ்யமாக கழிந்த மணிப்பொழுதுகள்.

ஒரு சமூகத்தினை கட்டியெழுப்பும் மகத்தானவர்கள் ஆசிரியர்கள். அவ் ஆசிரிய சமூகத்தையே நல்வழிப்படுத்தும் உயரிய பணியை பல வருடங்களாக செய்து வருபவர் எங்கள் சரா சேர். தனது அயாரத உழைப்பால் பலரை உயரத்தி விட்டு, எவ்வித எதிர்பார்ப்புமின்றி அடுத்த தலைமுறையினரை தூக்கி விடுவதற்காக தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கும் எங்கள் சேரின் பாதம் பணிகின்றோம். யாழ் தமிழனிடம் ஊற்றெடுக்கும் கல்வி என்ற நதி என்றும் சரா சேரின் பெயரை சொல்லிக்கொண்டு தான் பயணிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழி செதுக்கிய சித்திர சிற்பியே



இ.ப. மோகன்ஜித்
அரியாலையூர் கவிஞர்
அகில இலங்கை சமாதான நீதவான் (JP)

கல்வி கற்ற மனிதர்கள் எவ்வாறு வாழவேண்டும் என வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கும் கல்வியின் இறைதூதரே!!!

உழைத்து படித்து உயர்ந்த உயர்வால் களைத்திடாமல் கல்விக்காய் காலத்தை கணக்கிடா செலவு செய்யும் வையக வள்ளல் என்றால் அவர் உயர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களே. புவனத்துக்கே ஈஸ்வரனாக திகழும் சிவபெருமானின் திருநாமத்தை தன் பெற்றோர் தனக்கு சூட்டியதை உணர்ந்து நாமத்தின் நன்மதிப்பை சூட்டியதை நலம் காத்து வாழ்ந்து வரும் முதன்மையானவர்.

மண்ணின் மகத்துவத்தையும் பெற்ற பெண்ணின் பெருமையையும் காத்திடும் காவலரே.... கற்ற கல்வியின் கண்ணியத்தையும் கைபிடி மனையாள் பெண்ணியத்தையும் உயிராய் மதிக்கும் உத்தமரே....... தன்னை உணர்ந்து தன் பணியை உணர்ந்து தன் வழித்தோன்றல்களின் உணர்வை புரிந்து சமத்துவம் பேணும் பேராளனே....!

தன்னை உணர்ந்தவர்கள் தலைவர்களே
தம்பணி உணர்ந்தோர் இறை தூதர்களே
அவ்வழி தோன்றிய சீரிய சிந்தனையாளனே
செம்மொழி செதுக்கிய சித்திர சிற்பியே

கல்வி ஒருவரின் நிலையான அழிவில்லாத செல்வமாகும். இக்கல்வியை திருடர்களால் களவாடிச் செல்ல இயலாது. தீயினால் எரித்து விட முடியாது. நீரினால் அடித்துச் செல்ல முடியாது. பிறருக்கு கொடுத்தாலும் மிகுமே அன்றி குறையாது. இத்தகைய கல்வியே கேடில் விழுச் செல்வமாகும். கல்வி மட்டுமே ஒருவரது வாழ்க்கையை மிகவும் சரியான வழிக்கு அழைத்துச் செல்லும் என்பதற்கு உதாரணம் மணிவிழா நாயகன் ஒருவரே போதும்.

அலைகடல் பயணமாய் அல்லும் பகலும் அயராது உழைத்து தானுண்டு தன் பணி தனக்குண்டு என்று வாழ்ந்துகொண்டும், வாழ வைத்துக்கொண்டும், வாழ வழிகாட்டிக் கொண்டும் எம்மோடும் சமத்துவம் காக்கும் எளிமையான மாமனிதர். தற்பெருமையை அறியாதவர், அறிய விரும்பாதவர். ஏழை மாணவர்களின் என்றுமே கலங்கரை விளக்கானாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிப் பறிக்காமல் தனிப் பாதையிலே
தனித்துவத்தோடு வேரோடிய விருட்சமிவர்
விமர்சனங்களை வீதியிலே விட்டு விட்டு
வில்லம்பாய் இலக்கை இரையாக்குபவர்

பொறுப்புக்களை தட்டிப் பறிக்காத தன்னலமற்ற பண்போடு தரப்படும் பொறுப்புக்களை நேர்மை, நீதி, சமத்துவம் என்பவற்றை மூலாதாரமாகக் கொண்டும் செயற்பாடுகளின்போது அனைவருக்கும் வாய்ப்பளித்து சுயமாக செயற்பட சந்தர்ப்பம் வழங்கி, காலத்தின் தேவைக்கு ஏற்ப பல புதிய விடயங்களை உட்புகுத்தியும் துறை சார்ந்த பெறுமதியான வளவாளர்களை பயன்படுத்துவதும் இவரது தனிச் சிறப்புக்களில் ஒன்றாகும்.

கற்றறிவாளனாகவும், பகைவரின் கனல் கக்கும் பார்வைக்கு அஞ்சாதவராகவும் உள்ளத்தில் பதியுமாறு உரைப்பவராகவும் உரிய நேரத்தில் உணர வேண்டியதை உணர்ந்து கொள்பவராாகவும் இருப்பவரே என் உயிரிலும் மேலான வழிகாட்டியே....

இவரது நண்பர்களை உற்று நோக்கினால் மனி நேயமுள்ள பதவி ஆசைகளற்ற, சுயநலமற்ற சிந்தனையாளர்கள். பொதுச்சேவையை உயிராய் மதிக்கின்ற, பொது உடமைகளை துஸ்பிரயோகம் செய்யாத, தீய செயல்களுக்கு துணை போகாத, குடும்ப நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அர்ப்பணிப்பாளர்கள். இவர்கள் யாவருமே மணிவிழா நாயகனுடன் தாமாகவே நட்புக் கரம் பற்றியவர்கள். முக்கியமாக மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பதற்கிணங்க இறைவனின் பரிபூரண வரமாய் கிடைத்த மனையாள் அதிஷ்ரமாக கிடைத்த பிள்ளைகள் இப்படியாக தூய்மையான குடும்பமாகவும் எளிமையான வாழ்க்கை முறையும் ஏனையோர்களிடம் இருந்து தனித்துவமாய் திகழ்வதையும் கண்டு ஆனந்தம் அடைகின்றோம்.

தேரேடும் திருமுருகன் முன்றலிலே
தெவிட்டாத கல்விதனை பிரசாதமாய்
தினம் கேட்கும் மணியோசை காதோரம்
திசையெல்லாம் புகழ் பரவும் பிரமாதமாய்

அழகுத் தெய்வம் முருகனின் கண்ணெதிரே கல்விச் சேவையை கலப்படமில்லா அமுதமாய் மாணவர்களுக்கு ஊட்ட அறிவார்ந்த ஆசிரியர் குழாமோடு இணைந்து "எம்மோடு இணைந்தோர் உயர் கல்வி பெற்றோரே" எனும் மகுட வாக்கிய பாதையிலே உயரிய கல்விப் பயணத்தை சமத்துவம் காத்து பயணிப்பது இவருக்கே மட்டும் உரித்தான தனித்துவம் ஆகும்.

இன்றைய மகத்தான மணிவிழாவின் சிறப்பை உங்களுக்கு சவால் விடுவதற்காய் கடந்த 65 ஆண்டுகளை மீட்டுப் பார்ப்பதற்காய் முன்நோக்கிப் போனேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும்போது இவரைப் போல் யாரையும் நான் காணவில்லை. மீண்டும் திரும்பும் போது மிக மெதுவாக வந்தேன். அப்போதும் நான் மணிவிழா நாயகன் போல் எவரையும் பார்க்கவில்லை. நான் நினைக்கின்றேன் நான்கு வருடத்துக்கு ஒரு முறை வரும் வருடம் போலும், பல நூறு வருட இடைவெளியில் நிகழும் அற்புதம் போல்தான் மதிப்பிற்குரிய உயர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் அவதரிப்பு என்பதில் ஐயமில்லை. இந்த அற்புத விழாவின் வரலாறு கூறும் இந்த நூல் என்பதில் சந்தேகம் ஏது.

கற்பதற்குத் தகுதியான நூல்களை பழுதில்லாமல் கற்க வேண்டும். கற்றதன் பின்னர் கற்ற அக்கல்வியின் தகுதிக்கு தகுந்தபடி நடக்கவும் வேண்டும்.

திருக்குறளின் படி வாழ்ந்து கொண்டிருக்கும் திருநாயகனே சகல சௌபாக்கி யங்களும் பெற்று நீடூழி வாழ்க..... வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பணி ஆற்றிய மேன்மைகொள் ஆசான்



திரு. திருமதி சசிசாந்தன் திருமகள் தம்பதிகள்,
அதிபர், சசி சாரதி பயிற்சி பாடசாலை,
சம்பூர்.

நீராருங் கடல்மடந்தை நித்திலத்தூ விளக்கேற்ற
காளுரும் கழனியெலாம் கதிர்பொலிய தேளுரும்
பேரான சம்பூரின் பொற்புதையல் பெட்டகமே
நூற்றாண்டு வாழியவே நீடு.

நீர்மலி வயலும் நெடுங்கடல் வளமும்
சீரிளந் தமிழின் சிறப்புறு கலையும்
கார்மழை தழுவும் தெங்கும் பனையும்
வேரிடை பழுத்த பலாவும் மாவும்
தூரிடை தூங்கும் தூவெண் சங்கும்
மான்மறை தாவிப் பாய்ந்திடும் கானும்
தேன்துளி சிந்தும் கனிமரச் சோலையும்
தான்மலிந் தோங்கும் தமிழ்மண் சம்பூர்
வீரம் விளைந்த சம்பூர் மண்ணில்
ஈரம் செறிந்த இரத்தினம் சரவணை
தாரம் இணைந்தே புதையல் எடுத்தனர்
ஆரம் போலொரு "ஈஸ்வரன்" தன்னை
மாணவர் உயந்திட ஏணியாய் ஆனவன்
தோணியாய் கல்விக் கரைதொட வைத்தவன்
மாணியாய் பட்டம் பெற்றுயர் துறையில்
பேணுயர் விரிவுரை யாளனு மானவன்
மூக்கு நுனிக்கண் முனைந்திடும் கோபம்
நோக்கின் மறுகணம் மறைந்திடும் பனிபோல்
நாக்கின் நுனிக்கண் நயம்படு வார்த்தைகள்
தேக்கிக் குவித்த செயல்மிகு வீரன்
செய்தொழில் ஒன்றே தெய்வமென்றெண்ணி
மெயப்பணி ஆற்றிய மேன்மைகொள் ஆசான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம் தீர்க்க அறிவுரை சொல்லி
செய்திடும் பணிக்கே உண்மையும் ஆனவன்
பொன்னேர் மனந்தோன் பொலிந்தநற் குணத்தோன்
தன்னுயர் சேவையில் தனித்துவம் படைத்தோன்
பன்னீரைந்து ஆண்டுகள் முற்றி
இன்னரும் பணியில் ஓய்ந்திடும் நிலையிலும்
தன்னிதழ் வாடினும் தொடர்மணம் வீசும்
பொன்மலர் தாழும் பூவெனச் சேவைகள்
செய்திட வேண்டும் இறையருள் கூட
பொற்றா திறைக்கும் பூவிதழ் மாலை
அற்றைத் தினமே உதிர்ந்திடும் அதனால்
சொற்றேன் கவிதையில் வைத்தேன் உன்னை
வற்றாக் கல்வியின் வித்தக வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60
1963 - 2023
years
Diamond Jubilee

# மணிவிழா மலர்

## பல்துறைசார் ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருகோணமலை மாவட்டத்தின் குடித் தொகையும் மாறிவரும் இன விகிதாசாரமும்

பொ. பாலசுந்தரம்பிள்ளை
பேராசிரியர்.

திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகரம், திருகோணமலைத் துறைமுகம் கடந்த காலங்களிலும் நிகழ்காலத்திலும் தேசிய, சர்வதேச முக்கியத்துவம் பெற்றுள்ளன. திருகோணமலைப் பிரதேசத்திற்குட்பட்ட நகரம், கொட்டியாரப்பற்று, கட்டுக்குளம்பற்று, தம்பலகாமம், கந்தளாய்ப்பற்று ஆகியன வரலாற்றுக்காலத்தில் நன்கு விருத்தி பெற்று இருந்ததற்குச் சான்றுகள் பலவுண்டு. இந்நகரில் அமைந்திருக்கும் திருக்கோணேஸ்வர ஆலயம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடல்பெற்ற திருத்தலமாகும். இவரது தேவாரத்தில் இந்நகரம் துறைமுகம், வர்த்தகத்தில் சிறந்து விளங்கியதுடன் நகரம் மிகவும் நெருக்கமான குடிசனத் தொகையைக் கொண்டிருந்த தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருக்கோணேஸ்வர ஆலயம் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு அவ்விடத்தில் பெரடிக்கோட்டை அமைக்கப்பட்டது. இலங்கையில் சோழர் ஆட்சிக் காலத்தில் மாமன்னன் இராஜராஜேஸ்வரனால் திருகோணமலை வெல்கம் விஹாரை அமைக்கப்பட்டதுடன் நகரமும், துறைமுகமும் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

திருகோணமலைத் துறைமுகம் அன்றும் இன்றும் வெளிநாட்டவர்களின் பார்வைக்குட்பட்டதாக இருந்து வருகின்றது. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து 1958 ஆம் ஆண்டு வரையும் இத்துறைமுகம் ஐரோப்பிய காலனித்துவ நாடுகளிடம் இருந்து வந்தது. இத்துறைமுகம் நீண்டகாலமாக போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்குட்பட்ட பொழுதும் மிகக் குறுகிய காலங்கள் பிரான்ஸ்சுக்காரரிடமும், டானிஸ்காரரிடமும் இருந்திருக்கின்றது. இது இரண்டாம் மகாயுத்த காலத்தில் பிரித்தானியரின் தென்னாசியாவுக்கான முக்கிய கடற்படைக் கட்டளைத் தளமாக விளங்கியது. இன்று இலங்கையின் பிரதான கடற்படைத்தளமாக இது விளங்குகின்றது. இத்துறைமுகத்தின் மேல் சீனா, இந்தியா மற்றும் அமெரிக்காவின் பார்வை உள்ளதெனக் கருதப்படுகின்றது. இதனால் இன்றும் சர்வதேசப் புவிசார் அரசியலில் இத்துறைமுகம் முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

தேசிய அரசியலில் தமிழ் மக்கள் திருகோணமலையைத் தங்களின் பாரம்பரிய வடக்குகிழக்கு வாழிடப் பிரதேசத்தின் முக்கிய பகுதியாகக் கருதுவதுடன் திருகோணமலை நகர் இணைந்த வடக்கு, கிழக்கு பிரதேசத்தின் தலைநகராக இருக்க வேண்டுமென விருப்பம் கொண்டுள்ளனர். 1989 - 2010 வரை இணைந்த வடகிழக்கு மாகாணத்தின் தலைநகராவும் இன்று, கிழக்கு மாகாணத்தின் தலைநகராகவும் இருந்து வருகின்றது. தமிழர் தங்களின் கண்ணின் மணியாகவே இந்நகரைக் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்டம் 2727 சதுரகிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும். இதில் நிலப்பரப்பின் அளவு 2529 சதுர கிலோ மீற்றராகவும் உள்நாட்டு நீர்நிலைகள் 198 சதுர கிலோ மீற்றராகவுமுள்ளது.

அட்டவணை 1

| ஆண்டு | குடிசனத்தொகை | அதிகரிப்பு எண்ணிக்கை | அதிகரிப்பு விகிதத்தில் |
|---|---|---|---|
| 1827 | 19158 | ... | ...... |
| 1871 | 19449 | 291 | 1.5 |
| 1881 | 22197 | 2748 | 14.1 |
| 1891 | 25745 | 3548 | 16.0 |
| 1901 | 28441 | 2696 | 10.5 |
| 1911 | 29755 | 1314 | 4.6 |
| 1921 | 34112 | 4357 | 14.6 |
| 1931 | 37492 | 3380 | 9.9 |
| 1946 | 75926 | 38434 | 102.5 |
| 1953 | 83917 | 7991 | 10.5 |
| 1963 | 138553 | 54636 | 65.1 |
| 1971 | 188245 | 53436 | 38.6 |
| 1981 | 255948 | 64803 | 36.4 |
| 2012 | 378182 | 122751 | 47.8 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புகள்

அட்டவணை 1 இல் திருகோணமலை மாவட்டத்தின் குடிசனத் தொகை 1827 - 2012 வரை காட்டப்பட்டுள்ளது. யுத்த நிலைமைகள் காரணமாக 1991 இல் நாட்டில் குடிசனக் கணிப்பு இடம்பெறவில்லை. 2001 இல் இலங்கையில் குடிசனக் கணிப்பு இடம்பெற்ற பொழுதும் வடக்கு மாகாணத்திலும் மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் முழுமையான குடிசனக் கணிப்பு இடம்பெறவில்லை.

1871 - 1931 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் உயர்வான பிறப்பு விகிதமும் உயர்வான இறப்பு விகிதமும் இருந்ததால் குடிசன வளர்ச்சி குறைவாகவே இருந்து வந்தது. குடியுள்வரவு முக்கியத்துவம் பெறவில்லை. 1931 - 1945 இற்கு இடைப்பட்ட காலத்தில் குடிசன வளர்ச்சி 102.5 வீதமாக இருந்தது. 1940 களில் இரண்டாம் மகா யுத்தத்தின் காரணமாக திருகோணமலை கடற்படைத் தளத்திலும் துறைமுகத்திலும் பெருமளவு வேலைவாய்ப்புகள் கிட்டியதால் யாழ்ப்பாணத்திலிருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் பெருமளவு மக்கள் குறிப்பாக ஆண்கள் திருகோணமலை நகருக்கு இடம்பெயர்ந்தனர். நகரில் ஆண்களின் எண்ணிக்கை பெண்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையிலும் பார்க்க 10000 ஆயிரத்திற்கும் மேற்பட்டிருந்தது. தென்னிலங்கையில் இருந்து சுயாதீனமாக இடம்பெயர்ந்து வந்த சிங்களவர்கள் நகரில் நிரந்தரமாக வாழத் தொடங்கினர். இதனால் நகரில் தமிழருக்கு அடுத்து சிங்களவர்கள் முக்கியத்துவம் பெறலாயினர். 1946 - 1953 இற்கு இடைப்பட்ட காலத்தில் மாவட்டத்தின் குடிசன அதிகரிப்பு குறைவாக இருந்தது. இரண்டாம் மகாயுத்தம் 1945 இல் முடிவுக்கு வர யுத்த வீரர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால் நகரில் சேவைத் தொழில்களில் வேலை வாய்ப்புகள் குறைவடைந்தன. இதனால் முன்னர் வேலைக்கு வந்தவர்கள் நகரை விட்டு வெளியேறலாயினர்.

1953 - 1963 இற்கு இடைப்பட்ட காலத்தில் குடிசனத்தொகை 65.1 வீதமாக அதிகரித்ததற்கு முக்கிய காரணம் கந்தளாய், சேருவில, கல்மட்டியாவா, முள்ளிப் பொத்தானைக் குடியேற்றத் திட்டங்களில் மக்கள் குடியேற்றப்பட்டமையாகும். 1963 - 1981 இற்கு இடைப்பட்ட காலத்தில் குடிசன வளர்ச்சி சுமாராக இருந்த பொழுதும் இக்காலப் பகுதியிலும் பெருமளவு நிலக்குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. இவைகளுள் பதவி சிறிபுர, மொறவெவ (பன்குளம்) பெரியவிளாங்குளம் (மகாதிவில் வேவ) குடியேற்றத் திட்டங்கள் முக்கியம் பெறலாயின. மேலும் முன்னர் பருவ காலங்களில் மீன் பிடிக்க வந்து போகும் தென்னிலங்கைச் சிங்கள மீனவர்கள் இம்மாவட்டத்தில் நிரந்தரமாக வாழும் போக்கு ஏற்படலாயிற்று. குறிப்பாக சாகரபுர குடியேற்றத்தைக் குறிப்பிடலாம்.

1981 இற்குப் பின்னர் குடிசன வளர்ச்சி மிகவும் குறைவாக இருந்தது. 1981 - 2012 இற்கு இடைப்பட்ட 31 வருட காலத்தில் இம் மாவட்டத்தின் மக்கள் தொகை 47.8 வீதத்தால் மாத்திரம் அதிகரித்தது. 1983 ஜூலை கலவரத்தாலும் வடக்குகிழக்கு யுத்த நிலைமைகளாலும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் பெரும் எண்ணிக்கையில் பிற மாவட்ட சர்வதேச இடம்பெயர்வுக்குட்பட்டதால் மாவட்டத்தின் குடிசன வளர்ச்சி குறைவடைந்தது. 1984 ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் தென்னமரவாடி கிராம மக்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டனர். மேலும் இயற்கை அதிகரிப்பு விகிதம் குறைந்ததுடன் குடியுள்வரவும் குறைவடைந்தது. 2009 இல் மூதூர் - சம்பூர் பிரதேசத்தில் ஏற்பட்ட போரினால் கொட்டியாரப் பிரதேசத்துத் தமிழர்கள் முற்றும் முழுவதுமாக மாவட்டத்திற்கு வெளியே இடம்பெயர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்குச் சென்றனர். மீள்குடியேற்றம் மூலம் மட்டக்களப்புக்குச் சென்றவர்கள் மீளவும் வந்து குடியேறினாலும் 2012 இல் இடம்பெயர்ந்தவர்கள் முழுமையாக மீள்குடியேறவில்லை. இன்றும் மீள்குடியேற்றச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. சம்பூர் பிரதேசம் மீள் குடியேற்றத்திற்கு விடுபட்ட பொழுதும் இன்னும் பெருமளவான மக்களுடைய நிலப்பரப்பை மின்னுற்பத்தி நிலையம் அமைப்பதற்காக அரசு தொடர்ந்தும் வைத்திருக்கின்றது.

திருகோணமலையின் வட எல்லைக்கிரமமான தென்னமரவாடியில் மக்கள் இன்னும் முழுமையாக மீளக் குடியேறவில்லை. இவர்களது பூர்வீக விவசாய நிலங்கள் பதவிசிறிபுர மக்களால் கையகப்படுத்தி,பயிர் செய்யப்படுகின்றன. இந்நிலங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளப்பெறுவதில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பொழுதும் இன்னும் முழுமையாகத் தங்களது பயிர்ச்செய்கை நிலங்களைப் பெறமுடியாதுள்ளதுடன் பௌதீகக் கட்டமைப்பு வசதிகளும் மற்றும் சேவை வசதிகளும் கிட்டாமையால் இவர்களது மீள்குடியேற்றம் மேலும் தாமதிக்கின்றது.

அட்டவணை II

| ஆண்டு | தமிழர் எண்ணிக்கை | % | முஸ்லிம்கள் எண்ணிக்கை | % | சிங்களவர் எண்ணிக்கை | % | ஏனையோர் எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1827 | 15663 | (81.76) | 3245 | (16.94) | 250 | (1.3) | 00 | 00 |
| 1881 | 14304 | (64.44) | 5746 | (23.89) | 935 | (4.21) | 1212 | (5.46) |
| 1891 | 17117 | (66.49) | 6426 | (66.49) | 1105 | (4.29) | 1097 | (4.26) |
| 1901 | 17060 | (59.98) | 8528 | (29.04) | 1203 | (4.23) | 1920 | (6.75) |
| 1911 | 17233 | (57.92) | 9700 | (32.60) | 1138 | (3.82) | 1684 | (5.66) |
| 1921 | 18580 | (54.47) | 12846 | (37.66) | 1501 | (4.40) | 1185 | (3.47) |
| 1946 | 337 95 | (44.51) | 23219 | (30.58) | 11608 | (15.29) | 7306 | (9.12) |
| 1953 | 37517 | (44.71) | 28616 | (34.10) | 15296 | (18.23) | 2488 | (2.96) |
| 1963 | 54452 | (39.30) | 40775 | (29.43) | 39925 | (28.82) | 3401 | (2.45) |
| 1971 | 71749 | (38.11) | 59924 | (31.83) | 54744 | (29.18) | 1825 | (0.97) |
| 1981 | 93132 | (36.39) | 75039 | (29.32) | 85503 | (33.41) | 2274 | (0.89) |
| 2012 | 122080 | (32.29) | 152854 | (40.4) | 101991 | (26.97) | 1257 | (0.30) |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்டத்தில் இன்று மூவின மக்களும் வாழ்ந்தாலும் சில தசாப்தங்களுக்கு முன்னர் தமிழ் மக்களே மிகப் பெரும்பான்மையாக வாழ்ந்துள்ளனர். அட்டவணை II இல் மாவட்டக் குடிசனத் தொகை இன அடிப்படையிலும் விகிதத்திலும் காட்டப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தின் இன விகிதாசாரப் போக்கைநோக்கில் 1827 இல் 81.76 வீதமாக இருந்த தமிழர் விகிதம் படிப்படியாகக் குறைந்து 2012 இல் 32.29 வீதமாக குறைந்து மாவட்டத்தில் முதலாம் இடத்திலிருந்து இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு இருப்பதைக் காணலாம். முஸ்லிம் மக்கள் தொகை படிப்படியாக அதிகரித்து வந்து இன்று மாவட்ட இன நிலைப்பாட்டில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. வரும் காலத்தில் முஸ்லிம் மக்களின் இன விகிதாசாரம் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் போக்குக் காணப்படுகின்றது. சிங்கள மக்களின் விகிதாசாரம் தொடர்சசியாக அதிகரித்து வந்துள்ளது. இவர்கள் இரண்டாம் இடத்தில் இருக்கும் தமிழர்களை மூன்றாவது இடத்திற்குத் தள்ளி, இரண்டாம் இடத்திற்கு வரக்கூடிய சூழ்நிலைகள் காணப்படுகின்றன. மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் போது சிங்கள மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் சந்தர்ப்பம் கூடவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் இனப்பரம்பலின் இடம் சார்புப் பண்பினை நோக்கின் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் மூன்றில் இரண்டு பகுதி சிங்கள் மக்கள் வாழும் பகுதியாகவும் மிகுதி தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியாகவும் இருக்கின்றது. முன்னைய சேருவில பாராளுமன்றத் தேர்தல் தொகுதி சிங்கள மக்கள் வாழும் பரப்பைக் காட்டி நிற்கின்றது. இத்தொகுதியில் தமிழ்க் கிராமங்களும் இருக்கின்றன. இதுபோல் முன்னைய திருகோணமலை, மூதூர் பாராளுமன்றத் தொகுதிகள் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பரப்பைக் காட்டி நிற்கின்றன. தமிழ் மக்கள் திருகோணமலை நகரும் அயல் பகுதிப் பிரிவிலும் வெருகல்/ ஈச்சிலம் பற்றுப் பிரிவிலும் செறிவாக வாழ்கின்றனர். முஸ்லிம்கள் கிண்ணியாவில் செறிவாகவுள்ளனர். மூதூர், கட்டுக்குளம் கிழக்குப் பிரிவுகளில் முஸ்லிம்களும் தமிழர்களும் ஏறக்குறைய சமனாக வாழ்கின்றனர். பதவி சிறிபுர, கோமரன்கடவல, கந்தளாய், சேருவிலப் பிரிவுகளில் சிங்களவர் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். தம்பலகாமப் பிரிவில் மூவினத்தாரும் வாழ்வதைக் காணமுடிகின்றது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் தனித்தனிக் கிராமங்களில் அல்லது ஒரு பகுதியில் வாழ்வதைக் காண முடிகின்றது.

மாவட்ட இனப் பரம்பலில் குறிப்பாக யுத்தத்தாலும் பிற காரணிகளாலும் ஏற்பட்ட மாற்றத்தை அடையாளம் காண 1971 ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பும் 2012 இல் எடுக்கப்பட்ட குடிசனக் கணிப்பும் ஒப்புநோக்கப்படவுள்ளன.

அட்டவணை III இல் 1971 ஆம் ஆண்டுக்குரிய பிரதேசப் பிரிவு ரீதியான குடிசனத் தொகையும், இனவிகிதாசாரமும் காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 இல் எடுத்த குடிசனக் கணிப்பின்படி தமிழ் மக்கள் வெருகல், திருகோணமலை, மூதூர் பிரிவுகளில் பெரும்பான்மை இனமாக வாழ்ந்தனர். கட்டுக்குளம் பற்றுக் கிழக்கில் முதல் நிலையிலும் தம்பலாமத்தில் இரண்டாம் நிலையிலும் இருந்தனர். மாவட்டத் தமிழ் மக்களில் 36 வீதம் திருகோணமலை நகரும் அயற்பகுதிப் பிரிவில் வாழ்ந்துள்ளனர்.

முஸ்லிம்கள் கிண்ணியாவில் மிகப் பெருப்பாண்மையினராகவும் மூதூர், கட்டுக்குளம் பற்று கிழக்குப் பிரிவுகளில் இரண்டாம் நிலையில் ஏறக்குறைய சரிக்குச் சமனாகவும் வாழ்ந்துள்ளனர். தம்பலாகமத்தில் முதல் நிலையில் இருப்பினும் பெரும்பான்மை நிலையைப் பெறவில்லை.

அட்டவணை 3

| பிரிவு | தொகை % | தமிழர் % | முஸ்லிம் % | சிங்களவர் % | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| திருகோணமலை நகரும் அயற் பிரதேசமும் | 59815 | 60.84 | 6.31 | 26.10 | 2.72 |
| கிண்ணியா | 26607 | 7.20 | 92.99 | 0.32 | 0.24 |
| தம்பலாகாமம் | 13726 | 34.98 | 41.55 | 27.89 | 0.17 |
| கந்தளாய் | 24937 | 6.66 | 19.04 | 78.80 | 0.21 |
| மூதூர் | 29486 | 50.07 | 46.45 | 3.17 | 0.31 |
| கட்டுக்குளம் பற்றுக்கிழக்கு | 14973 | 44.32 | 42.22 | 12.46 | 1.00 |
| கட்டுக்குளம்பற்று மேற்கு | 8620 | 21.46 | 7.37 | 70.93 | 0.20 |
| சேருவில | 9526 | 17.34 | 9.54 | 72.84 | 0.27 |
| வெலுகல்/ ஈச்சிலம்பற்று | 3729 | 94.04 | 5.93 | 0.03 | ..... |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புகள்

சிங்கள மக்கள் கந்தளாய், கட்டுக்குளம் பற்று மேற்கு, சேருவலப் பிரிவுகளில் பெரும்பான்மையினமாக இருந்துள்ளனர். திருகோணமலை நகரும் அயற் பகுதி பிரிவில் இவர்கள் 26.1 வீதமாக இருந்துள்ளனர். திருகோணமலையில் சிங்களவர்களின் குடியேற்றத்தை மூன்று பிரிவாக வகுக்கலாம்.

1. கட்டுக்குளம்பற்று மேற்குப் பிரிவில் காணப்படும் சிங்களக் கிராமங்களான கோமரங்கடவல, கிவுலகட, பிரப்பமடு, பறன மதவாச்சி போன்றன புராதன சிங்களக் கிராமங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. திருகோணமலை நகரும் அயற்பகுதிப் பிரிவில் வாழும் சிங்களமக்கள் 1940களில் இருந்து திருகோணமலை கடற்படை, மற்றும் துறைமுக/ நகர வேலைகளுக்காக சுயாதீனமாக வந்து குடியேறியவர்கள்.

அட்டவணை IV

| பிரிவு | பரப்பு ச.கி.மீ | தொகை | தமிழர் % | முஸ்லிம் % | சிங்களவர் % | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| திருகோணமலை நகரும் அயற் பிரதேசமும் | 148 | 97487 | 63.61 | 13.38 | 21.75 | 1.27 |
| மூதூர் | 179.4 | 56621 | 37.17 | 61.92 | 0.88 | 0.02 |
| கிண்ணியா | 146.9 | 64613 | 3.82 | 95.75 | 0.38 | 0.05 |
| குச்சவெளி (க.கு.ப.கி) | 313.3 | 33218 | 31.98 | 64.11 | 3.87 | 0.15 |
| தம்பலாகாமம் | 244.4 | 28527 | 19.19 | 56.79 | 23.87 | 0.15 |
| வெருகல்/ ஈச்சிலம்பற்று | 980 | 11409 | 99.19 | 0.08 | 0.70 | 0.04 |
| சேருவில | 179.4 | 13602 | 17.07 | 17.83 | 65.03 | 0.08 |
| கந்தளாய் | 397.3 | 46802 | 3.45 | 16.25 | 80.19 | 0.11 |
| மொறவேவா | 322.4 | 7968 | 11.84 | 15.78 | 72.31 | 0.07 |
| கோமரங்கடவல | 285.0 | 7382 | 0.43 | 0.03 | 99.54 | .... |
| பதவி சிறிபுர | 271.1 | 11882 | 0.17 | 0.01 | 99.81 | .... |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புகள்

3. கந்தளாய், சேருவில, மொறவேவா, பதவிசிறிபுர, கல்மட்டியாவ முள்ளிப்பொத்தானை போன்ற பகுதிகளில் வாழ்வோர் பிரதானமாக குடியானவர் குடியேற்றத் திட்டங் களுக்காகக் வந்து குடியேற்றப்பட்டவர்களாகும்.

திருகோணமலையில் பிரதானமாக மூவினாங்களைச் சேராத சிறிய இனாங்களைச் சேர்ந்த பல சமூகங்கள் வாழ்வதைக் காணலாம். இதுபோல கொட்டியாரப் பிரதேசத்தில் பூர்வீக தமிழ் பேசும் வேடுவர்களும் சிறு எண்ணிக்கையில் இருக்கின்றனர்.

அட்டவணை IV இல், 2012 ஆம் ஆண்டிற்குரிய பிரதேசப் பிரிவு அடிப்படையில் நிலப்பரப்பும், குடிசனத் தொகையும், இன விகிதாசாரமும் காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் திருகோணமலை நகரமும் அயற் பிரதேசப் பிரிவிலும் மற்றும் வெருகல் பிரிவிலும் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். 1971 ஆம் ஆண்டுப் புள்ளி விபரங்களுடன் 2012 ஆம் ஆண்டுப் புள்ளி விபரங்களை ஒப்பிடும் இடத்து தமிழர் விகிதம் மூதூர், குச்சவெளி (க.கு.ப.கி) தம்பலாகமம், கிண்ணியா, கந்தளாய், மொறவேவாப் பிரிவுகளில் வெகுவாகக் குறைந்துள்ளது. திருகோணமலை நகர் பிரிவில் தமிழர் விகிதம் 3 வீதத்தால் அதிகரித்துள்ளது. தமிழ் மக்கள் கிராமப் புறங்களில் இருந்து இடம்பெயர்ந்து நகரில் வாழ்ந்து வருகின்றனர். சேருவிலப் பிரிவில் தமிழரின் விகிதாசாரத்தில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை.

மூதூர் 2012 ஆம் ஆண்டு குடிக்கணிப்பு இடம்பெற்ற பொழுது சம்பூர் மேற்கு, கூனித்தீவு, சம்பூர் கிழக்கு நவரெத்தினபுரம், கிளிவெட்டி, மேன்காமம், மல்லிகைத்தீவு போன்ற தமிழ்க் கிராமங்களில் மக்கள் முழுமையாகக் குடியேறவில்லை. 2016 ஆம் ஆண்டு சம்பூர் கிராமம் மீளக் குடியேற விடப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்து திருகோணமலை நகரிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மற்றும் பல இடங்களிலும் வாழும் மூதூர் பிரிவு மக்கள் மீளவும் குடியேறிக் கொண்டு இருக்கின்றனர். மூதூர் பிரிவில் தமிழ் மக்களின் விகிதாசாரம் சரியாகக் கணக்கிட இன்னும் சில வருடங்கள் எடுக்கும்.

குச்சவெளிப் பிரிவின் 1971 ஆம் ஆண்டு இன விகிதாசாரத்தை 2012 இன விகதாசாரத்துடன் ஒப்பிடும் பொழுது தமிழர்களின் விகிதாசாரம் 44.32% இல் இருந்து 31.98% மாகக் குறைவடைந்துள்ளது. இப்பிரிவில் வாழ்ந்த தமிழ் மக்கள் பெருமளவு இடம் பெயர்ந்து உள்ளனர். இவர்களுள் குறிப்பிட்ட தொகையினர் இந்தியாவிலும் பிற பகுதிகளிலும் வாழ்கின்றார்கள். மீள் குடியேற்றம் மிகவும் வேகம் குறைந்த நிலையில் இடம்பெற்று வருகின்றது. தென்னமரவாடி, திரியாய் கல்லம்பட்டை, இரணைக்கேணி, வீரன்சோலை, கம்புறுப்பிட்டி போன்ற தமிழ்க் கிராமங்களில் மக்கள் முழுமையாக இன்னும் குடியேறவில்லை. மீள் குடியேற்றம் சிறியளவில் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றது.

1974 இல் குச்சவெளிப் பிரிவுக்குட்பட்ட தென்னமரவாடி புல்மோட்டை, பறன மதவாச்சிக் கிராம சேவகர் பிரிவுகள், பதவிசிறிபுர பிரிவுடன் இணைக்கப்பட்டு அநுராதபுர மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது. இம் மாற்றத்தால் அநுராதபுர மாவட்டத்துக்குக் கடற்கரை கிட்டியதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கிடையே ஒரு ஓடை உருவாக்கப்பட்டது. 1980 களில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் கடின எதிர்ப்பால் இப்பிரிவுகள் மீளவும் திருகோணமலை மாவட்டத்துக்குக் கொடுக்கப்பட்டன. பறன மதவாச்சிக் கிராம சேவகர் பிரிவு குச்சவெளியிலிருந்து நீக்கப்பட்டு பதவி சிறிபுரப் பிரிவுடன் இணைக்கப்பட்டது. இதனால் தான் இப்பரிவில் சிங்களவரின் விகிதாசாரம் 2012இல் குறைவடைந்தது.

1984 டிசெம்பர் பகுதியில் தென்னமரவாடிக் கிராம மக்கள் வலுக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். இவர்களைப் போல் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மக்களும் கட்டாய வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேற்றத்துக்குட்பட்டார்கள். தென்னமரவாடிக் கிராமத்தில் மீள் குடியேற்றம் இடம் பெற்ற பொழுது மக்கள் முழுமையாக இன்னும் குடியேறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

தம்பலாகமம் பிரிவில் தமிழர்களின் விகிதாசராம் 1971 - 2012 இற்கு இடைப்பட்ட கால்ததில் 34.98 வீதத்திலிருந்து 19.19 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இவ்வீழ்ச்சிக்குக் குடிவெளியேற்றமே முக்கிய காரணமாகும். இப்பிரிவில் பாலம் போட்டாறு, புதுக்குடியிருப்பு, பொற்கேணி, கோயில் குடியிருப்பு மற்றும் தம்பலாகாமம் கிராம அதிகாரி பிரிவுகளில் தமிழர் மிகப் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

கிண்ணியாவிலும் தமிழர்களின் விகிதாசாரம் 1971 - 2012 இற்கு இடைப்பட்ட காலத்தில் 7.20 வீதத்திலிருந்து 3.82 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இப்பிரிவில் தமிழர் ஈச்சங்கேணி, ஆலங்கேணி கிராம அதிகாரி பிரிவுகளில் மிகப் பெரும்பான்மையாகவுள்ளனர். கந்தளாய்ப் பிரிவிலும் 1971 - 2012 இற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழர் விகிதம் 6.66 வீதத்திலிருந்து 3.45 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இம் மக்கள் கந்தளாய்ப் பிரிவில் பேராறு மற்றும் கந்தளாய் நகரில் வாழ்கின்றனர். பேராறு தமிழ்க் கிராமம் இப்பிரிவில் மிகவும் பழைமையான கிராமமாக இருப்பதுடன் தொடர்ச்சியாகத் தமிழர் வாழும் நீண்ட வரலாற்றுப் பின்புலமுள்ள தமிழ்க் கிராமமாகும். மொரவேவாப் பிரிவில் தமிழர்களின் விகிதாசாரம் இக்காலத்தில் குறைவடைந்துள்ளது. தமிழர்கள் அவ்வைநகர், நொச்சிக்குளம் கிராம அதிகாரி பிரிவுகளில் கூடுதலாக வாழ்கின்றனர். சேருவில பிரிவில் தமிழர்களின் விகிதாசாரம் இக்காலத்தில் குறைவடைந்துள்ளது. ஆனால் இவர்களின் இடஞ்சார் பண்பு இக்காலத்தில் மாற்றமுறவில்லை. இவர்கள் சிவபுரம், தங்கநகர், அரியமான்கேணி, லிங்கநகர் ஆகிய கிராம அதிகாரி பிரிவுகளில் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். கோமரங்கடவெல, பதவிசிறிபுர பிரிவுகளில் தமிழர் குடியிருப்புக்கள் இல்லை. ஆங்காங்கே தொழில் நிமித்தம் சிறு எண்ணிக்கையாகத் தமிழர்கள் வாழ்கின்றார்கள்.

முஸ்லிம்கள் 2012 இல் கிண்ணியா, மூதூர், குச்சவெளி, தம்பலகாமம் ஆகிய பிரிவுகளில் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். மூதூர், குச்சவெளி, தம்பலகாமம் ஆகிய பிரிவுகளில் இவர்களின் பெரும்பான்மை அந்தஸ்து தமிழர்களின் மீள் குடியேற்றத்தில் தங்கியுள்ளது. திருகோணமலை நகர், கந்தளாய், சேருவில, மொரவேவாப் பிரிவுகளில் இவர்களின் விகிதாசாரம் 10 - 20 வீதத்திற்கு இடைப்பட்டு இருக்கின்றது. எல்லாப் பிரிவுகளிலும் இவர்களது இன விகிதாசாரம் 1971 இல் இருந்ததிலும் பார்க்க 2012 இல் உயர்வாக இருக்கின்றது.

சிங்களவர் பதவிசிறிபுர (91.81%), கொமரங்கடவெல (99.54%), கந்தளாய் (80.19%), மொரவெவா (72.31%), சேருவில (65.03%), பிரிவுகளில் பெரும பான்மையினராக வாழ்கின்றனர். இவர்கள் திருகோமலை நகர், தம்பலாகமம் பிரிவுகளில் 20 வீதத்திற்கு மேற்பட்டு இருக்கின்றனர். தம்பலகாமம் பிரிவில் கல்மட்டியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழும் திருகோணமலையில் ஆண்டான்குளம், சிங்கபுரம், அபயபுர, மகிந்தபுர, மட்கோவ், சுமேதங்கபுர, கவடிகுடா, சீனன் குடா ஆகிய கிராம அதிகாரி பிரிவுகளிலும் பெரும்பாண்மையாகவுள்ளனர்.

திருகோணமலை மாவட்டததில் 229 கிராம அதிகாரி பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகளின் மக்கட் தொகை ஒரேயளவானதாக இல்லை. மொத்த கிராம சேவகர்கள் பிரிவில் தமிழர்கள் 82 பிரிவுகளிலும் முஸ்லிம்கள் 75 பிரிவுகளிலும் சிங்களவர் 70 பிரிவுகளிலும் தமிழரும் முஸ்லிம்களும் சேர்ந்து இரண்டு பிரிவுகளிலும் பெரும்பான்மையினப் பிரிவுகளாகவுள்ளனர். 2012 இல் சமய அடிப்படையில் மாவட்ட குடித்தொகையும் விகிதாசாரமும் பின்வருமாறு:

முஸ்லிம்கள் 159515 (42.11%), பௌத்தர்கள் 98772 (26.12%), இந்துக்கள் 98133 (25.9%), கிறிஸ்தவர்கள் 121892(5.79%) ஏனையோர் 134 (0.04%)

1971 இல் இந்துக்கள் 62828 (32.7%), முஸ்லிம்கள் 62163 (32.38%), பௌத்தர்கள் 53533 (28.88%), கிறிஸ்தவர்கள் 13379 (6.97%), ஏனையோர் 86 (0.04%) ஆகியவர்களின் எண்ணிக்கையையும் விகிதத்தையும் நோக்கும் பொழுது 1971 இல் இரண்டாம் இடத்திலிருந்த முஸ்லிம்கள் 2012 இல் முதலாமிடத்திற்கும் மூன்றாமிடத்திலிருந்த பௌத்தர்கள் இரண்டாமிடத்திற்கும் முதலாமிடத்திலிருந்த இந்துக்கள் மூன்றாமிடத்திற்கும் மாறியிருப்பதைக் காணலாம். இந்துக்களின் குடித்தொகை வளர்ச்சி வீதம் ஏனைய சமயப் பிரிவினரிலும் குறைவாகவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் இனவிகிதாசாரம் தொடர்ச்சியாக மாற்றமடைந்து வருவதைக் காணலாம். இடம்பெயர்ந்த தமிழர்கள் மீளக் குடியருமிடத்து தமிழர்களின் குடிசனத்தொகை விகிதம் சற்று அதிகரிக்கலாம் அல்லது தற்போதைய நிலையைத் தக்க வைக்கலாம். முஸ்லிம் மக்கள் மாவட்டக் குடிசனத் தொகையில் முதலிடம் பெற்றிருக்கின்றபொழுதும் திருகோமலை நகரின் குடிசனத்தொகையில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளனர். தமிழ் மக்கள் நகரும் அயற்பகுதிப் பிரிவில் 64 வீதமாக இருப்பதுடன் மேலும் நகருள் இவர்களின் இன விகிதாசாரம் உயர்வாக இருப்பதால் இந் நகரில் தமிழ்ப் பண்பாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கோணேஸ்வரம், காளி கோயில், சனீஸ்வரன் கோயில் மற்றும் பல இந்து ஆலயங்கள் நகரை அலங்கரிக்கதால் தமிழ்: இந்துப் பண்பாடு மேலோங்கிக் காணப்படுகின்றது. எனினும் படிப்படியாகப் பல்லினப் பண்பாடு வளர்ந்து வருகதைக் காண முடிகிறது. திருகோணமலை நகர் விருத்தித் திட்டம், துறைமுக விருத்தித் திட்டம் மற்றும் திருகோமலை நகருடன் இணைக்கும் சிறப்புப் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்களினால் நகர் வளர்ச்சியைப் பெறவும் பல்லினத் தன்மையை அதிகரிக்கவும் வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி உலகின் ஏற்றத்தாழ்வும் தனியார் கல்வி முறையின் எழுச்சியும்

மா. சின்னத்தம்பி
ஓய்வுபெற்ற கல்வியியல் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## ○ அறிமுகம்

உலகம் முழுவதும் குழந்தைகளோடும் இளைஞர்களோடும் அவர்களது வளர்ச்சியோடும் மிக நெருக்கமான துறை கல்வித் துறையாகும். அவர்களது மனிதவள விருத்தியென்பது உணவு, ஊட்டம், நல்லதுறை, பராமரிப்பு, பாதுகாப்பான வசிப்பிடம் என்பவற்றுடன் மட்டும் தொடர்புபட்டதல்ல. அது பெருமளவில் கல்வியோடும், கல்வி நிறுவனங்களோடும் அவை சார்ந்த அரச செயற்பாடுகளோடும் தொடர்புப்பட்டுள்ளது. பொதுவாக வளர்ச்சியடைந்த நாடுகளில், குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் அரசாங்கத் துறை நிறுவனங்கள் பெருமளவு சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கல்வி வழங்குவதில் ஈடுபடுகின்றன. அரசாங்கமே கல்வி வழங்கும் உரித்தும் அதிகாரமும் கொண்டதாக நோக்கப்படுகின்றது.

ஆனால் அண்மைக் காலங்களில் பயனாளிகளான பெற்றோர் மற்றும் மாணவர்களின் நம்பிக்கையை அரச கல்வி நிறுவனங்கள் இழந்து வருகின்றன. பொது அரங்குகள் அரச பாடசாலைகளின் பலவீனங்கள் மற்றும் பொய்யான விளம்பரங்கள் பற்றியும் விமர்சிக்கின்றன.

கல்வி அதிகாரிகளும், பெற்றோர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் தனியார் துறையினரின் கல்வி வியாபாரத்தை (Education business) வியந்து பாராட்டுகின்றன. ஊடகங்களும் பொது இடங்களும் அவற்றை ஆதரிக்கின்றன. இதனால் அரச துறையில் இருந்து கல்வி சேவை வேகமாக தனியார் துறைக்கு நகர்ந்து செல்கிறது.

கல்வி சேவை என்பதிலிருந்து இலாபகரமான வியாபாரமாக வளர்ச்சி பெறுகிறது. அது சமூகத்தில் பேராதாரவைப் பெற்று வருகிறது. இதனால் தனியார் துறை கல்வி பற்றிய சிந்தனைகள் தொடர்பாக கல்வியாலாளர்களும், கொள்கை வகுப்பாளர்களும் மீளாய்வு செய்யும் போக்கு அதிகரித்து வருகிறது.

## ○ தனியார் கல்வி வணிகம்

முன்பள்ளிகளில் இருந்து முதுமாணிக் கல்வி நெறிகள் (master Courses) கல்வி வரை தனியார் துறை சர்வதேச ரீதியில் வேகமாக விரிவடைந்து வருகின்றது. சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்கள் எல்லாம் தனியார் துறை கல்வி வணிகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுவாக ஆதரிக்கின்றது. அவை தொடர்பாக பின்வரும் கருத்துக்களை முன் வைக்கின்றது.

1. இவை சிறப்பான செயலாக்கத்தைக் கொண்டுள்ளன.
2. விரைவாக மாற்றங்களை உள்வாங்குவதுபோல புத்தாக்கங்களையும் ஏற்றுக் கொள்கின்றன.
3. அரச பாடசாலைகள் மீதான சுமைகளை பெரிதும் குறைக்க உதவுகின்றன.
4. அவை தமக்கிடையே உன்னதங்களை அதிகரிப்பதற்கான போட்டியை முனைப்படையச் செய்கின்றன.

செல்வந்தரான பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்கு அதிக நிதியைக் கொட்டிச் செலவிடுகின்றனர். ஆனால் மறுபுறம் எழுத்தறிவற்ற சேரி வாழ் மக்கள் அல்லது குறுநில விவசாயிகள் தமது வீட்டு வேலைகளில் கவனம் செலுத்துமளவிற்கு தம் பிள்ளைகளின் கல்விமீது கவனம் செலுத்துவதில்லை. அவர்களுக்கு இது பற்றிய விழிப்புணர்வு இல்லை. அவர்கள் வாழ்க்கை நிகழ்ச்சித் திட்டத்தில் அவ்வாறான ஒன்று இல்லை. அவர்களது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை நல்ல கல்வியில் தங்கியுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவுமில்லை.

உலக வங்கி 2030 ஆம் ஆண்டுக்கான பேண்தகு அபிவிருத்திக் (SDG) குறிக்கோள்களில் தரமான கல்வி பற்றிய வலியுறுத்தலே தொடர்ந்து செய்து வருகிறது. பிரதானமான கேள்வி என்னவெனில் தனியார் துறைக்கல்வி இந்த இலக்கை அடைவதற்கு உண்மையில் உதவ முடியுமா?என்பதாகும். அநேகமான அறிஞர்கள் இதற்கு உடன் (yes) விடயத்தைத் தெரிவிக்கின்றனர்.

அநேகமான அரச கல்வி நிறுவனங்கள் வறிய நாடுகளில் விரிவான இலவசக் கல்வி மற்றும் மாணவ நலன்புரி செயற்றிட்டங்கள் என்பவற்றை விரிவுபடுத்தினாலும் பெற்றோர் மத்தியில் தனியார் நிறுவனங்களுக்கான வேட்கை அதிகரித்தே வருகிறது. கல்வி முறையில் பல்வேறு பன்முகப்படுத்தல்களைக் கொண்ட முனைப்பும், ஆற்றலும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கேயுள்ளதாக நம்பப்படுகிறது. ஆரோக்கியமான வழிமுறைகளில் புதிய கல்வித்தடங்களை உருவாக்கும் வல்லமை தனியார் துறைக்கே இருப்பதாக நம்பப்படுகின்றது.

எல்லா இளைஞர்களுக்கும் ஒரே வகையான வாழ்வுத் தேவைகள் இல்லை, ஒரே வகையான ஆற்றல்களும் இல்லை. ஒரேமாதிரியான நாட்டங்களுமில்லை. அவரவர்களுக்குப் பொருத்தமான பாடசாலைகளையும், பல்கலைக்கழகங்களையும் அவர்கள் தேடுகின்றனர். பன்முகத்தன்மை கொண்ட கல்வி ஏற்பாடுகளும் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. இதை தனியார் கல்வி நிறுவனங்களால் மாத்திரமே வழங்கமுடியுமென பெற்றோரும், மாணவரும் நம்புகின்றனர்.

தனியார் பாடசாலைகள் மற்றும் தனியார்ப் பல்கலைக்கழகங்கள், தனியார் ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடர்பாகப் பின்வரும் கருத்துக்கள் வலுவாக முன்வைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மிகச் சிறந்த ஆற்றலுள்ள ஆசிரியர்களை அவை கொண்டுள்ளன. அதேபோல் அவர்களது ஆற்றலை வினைத்திறனுடன் பயன்படுத்திக் கொள்கின்றன.

ஆனால் அரச பாடசாலைகளில் வினைத்திறன் குன்றியவர்களும், புதிய திறன்களை தேடிப் பெறாதவர்களும், நோயாளர்களும் தம்மறிவைப் புதுப்பிக்க நாட்ட மற்றவர்களும் அரச பாடசாலைகளின் ஆசிரிய அணியிலிருந்து வெளியேற்றப் படுவதுமில்லை. அதற்கான மாற்றுத்திட்டங்களையும் அவை பரிசீலிப்பதில்லை.

2. தனியார் பாடசாலைகளில் குறைந்த கட்டணமறவிடும் பாடசாலைகள் கூட சில நோக்கங்களில் சிறப்பாகவே இயங்குகின்றன.

3. பெற்றோர் தம் பிள்ளைகளுக்காக அரச பாடசாலைகளுக்கு பணம் செலவிட விரும்ப வில்லை. பொய் நியாயங்களை வெளியிடுகின்றனர். ஆனால் அரச பள்ளிக் கட்டணங்களைப்போல பன் மடங்கு நிதியைத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அதிக மகிழ்வுடன் வழங்குகின்றனர்.

தனியார் கல்வி நிலையங்களில் கற்பதற்காக அதிக பணச் செலவில் தம் பிள்ளைகளை பின் தங்கிய கிராமங்களில் இருந்து நகரங்களிற்கும், நகரங்களில் இருந்து பெரு நகரங்களிற்கும் அதிக பணச் செலவில் நகர்த்துகின்றனர்.

4. தனியார் கல்வி நிலையங்கள் பின் தங்கிய சமூகப்பிள்ளைகளுக்கு நன் கொடைகளையும், புலமைப் பரிசில்களையும், நிதிச் சேவைகளையும் வழங்கு கின்றன. இது அரச கல்வி முறையை மேலும் தகர்த்து விடுகிறது.

5. மேட்டுக் குடியினரின் பாடசாலைகளில் (Elites Schools) வசதி குறைந்த பிள்ளைகள் நிராகரிக்கப்படுவதாகவும், நிர்வாகப் பாரபட்சங்களுக்கு உள்ளடக்கப் படுவதாகவும் பள்ளிச் சமூகத்தால் கேலி (bullying) செய்யப்படுவதாகவும் பல நாடுகளில் கண்டணங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

6. அதிக வளம் நிரம்பிய ஐந்து நட்சத்திரப் பாடசாலைகளில் எளிய சமூகத்தினர் தம் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கான குறைதீர் ஏற்பாடுகள் (Affirmative Action) பற்றி அரச பள்ளிகள் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தியும் வந்துள்ளன. ஆனால் அவை செவிமடுக்கப்படுவதில்லை.

7. அரச பாடசாலைகளில் கற்பதை விடவும் தனியார் பாடசாலைகளில் கற்பதால் அவர்களிடம் தற்துணிவும், தலைமைத்துவமும், நுண்மதித் தொடர்பாடல்களும் அதிகரிப்பதாகவும் பெற்றோர் நம்புகின்றனர். இதனால் தம் பிள்ளைகளுக்காக தனியார் டியூட்டரி வாசல்களிலும், தனியார் பாடசாலை வாசல்களிலும் ஏராளமான மனித மணித்தியாலங்களை விரயமாக்கத் தயாராகவேயுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தனியார் பாடசாலைகள் வலிமையுடன் வளர வேண்டுமென பெற்றோரும், சமூகமும் வலுவாக நம்புகிறது.

பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பாக அதிக நேரத்தையும், அதிக நிதி வளங்களையும் வழங்குவதற்குத் தயாராக இல்லை. இது அரசாங்கம் இலவசக் கல்வி பற்றிய தமது கொள்கை பற்றி கடுமையாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக உள்ளது.

தனியார் பாடசாலைகளில் மததிய தர வருமான வகுப்பினரும் உயர் வருமான வகுப்பினரும் தமது பிள்ளைகளை நகர்த்தும்போது அதிதாழ் வருமான - மிக வறிய மக்களின் பிள்ளைகளை இலகுவாக அரச பாடசாலைகளில் இணைந்து அதன் நலன்களை நுகர முடியும். புலமைப் பரிசில்களையும் தமதாக்க முடியும். மானியங்கள் நிறைந்த அரச கடன் திட்டங்களையும் பயன்படுத்த முடியும். இது சமூக ரீதியிலான ஏற்றத் தாழ்வைக் குறைப்பதற்கும் வறியோருக்கான கற்கும் வாய்ப்பை அகலப்படுத்த உதவியாக இருக்கும் என சமூக சிந்தனையாளர்கள் வலியுறுத்துகின்றனர். இதற்காகவே தனியார் பாடசாலைகளை ஊக்குவிக்கும் நம்பிக்கை நிதியங்கள் புகழத் தொடங்கியுள்ளன.

## ○ தனியார் பல்கலைக்கழகங்கள்

தனியார் முன்பள்ளிகளும், தனியார் இடைநிலைப் பாடசாலைகளும் இந்த புதிய கருத்தியல்களின் அடிப்படையில் வளர்ச்சியடையும்போது அவை தனியார் பல்கலைக்கழகங்களின் உருவாக்கத்தை முன்னடையச் செய்கின்றன. பொதுவாக பிறேசில் போன்ற நாடுகளில் தனியார் துறை இலாப நோக்குடைய உணர் கல்விக்கான கல்வி நிறுவனங்கள் பற்றிய நல்லெண்ணங்கள் வலுவடைந்து வருகின்றன.

பொதுவாக நிகழ்கால அரசியல் சூழலும் பொருளாதார உலக மயப் போக்குகளும் இலாபநோக்கற்ற பலவீனமான அரச பல்கைக்கழங்களிலிருந்து புதுமையும் வினைத்திறனுமிக்க தனியார் பல்கலைக்கழகங்கள் நோக்கி நகர்வது விரும்பத்தக்கது. இதற்காக பெற்றோர் கடினமாக உழைப்பதற்கும், வங்கிக் கடன்களைப் பெறுவதற்கும் கூட தயாராகி வருவது கண்டறியப்பட்டுள்ளது. சிங்கப்பூர், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலும் இத்தகைய போக்கு வலிமை பெறுகிறது. இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகவும், வெளிநாட்டுத் திருமணத் தகைமைக்காகவும், வெளிநாட்டு குடியுரிமைக்காகவும் தரமான உயர் கல்வியைப் பெற விரும்பும் போக்கு எனபனவற்றால் தனியார் பல்கலைக்கழகங்கள் அதிக புகழ் பெற்று வருகின்றன.

மரியானோ லப்னேன் (Mariano Laplane :2019) சில உடன்பாடான கருத்துக்களை தனியார் கல்வி தொடர்பாக முன் வைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அரசாங்கமும் - தனியார் கல்வி நிறுவனங்களும் கூட்டிணைந்து விரிவுபடுத்தினால் உயர் கல்வி வாய்ப்புக்களை எதிர்காலத்தில் எல்லாத் தரப்பினரும் பெறுவதற்கான வாய்ப்புக்கள் விரிவடையும். இது முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும்.

2. மேற்கு நாடுகளில் வெற்றியளித்த தனியார் - அரச பங்குபற்றல் (Private - Public - Perticipation PPP) முறைமையை இலங்கை மற்றும் பிறேசில் போன்ற நாடுகளும் பின்பற்றினால் சமூக ஏற்றத்தாழ்வுகளை கல்வியில் குறைப்பதும் வாய்ப்புக்களை அககப்படுத்துவதும் சாத்தியமாகும்.

3. பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளை வலிமையாக்கும் ஆற்றல் கல்வி முறையிலன் ஏற்றத்தாழ்வுகளுக்கும் உண்டு. கல்வி முறைமை மாத்திரம் சமூக ஏற்றத்தாழ்வைக் குறைக்க இயலாது. அது ஏனைய பொருளாதார சமூக, அரசியல் கொள்கை இணக்கப்பாடுகளுடன் இணைந்து வளர்ச்சி பெற வேண்டும். இது பற்றிய சிந்தனைகள் கல்வியலாளர்களாலும், அரச துறையினராலும் பகிர்ந்து உரையாடல்களாக வளர்க்கப்பட வேண்டும்.

### ❍ முடிவுரை

உலக ரீதியில் இதையொத்த சிந்தனைகளும் அணுகுமுறைகளும் புலம் பெயர்ந்து வாழும் சிறுபான்மை மக்களிடம் பரவக் கிடக்கிறது. உலகில் 38 மில்லியன் மக்கள் சர்வதேச ரீதியில் புலம்பெயர்ந்து கல்வியில் சம வாய்ப்புப் பெறுவதற்காகத் துன்பப்படுகின்றனர். உலக ரீதியில் ஆபிரிக்க நாடுகள், ஆசிய நாடுகள் தமது புலம் பெயர்ந்த வம்சாவழியினர் கல்வியில் சம வாய்ப்புக்காக ஏங்குவதை இந்த நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இது நீண்ட காலத்தில் சமூக ஏற்றத் தாழ்வுடன் வாழ்கின்ற சுதேசிகள் மற்றும் புலம் பெயர்ந்த மக்கள் சார்ந்த பிரச்சனையாக உணரப்படும். அதற்காக அலையும் ஆறு கோடி மக்கள் கல்வி தொடர்பான ஏற்றத் தாழிவினாலும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால் உலகம் முழுவதும் தனியார் - அரச கல்வி தொடர்பாக இடை வெளிகளைக் குறைக்கவும் இணக்கமாக அணுகு முறையை கொள்கையாக வடிவமைக்க வேண்டும் என்பது முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமுதாய வளர்ச்சியில் வீரமும் கல்வியும்


பேராசிரியர். ம. இரகுநாதன்
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


மனித சமுதாய வளர்ச்சியை மானிடவியல் ஆய்வாளர்கள் காட்டு மிராண்டிநிலை, அநாகரிக நிலை, நாகரிகநிலை என மூன்று கட்டங்களாகப் பிரித்துள்ளனர். மார்க்சிய மூலவர்கள் ஆதிகாலப் பொதுவுடைமைச் சமுதாயம், அடிமைச் சமுதாயம், சோசஷலிச சமுதாயம் என்றவாறான வளர்ச்சிப் படிநிலைகளினூடாகவே மனித சமுதாயம் வளர்ந்துள்ளது என்பர். தமிழர் சமுதாய வளர்ச்சியும் இவ்வாறான படிநிலைகளினூ டாகவே வளர்ந்துவந்துள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது. பழந்தமிழ் இலக்கியங் களினூடாக நாம் காண்கின்ற புராதன தமிழர்களின் வாழ்க்கைமுறை வேட்டுவகுல வாழ்விலிருந்தே ஆரம்பித்திருந்தது. இலக்கியங்கள் இதனைக் குறிஞ்சி நில வாழ்வாகக் காட்டுகின்றன. குறிஞ்சிநில வாழ்வில் பல்வேறு குழுக்களாக வேட்டையாடியும் காடு மேடெல்லாம் அலைந்து கண்டதையும் பொறுக்கி உண்டும் நிரந்தர வாழ்விடமின்றித் திரிந்தவனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டமுடியாத நிலையில்தான் மனித விலங்காக சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர் போலும். இவ்வாறான மானிட விலங்குகள் நாகரிகத்தின் வாசலுக்கு வந்தபோது அவர்களிடையே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. தாய்வழிச் சமூகம் தந்தைவழிச் சமூகமாக மாற்றம் பெற்றது. குடும்பம் என்ற அமைப்பு புதிதாகத் தோற்றம் பெற்றது. தனிச் சொத்துரிமைக்கு வழியேற்றப்பட்டது. ஆண் குடும்பத்தின் தலைவனாகி - கூட்டுக்குடும்பத்தின் தலைவனாகி - குலத்தலைவனாகி - ஊரின் - நாட்டின் தலைவனாக மாறினான். இவ்வாறான மாற்றங்களும் தலைமையும் ஆரம்பத்தில் மூப்பின் அடிப்படையிலேயே இயல்பாக வந்துசேர்ந்தது. குலங்கள் பலவும் தமது வாழ்வியல் தேவைகளுக்காகப் போட்டி போட முற்பட்டபோது வலிமை படைத்தவன் தலைமையேற்கும் நிலையும் ஏற்பட்டது. அயலவனின் எல்லைக்குள் நுழைந்து ஆநிரை கவரவும் விளைநிலங்களைக் கொள்ளையிடவும் எதிர்த்து வந்தவர்களைக் கொலைசெய்தேனும் வெற்றியுடன் திரும்பும் வலிமை படைத்த ஆடவர்களுக்கே சமூக மதிப்பு இருந்தது. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இவ்வாறான வீரனையே சான்றோன் எனப் பாராட்டியது புறநானூற்றுப் புலவன்,

ஈன்று புறந் தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

(புறம் 312)

எனக் கூறும்போது தாய் பெற்றுத்தருகின்றாள்; கொல்லன் வேல் வடித்துக் கொடுக்கின்றான்; தந்தை மகனை வீரனாக்குகின்றான்; மகன் போர்க்களத்தில் ஆண் யானையை வேலால் எறிந்து கொன்று வெற்றியோடு திரும்புகின்றான்; அரசன் அவனுக்கு குளிர்ச்சி பொருந்திய நிலங்களைப் பரிசளிக்கின்றான்.

இங்கே சமூகக்கடமை அரசனுக்காகப் போரிடுவதும் அதற்காகவே பயின்று வீரனாக மாறுவதுமே எனத் தெரிகின்றது. வீரர்களையே சான்றோன் எனச் சமுதாயம் போற்றுகின்றது. இது வீரர்களின் காலம் என்பதால் வீரயுகம் என்று வரலாற்றில் பேசப்படுகின்றது. "ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதியதன்று உலகத்தியற்கை" என்ற கருத்துநிலை உருவாகிய சூழல் இது என்பதால் கொலையும் கொள்ளையும் போரும் புலவர்களாலேயே புகழ்ந்துரைக்கப்பட்டதையும் காண்கின்றோம்.

"தாயி றூவாக் குழவிபோல
ஓவாது கூஉ நின் னுடற்றியோர் நாடே"

(புறம் 4)

என்று அதாவது பசியால் தாயைத்தேடி அழுகின்ற குழந்தைபோல உனது பகைவர்களின் நாடும் ஓயாது அழுதுகொண்டே இருக்கவேண்டும் என்று மன்னனை வாழ்த்துகின்றான் புறநானூற்றுப் புலவன் ஒருவன்.

தமிழ் மண்ணில் தமது சொந்தச் சகோதரர்களையே கொன்றுகுவித்து ஆதிக்கவெறியில் அலைந்து திரிந்தவன்,

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே மின்னொடு
வானம் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புனைபோ லாருயிர்
முறைவழிப் படூஉமென்பது திறவோர்
காட்சியிற் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

(புறம் 192)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற புறநானூற்றுப்புலவன் கணியன் பூங்குன்றனாரின் குரல் கேட்டபோது உலக நிலையாமையை உணர்ந்துகொள்கின்றான். ஆற்றுவெள்ளத்தில் அள்ளுண்டு போகும் மிதவையின் பாதையை உறுதிப்படுத்த முடியாதது போல எமது வாழ்வின் பாதையையும் எம்மால் உறுதியாகக் கூறமுடியாது என்பதை உணர்ந்தபோது மண்ணாசையும் பொருளாசையும் பொன்னாசையும் படிப்படியாக அவனை விட்டு விலக ஆரம்பித்தது. அயலவனின் நிலத்தில் கொள்ளையடித்தும் கொலைசெய்தும் வீடு வாசல்களை - விளைநிலங்களை எரித்தும் பெருமை கொண்டவன் வெட்கித் தலை குனிகிறான். வேல் கைக்கொடுத்து வென்றுவா மகனே என்று போருக்கு அனுப்பிய வீரத்தாய் - உன் மகன் முதுகிலே காயம்பட்டான் எனக் கூறக்கேட்டு அவ்வாறாயின் அவனுக்குப் பாலூட்டிய மார்பை அறுத்து எறிகிறேன் என்று வஞ்சினம் கூறியவள் - கற்றோர் அவைதனில் முந்தியிருக்கும் தன்மகனைச் சான்றோன் எனப் பிறர் புகழ்ந்து கூறும்போது ஈன்ற பொழுதை விடப் பெரிதும் மகிழ்கின்றாள். இது வெற்றி வீரனாகக் காண்பதைவிட கல்வியால் உயர்ந்தவனாகக் காண்பதே மேலானது என்ற கருத்தின் நிலைபேற்றிற்கான சாட்சியமாக உள்ளது. இதனாலேயே வீரயுகத்தில் வீரனைக் குறித்த சான்றோன் என்னும் சொல் பின்னர் கல்வியாளனைக் குறிப்பதாகப் பொருள் மாறுபட்டது. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தபோது.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் தாயும் மனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருகவென்னாது அவருள்
அறிவுடையோனாறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவண்கட் படுமே"

(புறம் 183)

அதாவது ஆசிரியனுக்கு ஏதாவது துன்பம் நேர்ந்தவிடத்து அதனைத் தீர்க்க உதவியும் அத்துன்பம் பொருளால் ஏற்பட்டதாயின் பொருளைக்கொடுத்தும் அவரிடம் கற்றல் நன்று. ஏனெனில் ஒரே தாயின் பிள்ளைகளானாலும் கல்விகற்றவனையே தாயும் மதிப்பாள் அரசனும் கல்விகற்றவனையே போற்றுவான். நால் வருணத் தினுள்ளும் கீழ்வருணத்திலுள்ளவன் கல்வி கற்றவனாக இருந்தால் மேல் வருணத்தவனும் இவனையே போற்றுவான். மூத்தவனுக்கு வழங்கப்பட்ட அரசுரிமையும் அவன் கல்லாதவனாயின் கல்வி கற்ற இளையவனுக்கே வழங்கப்படும். எனவே கல்வி கற்பதன் மூலமே சமூக மதிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற கருத்து புறநானூற்றுப் புலவனிடத்திலேயே உருவாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் பொருட்பாலில் அரசியலில் இறைமாட்சி என்ற அதிகாரத்தையடுத்து கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்ற அதிகாரங்களை அமைத்திருக்கின்றார். இறைமாட்சியிலும்

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு"

என்று அரசனுக்கு இருக்கவேண்டிய கல்வியறிவை வலியுறுத்துகின்றார். கல்விக்கென அமைத்த தனியதிகாரத்தில்

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்றும்

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்றும் கல்வியின் சிறப்பையும் பயனையும் எடுத்துக்கூறுகின்றார். இப் பிறவியில் கற்ற கல்வி ஏழு பிறவியிலும் எம்மைத் தொடர்ந்துவரும் என்பதாலும் மற்றவர்களால் பறித்தெடுக்க முடியாததும் - அழியாததுமான செல்வம் கல்வியே என்பதாலும் பொருள்மீதான பற்று விலக்கப்படுகின்றது. மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை அனைத்தும் வீணானவை என்ற கருத்து வள்ளுவரால் எடுத்துக் கூறப் படுகின்றது. கல்லாமை என்ற அதிகாரத்திலும் கல்வியறிவில்லாதவனுடைய அழகு வெறும் மண்பாவையின் அழகைப்போல நிலையில்லாதது என்றே இகழ்ந்து ரைக்கின்றார். கல்வி செவிவழி கேட்பதால் பெருகும் என்பதால் செவிவழிச் செல்வத்தை எல்லாச் செலவங்களையும் விட மேலான செல்வமாக வள்ளுவர் கூறுகின்றார். அறிவுடைமையில்

"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

எனக் கூறும்போதும் அறிவுடைமையே எல்லாச் செல்வங்களையும் விட உயர்வான செல்வமாகக் காட்டப்படுகின்றது.

நாலடியாரில் பொருட்பாலில் அரசியல் என்ற பகுதியில் முதலாம் அதிகாரமாக கல்வியே இடம்பெற்றுள்ளது.

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அழகே அழகு" (நாலடி. 131)

என்ற வெண்பாவுடன் ஆரம்பிக்கின்ற கல்வி அதிகாரம் முதலிலேயே மயிர்முடியின் அழகும், அழகிய ஆடைகளின் கரையினது அழகும், மஞ்சள் பூசுவதால் வரும் அழகும், அழகல்ல மனத்தில் நாம் நல்ல குணம் பொருந்தியுள்ளோம் நடுவு நிலைமை தவறாதவராக உள்ளோம். என்ற உறுதியைத் தரக்கூடிய கல்வி அழகே நிலையான அழகாகும் என்று கூறுகின்றார். மேலும் கல்வி கற்பதற்குரிய வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை என்பதை உணர்ந்தவர் அவ்வாறான வாய்ப்பை இழந்தவர்கள் கற்றோரைச் சேர்ந்து ஒழுகினால் அவர்களுடைய அறிவும் நற்பழக்கமும் கற்காதவரிடத்தும் வந்துசேரும் எனக் கூறி, அதனைத் தண்ணீரில் உள்ள பாதிரிப்பூவின் மணம் தண்ணீருக்கும் வந்துசேர்வதுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர் - தொல் சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு"

அறநூற்காலத்தில் வெளிவந்த நூல்கள் பலவும் கல்வியின் சிறப்பையும் கல்வி கற்றவனுக்கு உள்ள மதிப்பையும் விரிவாகவே எடுத்துக்கூறுகின்றன. இது தமிழர் சமுதாயத்தில் ஏற்பட்ட பாரியதொரு மாற்றமாகும். வீரமும் வீரனும் சான்றோனாகக் கருதப்பட்ட மண்ணில் கல்விகற்றவனையே சான்றோனாக மதிக்கும் மனமாற்றம் ஏற்பட்டமை எமது சமுதாய வரலாற்று வளர்ச்சியின் ஒரு புதியபோக்கினையே எடுத்துக் காட்டுகின்றது.

எனவே கல்விச்செல்வம் மட்டுமே நிலையானது பிறரால் கவரமுடியாதது கொடுக்கக் கொடுக்க குறையாதது சாதி, மதம் முதலிய அனைத்து வேறுபாடுகளையும் கடந்து சமூக மதிப்பைத் தருவது கல்வியே என்பதால் அதனை வருத்திக் கற்றவாறு வாழ்க்கையில் நிலையான இன்பத்தைப் பெறவேண்டும் என்பதையே முன்னோர்கள் எமக்கு எடுத்துக்கூறியுள்ளார்கள். அவர்களின் வார்த்தைகளைப் பொன்போற் போற்றிப் பின்தொடர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றுலாத்துறையின் முக்கியத்துவமும், இலங்கையின் சுற்றுலாத்துறையும்


கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா

சிரேஸ்ட விரிவுரையாளர், முன்னாள் புவியியற்றுறை தலைவர்
புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.


## அறிமுகம்:

இன்றைய உலகில் சுற்றுலா ஒரு பயன் மிகு தொழிலாக விளங்குகின்றது. ஒரு நாட்டின் கண்ணுக்குத் தெரியாத ஏற்றுமதிப் பொருள் தான் சுற்றுலா. சுற்றுலா மூலம் ஒரு நாடு பல்வேறு வழிகளில் பயன் பெறுகிறது. இதன் மூலம் நாட்டின் தேசிய வருமானம் அதிகரிக்கின்றது. இதனால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து பல துறைகளில் முன்னேறுகிறது. சுற்றுலா மூலம் நாடு மட்டுமல்லாது தனிநபரும் பயன் அடைகின்றார். சுற்றுலா பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துறையாக இருப்பதுடன் சமுதாய முக்கியத்துவமும் பெற்றுள்ளது. சுற்றுலாவானது சமுதாயத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தி சமுதாய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றது. சுற்றுலா என்னும் சொல் அதாவது 'Tour' என்னும் ஆங்கிலச் சொல் 'TORNUS' என்னும் இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது. Tornus என்றால் சக்கரம் எனவே இச்சொல் சுற்றிவருவதைக் குறிக்கிறது. "இன்பப் பொழுதுபோக்கிற்காகப் பயணம் மேற்கொள்ளுதல் அல்லது பயணிகளுக்கு வழிகாட்டுதல், சுற்றுலா மேற்கொள்ளும் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல் முதலிய பணிகளைச் செய்யும் தொழிலகம் சுற்றுலா" எனப்படும் என பிரிட்டானியா கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. 'எவரொருவர் எவ்வித குறிக்கோளும் இன்றி தனது நாட்டின் எல்லையைக் கடந்து பிறநாட்டில் தற்காலிகமாகத் தங்கி, தான் வேறு எங்கோ ஓரிடத்தில் ஈட்டிய பணத்தை அங்கு செலவிடுகிறாரோ அவரே சுற்றுலாப் பயணி ஆவார்'. சுற்றுலாக் கழகம் 'ஒரு நாட்டில் குறைந்தளவு 24 மணி நேரமாவது பயணம் செய்பவர் சுற்றுலாப்பயணி' என வரையறை செய்துள்ளது.

## சுற்றுலா தினம்

சுற்றுலாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கிலும், சுற்றுலாவில் நாட்டின் பொருளாதாரமும் உண்டு என்பதை விபரிக்கும் நோக்கிலும் உலக சுற்றுலாதினம் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளை (Theme) மையமாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. சுற்றுலா மூலம் மனித குலத்தை மேம்படுத்தும் வகையில் செப்டெம்பர் 27ம் திகதியை உலக சுற்றுலாதினமாக 1970




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்து அறிவித்தது. அவ்வகையில் உலக சுற்றுலா தினம் உலக சுற்றுலா நிறுவனத்தின் (WTO) ஆதரவில் 1980ஆம் ஆண்டில் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. இப்போது சுற்றுலா என்பதுதான் உலகின் மிகப்பெரிய தொழிலாக உள்ளது. உலக பொருளாதாரத்தில் இரண்டாவது பங்களிப்பு சுற்றுலாவினால் தான் கிடைக்கிறது. சுற்றுலாத்துறையானது உணவகம், தங்குமிடம், பொழுதுபோக்குத் தலங்கள், போக்குவரத்து, வணிக விற்பனையகங்கள் என ஐந்து முக்கிய துறைகளை உள்ளடக்கியுள்ளது. உலக அளவில் பல கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பினை சுற்றுலாத்துறையானது வழங்கி வருகின்றது. சுற்றுலாவை மேம்படுத்தி பொருளாதாரத்தை அதிகளவில் ஈட்டிய நாடுகளில் ஸ்பெயின் முதலிடம், பிரான்சு, ஜேர்மனி முறையே இரண்டாவது, மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன. உலக அளவில் சுற்றுலாவில் சீனா 13வது இடத்திலும், இந்தியா 40 ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியா, இலங்கை போன்ற வளரும் நாடுகளிற்கு மிகப் பெரிய பலமாக இருப்பது சுற்றுலாத்துறையாகும். வெறும் பாலைவனத்தை மட்டும் வைத்துக் கொண்டு டுபாய் சுற்றுலாவின் மூலம் அதிக வருமானத்தை ஈட்டி வருகிறது. சின்னஞ் சிறிய நாடான சிங்கப்பூர் எந்த விதமான பெரிய வளமும் இல்லாமல் சுற்றுலாவில் உலக நாடுகளிற்கு சவால் விடும் வகையில் மிளிர்கின்றது.

## உலக சுற்றுலா மாநாடு

1963ஆம் ஆண்டு உரோம் நகரில் ஐக்கிய நாடுகள் சபையில் உலக சுற்றுலா மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. வளர்ந்து வரும் நாடுகள் சுற்றுலாத் துறைக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்துச் சுற்றுலாத் துறையை வளர்க்க வேண்டும்.
2. வளர்ந்து வரும் நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு நிதியிலிருந்து நீண்ட காலத் தவணையிலும் குறுகிய காலத்திட்டத்திற்கும் கடன் பெறலாம்.
3. உலகம் முழுவதும் சுற்றுலா செல்வோரின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வருகிறது. மக்கள் புதிய சுற்றுலா மையங்களிற்குச் செல்ல ஆர்வம் கொண்டுள்ளனர். எனவே ஒவ்வொரு நாடும் புதிய சுற்றுலா மையங்களை உருவாக்க வேண்டும் என்று அறிவுரை கூறியது. மலையேறுதல், குளிர்கால விளையாட்டுக்கள், மீன் பிடித்தல், வேட்டையாடுதல், கடற் கரைகள், மருத்துவ குணமுள்ள நீரூற்றுக்கள், தேசிய பூங்காக்கள், விளையாட்டுக்கள், பறவை, விலங்குகளின் சரணாலயங்கள், தேசிய நினைவுச்சின்னங்கள், அந்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்கள், நாகரிகம், பண்பாட்டுச் சின்னங்கள், புனிதப் பயணம் மேற்கொள்ளல், திருவிழாக்கள் போட்டி விளையாட்டுக்கள் என்பவற்றை மிகுதிப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுற்றுலா வகைகள்

சுற்றுலாவின் பிரதான வகைகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம். மருத்துவ சுற்றுலா, குளிர்கால சுற்றுலா, தன்னார்வ சுற்றுலா, அனுபவங்களின் சுற்றுலா, நீர்ச் சுற்றுலா, நிலையான சுற்றுலா, கோடை அல்லது சூரியன் மற்றும் கடற்கரை விடுமுறை சுற்றுலா, ஆரோக்கிய சுற்றுலா, கடைசி வாய்ப்பு சுற்றுலா, கலாசார சுற்றுலா, தொல்பொருள் சுற்றுலா, மத சுற்றுலா, யாத்திரை சுற்றுலா, கலாசார பாரம்பரிய சுற்றுலா, வெகுஜன சுற்றுலா, சாகச பயணம், வேளாண் சுற்றுலா, விளையாட்டுச் சுற்றுலா, வணிக சுற்றுலா, வனவிலங்கு சுற்றுலா, மது சுற்றுலா, இசை சுற்றுலா, விசாலமான சுற்றுலா, சைக்கிள் ஓட்டுதல், திரைப்பட சுற்றுலா, இன்பச் சுற்றுலா, கல்விச் சுற்றுலா, அரசியல் சுற்றுலா, சங்கச் சுற்றுலா, ஓய்வுச் சுற்றுலா, சூழலியல் சுற்றுலா, கடற்கரை சுற்றுலா போன்றனவாகும். இவற்றினை உள்நாட்டுச் சுற்றுலா, வெளிநாட்டுச் சுற்றுலா என இரு பெரும் பிரிவிற்குள் உள்ளடக்கலாம்.

### சுற்றுலாவினால் ஏற்படும் நன்மைகள்

- அன்னியச் செலவாணி கிடைக்கிறது

அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டில் செலவிடும் பணம் புலனாகாத ஏற்றுமதியாகும். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காகவும், உணவிற்காகவும், போக்குவரத்திற்காகவும், பொருட்களை வாங்கவும் செலவு செய்யும் தொகையானது அந்த நாட்டிற்கு அந்நியச் செலவாணியாகக் கிடைக்கின்றது. இந்த அந்நியச் செலவாணி மூலம் பாதகமான வணிகச் சமநிலையையும் சமாளிக்க முடிகிறது. இந்த வகையில் சுற்றுலா மூலம் கிடைக்கும் வருவாய் ஒரு நாட்டிற்கு வரப்பிரசாதமாகவே உள்ளது. சுற்றுலாவின் மூலம் அந்நிய செலவாணியை ஈட்டுவதில் இந்தியா இரண்டாவது இடம் வகிக்கிறது.

- தேசிய வருமானம் அதிகரிக்கிறது

சுற்றுலா மூலம் ஒவ்வொரு நாடும் பல வழிகளில் வருமானம் பெருகின்றது. பொருட்களை உற்பத்தி செய்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விற்பனை செய்வதைக் காட்டிலும் அதிகமான வருமானத்தைச் சுற்றுலாத் துறை தருகிறது. சுற்றுலா அறிஞர்களான லிகோரிஷ், கெர்ஷா ஆகியோர் சுற்றுலா பற்றி பின்வருமாறு கூறுகிறார்கள். 'சுற்றுலா, முதலீடு எதுவும் தேவைப்படாத மிக எளிதான தொழிலாகும். ஒரு சமுதாயம் ஆண்டு முழுக்க ஒவ்வொரு நாளும் இரண்டு டசின் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்க முடியுமானால் அது பொருளியல் வளர்ச்சியில் ஆண்டிற்கு ஒரு இலட்சம் டொலர்கள் ஊதியப்பட்டியல்களைக் கொண்ட ஒரு புதிய தொழிற்சாலையைப் பெற்றுள்ளதற்கு ஒப்பாகும்' என்று கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு அதிகரிக்கின்றது

சுற்றுலாத் துறையானது சேவையை மையமாக வைத்து செயல்படும் தொழிற்கூடம் ஆகும். இதுவும் முழுக்க முழுக்க தொழிலாளர்களைக் கொண்டு செயல்படும் துறை ஆகும். இதில் பலதரப்பட்ட மக்கள் தங்கள் தகுதிக்கேற்ப பலவகையான வேலைவாய்ப்புக்களைப் பெறுகிறார்கள். வேலையற்ற பட்டதாரிகள் சுற்றுலாவின் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளார்கள். இவ்வாறு இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கும் சுற்றுலாத்துறை வேலை வாய்ப்பை வழங்கும் அமுதசுரபியாக உள்ளது. சிறப்பாக குறிப்பிட்டால் சுற்றுலா மற்றுமோர் வேலை வாய்ப்பு நிறுவனமேயாகும். சுற்றுலாத் துறையில் முதலாளி முதல் பல வகையான தொழிலாளர் வரை எண்ணற்ற மக்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் நேரடித் தொழிலாளர்கள், மறைமுகத் தொழிலாளர்கள் என இரு பிரிவுகள் உள்ளன. சுற்றுலா முகவர், வழிகாட்டி, ஓட்டுநர், விற்பனையாளர், வரவேற்பாளர், இசைக்கலைஞர், நடனமாதர், கணக்காளர், எழுத்தாளர், உணவு தயாரிப்போர், பரிமாறுவோர், மேலாளர், தகவல் தருவோர் போன்றவர்கள் நேரடியாக சுற்றுலாத் துறையில் பணிபுரிகின்றனர். இவர்களைத் தவிர ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணைச் சுற்றுலாத்துறைகளும் வளர்ச்சியடைந்துள்ளன. அவைகளில் வேலைபார்ப்போர் மறைமுகத் தொழிலாளர் ஆவர். நட்சத்திர ஹோட்டல்களின் கட்டுமானப் பொறியாளர்கள், தொழிலாளர்கள், பஸ், ரயில் விமானங்களில் பணிபுரியும் பல வகைத் தொழிலாளர்கள், புகைப்படம் எடுப்போர், கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வோர், விற்பவர்கள் போன்ற அனைத்துத் தொழிலாளர்களும் மறைமுகமாக சுற்றுலாத் துறையில் வேலை வாய்ப்பினைப் பெறுகிறார்கள். இவ்வாறு சுற்றுலா மூலம் தொழிலித் திறமை உள்ளவர்களும் திறமை இல்லாதவர்களும் வேலை வாய்ப்பினைப் பெறுகிறார்கள். சுற்றுலாத் துறைக்குள் அடங்கும் ஒவ்வொரு துறையும் மக்களிற்கு வேலை வாய்ப்பினை அளிக்கிறது. இவ்வாறு சுற்றுலா வேலை வாய்ப்பினை அளித்து நாட்டில் நிலவும் தொழில் உலகம் முழுவதும் 10 கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கும் என்று கூறப்படுகிறது.

## கைத்தொழில் வளர்ச்சி

சுற்றுலாவினால் தொழில்களும், கைத்தொழில்களும் வளர்ச்சியடைகின்றன. உள்ளுர் கைவினைப் பொருட்கள் புத்துயிர் பெறத் துணைபுரிகிறது. பொதுவாக சுற்றுலாப் பயணிகளே அரிய கலைப் பொருட்களையும், பொம்மைகள், பனையோலைப்பைகள் போன்றவற்றை நினைவுப் பொருட்களாக வாங்கிச் செல்கின்றனர். எடுத்துக்காட்டாக இந்தியாவில் சுற்றுலாத் துறையினால் கைவினைப் பொருட்கள் அதிக அளவில் விற்பனையாகின்றன. தஞ்சை தலையாட்டி பொம்மைகள், தஞ்சை கலைத் தட்டுகள், கன்னியாகுமரியில் உள்ள கிளிஞ்சல் பொருட்கள், சந்தன மாலைகள், மூங்கில் கூடைகள், பனைஓலைத் தொப்பிகள் ஆகியவைகள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் விரும்பி வாங்கப்படுகின்றன. இதனால் இத்தொழில்கள் நசித்துப் போகாமல் பாதுகாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவதுடன் அந்தத் தொழில் செய்யும் அநேகக் குடும்பங்களின் பிழைப்பிற்கும் வழி ஏற்படுகிறது.

❍ பொருளாதார ஏற்றத் தாழ்வு குறைகிறது

சுற்றுலா, நாடுகளிற்கிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வை ஓரளவு குறைக்கிறது. பெரும்பாலும் பணக்கார நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நாடுகளுக்குப் பயணம் செய்கின்ற போது அவர்களது பணம் பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரத்தை உயர்த்தப் பயன்படுகிறது. சுற்றுலாவை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் ஒரு நாடு பெருந்தொகையை நேரிடைவரி மூலமும் பெறுகிறது. ஒரு நாடு எந்த அளவிற்கு அயல் நாட்டுப் பயணிகளைக் கவர்ந்திழுக்கிறதோ அந்த அளவிற்கு அந்த நாடு அந்நிய செலவாணியைப் பெறுகிறது. அந்த வெளிநாட்டுப் பயணிகள் எத்தனை நாள் தங்குகின்றனரோ, எவ்வளவு பொருட்கள் வாங்குகின்றனரோ அந்த அளவிற்கு தேசிய பொருளாதாரத்தை உயர்த்த முடியும். இதனால் உலகநாடுகளுக்கிடையே காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஓரளவு குறைகிறது.

❍ வணிகச் சமநிலை பேணப்படுகிறது.

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட கால அளவிற் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களின் மொத்த மதிப்பும், பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் மொத்த மதிப்பும் சம அளவில் இருந்தால் அதனை நாம் பன்னாட்டு வணிகச் சமநிலை என்கிறோம். அதே சமயம் ஏற்றுமதிப் பொருட்களின் மொத்த மதிப்பு இறக்குமதிப் பொருட்களின் மதிப்பைக் காட்டிலும் அதிகமாக இருந்தால் அதனை நாம் சாதகமான வணிகச் சமநிலை என்கிறோம். அதற்கு மாறாக ஏற்றுமதிப் பொருட்களின் மதிப்பைக் காட்டிலும் இறக்குமதிப் பொருட்களின் மொத்தமதிப்பு கூடுதலாக இருப்பின் அதனை நாம் பாதகமான வணிகச் சமநிலை என்கிறோம். பொதுவாக வளர்ச்சியடைந்த நாடுகள் சாதகமான வணிகச் சமநிலையையும், வளர்ந்துவரும் நாடுகள் பாதகமான வணிகச் சமநிலையைக் கொண்டுள்ளன. பாதகமான வணிகச் சமநிலையை விரைவில் சீர்செய்யாவிடில் நாட்டின் பொருளாதாரநிலை பாதிக்கப்படும். இதற்கு மிகவும் கைகொடுப்பது கண்ணுக்கு புலனாகாத ஏற்றுமதிகள் ஆகும். கண்ணுக்குப் புலனாகாத ஏற்றுமதிகளில் சுற்றுலா முக்கியமான இடம் வகிக்கிறது.

❍ கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் பேணிக்காக்கப்படுகின்றன

சுற்றுலாக்கலை மற்றும் கிராமியக் கலைகளைப் பேணிக்காப்பதற்கு உதவுகிறது. சுற்றுலாத் துறையானது நம் நாட்டின் பண்பாடு, கலாசாரம், கலைகள், கிராமியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகள் ஆகியவற்றைப் பேணிக்காக்கும் வகையில் கண்காட்சிகள், திருவிழாக்கள் போன்றவைகளை நாடு முழுவதும் நடாத்திவருகிறது. இதுபோன்ற கலைக்கூடங்களில் பண்பாட்டிற்கே உரித்தான நடனக்கலைகள், நாட்டியக்கலைகள், கிராமியக் கலைகள் இடம் பெறுகின்றன. இதனால் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றனர்.

❍ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள் பேணிக் காக்கப்படுகின்றன

பொதுவாக சுற்றுலாப் பயணிகள் ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாடு, கலை, ஆகியவற்றை வெளிப்படுத்தும் பழங்காலச் சின்னங்களைப் பார்க்க வேண்டும் என்பதிலே ஆவல் கொள்ளுகின்றனர். நினைவுச்சின்னங்களைப் பார்க்கும் போது அதனை உற்று நோக்கி அதனோடு கலந்து விடுகிறார்கள். இதில் அவர்களிற்கு நிம்மதியும், திருப்தியும், புதிய உற்சாகமும் ஏற்பட்டு நல்ல அனுபவங்களைப் பெற்றுத் திரும்பிச் செல்கின்றனர். எனவே ஒவ்வொரு அரசும் தங்கள் நாட்டிலுள்ள பழங்காலக் கலை மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது. இவ்வாறு சுற்றுலாவினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் ஆேணிப்பாதுகாக்கப்படுகின்றன.

❍ பண்பாட்டுப் பரிமாற்றம்

சுற்றுலாப் பயணிகள் நாகரிகம் பண்பாடு ஆகியவற்றைப் பிற மக்களிடம் பரப்புகிறார்கள். இதனால் இரண்டு மாறுபட்ட பண்பாடு கொண்டவர்கள் ஒன்று சேர்கிறார்கள். மற்றவர்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிய மனிதன் முற்பட்டதனால்தான் சுற்றுலாவே தோன்றியது. சுற்றுலாவினால் ஒரு நாட்டு நாகரிகம் இன்னொரு நாட்டில் பரவ வாய்ப்புள்ளது. அதே நேரம் அந்த நாட்டின் பழமை, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை நிலை நிறுத்திக் கொள்ளவும் வழிவகை செய்கிறது.

❍ தனிமனித அறிவு பெருகுகிறது

சுற்றுலாவினால் தனிமனித அறிவு பெருகுகிறது. பிற நாடுகளுக்கும், தனது நாட்டின் பிற பகுதிகளுக்கும் செல்வதால் சுற்றுலாப் பயணியின் பொது அறிவு வளர்ச்சியடைகிறது. தனிப்பட்ட முறையாக நேரடியாகப் பார்த்து, கேட்டு தெரிந்து கொள்ளுவதால் அறிவு விருத்தியடைகிறது. இவ்வாறு சுற்றுலா மனிதர்களின் அறிவை விருத்தி செய்து கொள்வதற்கு பெரிதும் உதவுகிறது.

❍ மகிழ்ச்சி அழிக்கிறது

சுற்றுலா மனிதனுக்கு மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. மனிதரின் மனதுக்கு மன மகிழ்ச்சி தரும் சுற்றுலா மனிதனின் உடல் நலத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுகிறது. இதனால் சமுதாயம் நலன் பெறுகிறது. சமுதாயத்தில் ஏற்படும் பல தீய விளைவுகள் இதனால் தடுக்கப்படுகின்றன.

### ❍ விலங்குகள் மற்றும் தாவர வகைகள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன

சுற்றுலாவினால் விலங்குகள் மற்றும் தாவர வகைகள் பேணிப் பாதுகாக்கப் படுகின்றன. வெளிநாட்டுப் பயணிகள் பல்வேறு காரணங்களிற்காக நமது நாட்டிற்கு வருகை புரிந்தாலும் இயற்கை வளங்களைக் கண்டு இரசிப்பதிலும், பல அரிய தாவர இனங்களையும், விலங்குகளையும் கண்டு உற்சாகம் அடைகின்றனர். எனவே பறவை சரணாலயங்கள், வனவிலங்கு சரணாலயங்களை முறைப்படி பாதுகாப்பதிலும், இயற்கை எழில்களைப் பேணிப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

### ❍ சுற்றுலாவினால் ஏற்படும் தீமைகள்

சுற்றுலாவினால் மனித நேயம், தேசிய ஒருமைப்பாடு, நல்லெண்ணம், உலக ஒற்றுமை ஆகியன. மலர்ந்தாலும் இதனால் தீமைகளும் உண்டாகின்றன. சுற்றுலாப் பயணிகள் சுற்றுலா மையங்களைத் தரிசிக்கும் போது அப்பிரதேசங்களின் வரலாற்று அம்சங்களை சிதைப்பதனால் எதிர்காலத்தில் அப்பிரதேசங்கள் பாதிப்படைய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. சுற்றுலா மையங்களில் மிதமிஞ்சிய சனநெருக்கடி, அவர்களை ஏற்று வழியனுப்பக்கூடிய வசதி வாய்ப்புகள் போதாமையால் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டவர்களுக்கும், சுற்றுலா மையப் பிரதேசம் அமைந்துள்ள கிராம அல்லது அப்பிரதேச மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அத்துடன் அளவிற்கு அதிகமான பயணிகள் வருகையினாலும் வாகனங்களில் ஏற்படும் மாசுக்களால் (புகை, இரைச்சல், அதிக ஒலி) சுற்றுப்புறச் சூழல் மாசடைகின்றது. சுற்றுலா மேற்கொள்ளும் பயணிகள் வரலாற்றுச் சின்னங்களைத் தொட்டும், சிலர் ஓவியங்களைத் உரசிப்பார்ப்பதாலும், தமது பெயர்களைப் பொறிப்பதாலும் கலைப்படைப்புக்கள் பாதிக்கப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளின் பழக்கவழக்கங்கள் உள்நாட்டு கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பாதிக்கின்றது. குறிப்பாக உணவுப்பழக்கவழக்கங்கள் உள்நாட்டு உணவுகளை விடுத்து மக்கள் வெளிநாட்டுப் பொதி செய்யப்பட்ட உணவுகளையும், திடீர் உணவுகளையும் உண்பதற்குப் பழக்கப்பட்டுவிட்டார்கள். இதனால் நீண்டகாலப் போக்கில மனிதன் பல்வேறுபட்ட நோய்களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாகின்றான். இதனை விட போதைவஸ்துப் பாவனை, விபச்சாரம், ஓரினச் சேர்க்கை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற சமூகத்தினால் விரும்பத்தகாத செயற்பாடுகளையும் உள்வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தினால் பல் வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் சுற்றுலாத்துறை

சுற்றுலாத்துறைக்கு பெயர்பெற்ற நாடுகளில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது. இங்கு ஆடைக் கைத்தொழிலுக்கு அடுத்த நிலையில் சுற்றுலாத்துறை காணப்படுகிறது. இலங்கையில் நிலவுகின்ற உவப்பான வானிலை நிலைமைகள் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்துள்ளது. இயற்கை அழகுடன் கூடிய கடற்கரைகள், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள், தேசிய வனவிலங்கு சாலை, தேசியப் பூங்காக்கள் போன்ற சுற்றுலா பகுதிகள் இலங்கையில் பிரபல்யம் பெற்றுள்ளன. இந்நாட்டுக்கே உரித்தான கைப்பணிப் பொருட்கள், ஆயுள்வேத மருந்துகள், சமையற் கலைகள் (உணவுகள்- ஒடியற் கூழ், பனாட்டு, புளுக்கொடியல், பனாங்கட்டி) சம்பிரதாய மரபுகள் போன்றனவும் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துள்ள விடயங்களாகும். உவப்பான காலநிலையைக் கொண்ட நுவரெலியாவிற்கு ஏப்ரல் மாதத்திலும், சமயத்துடனும், பொழுதுபோக்குடனும் தொடர்புடைய சிவனொளிபாத மலைக்கு மார்ச் மாதம் முதல் யூலை மாதம் வரையிலும், மே மற்றும் யூன் மாதங்களில் அநுராதபுரத்திற்கும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் பயணிக்கின்றனர். தென்னிலங்கையில் வாழ்பவர்கள் வட இலங்கைக்கான சுற்றுலாவை அதிகளவில் விரும்புகின்றனர். உலக சுற்றுலா நிறுவனத்தினால் உலகில் சுற்றுலாவை மேற்கொள்ளலாம் என அடையாளப்படுத்தப்பட்ட 302 பாரம்பரிய அமைவிடங்களில் ஆறு(06) அமைவிடங்கள் இலங்கையில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.






இலங்கையின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு 1937ஆம் ஆண்டு 'சுற்றுலாப் பணியகம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் பின் 1966ஆம் ஆண்டு 'இலங்கை சுற்றுலா சபை' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 1973ஆம் ஆண்டு முதலாவது ஐந்து நட்சத்திர ஹோட்டல் நிறுவப்பட்டது. இவை யாவும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கான மைல் கற்களாகும். 1948ஆம் ஆண்டு ஏறத்தாழ 21,000 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இலங்கையில் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 லட்சத்து 44 ஆயிரத்து 328 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்ததுடன், 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 71 ஆயிரத்து 370 சுற்றுலா பயணிகள் மாத்திரமே வருகை தந்திருந்தனர். 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 166,975 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்திருந்த நிலையில் 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு சுற்றுலாப் பயணி கூட நாட்டிற்கு வருகை தரவில்லை என இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிகளின் எண்ணிக்கை 1,913,702 பேர் ஆக காணப்பட இது 2020ஆம் ஆண்டு முழுமையாக 507,704 பேராகவே காணப்பட்டது. 2020ஆம் ஆண்டு மார்கழி மாதம் மட்டும் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெறும் 393 பேரே ஆகும். இலங்கைக்கு 2020ஆம் ஆண்டு ஏப்ரல், மே, யூன், யூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர், ஒக்டொபர், நவம்பவர் ஆகிய எட்டு மாதங்களில் கொவிட்-19 தொற்றுக் காரணமாக ஒரு சுற்றுலாப் பயணி கூட வருகை தரவில்லை.

இலங்கைக்கு அன்னிய செலவாணியை பெற்றுத் தரும் பிரதான துறையாக சுற்றுலாத்துறை விளங்குகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு வகையான வேலை வாய்ப்புக்களை சுற்றுலாத்துறை வழங்குகின்றது. 1998ஆம் ஆண்டு 14,816 மில்லியன் ரூபாவினை அன்னியச் செலவாணியாகப் பெற்றுள்ளது. இலங்கை வரலாற்றில் சுற்றுலாத்துறை மூலம் அதிக அளவிலான வருமானம் கிடைத்த ஆண்டாக 2018ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது. 2018ஆம் ஆண்டில் 2,333,796 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்ததுடன் அவர்களின் ஊடாக அந்த ஆண்டு 4,380.6 மில்லியன் அமெரிக்கா டொலர் வருமானம் கிடைத்திருந்தது. அதேவேளை 2019ஆம் ஆண்டு, சுற்றுலாத்துறை மூலம் இலங்கைக்கு 3,606.9 மில்லியன் அமெரிக்கா டொலரும் 2020ஆம் ஆண்டு 682 மில்லியன் அமெரிக்கா டொலரும் வருமானமாகக் கிடைத்துள்ளது. வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்ந்த இலங்கையின் சுற்றுலாத்துறை மீண்டும் பாரிய பின்னடைவை நோக்கி நகர்ந்துள்ளமை, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின் மூலம் காணக்கூடியதாக உள்ளது. 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் இளைஞர் கிளர்ச்சி (J.V.P) காரணமாக இத்தொழிற்றுறையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து 1983ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஏற்பட்ட இனப் பிரச்சினை காரணமாகவும் 1996இல் ஏற்பட்ட மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல், மற்றும் சுற்றுலா மையங்களில் காணப்பட்ட பதற்ற நிலைமை, 30 வருடகாலமாக நிகழ்ந்த உள்நாட்டு யுத்தம், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடந்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதல்கள், உலகில் 2019ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸின் தாக்கம் இலங்கையிலும் 2020 மார்ச் மாதத்திற்குப் பின்பு மோசமான நிலைமை போன்றன காரணமாகவும் சுற்றுலாத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எனினும் 2021ஆம் ஆண்டு 195,000 இற்கும் குறைவான சுற்றுலாப் பயணிகளே வருகை தந்துள்ளார்கள் என இலங்கையின் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. 2022ஆம் ஆண்டு முழுமையாக (ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை) உலகின் 187 நாடுகளில் இருந்து 719,978 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள். இந்த வருடம் (2023) ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரையான நான்கு மாத காலப் பகுதியில் உலகின் 177 நாடுகளில் இருந்து 441,177 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளார்கள். 2023 ஜனவரியில் 161.80 அமெரிக்க டொலராக இருந்த இலங்கையின் சுற்றுலா வருமானம் பெப்ரவரியில் 169.90 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12வீதத்தை சுற்றுலாத் துறையானது கொண்டுள்ளது. 2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை தெரிவிக்கின்றது. 2019ஆம் ஆண்டு முழுமையாக இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,913,702 பேர் ஆக காணப்பட இது 2020ஆம் ஆண்டு முழுமையாக 507,704 பேராகவே காணப்பட்டது. 2020ஆம் ஆண்டு மார்கழி மாதம் மட்டும் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெறும் 393 பேரே ஆகும். இலங்கைக்கு 2020ஆம் ஆண்டு ஏப்ரல், மே, யூன், யூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர், ஒக்டொபர், நவம்பவர் ஆகிய எட்டு மாதங்களில் கொவிட்-19 தொற்றுக் காரணமாக ஒரு சுற்றுலாப் பயணி கூட வருகை தரவில்லை.

இலங்கைக்கு அன்னிய செலவாணியை பெற்றுத் தரும் பிரதான துறையாக சுற்றுலாத்துறை விளங்குகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு வகையான வேலை வாய்ப்புக்களை சுற்றுலாத்துறை வழங்குகின்றது. 1998ஆம் ஆண்டு 14,816 மில்லியன் ரூபாவினை அன்னியச் செலவாணியாகப் பெற்றுள்ளது. இலங்கை வரலாற்றில் சுற்றுலாத்துறை மூலம் அதிக அளவிலான வருமானம் கிடைத்த ஆண்டாக 2018ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது. 2018ஆம் ஆண்டில் 2,333,796 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்ததுடன் அவர்களின் ஊடாக அந்த ஆண்டு 4,380.6 மில்லியன் அமெரிக்கா டொலர் வருமானம் கிடைத்திருந்தது. அதேவேளை 2019ஆம் ஆண்டு, சுற்றுலாத்துறை மூலம் இலங்கைக்கு 3,606.9 மில்லியன் அமெரிக்கா டொலரும் 2020ஆம் ஆண்டு 682 மில்லியன் அமெரிக்கா டொலரும் வருமானமாகக் கிடைத்துள்ளது. வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்ந்த இலங்கையின் சுற்றுலாத்துறை மீண்டும் பாரிய பின்னடைவை நோக்கி நகர்ந்துள்ளமை, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின் மூலம் காணக்கூடியதாக உள்ளது. 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் இளைஞர் கிளர்ச்சி (J.V.P) காரணமாக இத்தொழிற்றுறையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து 1983ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஏற்பட்ட இனப் பிரச்சினை காரணமாகவும் 1996இல் ஏற்பட்ட மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல், மற்றும் சுற்றுலா மையங்களில் காணப்பட்ட பதற்ற நிலைமை, 30 வருடகாலமாக நிகழ்ந்த உள்நாட்டு யுத்தம், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடந்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதல்கள், உலகில் 2019ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸின் தாக்கம் இலங்கையிலும் 2020 மார்ச் மாதத்திற்குப் பின்பு மோசமான நிலைமை போன்றன காரணமாகவும் சுற்றுலாத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எனினும் 2021ஆம் ஆண்டு 195,000 இற்கும் குறைவான சுற்றுலாப் பயணிகளே வருகை தந்துள்ளார்கள் என இலங்கையின் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. 2022ஆம் ஆண்டு முழுமையாக (ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை) உலகின் 187 நாடுகளில் இருந்து 719,978 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள். இந்த வருடம் (2023) ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரையான நான்கு மாத காலப் பகுதியில் உலகின் 177 நாடுகளில் இருந்து 441,177 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளார்கள். 2023 ஜனவரியில் 161.80 அமெரிக்க டொலராக இருந்த இலங்கையின் சுற்றுலா வருமானம் பெப்ரவரியில் 169.90 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12வீதத்தை சுற்றுலாத் துறையானது கொண்டுள்ளது. 2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஜனவரி தொடக்கம் மார்ச் வரை) மதிப்பிடப்பட்ட சுற்றுலாத் துறையில் கிடைத்த வருமானம் 529.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். பயணத் தளமான Travel Triangle மூலம் 2023ஆம் ஆண்டில் பார்வையிடும் சிறந்த 24 நாடுகளில் இலங்கை முதல் இடத்தைப் பிடித்துள்ளது. பயண முக்கோணத்தின்படி (Travel Triangle) தங்கக் கடற்கரைகள், வன விலங்குகள் நிறைந்த காடுகள் உருளும் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் பனி மூடிய மலைகள் ஆகியவை இலங்கையை ஆசிய நாடுகளுக்குச் செல்ல சிறந்த நாடுகளில் ஒன்றாக உருவாக்கி உள்ளது. இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னான்டோ 2023ஆம் ஆண்டில் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் எனவும், 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைக்கும் என்ற நிர்ணயிக்கப்பட்ட இலக்கை இலங்கை அடைய திட்டமிட்டுள்ளார்.

## முடிவுரை

சுற்றுலா மனித வாழ்வுடன் இணைந்து, பிணைந்து சாதி, மத, நிற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மனிதநேயத்தையும், உலக மக்களிடையே நல்லெண்ணங்களையும் வளர்க்கிறது. ஒரு நாட்டின் அந்நியச் செலாவணியைப் பெருக்கி, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி ஏற்படுத்துகிறது. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சுற்றுலாத்துறையானது பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது. அதிகளவான நாடுகளில் இது இன்று வளர்ந்து வரும் ஒரு முக்கியமான தொழில்த் துறையாக விளங்கி வருகின்றது.

## உசாத்துணைகள்:


- Athula Gnanapala.W.K., & Sandaruwani. J. A. R. C., 2016, "Socio-economic Impacts of Tourism Development and Their Implications on Local Communities", International Journal of Economics and Business Administration, Vol. 2, No. 5, Publish Date: Nov. 2, 2016 Pages: 59-67.
- Fernando, S., Bandara, J., & Smith, C., 2016. "Tourism in Sri Lanka", In M. C. Hall, & S. J. Page (Eds.), the Routledge Handbook of Tourism in Asia: 251-264. Abingdon, Oxon, UK: Routledge.
- Kumudika K. E. Perera, 2017, "An Analysis of Recent Trends in Tourist Arrivals in Sri Lanka", Athens Journal of Tourism - Volume 4, Issue 1 – Pages 51-80.
- https://sltda.gov.lk/en/tourist-arrivals-from-all-countries. Access 05.05.2023.
- Central Bank of Sri Lanka, 2014, Annual report. Retrieved from https://www.cbsl.gov.lk/en/publications/economic-and-financial-reports/annual-reports/annual-report-2022.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் சமூக பொருளாதார காரணிகள் - ஓர் நோக்கு (சிறப்பாக பெற்றோரின் பங்கு பற்றிய ஒரு விசேட நோக்கு)

திரு எஸ். எஸ் உதயகுமார்
*முதுநிலை விரிவுரையாளர், பொருளியல் துறை,*
*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை*

## அறிமுகம்

ஒரு மனிதனை முழுமனிதனாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பது கல்வி என்ற அழியாத சொத்தாகும். இந்த கல்விக்கு கரை என்பது இல்லை இதனைக் கற்பதற்கு கிடைக்கின்ற நாட்களோ சில. வாழ்க்கை முழுக்க மனிதனால் கற்க முடியும். இருப்பினும் கற்றலில் ஆர்வம் மற்றும் பற்று என்பன ஏற்பட ஒரு மனிதனுக்கு அவனது கல்விக்கான அத்திவாரம் பலமானதாக அமைய வேண்டும். கல்விக்கான அத்திவாரம் என்பது ஒருவன் மாணவராகக் கற்கத் தொடங்குகின்ற முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி நிலையிலேயே இடப்படுகின்றது. இவ்வகையில் ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர் பெற்றோராகவும் இரண்டாவது பெற்றோர் ஆசிரியராகவும் விளங்குகின்றனர். இந்த வகையில் ஆரம்ப கல்வி மாணவரின் கல்வி வளர்ச்சியில் அவனுடன் சார்ந்த பல சமூக பொருளாதார மற்றும் அரசியல் பண்பாட்டியல் ரீதியான காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இருப்பினும் இங்கு முழு விடயங்களையும் கவனத்தில் கொள்வது உரையினை நீட்டிச் செல்லும் என்பதால் இவற்றில் குழந்தை பிறந்து பால் குடித்தல், உணவு உண்ணல், தனது தேவைகளை தானே செய்யப்பழகுதல் மற்றவர்களுடன் உரையாடப்பழகுதல் என்ற பல வழிகளில் முக்கியம் பெறுகின்ற பெற்றோரின் பங்கு இந்த குழந்தை மாணவனாகி ஆரம்ப கல்வி கற்கின்ற போதும் அவனது கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு மிக முக்கிய செல்வாக்குச் செலுத்துவதால் இந்த உரையில் ஆரம்ப கல்வி மாணவரின் கல்வி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் சமூக பொருளாதார காரணிகள் பற்றி மிகச் சுருக்கமாகவும் தொடர்ந்து பெற்றோரின் பங்கு பற்றி சிறப்பாகவும் நோக்கப்பட்டுள்ள வகையில் இந்த கட்டுரை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

## கல்வி பற்றிய எண்ணக்கரு

சமூகத்திற்கு சமூகம் பண்பாடு கலாசாரங்கள் காலத்திற்கு காலம் மாறிக் கொண்டிருந்தாலும் கல்வி எனும் தேவை அனைவருக்கும் பொதுவானதும் அதே நேரம் அவசியமான ஒன்றாகவும் காணப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கல்வி என்பது மாணவரிடையே அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை உண்டாக்கும் ஒரு செயற்பாடு எனவும் கூறலாம். "மனிதனை மனிதனாக்குவது கல்வி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது சுவாமி விவேகானந்தரது கூற்றாகும் (ஆறுமுகம் வ., 2000 22). மனிதனிடத்தே உள்ள மனிதத்துவம், மிளிர்வதற்கு அவனுடைய தேவைகள் நிறைவு பெற்று அவன் நிம்மதியான வாழ்க்கை வாழக்கூடிய வசதிகள் இருத்தல் அவசியம். உணவு உடை, உறையுள் என்ற மூன்று அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்வது கல்வி ஒன்றினாலேயே முடியும் கல்வியைப் பெறும் ஒருவன் அதன் உச்சப்பயனைப் பெறும் வகையில் செயலாற்றுவதிலேயே தங்கி உள்ளது எனலாம் "ஹேபேட் ஸ்பென்சர்" என்ற கல்விச் சிந்தனையாளருடைய கருத்துப்படி எமது வாழ்நாள் குறுகியதாக அமைவது மட்டுமன்றிப் பல விடயங்களில் அதைப்பயன்படுத்த வேண்டியுமுள்ளது. எனவே மனிதனுக்கு வாய்ப்பாக உள்ள காலத்தை அறிவைத் தேடுவதில் அதிக உயர்ந்த நன்மையைப் பெறக்கூடிய முறையில் உபயோகமான விடையங்களை கற்க வேண்டும். எங்களுக்கும் மற்றவர்களுக்கும் மிக உயர்ந்த நன்மை தரக்கூடிய அறிவைத் தேடிக்கொள்ள வேண்டும் எங்களது பூரண வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவது தான் கல்வியின் பிரதான நோக்கம், எனவும் ஆறுமுகம் வ. (2000 22) தனது ஆய்வில் சுட்டிக்காட்டியுள்ளார். இதன்படி கல்வி என்பதன் எண்ணக்கருவை விளங்கிக் கொள்ளமுடியும்.

கல்வி என்பது தனிப்பட்ட ஒருவருடைய அடிப்படைத் திறன்களை வளர்க்கவும், அறவொழுக்கங்களைக் கற்கவும் அவசியம் ஆகிறது. இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்களாக அல்லது உழைக்கும் வர்க்கமாக உருவாகும் போது எந்த ஒரு தொழிலைத் செய்து பணம் சம்பாதிக்கவும் தேவையான பயிற்சி அளிப்பது கல்வி ஆகும் ஒரு மனிதனின் நடத்தை மாற்றமே ஆகும். எனவே சமூகம் காணவிரும்புகின்ற சான்றோனை உருவாக்கும் அருஞ்சாதனமே கல்வியாகும்.

சமூக மேம்பாட்டிற்காகப் பங்காற்றும் நிறுவனங்களில் பாடசாலைகள் பிரதான பங்கினை வகிக்கின்றன. இந்த வகையில் பாடசாலைகளின் அபிவிருத்தி சமூக அபிவிருத்திக்கு இட்டுச்செல்லும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. உண்மையில் பாடசாலைகளின் வளர்ச்சிக்குப் பெற்றோர், ஆசிரியர்களின் பங்களிப்பு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர்கள் அக்கறை கொள்வது போலவே பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளின் மேம்பாட்டிற்காக அயராது உழைக்க வேண்டிய தேவை உள்ளது.

ஆரம்பக்கல்வி பருவ பிள்ளையினுடைய கல்வி வளர்ச்சியில், ஆசிரியரும் பெற்றோரும் பிள்ளையுடைய அவதாரபுருஷர்களாகவும் உதாரண கர்த்தாக்களாகவும், விளங்குகின்றார்கள் இந்த வகையில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஏணிப்படிகளாக உள்ளன.

பிள்ளையுடைய கல்வியில் வீடு எனும் சமூக நிறுவனமானது, கல்வியின் அத்திவாரமாக அமைகிறது. "நூறு ஆசிரியர்களை விட ஒரு புத்திசாலியான தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலானவர்" என்பதால் ஒரு தந்தையின் பொறுப்புக்கள் அதிகமாக இருப்பது தெரிய வருகிறது. வீடே கல்வியின் முக்கியமுகவராக இருப்பதுடன் அதன் அங்கத்தவரின் குணம், நடத்தை, ஒழுங்கு, மற்றும் ஆளுமை போன்றவற்றின் செல்வாக்கும் பயிற்சியளிக்கிறது.

ஆரம்பக் கல்வியில் குழந்தையின் கல்விக்கான முழுப் பொறுப்பும் பாடசாலை சார்ந்ததல்ல. பிள்ளையின் நடவடிக்கைகளை சரியாக கட்டியெழுப்ப பெற்றோராலேயே முடிகிறது. ஒரு பிள்ளை ஒருமித்து வாழுதல் ஒன்றாக வேலை செய்தல், கூட்டுறவு, உதவி செய்தல், இணக்கமாதல் போன்ற பல பாடங்களைக் கற்கின்ற முதலிடம் வீடே ஆகும்.

அவ்வாறு பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் போதுதான் ஆசிரியர்களிடமிருந்து மிகச்சிறந்த சேவையினைப் பெற முடியும். சமூகத்தின் பிரதான அங்கமாக படித்த இளையோர் சமுதாயம் காணப்படுவது சமூகத்தின் அபிவிருத்திக்கு அவசியமாகும்.

பாடசாலை ஒன்றின் அங்கத்தவர்களான மாணவர்களும் ஆசிரியர்களும் சமூகத்திற்கும் பாடசாலைக்கும் இடையிலான நல்லுறவினைப் பேணுவதில் பெற்றோரினைச் சிறந்த பாலமாகப் பயன்படுத்த முடியும். இந்த வகையில் சமூகத்திற்கும் பாடசாலைக்கும் இடையிலான நல்லுறவினை வளர்ப்பதற்குப் பாலமாக விளங்குகின்ற பெற்றோர்களதும் அவர்களை இணைக்கின்ற ஆசிரியர்கள், அதிபர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர், பழையமாணவர் சங்கத்தினர், பாடசாலை நலன் விரும்பிகள் அனைவரினதும் ஒத்துழைப்புடனும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை நல்ல நிலைக்கு கொண்டுவர முடியும். சிறப்பாக ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்விக்கான அத்திவாரத்தினை பலமாக அமைத்துக்கொள்ளவும் கற்றல் மீதுள்ள அச்சநிலைகளை நீக்கி சுயஆற்றலுடன் கற்கக்கூடிய ஆளுமையையும் தன்னம்பிக்கையினையும் கட்டியெழுப்பக்கூடியதான மனோதிடத்தினை கொண்டுள்ள மாணவர்களாக ஆரம்பக் கல்வியை (முதன்மை நிலை ஒன்று, இரண்டு மற்றும் மூன்றினை) நிறைவு செய்து இடைநிலை வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்களை வழியனுப்புவதில் சமூக பொருளாதாரக்காரணிகள் முக்கியபங்கு வகிக்கின்றன. இருப்பினும் அவற்றில் ஒரு அங்கமான பெற்றோருடைய பங்களிப்பு என்பது மிகவும் காத்திரமானதாக அமைகின்றது.

பிள்ளைகளின் உளவிருத்தி, உடல் விருத்தி வாழ்க்கைப் பழக்கவழக்கங்கள் சமூக ஊட்டத்துக்கான கல்வி கலாசாரம் பற்றிய அடிப்படை விளக்கங்கள் சமயம் மற்றும் ஒழுக்கக்கல்வி மூலமான தொழில் சார் அறிவு போன்றவற்றை வழங்குவதில் பெற்றோர் முக்கியமானவர்களாக உள்ளனர். அதாவது பிள்ளையை சமூக மயமாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்குத் தேவையான அடிப்படைகளை வழங்குவதில் பெற்றோர் முக்கியமானவர்களாக விளங்குகின்றனர்

.

இதனைக்கவனத்தில் கொண்டு இந்த ஆய்வானது ஆரம்ப கல்வி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்ற சமூக பொருளாதாரக் காணிகள் என்ற பொதுவான தலைப்புக்குள் ஆழமாக நுழைய முற்பட்டால் இந்த ஆய்வு நீண்டதாக அமைந்து விடும் என்பதால் காலத்தையும் தேவையையும் கருத்தில் கொண்டு ஆரம்ப கல்வி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்ற சமூக பொருளாதாரக் காரணிகள் பற்றிய ஒரு மேலோட்டமான தகவலைத் தருவதுடன் விசேடமாக பெற்றோரின் பங்களிப்பு பற்றி சற்று விரிவாக ஆராய்வதாகவே இந்த ஆய்வு அமைந்துள்ளது.

## ஆரம்பக்கல்வி நிலை

அண்மைக்காலங்களில் தேசிய ரீதியாகவும் வளர்முக நாடுகளின் மட்டத்திலும் சர்வதேச ரீதியாகவும் அதிக கவனயீர்ப்புக்குரிய அம்சமாக ஆரம்பக்கல்வி என்பது அமைகிறது. இந்த ஆரம்பக்கல்வி என்பது 5 - 10 வயது வரையான வயதில் தரம் 1 முதல் தரம் 5 வரையான காலகட்டத்தைக் குறிக்கும் இங்கு தரம் 1, தரம் 2 என்பன முதன்மை நிலை I எனவும் தரம் 3, தரம் 4 என்பன முதன்மை நிலை II எனவும் தரம் 5 இனை முதன்மை நிலை III எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. தரம் 5 இல் தேசிய ரீதியாக தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்களை தரம் 6 இல் சேர்ப்பதற்காகவும் வறிய பிள்ளைகளில் திறமையான மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குப் புலமைப்பரிசில் உதவுதொகை வழங்குவதற்காகவும் தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை நாடாளாவிய ரீதியில் நடாத்தப்படுகின்றது. இது மாணவர்ளுக்கு வயதுக்கு மிஞ்சிய ஒரு சுமையாகவே அமைந்துள்ளதென்பது பலரது அபிப்பிராயமாக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கல்வி வளர்ச்சியில் மாணவரின் தனியாள் நிலை தொடர்பான காரணிகள்

மாணவர்கள் கல்வியில் அக்கறை எடுத்து படிக்காமல் விடுவதற்கு மாணவனோடு கூடிய தனிப்பட்ட பிரச்சினைகளும் காரணமாக அமையலாம். இப்பிரச்சினைகள் பற்றிப் பெற்றோரும் ஆசிரியரும் பூரணமாக அறிவதில்லை. மேலும் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் தொடர்பு இல்லாமல் இருக்குமாயின் அல்லது மிகக் குறைவாக இருக்குமாயின் மாணவனின் பிரச்சினை பற்றி அறிய வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கும். இதற்கு மாணவனின் மனநிலை இவனுக்கு காணப்படுகின்ற பல்வேறு நோய்கள் என்பன காரணமாக அமைகின்றன. இதனால் உடல் தளர்வு அடைவதுடன் பயம், பதகளிப்பு, எந்த ஒரு செயற்பாட்டுக்கும் முன்வராத இயல்பு, எதிலும் பங்குபற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வமின்மை, விரக்தி, சிரத்தையற்ற நிலை, தனிமை, அலட்சியம் முதலான பிரச்சினைகள் மாணவன் உள்ளத்தில் ஏற்படுகின்றன. மேற்குறித்த நிலையில் ஒழுங்காக பாடசாலைக்கு வரவிரும்பாமை, அதிபர், ஆசிரியர்களுக்கு காரணமின்றி பயப்படல் மாணவர்களுடன் நெருக்கமாகப் பழகாமை எதிலும் வெறுப்படைதல் முதலான செயற்பாடுகளில் ஈடுபடுவர். தனக்குள்ள பிரச்சினையை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தாமல் எப்போதும் எதிலும் ஒதுங்கித் திரிபவராகவே காணப்படுவர். பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு உள்ள மாணவர்கள் சரியாக இனம் காணப்படாத நிலையில் இத்தகைய நிலைக்குத் தள்ளப்படுவதுடன் உளரீதியான நோய்களுக்கும் உள்ளாகி விடுவார்கள். மாணவனின் இயல் தகைமைக்கு மேற்பட்ட எதிர்பார்ப்பைப் பெற்றோர் கொண்டிருத்தல் குறிப்பிட்ட இலக்கை அடையுமாறு அவனை வற்புறுத்துதல். மாணவனுக்குத் தீர்மானம் எடுக்கும் சுதந்திரத்தை வழங்காமை முதலான பல காரணிகளும் அவனது கற்றல் நாட்டத்தைக் குறைக்கவே செய்யும். இதன் காரணமாக மாணவன் தனது கற்றல் செயற்பாட்டில் இருந்து இடைவிலகலுக்கு உள்ளாக நேரிடும்.

**மாணவரின் கல்வி வளர்ச்சியில் குடும்ப சூழ்நிலை தொடர்பான காரணிகள்**

கற்றலுக்குப் பொருத்தமானதாக வீட்டுச் சூழல் அமைதல் வேண்டும். குடும்பச் சூழல் என்பது பிள்ளையின் கல்வியில் பெரும்பங்கு வகிக்கின்றது.

ஒரு பிள்ளையின் ஆரோக்கியமானதும் மகிழ்ச்சிகரமானதுமான வளர்ச்சிக்கு அப்பிள்ளையின் குடும்பமே அடித்தளமாகும். ஆரோக்கியமான ஒரு குடும்பத்தில் வாழும் பிள்ளை உடல் மற்றும் உளநலத்துடன் வளரும். ஆரோக்கியமான குடும்ப அங்கத்தவரிடையே அன்பும் ஆதரவும் காணப்படும் ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பளிக்கும் நிலை காணப்படும். கல்வியில் உயர வேண்டும். ஏன்ற இலக்கைக் கொண்ட குடும்பங்கள் தமக்கும் சில கட்டுப்பாடுகளையும் ஒழுங்கு விதிகளையும் தியாகங்களையும் கொண்டிருக்கும். பிரச்சினைக்குரிய குடும்பங்களில் பிள்ளைகளிடம் இந்நிலைமை பேணப்படாமையால் இவ்வான குடும்பங்களில் வளரும் குழந்தைகளுக்கு உள பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. இந்தவகையில் குடும்பமே சகலவற்றுக்கும் அடிப்படை அறிவையூட்டும் செயற்பாடுகள் மூலம் குழந்தைகளுக்கு முன்னோடியாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கற்கும் வயதிலுள்ள குழந்தைகளுக்குக் குடும்பத்தில் இளைய சகோதரர்களைப் பிள்ளைகள் ஆற்ற வேண்டிய சூழ்நிலை மாணவனின் கல்விச் செயற்பாட்டைப் பெரிதும் பாதிப்பதாகவே உள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தம், குடும்பங்களின் புலம் பெயர்வும், முகாம்களில் வாழ வேண்டிய சூழலும், குடும்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரை, குடும்ப அங்கத்தவர்களை இழந்த அவலங்களும் பாடசாலையின் ஒழுங்கான வரவைப் பாதிக்கும் காரணிகள் எனக் கூறலாம்.

ஒரு பிள்ளையைப் பொறுத்தவரை ஒவ்வொருநாளிலும் கூடியளவு நேரம் குடும்பத்திலேயே செலவாகின்றது. அதாவது பாடசாலையில் செலவழிக்கும் நேரம் சில மணித்தியாலங்களே ஆகும். இதனால் பிள்ளையின் முழுமையான சமூகச் சூழல் குடும்பத்திலேயே உருவாக்கம் பெறுகிறது. பிள்ளையைப் பொறுத்து ஆரம்பகல்விப் பருவம் எல்லா விடயங்களையும் எளிதாக மனதில் பதியவைக்கும் பருவமாகையால் பல விடயங்களைக் குடும்பத்திலேயே பெற்றுக் கொள்கின்றது. இதனால் பெற்றோர் தமது முன்மாதிரி நடத்தைகளால் பிள்ளைகள் சரியான பாதையிலோ அல்லது தவறான பாதையிலோ வளரக் காரணமாக உள்ளனர்.

Castle B. என்பவர் வீட்டின் முக்கியத்துவம் பற்றி கூறுகையில் "பாடசாலையிலும் பார்க்க வீடுதான் ஒரு பிள்ளையுடைய வாழ்க்கைத் தரத்தையும் போக்கையும் தீர்மானிக்கிறது" என்றார். அதாவது குழந்தையின் கல்வியில் ஆசிரியருடைய பணி நிறைவேற்றப்படவோ அல்லது நிர்மூலமாக்கப்படவோ நன்மையாகவோ அல்லது தீமையாகவோ அமைவதற்கு அதுவே காரணியாகின்றது.

வீட்டிலே ஒரு பிள்ளையினுடைய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது அல்லது நிராகரிக்கப்படுகிறது. பிள்ளையுடைய உணர்வு பூர்வமான தேவைகள் திருப்தியாக்கப் படுகின்றன. அல்லது கிட்டாமல் செய்யப்படுகிறது அவனது தன்னிச்சைகள் திருத்தப் படுகின்றன. அல்லது அலட்சியப்படுத்தப்படுகின்றன. சிருஷ்டியான நல்ல நடத்தைகள் பெற்றோரின் செயற்பாட்டினால் பிள்ளையுடைய சிந்தனையில் விதைக்கப்படுகிறது அல்லது அழிக்கப்படுகிறது. ஆகவே நல்லதோ கெட்டதோ குடும்பம் தான் எல்லா வற்றையும் தீர்மானிக்கின்றது. எனவே ஒரு குடும்பம் தீமையற்றவற்றை பிள்ளைக்கு வழங்கும் போது நல்ல குணத்துடன் நல்லமுறையில் பிள்ளைதன் வாழ்வை அமைக்க எதுவாகிறது.

குடும்பங்களில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளின் காரணமாகக் குடும்பங்களுக்கிடையே நிகழும் ஒற்றுமையின்மை தாய், தந்தையர்களுக்கிடையேயான பொருத்தமற்ற நடத்தைக் கோலங்கள், தந்தையின் உதாசீனமான போக்குகள், தீய பழக்கங்கள் போன்றவற்றால் பிள்ளைகளின் தேவைகள் நிறைவேற்றப்படாமை ஆகியவற்றால் பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் சமூகம் தராமல் இருக்கலாம். பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளும் மேலதிகமான அன்பு, கணிப்பு, காப்பு முதலானவற்றைப் பெற்றோர் புரிந்து அப்பிள்ளையும் சமூகத்தில் ஒரு முழு மனிதன் என்ற உணர்வுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். நல்லுறவு கொண்ட குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் போன்று தமது தேவைகளைப் பெறுகின்ற பிள்ளைகளும் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வதை எல்லாப் பெற்றோர்களும் புரிந்து நடக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய பிள்ளைகளுக்குக் கிடைப்பது போன்று தமக்கும் கணிப்பு இருக்க வேண்டும் எனப் பிள்ளைகள் எண்ணுவார்கள். இதனைப் பெற்றோர் தமது மனதில் கொண்டு செயலில் காட்ட வேண்டும்.

## மாணவர் கல்வி கற்பது தொடர்பான சட்ட ஒழுங்குகளும் மாணவர் இடை விலகல் நிலையை ஏற்படுத்தும் காரணிகளும்

அனைவருக்கும் கல்வி

1990 இல் ஜொம்தியான் நகரில் (தாய்லாந்தில்) நடைபெற்ற "யாவருக்கும் கல்வி" என்ற விடயம் தொடர்பாக நடைபெற்ற உலக மாநாட்டில் கல்விக்கென ஒதுக்கப்படுகின்ற நிதி வளர்முக நாடுகளில் குறைந்து விட்டதான போக்கினைக் காட்டுவதாகவும் யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆய்வு வெளியிட்டுள்ளது. இத்தகைய பின்னணியிலேயே ஆய்வுப் பிரதேசத்திலும் 1990 ஆம் ஆண்டு முதலாக ஏற்பட்ட பொருத்தமற்ற சூழ்நிலைகளின் காரணமாக, பிள்ளைகளுக்குப் பாடசாலைக்குச் செல்லும் ஆர்வம் தொடர்ந்து குறைந்து வந்துள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தும் பணிகளில் பல தரப்பினரும் தமது செயற்பாடுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஆனால் 1999 - 2009 இடைப்பட்ட காலப்பகுதியில் இந்த விடயத்தில் மாற்றத்தினையும் அவதானிக்க முடியும்) (நேர்காணல் : சிவானந்தன் 2009)

கல்வி கற்காமல் விடுவதாலோ அல்லது கற்க வேண்டிய வயதில் கல்வியை இடைநடுவில் கைவிடுவதாலோ ஏற்படக்கூடிய இடர்பாடுகளைத் தடுத்து நிறுத்தி "அனைவருக்கும் கல்வி" என்ற குறிக்கோளை நோக்கி யாழ்ப்பாணத்தில் உள்ள கல்வி வலயங்கள் முனைப்பாக செயற்பட்டு வருகின்றமை இப்பிரதேச மாணவர்களின் குறிப்பிடத்தக்க ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்த வகையில் ஒவ்வொரு வாரத்தில் ஒரு நாள் கல்வி அதிகாரிகள், கூடி பாடசாலை செல்ல வேண்டிய வயதில் உள்ள இடைவிலகல் நிலையில் உள்ள மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புக்களை அளிக்க வேண்டும் என்ற விடயம் தொடர்பான செயற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்ற செயற்றிட்ட வடிவமே யுனெஸ்கோ அனுசரணையுடனான பாடசாலை சென்று இடை விலகிய மாணவர் விபர சேகரிப்பு 2009, செயற்திட்டமாகும். இந்த ஆய்வில் இனங்காணப்பட்ட பிள்ளைகள் அனைவருக்கும் பாடசாலைகளுக்கு ஊடாக இழந்த கல்வியை எழுத்தறிவூட்டல் பயிற்சியின் ஊடாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது இந்த வகையில்

- காலத்துக்கு காலம் பெற்றோர்களுக்கு விழிப்பூட்டல் கருத்தரங்கு நடாத்தப்பட்டமை,
- சனசமூக நிலையங்கள் சமூக கற்கை நிலையங்களின் ஊடாக எழுத்தறிவூட்டல் வகுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமை,
- விழிப்பூட்டலை ஏற்படுத்தும் குறும் திரைப்படங்கள் வெளிவரும் போது மாணவர களின் ஆற்றலை மேம்படுத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக 2009 இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண வலயக்கல்விப்பணிப்பாளரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கொணரப்பட்ட வெற்றிக்கு வழி, மற்றும் ஒப்பிலாமணி (தென்மராட்சியில் ஆசிரிய தினமொன்றில் கல்வி வலயத்தில் மேடையேற்றப்பட்டு பாராட்டுப் பெற்ற ஒப்பிலாமணி என்ற நாடகம் ப்னர் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் குறுந்திரைப்படமாக வெளியிடப்பட்டு பலரது பாரட்டுக்களைப் பெற்றதுடன் மாணவ சமுதாயத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். (நேர்காணல் : ந. சத்தியநாதன் முன்னாள் திட்டமிடல் பணிப்பாளரும் கோட்டக்கல்வி அதிகாரியும் தென்மராட்சி கல்வி வலயம், மற்றும் சிவானந்தன், முறைசாராக் கல்விப்பரிவு, யாழ்ப்பாண கல்வி வலயம் 2009. 9. 15. முற்பகல் 9.30 -10.00 மணிவரை)

எல்லோருக்கும் கல்வி என்பது இன்று உலகம் முழுவதிலுமுள்ள மக்களின் குரலாக அமைகின்றது. கல்வி அடிப்படை உரிமைகளில் ஒன்று என யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் வலியுறுத்துகின்றது. கட்டாயக்கல்வி பற்றிய சிறுவர்கள் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் சுருக்க வாசகம்

"எல்லாப் பிள்ளைகளும் கல்வி பயிலும் உரிமை உடையவர்கள். எனவே குறைந்த பட்சம் ஆரம்பக்கல்வியையேனும் கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்." என்ற வகையில் அமைந்துள்ளது.

முதியோர் கல்வி தொடர்பான நான்காவது சம்மேளனத்தின் அறிக்கையில் (பாரிஸ், மார்ச்1985) கற்பதற்கான உரிமை பற்றி குறிப்பிடும் போது

- வாசிப்பதற்கும் எழுதுவதற்குமான உரிமை
- கேள்வி கேட்பதற்கும் அதனை விளக்குவதற்குமான உரிமை
- ஆக்கங்களை உள்ளத்தால் படைப்பதற்கும் ஆய்வுகளை மேற்கொள்வதற்குமான உரிமை
- கல்வி வளங்களுக்குள் பிரவேசிப்பதற்கான உரிமை
- தனி நபரினதும் ஒரு கூட்டமைப்பினதும் திறமைகளை வளர்ப்பதற்கான உரிமை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கட்டாயக்கல்வி

கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமையாகும். கட்டாயக்கல்வி என்பது 5-14 வயது வரை ஒவ்வொரு பிள்ளையும் அடிப்டை அறிவுக்கு உட்படுத்துவதாகும். இது தற்பொழுது (2006 இன் பின்) 16 வயதாக உயர்ந்துள்ளது. தற்போது நாட்டின் கல்விக் கொள்கைச் செயற்பாடானது கட்டாயக் கல்வி அமுலாக்கல் மீது அதீத கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இலவசக் கல்வித் திட்டமானது நடைமுறையில் உள்ள போதும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் வறுமை, பெற்றோர் அக்கறையின்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கல்விச்சீர்திருத்தங்கள் போன்றவற்றினால் இப்பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாத நிலையினை, அல்லது இடைவிலகி நிற்கும் நிலையினை பல்வேறு தரப்பினரும் பதிந்து வைத்துள்ளனர். குறிப்பாக ஆரம்பப்பிரிவு, மற்றும் இடைநிலைப் பிரிவுகளிலேயே கூடுதலாக இந்த நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கட்டாயக்கல்வி சம்பந்தமாக எமது நாட்டில் 1998 இல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் பிரகாரம் 5-14 வயதிற்கு உட்பட்ட சகல பிள்ளைகளும் கட்டாயமாகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்ற செயற்பாடு நாடு முழுவதிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்விக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது சகல பெற்றோர்களினதும் முதியோர்களினதும் கடமையாகும். இக்கடமையினை உதாசீனம் செய்பவர்கள் சட்டப்படி குற்றவாளிகளாவர்.

ஒரு பிள்ளையினுடைய ஆரம்பக்கல்விப் பருவத்தில் அரசாங்கம், சமூக நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றை விடப் பெற்றோரின் பங்களிப்பே மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது. ஐக்கிய அமெரிக்காவில் வெளியிடப் பட்ட கொல்மன் அறிக்கையில் (Coleman's Report 1964) பிள்ளையின் கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு என்பது முக்கியமானதென வற்புறுத்தப் பட்டுள்ளமை ஆரம்பக்கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கினை தெளிவு படுத்துகின்றது.

இந்த வகையில் எமது நாட்டிலும் அரசு கட்டாயக் கல்வியினை உறுதிப் படுத்துவதுடன் இலவசக் கல்வி, இலவசப் பாடப்புத்தகம், இலவசச்சீருடை இலவச மதிய உணவு, மானிய அடிப்படையிலான பிரயாணச்சீட்டுகள், நிதி உதவு தொகைகள் என்பவற்றை வழங்கி கல்வியின்பால் அதிக அக்கறை காட்டி வருகின்றது. (உதயகுமார் எஸ். எஸ். 1995) இருந்த போதிலும் பாடசாலைகளில் இடைவிலகல் என்பது நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. இலவச சீருடை பாடப்புத்தகங்களின் விநியோகம், மற்றும் உதவு தொகை, பேருந்தில் பயணிப்பதற்கான பருவகாலச்சீட்டுக்கள் போன்ற பலதரப்பட்ட மாணவர்களின் நலன்புரித் திட்டங்கள் மீதான அரச மொத்த செலவீனம் 2003ல் 1820 மில்லியனாக விளங்கியது. சுயமாகக் கற்றலை நோக்கி மாணவரை ஊக்கப்படுத்துவதற்காக 2003 இல் பல்வகைப் பாடப்புத்தக முறை அறிமுகப் படுத்தப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

விரைவான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தொடர்ச்சியாக முன்னேற்றமடையும் கல்வி முறைமை ஒரு முன்தேவைப்பாடாகும். கல்வி முறைமையானது பொதுக்கல்வி தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி என்பவற்றுடன் இறுதியாக உயர் கல்வி என எல்லா முக்கிய பிரிவுகளையும் உள்ளடக்கும். கடந்த தசாப்தத்தில் பொதுக்கல்வியில் தனியார் துறையின் ஈடுபாடு மிகப் பெரிய அளவில் விரிவடைந்து, இலங்கையில் பொதுத் துறையினால் வழிப்படுத்தப்படும் கல்வி முறைமையிலிருந்த இடைவெளிகளை நிரப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவரும் உலகிற்கு ஏற்ப ஒவ்வொருவரும் தம்மைத் தயாரப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமான முன்நிபந்தனையாகும். இம்மாற்றத்திற்கு ஏற்பத்தம்மை தம்மை மாற்றாதவிடத்து அந்த இனம் அழிந்து போக நேரிடும் என்ற கருத்தை பரிணாம வாதிகள் முன்வைத்துள்ளனர். இந்த வகையில் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாத மாணவன் பாடசாலைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அக்கறை அற்றவனாகவே காணப்படுகின்றான். இது காலப்போக்கில் இடைவிலகலை உருவாக்கிவிடும். மாணவன் விரும்பியோ விரும்பாமலோ இந்த நிலைமை ஏற்பட்டுவிடும்.

**புதிய கல்விச் சீர்திருத்தம்**

இலங்கையில் 1998 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தமானது மாணவரை மையமாகக் கொண்டு தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கும் புதியதோர் வீச்சினைக் கொண்டன. இதற்கான உபகரணப் பயன்பாடும் மாணவர் வேலைத்திட்டங்களும் அதிகரித்துள்ளன. அதற்கேற்ப பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவ வேண்டும். தேவையான உபகரணமின்றிப் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளை தனக்குரிய வேலைத்திட்டத்தைச் சரியாகச் செய்யாது விடுவது மட்டுமன்றித் தனக்குரிய காரணங்களையும் சரியாக வெளிப்படுத்த முடியாது திணறுகின்ற சூழ்நிலை உருவாகின்றது.

இலங்கையிலே தொடர்ச்சியாக ஏற்பபட்டு வருகின்ற புதிய கல்வி கொள்கைளால் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது. இன்றைய வகுப்பறைச் செயற்பாடுகள் அறிவை மட்டும் விருத்தி செய்வதாக அன்றி பிள்ளைகள் வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன. இதனால் பிள்ளைகள் தாமாகவே கற்கவேண்டிய விடயங்கள் உள்ளடக்கப்படும் செயன்முறைகள் விளக்கங்கள் மற்றும் ஒப்படைகள் என்பன முக்கியம் பெறுகின்றன. இதனால் பிள்ளைகள் பாட நூலுக்கு அப்பால் புதிய விடயங்களைத் தேடி அறிய வேண்டிய தேவை உருவாகியுள்ளது. இதனால் வகுப்பில் ஆசிரியர் வழங்கும் வழிகாட்டலும் போதாது என்பதால் பிள்ளை, வீட்டில் தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், என்பவர்களினதும் நண்பர்களினதும், அயலவர்களினதும் உறவினர்களினதும் உதவிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. இதனால் தனியார் கற்றலானது கூட்டுக்கற்றலுக்கு வழிகோலுகிறது. இந்த வகையில் ஒரு பிள்ளையுடைய அதிலும் குறிப்பாக ஆரம்பக்கல்வியிலே பெற்றோரின் பங்களிப்பு என்பது மிக மிக அவசியமான ஒரு முன் தேவைப்பாடாக உள்ளதை யாரும் மறுக்க முடியாது.

ஒரு பிள்ளையின் கல்வியில் வீட்டுச் சூழலும், பொருளாதாரமும் வாய்ப்பானதாக அமைதல் வேண்டும். வீட்டில் குடும்பத்தலைவன், தலைவி, சகோதரர்கள் இழத்தல், இடப் பெயர்வுகள், சொத்துக்கள் இழக்கப்படுதல் நிரந்தரமற்ற குடியிருப்புக்கள், வசதியற்ற குடியிருப்புக்கள் பிள்ளைகளின் மனநிலையைப் பாதிப்படையச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அவர்களால் தொடர்ந்தும் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் இருக்கும். சில குடும்பங்களில் சில மாணவர்களே குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டியும் ஏற்படும். இந்நிலையில் குறித்த மாணவன் தான் வருமானத்தை உழைத்துக் கல்விச் செயற்பாட்டில் பங்கு கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இந்நிலை ஒரு மாணவனின் ஒழுங்கான வரவைப் பாதிக்கும். மேலும் வீட்டில் இளையோரைப் பராமரித்தல், தந்தையின் தொழிலுக்கு உதவுதல், நோய் வாய்ப்பட்டோ அல்லது அங்கவீனமடைந்தோ இருப்பவரைப் பராமரித்தல், போசாக்குக் குறைபாடுகள் என்பன பாடசாலைக்குப்பிள்ளைகளை ஒழுங்காக வருகை தருவதைப் பாதிக்கச் செய்யும் காரணிகளாக அமைந்துவிடுகின்றன.

## கற்றல் செயற்பாட்டின் முக்கியத்துவம்

இன்றைய கல்வி முறையினை குழந்தை மையக்கல்வி என பேராசிரியர் சந்தானம், குறிப்பிடுவது போல, பாடப் பொருட்களின் ஆதிக்கம் இன்று கல்வி முறையில் குறைந்தே காணப்படுகின்றது ஒவ்வொரு குழந்தையும் தனிப்பட்டவன் என்றும் அக் குழந்தை களிடையே ஆற்றல், கவர்ச்சிகள் நாட்டங்கள் ஆகியவற்றிலே தனியாள் வேற்றுமைகள் உள்ளன என்பதும் இன்று கருத்தில் கொள்ளப்படுகின்றன. "கற்றலின்றிக் கற்பித்தல் பயனற்றது" என்றும் கற்றல் மாணாக்கனது சுயமான செயல்களின் (Self activity) அடிப்படையிலேயே எழுகின்றது என்ற விடயம் இன்று பொதுவாக எல்லோராலும் உணரப்பட்டுள்ளதாக கல்வித்துறைப் பேராசிரியர் சந்திரசேகரம், (சந்திரசேகரம், சோ 2004) குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக, வசதியான குடும்பப் பிள்ளைகளே கடினமான கற்கைகளில் மேலோங்குகின்றனர். வறிய குடும்பங்களில் ஊட்டமுள்ள உணவும் சுகாதார சூழலும் கிடைப்பதில்லை. வீட்டில் இருந்து (பெற்றோரிடம் இருந்து) காலை உணவு உண்ணாது பள்ளி செல்லும் வறிய பிள்ளைகள் பாடத்தில் கவனம் செலுத்த முடிவதில்லை. அது மட்டுமன்றி முயன்று சிந்திக்க முடிவதுமில்லை பெரும்பாலும் 3 பாடவேளை முடிவின் பின் எதிலும் கவனம் செலுத்த முடிவதில்லை. இதனால் சோர்ந்து விடுவதுடன் உற்சாகமற்ற மாணவராகத் தென்படுகின்ற சூழ்நிலைக்கும் தள்ளப்படுகின்றனர் என கல்வித்துறைப் பேராசிரியர் சின்னத்தம்பி (சின்னத்தம்பி மா. 2007) சுட்டிக் காட்டியுள்ளார். இதனால் மாணவர் ஆசிரியரின் விருப்பத்துக்கும் ஈடுபாட்டிற்கும் ஒவ்வாதவர் என்ற நிலைக்கு உள்ளாகின்றனர். இந்த நிலை இறுதியில் மாணவரின் கற்றல் செற்பாட்டைப் பாதிப்பதுடன் மட்டுமன்றி கற்றல் செயற்பாட்டிலிருந்து பூரணமாக மாணவர் இடை விலகும் நிலைக்கும் தூண்டுதலாக அமைந்து விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் செயற்பாட்டிலிருந்து இடைவிலகுவதற்கான காரணங்களும் கல்வியில் ஆர்வமின்மைக்கான காரணங்களும்

பொதுவாக கல்வி தொடர்பாக அதன் வரலாறு, வளர்ச்சி, மற்றும் இன்றைய நிலை என்ற நோக்கில் ஆய்வாளரால், இந்த ஆய்வில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் பல விடயங்கள் தொடர்பாக உரையாடி அதன் மூலம் பெறப்பட்ட தரவுகளில் இருந்தும் முறைசார் நேர்காணல் முறை மற்றும் உற்றுநோக்கல் மற்றும் அவதானிப்புக்கள் மூலமும் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலும் பொதுவாக எமது பிரதேசத்தில் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் இருந்து இடைவிலகுவதற்கான காரணங்கள் மற்றும் கல்வியில் ஆர்வமின்மைக்கான காரணங்கள் பற்றிய தொகுப்பாக பின்வரும் பெறுபேறுகள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

- பெற்றோர் கல்வியறிவு குறைந்தவர்களாக அல்லது கற்காதவர்களாக் காணப்படல்:-
- பாடசாலை தூர இடத்தில் அமைந்திருத்தல்:-
- குழந்தை உள உடல் குறைபாடு கொண்டிருத்தல் அல்லது நோய்வாய்ப்பட்டிருத்தல் அல்லது குறைவான ஆற்றல் கொண்டிருத்தல்
- பெற்றோர்களின் வறுமைநிலை காரணமாக பிள்ளைகள் பாடசாலையிலிருந்து இடையில் விலகுதல் அல்லது விலக்குதல்.
- தமது வீட்டுச் சூழலிலுள்ள பாடசாலை வளமற்றுக் காணப்படுதல்:-
- வடக்கில் தொடச்சியாக நடைபெறும் யுத்தத்தின் விளைவாய் மாணவர் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தல்.
- குடும்ப வருமானம் குறைவடைதல்
- இளவயதில் நடந்தேறும் திருமணங்கள், இளவயதில் தாய்மையடைதல்,
- சமவயதுக் குழுக்களுடன் இணைந்து செயற்படுவதன் விளைவுகள்.

## மாணவர்கள் கற்க வேண்டிய வயதில் கல்வியினைத் தொடர்ந்து கற்காமல் இடைவிலகிச் செல்வதனால் ஏற்படக் கூடிய விளைவுகள்

மாணவர்கள் தாம் பெறவேண்டிய கல்வியினை உரிய காலத்தில் பெறாமல் பாடசாலையிலிருந்து இடைவிலகுவதன் காரணமாக அவன் சமூகத்தில் வேண்டத்தகாத விளைவுகளை ஏற்படுத்துவான்.

பாடசாலை கல்வியினை இடையிலே நிறுத்திவிடும் மாணவன், சமூகத்தினால் தவறான பார்வையில் நோக்கப்படுவான். இம் மாணவன் தன்னைக் கவரும் தோழர்களைத் தேடி இணைந்து கொள்வான். இதன் மூலம் போதைப்பொருட் பாவனை, பாலியல் தொடர்பான குற்றங்கள், முரண்பட்ட சுபாவத்தன்மை முதலான தீய செயல்களில் ஈடுபட நேரிடும். எதிர்பாலர்களில் அதிக அக்கறை கொள்வான். இதனால் குறைந்த வயதிலேயே சமூக கலாசார ரீதியிலான பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவிலகினால் தன் வாழ்க்கையைச் சீரழித்த ஒருவன், மற்றவரின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்க மாட்டான். கல்வி கற்கச் செல்லும் ஏனைய பிள்ளைகளின் நடத்தைகளுக்கும் இடையூறாக இருக்க முற்படுவான்.

கல்லூரி வாழ்க்கையை இடைநிறுத்திய பல மாணவர்கள் சிறுவயதிலேயே வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும், வேலைக்கமர்த்தப்பட்டு துன்புறுத்தப் படுகின்றனர். குறிப்பாக கீழைத் தேசங்களில் இந்த நிலையை அவதானிக்க முடிகின்றது. இதனால் இப்பிள்ளைகள் தமது உரிமைக்குத் தாமே குழி பறித்து விடுகின்றனர். இவைபற்றி சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் தனது கல்வி என்ற சஞ்சிகையில் பின்வருமாறு:

பெரும்பாலான பிள்ளைகளின் படிப்புக்கள் தெருக்களிலும், வயல்வெளிகளிலும், கூலிவேலைத் தளங்களிலும், பாடசாலையல்லாத வேறு எங்காவது பெற்றுக் கொள்ளும் ஒன்றாகவே இருக்கின்றது. வளர்முக நாடுகளில் 06 தொடக்கம் 11 வயதுக்குட்பட்ட பல்லாயிரக்கணக்கான சிறுவர் சிறுமிகள் அடிப்படைக் கல்வி பெறும் வாய்ப்பற்றவர்களாக இருக்கின்றார்கள்" என்ற வகையில் தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

மேலும் யுனெஸ்கோ நிறுவனமானது 100 வளர்முக நாடுகளில் மேற்கொண்ட ஆய்வின்படி 2/3 பங்கு நாடுகள் தமது கல்விக்காகச் செலவிடும் தொகையைக் குறைத்துள்ளது எனவும் 90% ஆன நாடுகளில் ஆரம்ப வகுப்புகளில் சேரும் பிள்ளைகளின் வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது, வளர்முக நாடுகளில் ஒவ்வொரு வருடமும் முன்பள்ளிக்குச் செல்லாது இருக்கும் பிள்ளைகளில் குறைந்தது 60 வீதமானோர் பெண்பிள்ளைகள் எனவும் எழுத்தறிவற்றவர்களில் 1/3 பங்கினரே பெண் பிள்ளைகளாகவும் மிகுதி 2/3 பங்கினர் ஆண்களாகவும் உள்ள நிலைபற்றியும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலைமை யாழ்ப்பாணத்திலும் கற்கின்ற மாணவர்களில் ஆண்களின் பங்கை விட பெண்களின் பங்கு அதிகரித்து வருவதை எமக்கு ஞாபகப்படுத்துகின்றது.

எனவே நாம் ஒட்டு மொத்தமாக நோக்கும்போது எதிர்காலச் சந்ததியை உருவாக்கும் நல்ல நோக்குடன் செயற்பட வேண்டியது இன்றியமையாதது ஆகும். இவை எமது கடமை இல்லையென யாரும் தட்டிக்கழித்து விட முடியாது. எனவே பிள்ளையின் முன்னேற்றத்தில் பாடசாலை, குடும்பம், சமூகம் எனப்பிரிந்து நிற்காது இவை யாவும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலமே, எதிர்காலத்தில் உலக மயமாக்கலுடன் சேர்ந்து இயங்கக் கூடிய சவால்களை எதிர் கொள்ளும் தன்மையுள்ள ஒளிமயமான ஒரு சமுதாயத்தை எம்மால் உருவாக்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு பிள்ளையின் கல்விப்பயணத்தில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் பின்வரும் விடயங்கள் பாரியதாக்கத்தினை சலுத்துகின்றது.**

❍ குடும்ப பொருளாதார நிலை - வறுமை என்ற வகையில்:

- குடும்ப உறுப்பினர் தொகையின் அளவு .
- இளைய சகோதரர்களைப் பராமரிக்க வேண்டிய சூழ்நிலை
- குடும்பத்தில் ஏற்படுகின்ற பிணக்குகள்
- பெற்றோரின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு
- பெற்றோரின் அன்பு அரவணைப்பு, பாதுகாப்பு, மற்றும் ஊக்குவிப்புக்களின் நிலை
- பெற்றோர் பிள்ளைகள் அன்னியோன்னிய உறவு நிலை
- பிள்ளைகளைக் கொண்டு சம்பாதிக்க முற்படுகின்ற பெறறோரின் மனோநிலை
- இளவயது திருமணம்.

❍ பெற்றோரிடையே கல்வி பற்றி விழிப்புணர்வின்மை என்ற வகையில்:

- பெற்றோரின் குறைந்த கல்வி அடைவு மட்டம்
- பெற்றோர் கல்வி கற்ற சூழ்நிலை
- பெற்றோருடன் வாழும் வாய்ப்பின்மை
- பெற்றோர்கள் பெண்பிள்ளைகளின் கல்வியில் கொண்டுள்ள ஆர்வமின்மை
- எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை. (வேலைவாய்ப்பு)
- பெற்றோர் பிரிந்து வாழுதல்
- பெற்றோர் வேறு திருமணம் புரிதல்
- பெற்றோரின் மூடநம்பிக்கைகளும் பிடிவாதமான குணநடைகளும்

❍ ஏனைய சூழ்நிலைகள் என்ற வகையில்

- பிறப்பு சான்றிதழ் பெறுவதில் உள்ள இடர்பாடுகள்
- பாடசாலையில் இணைந்து கற்க முடியாமை.
- இடப்பெயர்வுகளை எதிர்நோக்குதல்
- பாடசாலையின் கற்றல் - சூழல்
- பிள்ளைகளின் மெல்லக் கற்கும் தன்மை
- பாடசாலையில் பௌதீக வளத்தேவைகள் நிறைவேற்றப்படாமை
- பெற்றோரின் போதை வஸ்துப் பாவனை
- பிள்ளைகளின் உடல் உளக் குறைபாடு
- கல்வியின் முக்கியத்துவம் மாணவர்களால் உணரப்படாமை.
- வகுப்புகளில் சித்தியின்மை
- நடைமுறையில் உள்ள பொருத்தமற்ற கல்வி நடவடிக்கைகள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்க வேண்டிய வயதில் தொடர்ந்து கற்காமல் இடைவிலகலுக்கு உட்படுகின்ற மாணவர்களில் அதிகளவில் இடம்பெறுகின்றவர்களாக:**

- ❖ அதிகமாக கல்வியில் குறைவான தகமைகள் உள்ளவர்கள்.
- ❖ மீண்டும் மீண்டும் ஒரே வகுப்பில் கற்பவர்கள். (தேக்க நிலை)
- ❖ குறைவான சமூக பொருளாதார அமைப்புக் கொண்டவர்கள்.
- ❖ கல்வி கற்கும் போதே தகாத தொடர்புகளாலும் வயதுக்கோளாறின் விளைவுகளாலும் இளவயதிலேயே தாய்மை அடையும் பெண்பிள்ளைகள்
- ❖ பாடசாலைக்கான வரவு ஒழுங்கு குறைந்த நிலையில் உள்ளவர்களாக விளங்குகின்றனர்.

**பிள்ளைகள் கல்வி கற்க வேண்டிய வயதில் கல்வி கற்காமல் விடுவதால் ஏற்படும் விளைவுகள்**

கல்வி கற்க வேண்டிய வயதில் கற்காது விடுகின்ற ஒரு பிள்ளை பல்வேறு வகையான இடர்ப்பாடுகளுக்கு உள்ளாக நேரிடுகின்றது. அந்தவகையில் :

- ➢ கையொப்பமிட முடியாமை
- ➢ சொற்களைத் தெளிவாக உச்சரிக்க முடியாமை
- ➢ முன் வந்து பேச முடியாமை
- ➢ தேவைகளை இனங்காண முடியாமை
- ➢ தாழ்வு மனப்பன்மை
- ➢ அதீத கற்பனைப் போக்கு
- ➢ நவீன கல்விச் சிந்தனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமை
- ➢ கூலி வேலைகளுக்கு செல்லல் என்ற வகையில் படிப்பறிவற்ற தொழிலாளர் அணியைக் கொண்ட இக்குழுவினர் (கல்வியை இடைநடுவில் கைவிட்டு தொழில் புரியும் குழுவினர்) எதிர்நோக்கும் தொழில்களைத் தீருப்பிகரமாக செய்ய முடியாமை போன்ற பல எதிர் கொள்கின்ற இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்படுகின்றது.

**ஆரம்பக்கல்வி பருவ பிள்ளை தொடர்பாக பெற்றோரின் பங்களிப்புகள் என்ற வகையில் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

- ❖ பிள்ளைகளுடைய கருத்துக்களை செவிமடுத்தல்
- ❖ பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்புதல்
- ❖ பிள்ளைகளுடைய சமவயதுக்குழுக்களுக்கு ஊக்கம் வழங்குதல்
- ❖ பிள்ளைகளை சமூகமயமாக்கதல் நிலைக்கு உதவிபுரிதல்
- ❖ பிள்ளைகளுக்கு தேவையான போசாக்குள்ள உணவு வழங்குதல்
- ❖ பிள்ளைகள் வயதுக்கேற்ற நித்திரைக்கு வாய்ப்புக்கொடுத்தல் பழக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பிள்ளைகளினது ஆக்க செயற்பாடுகள் தொடர்பாக ஊக்குவித்தல் மற்றும் தன்மைன்ம்பிக்கையை வளர்த்தல்

❖ பிள்ளைகள் தமது திறமைகளை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பளித்தல் போன்றவற்றை மேற்கொள்ளல்.

**பெற்றோர் தம் பிள்ளைகளின் வகுப்பறைக் கற்றல் தொடர்பாகப் பின்வரும் அம்சங்களில் கவனஞ்செலுத்துதல் அவசியமானதாக அமைகிறது.**

1. பிள்ளைகள் கற்றல் தொடர்பாக நாளாந்தம் ஈடுபடும் வேலைகளில் கவனம் செலுத்துதல்
2. பிள்ளைகளின் வீட்டு வேலைகளில் பங்கேற்றல்
3. பாடசாலையில் நடைபெறும் விடயங்கள் பற்றி கலந்துரையாடுதல்
4. பிள்ளைகளுடன் சேர்ந்து பாடங்களைப் படித்தல்
5. தேவைப்படும் போது பாடசாலை மற்றும் ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுதல்
6. பெற்றோருக்கென ஒழுங்கு செய்யப்படும் கூட்டங்களில் பங்கேற்றல்
7. பிள்ளைகளின் ஒப்படை மற்றும் செயற்றிட்டங்களுக்கு உதவுதல்
8. குறித்த வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளின் பெற்றோருடன் கல்வி சார்ந்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்
9. பிள்ளைகளுக்கான ஓய்வு நேரச் செயற்பாடுகள் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் தாமாகமுன் வந்து உதவுதல்
10. பிள்ளைகளுக்கு என நடாத்தப்படுகின்ற பல்வேறுபட்ட போட்டிகளுக்குப் பிள்ளை களைத் தயார்ப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் வேண்டும்.

இவ்வாறாகப் பெற்றோர் பிள்ளைகளுக்கு அண்மிய நிலையிலிருந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கும் போது பிள்ளைகளின் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படுவதை நடைமுறை அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றது.

**பெற்றோர் பாடசாலையுடன் தொடர்பு கொள்வதன் அவசியம்**

பெற்றோர் பாடசாலையுடன் சிறந்த தொடர்புகளைப் பேணுவதால் தமது பிள்ளைகளின் முன்னேற்றறத்தை மேலோங்கச் செய்யலாம். வாரம் ஒரு தடவையே அல்லது மாதாந்தமோ பெற்றோர் பாடசாலையுடன் தொடர்பு கொண்டு பிள்ளைகளின் நிலை தொடர்பாக அறிந்து கொள்வது நல்லது. வீடு மற்றும் பாடசாலை என்பவற்றின் தொடர்பு பற்றி George Tomlinson என்பவர் கூறும் போது "பிள்ளையின் நலனை மனதில் கொண்டு எமது வீடுகளை அலங்கரிப்பதுடன் பாடசாலையையும் அலங்கரிப்போம்" என்றார். பெற்றோர் ஆசிரியர்களுக்கிடையில் ஏற்படும் எந்தவொரு சச்சரவும் பிள்ளைகளுக்கு ஆபத்தாகவே இருக்கும். ஆகவே இணக்கமாக இருந்தால் தான் விரும்பிய பலாபலன்களை பெற்றுக் கொள்ளலாம். பால கிருஷ்ணஜோசி என்பவர் "ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையுடைய முதல் ஆசானான பெற்றோருக்கும் இரண்டாவது பெற்றோரான ஆசிரியருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பும் ஒத்துழைப்பும் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

சில நேரங்களில் பெற்றோர்களுக்கு ஆசிரியரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. பிள்ளையுடைய முன்னேற்றம் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் கல்வியில் ஏற்படும் செலவீனங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் எப்போதும் ஆசிரியரின் உதவி தேவையானதாக உள்ளது. அதே வேளை ஆசிரியரும் பெற்றோரின் உதவியை எதிர்பார்க்கின்றனர். பிள்ளை பற்றிய தகவல் பெறவும் பிள்ளையின் ஒழுங்கான வரவினை உறுதி செய்யவும் பிள்ளைக்குத் தேவையான உபகரணங்களைப் பொருத்தமான நேரத்தில் பெற்றுக் கொள்ளவும் ஆசிரியருக்குப் பெற்றோரின் உதவி தேவைப்படுகிறது. எனவே ஆரம்பக்கல்வியில் பெற்றோரின் பங்கு அதிகமாகிறது.

## கற்றல் செயற்பாட்டில் இருந்தான இடைவிலகல் நிகழ்வைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதகு மேற்கொள்ளப்பட வேண்டிய சில செயற்பாடுகள்

- ❖ பாடசாலை அமைப்பு முறையாக கல்வியை புத்தாக்கம் செய்தல்.
- ❖ தொழில் வாய்ப்பை அதிகரித்தல்.
- ❖ ஆரம்ப பருவங்களில் கல்வி வழங்கல்
- ❖ பாடசாலையை மாற்றி அமைத்தல்
- ❖ தொழில்நுட்பம் புகுத்தல்
- ❖ சேவையாகக் கற்றலை மேற்கொள்ளல்
- ❖ பாடசாலை வெளி அனுபவம் உருவாக்குதல்.
- ❖ முரண்பாடுகளை நீக்குதல்.
- ❖ சமூகமயமான கல்வி முறைமை.
- ❖ குடும்பம் கல்வியில் தொடர்புபடல்
- ❖ வாசித்தல், எழுதுதல் நடவடிக்கை அதிகரித்தல்.
- ❖ மாணவர்களின் தனித்தன்மை பேணல்
- ❖ மெல்லக்கற்கும் மாணவர்கள் உட்பட தேவையான பாடங்கள் தொடர்பான கல்வி மேலதிக வகுப்புக்கள் எடுக்கப்படுதல் வைத்தல்.
- ❖ வாழ்க்கைக்கு ஏற்ற தொழில் கல்வியை வழங்குதல்.

## ஆரம்பகல்வி கற்கின்ற மாணவர்கள் மத்தியில் கல்வி கற்பதற்கான ஆர்வத்தினை வளர்த்தெடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய சில நடவடிக்கைகள்

- ❖ மாணவர்களுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்
- ❖ ஆசிரியர்கள் புதிய கற்றல் கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மாணவர்களுக்கு செயன்முறை மற்றும் அறிமுறை ரீதியான பயிற்சிகளை வழங்குதல்

❖ மாணவர்களின் இணைபாடவிதான செயற்பாடுகளை வளர்த்தெடுக்கக் கூடிய வகையில் விளையாட்டு மைதான வசதி மற்றும் இதர வசதி வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்க நிர்வாகத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல்

❖ பெற்றோர்கள் மத்தியில் கல்வி தொடர்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற பல செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக இதனை அடைய முடியும்.

## ஆன்மீக மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் பிள்ளைகளைத் துண்டுவதில் பெற்றோரின் பங்கு

ஆரம்பக் கல்விக்கான காலத்தில் பிள்ளையின் வளர்ச்சியில் வீட்டு சூழல் பல பணிகளை ஆற்றியுள்ளது வீட்டிலுள்ள பெரியவர்கள் பிள்ளைகளை அறநெறியில் வழிப்படுத்தினர். அத்துடன் முன்மாதிரியாகவும் விளங்கியுள்ளனர் அக்காலத்தில் உயர் இலட்சியத்துக்காக முன்நின்று உழைத்தவர்களை நினைவு கூர்ந்து. பெற்றோர் வாழ்ந்த விதம் பிள்ளைகளிடம் நன்னடத்தையை ஏற்படுத்தியது. அத்துடன் சமய சடங்குகளிலும் பிள்ளைகளைப் பங்குபற்றச் செய்தமையால் ஆன்மீக விருத்திக்கான வாய்ப்புக்களை பிள்ளைகள் பெற்றுக் கொண்டனர்.

ஆரம்பப்பாடசாலை பிள்ளைள்க 05 - 10 வயதிற்கு உட்பட்டவர்கள் - தரம் 01 முதல் தரம் 5 வரை கல்வி கற்பவர்கள் கூடுதலாக குழுவிளையாட்டுக்களில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பர். இதனைத்தூண்ட பொருத்தமான முறையில் தூண்ட வேண்டிய பொறுப்பு பெற்றோரின்கைகளிலேயே உள்ளது.

இந்த வகையில் பிள்ளைகளின் ஆரம்பக்கல்வியிலே விளையாட்டின் முக்கியத்துவத்தை பெற்றோர் அறிந்து செயற்பட வேண்டும். விளையாட்டு நேரத்தை, விரயமாக்கும் என்ற தப்பான எண்ணத்துடன் அவர்களை விளையாட அனுமதி மறுப்பது தவறாகும். இன்றைய கல்வி தொடர்பான கலைத்திட்ட முறையில் குறிப்பாக, ஆரம்பக்கல்வி பாடவிதானத்தில் கூட "விளையாட்டின் மூலம் கற்றல்" முக்கியம் பெறுகிறது எனவே வீட்டில் பிள்ளைகள் விளையாடக் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். அத்துடன் பிள்ளையுடைய சுய வெளிப்பாட்டுக்கான சந்தர்ப் பங்களையும் வழங்க வேண்டும். பொழுது போக்குகளில் ஈடுபடப் பிள்ளைகளை ஊக்குவித்து பத்திரிகை, சிறுகதை மற்றும் நாவல்கள் போன்றவற்றை வாசிக்கக் கொடுக்கலாம். இதனால் பிள்ளையுடைய வாசிப்புத்திறனும் வாசிப்பு வேகமும் தேடி வாசிக்கும் பழக்கமும் விருத்தி பெறும் இன்று பல பிள்ளைகளிடையே வாசிப்புத்திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதாமையால் பல கற்றல் இடர்பாடுகளை அவர்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. எனவே இத்தகைய வாசிப்புடன் தொடர்படைய பொழுதுபோக்கானது பயனுடையதாக அமையும்.

## சமூகமயமாக்கத்திற்குள் பிள்ளைகளைப் பிரவேசிக்கச்செய்வதிலும் பொறுப்புகளை ஏற்கும் ஆர்வத்தை தூண்டுவதிலும் பெற்றோரின் பங்கு

ஒரு பிள்ளையை அப்பிள்ளை வாழப் போகும் சமூகம் எதிர்பார்க்கும் ஒழுங்குகளுக்கு ஏற்ப அதன் நடத்தையை அமைக்கச் செய்தலே, சமூகமயமாக்கல் ஆகும். பிள்ளையை சமூகவியல்பு உடையவனாக ஆக்குவதில் பாடசாலையுடன் இணைந்த வகையில் வீடு, பெரும் பங்கினை வகிக்கிறது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதாவாது என்பது போல தனியே புத்தகத்தை மாத்திரம் படித்து பயனில்லை ஔவையார் குறிப்பிட்டது போல கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்பது போல ஒவ்வொரு மாணவனும் தான் கற்கின்ற காலத்தில் கற்ற கொஞ்ச விடயத்தைக் கூட சமுகத்துக்குப் பயன்படக்கூடிய வகையில் நடு ஊரில் உள்ள நல்ல கனிதரும் மரம் போல தான் கற்ற கல்வி தன்னுடைய சமூகத்திற்கும் பயன்தரக்கூடிய வகையில் தொழிற்படுவதற்கான சேவை செய்வதற்கான பக்குவ நிலை தானாக உருவாவது என்பதை விட குழந்தைப்பருவத்தில் இருந்து ஆரம்பகல்விப் பருவத்திலும் பெற்றோர் காட்டுகின்ற வழிகாட்டல்கள் செயற்பாடுகள் தான் தீர்மானிக்கின்றன. இந்த வகையில் ஒரு மாணவனை சமூகமயமாக்கத்திற்குள் நுழையச் செய்து தனக்கும் தனது பிரதேசத்துக்கும் தனது இனத்திற்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் பயன்படக்கூடிய வகையில் நெறிப்படுத்துவதில் பெற்றோர்களின் பங்கு அளப்பரிய ஒன்றாக அமைகின்றது .

8 பிறந்த குழந்தை பாலை, குறிப்பிட்ட இடை வேளையின் பின்னர் குடிக்க பழகும் போதே அது சமூக விதிகளை அனுசரிக்க ஆரம்பிக்கிறது. பின்னர் மொழி பேசுதல் உணவு உண்ணுதல், மலங்கழித்தல் முகம் கழுவுதல் போன்ற உடலியக்கத் தேவைகளை நிறைவேற்றக் கற்றுக் கொள்கிறது. இந்த வகையில் பெற்றோர் பிள்ளையை வளர்க்கும் முறையைப் பொறுத்தே பிற்காலத்தில் பிள்ளையின் நடத்தை, ஆளுமை, மற்றும் ஆற்றல்கள் என்பவை அமையும் என்பது ஆராய்ச்சியாளர் கண்ட முடிவாகும். பெற்றோர் பிளளையை வளர்க்கும் முறையானது அவரவர் பண்பாட்டில் தங்கியுள்ளது. பிள்ளையின் ஆர்வத் தூண்டுதலானது பிள்ளையின் குடும்பத்தினளவு அதன் தராதரம் பெற்றோரின் ஆர்வம் பெற்றோரின் குறிக்கோள் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இவ்வகையில் ஒரு பிளன்ளையின் ஆளுமை விருத்தி என்பது குடும்பத்தில் குறிப்பாக பெற்றோரின் வளஉப்பில் பெரிதும் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக மாணவர்களதும் பெற்றோர்களதும் நிலை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பது இன்று, பிரபலமான பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பதால் வசதியான பிள்ளைகளும் உயர் நிலையில் படித்தவர்களும் கூட தமது பிள்ளைகளுக்கு பாடசாலை நேரம் தவிர காலை மாலை விடுமுறை தினங்கள் மட்டுமன்றி வீட்டிலும் கூடப் பிரத்தியேக கற்பித்தல் என்ற வகையில் பாரிய சுமையினைத் திணிக்கின்றார்கள். இந்த வகையில் பல உத்தியோகத்தர்கள் மற்றும் வசதிபடைத்த குடும்பங்களின் பிள்ளைகள் பரீட்சையில் சித்தி பெறுவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுவதால், கிராமப்புற மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் சித்திபெறும் வாய்ப்பை பெருமளவில் தவற விடுவதுடன் அரசினால் கிடைக்கக் கூடிய உதவுதொகையையும் கூட இழந்து பரிதவிக்கின்ற நிலையுடன் வளம்மிக்க பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் சிக்கல் நிலை காணப்படுவதால் வறிய மாணவர்கள் கற்பதில் திண்டாடும் நிலை ஒருபுறம் காணப்பட மறுபுறம் இலவசக் கல்வி வழங்கப்படும் இலங்கையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திக்கென அரசினால் வழங்கப்படும் வெட்டுப்புள்ளிக்கு மேலாக ஒரு வெட்டுப்புள்ளியிடப்பட்டு ஐந்து இலக்கங்களுக்கு குறையாத ரொக்கப்பணத்தையும் எதிர்பார்த்து பிரபல வசதிபடைத்த நகரப்பாடசாலைகளில் தரம் 6 இற்கான மாணவர் அனுமதிக்காக கதவு திறக்கின்ற பச்சைக் கொடி காட்டப்படுகின்ற புத்தி ஜீவிகள் வாழ்கின்ற எமது சமூகத்தில் வசதிக்கட்டண பணம் கூட செலுத்த வசதி இல்லாத பல வறிய குடும்பப் பிள்ளைகள் பௌதீக வளங்கள் வசதி வாயப்புகள் குறைவாக உள்ள பாடசாலைகளில் கல்வி கற்க வேண்டிய தலைவிதி எழுதப்படாத சட்டங்களாக நடைமுறையில் தொடருவது மனவேதனைத் தருகின்றது. இவ்வகையில் எவ்வளவு பணம் செலவளித்தும் பிள்ளைகளைக் கற்பிக்கத் துடிக்கின்ற பெறுறோர் ஒருபுறமும் பிள்ளை படிக்க விரும்பும் போதும் குடும்பக்கஸ்டம் காரணமாக குடும்பச்சுமையினை பிள்ளைகள் மீதும் திணித்து கற்றலுக்கான வாயப்புகளை தவறவிடுகின்ற பிள்ளைகளின் பெற்றோர் மறுபுறமும் காணப்பட இடைநடுவில் வறுமையின் மத்தியிலும் படிக்க வேண்டும் என்ற மன வைராக்கியத்துடன் படிக்கின்ற பிள்ளைகளும் தன்னை வருத்தி உழைத்தாவது பிள்ளைகளைக் கற்பித்து சமூகத்தில் நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்ற பிடிவாதத்துடன் தமது கஸ்டங்களுக்கு மத்தியிலும் கற்பிக்கின்ற பிள்ளைகளின் பெற்றோர்களும் இதே சமூகத்தில் உலாவருவது ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு எவ்வளவுக்கு முக்கியமானது என்பது தெளிவாகின்றது.

## யாழ்ப்பாணத் தமிழ் மக்களும் அவர்களது கல்வி நிலையும்

ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளது போல, நீண்டதொரு கல்விப் பராம்பரியத்தை தனக்கே உரித்தாகக் கொண்டிருந்த யாழ்ப்பாணப் பிரதேசமும் இப்பிரதேச தமிழ் பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் விளைவுகளால் பல சொத்துக்களை இழந்துள்ள நிலையிலும் கூட, அழிக்க முடியாத சொத்தான கல்வியை, பல இன்னல்கள், இடப்பெயர்வுகள், கொலைகள், கடத்தல்கள், பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் பேணிப்பாதுகாத்து வருகின்றனர். இந்த வகையில் தமிழ் மக்கள் எத்தகைய துன்பங்கள் வந்தாலென்ன இடர்கள் வந்தாலென்ன அவற்றிற்கு மத்தியிலும் கல்வியைக் கைவிடாது தொடருவதற்கு கடும் முயற்சி செய்து வருகின்றனர் ஒவ்வொரு பாடசாலைகளும் பொன்னான மகுடவாக்கியங்களைத் கொண்டு தமது பணிகளை ஆற்றி வருகின்றது. உதாரணமாக "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பதற்கு இணங்க செயற்பட வேண்டும். அகதியாகக் கனடா செல்லும் போதும் கல்வி கற்கும் விசாவுடனேயே செல்கின்ற நிலையை அவதானிக்கலாம். 1981இல் ஆசியாவிலேயே புகழ்பூத்த நூலகமாக விளங்கிய யாழ் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட நிகழ்வு (1981.06.01 அன்று எரிக்கப்பட்ட நூலகம் அதே இடத்தில் தற்போது மீளப் புனருத்தாரணம் செய்யப்பட்டுவிட்டது இருப்பினும் பிறிதொரு இடத்தில் நூலகம் புதிதாகக் கட்டப்பட்டிருக்குமாயின் நூலகம் எரிக்கப்பட்டமைக்கான வரலாற்று ஆவணம் அழியாமல் பேணப்பட்டிருக்கும் இன்று அதற்கான வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது) மற்றும் யுத்தத்தால் பெற்றோரை இழந்த காரணத்தாலும் பெற்றோரின் தொழில் வாய்ப்புகள் குடும்ப வருமான மூலங்கள் பாடசாலைகள் என பல இழப்புக்களால் கற்க வேண்டிய வயதிலுள்ள பல பிள்ளைகள் கல்வியை இழந்துள்ளனர். இந்த நிலை கடந்த மூன்று தசாப்தமாக தொடருவதால் அவ்வாறு கல்வியை இழந்தவர்கள் பலர் இன்று பெற்றோராக உள்ளனர் இத்தகைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கல்வி தொடர்பாக நெறிப்படுத்த பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இதற்கு இப் பகுதியில் உள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மட்டுமன்றி பாடசாலை ஆசிரியர்கள் அதிபர்கள் போன்ற பல தரப்பினரதும் கைளில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. உண்மையில் யுத்த தாக்கங்களுக்குள் வாழ்ந்த பிள்ளைகள் கற்பதற்கான தூண்டல் குறைவாகவே கொண்டுள்ளனர். எனவே அவர்களிடம் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்த பெற்றோர்கள் உட்பட சமூகத்தின் அனைத்து தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறு செய்தால் தான் இன்றைய இளஞ் சிறார்களின் ஆரம்பக்கல்வி வளர்த்தெடுக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் வளமானதாக அமைவதுடன் எமது பிரதேசமும் நிண்டகால கல்விப்பாரம்பரியத்தை தொடர்ந்து பேணிப்பாதுகாக்கவும் முடியும்.

எந்தப்பிள்ளையும் பிறக்கும் போது நல்ல பிள்ளைதான் அவன் நல்லவனாவதும் கெட்டவனாவதும் அன்னை வளர்ப்பிலேதான் தங்கியுள்ளது.

தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செய்தல்

என்ற வாசகங்கள் கூட ஒரு மாணவனின் ஆரம்பக்கல்வி மாணவனின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கின் தேவைப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைய மாணவர் இன்றைய பெற்றோர்
இன்றைய மாணவர் நாளைய பெற்றோர்

எனவே இன்றைய பெற்றோர் நாளை பெற்றோராக உள்ள இன்றைய மாணவரை அவர்களின் ஆரம்பக்கல்விப் பருவத்தில் அவர்களுடைய கல்வி வளர்ச்சியில் எவ்வளவுக்கு வெற்றிகரமாக பங்களிக்கின்றார்களோ அவ்வளவுக்கு நாளைய பெற்றோர் தமது பிள்ளைகளையும் நெறிப்படுத்தி ஒரு சிறந்த கல்விச் சமூகத்தைக் கட்டி எழுப்புவதில் பெற்றோரின் பங்கு மிகவும் காத்திரமானதாக அமைகின்றது.

## References


1. Department of Education, University of California at Irvine. (2002). Evaluation of California's after-school learning and safe neighborhoods partnerships program: 1999-2001. Sacramento, CA California Department of Education. Retrieved June 10, 2002.Available: ww.cde.ca.gov/ls/ba/as/documents/execsummary.asp.
2. Fashola, O.S. (1998). Review of extended-day and after-school programs and their effectiveness. (CRESPAR Report No. 24). Retrieved March 2, 2004. Available: www.csos. jhu. edu/crespar/ tech Reports/ Report24.pdf.
3. Green, B.L., and Schneider, M. J. (1990). Threats to funding for rural schools. Journal of Education Finance, 15, 302-318.
4. Life before after-school programs. (2002, July/August). Community Update, 98, 9.
5. Miller, B. M. (1995). Out-of-school time: Effects on learning in the primary grades. Action Research Paper No. 4, Wellesley, MA: National Institute on Out-of-School Time, Wellesley College.
6. Peterson, T. K. and Fox, B. (2004). After-school program experiences: A time and tool to reduce dropouts. In J. Smink & F. P. Schargel (Eds.), Helping students graduate: A strategic approach to dropout prevention (pp. 177-184). Larchmont, NY: Eye on Education.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. Barnett, W. S. (1995, Fall/Winter). Long-term effects of early childhood programs on cognitive and school outcomes. The future of children: Long-term outcomes of early childhood programs, 5(3), 25-50.
8. Begley, S. (2000). Wired for thought. Newsweek, Fall/Winter 2000, 25-30.
9. Lazar, I, Darlington, R., Murray, H., Royce, J., & Snipper, A. (1982). Lasting effects of early education: A report from the consortium for longitudinal studies. Monographs of the Society for Research in Child Development, 47 (Serial No. 195).
10. Schweinhart, L. J., & Widart, D. P. (1985). Evidence that good early childhood programs work. Phi Delta Kappan, 66, 8.
11. Stegelin, D. (2004). Early childhood education. In F. P. Schargel & J. Smink (Eds.) Helping students graduate: A strategic approach to dropout prevention (pp. 115-123.). Larchmont, NY: Eye on Education.
12. ஆறுமுகம்.வ (2000) கல்வி பாரம்பரியம், எமது கல்வி, உயர்கல்வி சேவை பதிப்பகம்: யாழ்.,ப.22
13. சந்திரசேகரன் சோ. (1991) கல்வியற் கட்டுரைகள் சூடாமணி பிரசுரம் சென்னை, இந்தியா
14. சந்திரசேகரன் சோ. (2003) கல்வி ஒரு பன்முக நோக்கு ஊமா பதிப்பகம் கொழும்பும் இலங்கை
15. சந்திரசேகரன் சோ. சின்னத்தம்பி மா (2002) கல்வியும் மனிதவள விருத்தியும் எஸ்.எச் பதிப்பகம் கொழும்பு, இலங்கை பக்கம் 104 – 106
16. சந்தானம் எஸ் (2002) இந்தியச் சமுதாயத்தில் எழுந்துள்ள கல்விசார் அறைகூவல்கள் சாந்தா பப்ளிஷர்ஸ் முத்துவிழா இல்லம், சென்னை இந்தியா பக்கம் 74 – 76
17. சின்னத்தம்பி மா (2005) இலங்கையின் கல்விச் செலவு விஸ்டம் பப்ளிகேசன்ஸ், வெள்ளிவிழா ஞாபகார்த்த வெளியீடு கல்வியற்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் இலங்கை
18. சின்னத்தம்பி மா (2007) வறியவரும் பாடசாலைகளும், இடைவெளி அதிகரித்துச் செல்கின்றதா? வறியவர்கள் யாழ்ப்பாணம் வட்டு இந்துக்கல்லூரி, பப 4-16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. ஜெயராசா(2001) குழந்தைக்கல்விச் சிந்தைனைகள் பொஸ்கோ வெளியீடு நல்லூர் யாழ்ப்பாணம் இலங்கை
20. சிறுவர் பாதுகாப்பு (2002) ஸ்ரீலங்கா சிறுவர்களின் சவால் சிறுவர் பாதுகாப்பு, 58 ஏ, ஙேோட்டன் பிளேஸ் கொழும்பு, இலங்கை
21. யுனிசெவ் (1997) தெருவோரச் சிறுவர்கள், சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நிலையம் கொழும்பு இலங்கை
22. யுனிசெவ் (1997) கல்வி பெண்பிள்ளை சிறுவர் உரிமைகள் பற்றி சமவாயம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நிலையம், கொழும்பு இலங்கை பக்கம் 1 - 2
23. வீரசிங்கம் கி. (2000) படி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வெளியீடு யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோள கல்வியும் அதன் முக்கியத்துவமும்



கிருபா இராஜரட்ணம்
*சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*

**அறிமுகம்**

உலகமயமாக்கத்தின் விளைவால் இன்று நாம் அனைவருமே உலக சமுதாயத்தில் ஒரு அங்கத்தவர். எமது சிந்தனைகள் அனைத்தும் பூகோள ரீதியான கண்ணோட்டத்தில் அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம். அவ்வாறான சிந்தனை ஓட்டங்களின் அடிப்படையில்தான் ஒவ்வொரு தனிமனிதனின் சுபீட்சமான எதிர்கால வாழ்க்கை தங்கியுள்ளது. ஆகவே அத்தகைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒரு கருவியாக பூகோள கல்வி நோக்கப்படுகின்றது. உலகமயமாக்கத்தின் விளைவுகள் உலகில் பல்வேறு பிரச்சினைகளை தோற்றுவித்துள்ள நிலையில் அவற்றுக்கு முகம் கொடுக்க பூகோள ரீதியாக ஒரு ஆற்றலின் தேவைப்பாடு இன்றைய சமுதாயத்துக்கு அவசியமாகின்றது. அந்தவகையில் பூகோள மயமான கல்வி ஒன்றே அதற்கான உடனடித் தர்வு என்பதை மேலைத் தேய நாடுகள் உணர்ந்து கொண்டதனால் 1960 களிலே சிந்தித்து செயற்பட ஆரம்பித்துவிட்டன.

உலகம் ஒரு கிராமம், அதில் உள்ள மக்கள் அனைவரும் ஒரு சமுதாயம். அனைவருக்கும் உள்ள பிரச்சினை பொதுவானது ஆகவே அதிலிருந்து மீண்டெழுவதற்கு வழிகாட்டத்தக்க பொதுவான ஒரு கல்வி முறைமை அத்தியாவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அந்தகைய கல்வி முறைமையைதான் பூகோள கல்வி முறைமை என இன்று நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். இன்றைய உலக நிலைமைகளையும், உலக மாற்றங்களையும் அதற்கான நியதிகளையும் கருத்திற்கொண்டு மக்கள், வரலாறு, புவியியல், அரசியல், அபிவிருத்தி, சமாதானம், தொழில்நுட்பம், பேண்தகு கல்வி என பல்துறைகளுக்கிடையிலான உட்தொடர்பினைக் கொண்ட பரந்த அறிவும், சிறந்த மனப்பாங்கும் கொண்ட சமுதாயத்தைக் பூகோள கல்வி கட்டியெழுப்பத் தவறுவதில்லை.

**பூகோள கல்வி என்றால் என்ன?**

மாணவர்களது திறன்களை மேம்படுத்துவதற்கூடாக உலகில் எச்சூழலிலும் செயற்படும் ஆற்றல், அல்லது எச்சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் ஆளுமை விருத்தி போன்றவற்றுக்கு வழிவகுக்கும் ஒரு கல்வி முறைமையாக இது விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோள கல்வியைப் பொறுத்தவரையில் இது ஒரு வில்லை (Len) எனக் குறிப்பிடலாம் அதனை எத்துறை சார்ந்தும், எந்த மட்டத்திலான கல்வியிலும் அதாவது ஆரம்ப கல்வி முதல் வளர்ந்தோர் கல்வி (Adult education) வரை வேறுபாடின்றி அனைத்து சமுதாயத்துக்கும் பிரயோகிக்க முடியும். இது தொடர்பாக அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்ற பொழுது.

> பொறுப்புள்ள ஒரு பிரஜை சமுதாயமொன்றுடன் விரைவாக இணைந்து கொள்வதற்கான பயிற்சியை வழங்க்ககூடிய ஒரு சாதாரணமான வழிமுறையே பூகோள கல்வி ஆகும் (Morris,1977) அதாவது சமூகமயமாதல் என்பது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தக் குறுகிய சமூகத்திலிருந்து வெளியேறி பூகோள சமுதாயத்துக்குள் இணைத்துக்கொள்ளுகிள்ற பொழுதுதான் இன்றைய சவால்களை வெற்றி கொண்டவர்களாக வாழமுடியும்.

> வாழ்நாள் அபிவிருத்திக்காக தற்கால உலக நடைமுறைகளுக்கும் சமூகத்துக்கும் அமைவாக அவர்களுடன் இணைந்து கொள்ளுதல் அல்லது செயற்பட வழிகாட்டும் ஒரு கல்வி முறைமை என (Michigan Department of Education,1979) குறிப்பிடப்படுகின்றது. வாழ்நாள் அபிவிருத்தி (Lifelong development) என்பதுதான் உலகில் ஒவ்வொரு பிரஜைக்குமாக இலக்காக இருக்கின்றது. அதற்குத் தடையாக பல்வேறு சக்திகள் உள்ளூர் சமுதாய மட்டத்திலும், சர்வதேச அளவிலும் தொழிற்பட்டு வருகின்றன.

> அதற்கு முகம்கொடுக்க முடியாது இன்றைய சமுதாயம் அழிவை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதை கண்கூடாகக் காணுகின்றோம். எதிர்கால சந்ததி இவற்றிலிருந் தெல்லாம் விடுபட உன்னத வழிகாட்டியாக பூகோள கல்வி அமைகின்றது.

> மாறிவரும் உலகின் மாற்றத்தை உலக பிராந்தியங்களின் அடிப்படையில் கற்கும் கல்வி முறைமை என (Anderson,1979) குறிப்பிடுகின்றார். இன்று உலகம் பல நிலைகளில் மாற்றத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றது. இயற்கை பாரியளவு மாற்றத்தைச் சந்தித்துள்ளது. மக்கள் மனங்களில் எதிர்மறை எண்ணங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன, தொழில் நுட்பத்தில் பாரிய முன்னேற்றங்கள் நாளுக்கு நாள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவை மூன்றும் ஒவ்வொரு தனிமனிதனின் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கின்ற இக்கால சூழலில் இவை எங்கு, எவ்வாறு, என்ன மட்டத்தில் தலைதூக்கி இருக்கின்றது என்பதை இன்றைய சந்ததிக்குப் புரிய வைப்பதே பூகோள கல்வியாகும்.

> பூகோள கல்வி பற்றி Long and King (1964) ஆகியோர்குறிப்பிடுகையில், ஒருவருடைய கலாசாரத்தை மதித்து நடத்தல், மற்றவர்களை மதித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுதல், மனிதாபிமானம் மற்றும் நாட்டுப் பற்றுதியும் உணர்வும் மிக்கவர்களாக வாழுதல் ஆகிய மூன்றினையும் மையமாகக் கொண்ட கல்வி முறைமைதான் பூகோள கல்வி. உண்மையில் இவை மூன்றும் இல்லாத சமுதாயத்துக்குள் அமைதி, சமாதானம், சந்தோசம் என்பவை தொலைந்து பிணக்குகள், அமைதியற்ற சூழ்நிலைகள், அநீதிகள், அட்டுழியங்கள் தலை தூக்கி தாண்டவமாடுவதைக் காணலாம்.

ஆகவே பூகோள கல்வி தொடர்பான இவ் வரைவிலக்கணங்கள் யாவும் இன்று உலகில் எழுந்துள்ள பிரச்சினைகளை பிராந்திய அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும் பூகோள கண்ணோட்டத்தில் அணுகுவதன் அவசியத்தையே எடுத்தியம் புகின்றன. அவ்வாறு அணுகுகின்ற பட்சத்தில் மட்டுமே உலக சமுதாயத்துடன் இணைந்து பயணிக்கும் இயலுமையை எதிர்காலத்தில் எமது மாணவ சமுதாயத்தால் பெற்றுக்கொள்ள முடியும். அது அவர்களை எத்தகைய சூழ்நிலைகளையும் எதிர் கொள்ளத்தக்க ஆளுமையை விருத்தி செய்வதோடு, பிணக்குகளை தீர்க்கவும், நீதி மற்றும் அநீதிகளை இனங்காணவும், சமாதானத்தையும், சமத்துவத்தையும் ஏற்படுத்தவும், பேராபத்துக்களிலிருந்து மீண்டெழவும் ஒரு சிறந்த வழிகாட்டியாக பூகோள கல்வி அமையும் என்பது திண்ணம். அதனாலேயே அன்று மேலைத்தேயத்தில் அறிமுகமாகி வளர்ந்த இக் கல்வி முறைமை ஆறு தசாப்தங்கள் கடந்து இன்றுதான் கீழைத் தேசங்களில் பரவ ஆரம்பித்துள்ளன.

இன்றைய மனித வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் கோள ரீதியில் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கின்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. ஒரு சூழ்நிலையில் வாழும் ஒருவர் மறு கணம் இன்னொரு சூழ்நிலைக்குள் விரும்பியோ விரும்பாமலோ வாழுகின்ற அளவுக்கு பூகோளம் அனைவருக்கும் திறந்து விடப்பட்டிருக்கின்றது. ஆகவே மொழி, வரலாறு, அரசியல், கலாசாரம், சூழல் தொடர்பில் பிராந்தியத்துக்குப் பிராந்தியம், சமூகத்துக்குச் சமூகம் காணப்படும் வேறுபாடுகளை அறிந்து, அதனை அனுசரித்து வாழவேண்டியது ஒவ்வொருவருக்குமான இன்றைய உலக நியதியாயிற்று. அந்தவகையில் பூகோள கல்வியானது மாணவ சமுதாயத்துக்கு பூகோள பரிமாணத்தைக் கொண்ட ஒரு கல்விமுறைமையாகும். இன்றுள்ள சமுதாயத்துக்கு தாம் இதுவரை பெற்றுக்கொண்ட அறிவில் எது இடைவெளியாக இருக்கின்றதோ, உலகில் அமைதியற்ற நிலைமை தோன்ற எது காரணமாக இருக்கின்றதோ, நிலைபேண் அபிவிருத்திக்கு எது தடையாக இருக்கின்றதோ அவற்றை அடையாளம்கண்டு, அந்த இடைவெளிகளை நிரப்பக் கூடிய கல்வி முறைமைதான் இன்று காலத்தின் தேவையாக உள்ள பூகோள கல்வி.

ஆகவே கல்வியின் பரிமாணத்தை காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றியமைக்கின்ற பொழுதுதான் நாம் எதிர்பார்ப்பது போன்று உலகத்தை மாற்ற முடியும். இதனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்சன் மண்டேலா அவர்கள் "கல்வி அதி சக்திமிக்க ஒரு ஆயுதம் அதனைக்கொண்டு உலகத்தை எப்படி மாற்றிக்கொள்ள வேண்டுமோ அப்படி மாற்றிக்கொள்ள முடியும்" மண்டேலாவின் இக்கூற்றுக்கு அமைவாக பூகோள கல்விக்கான பாட விதானங்கள் முழு உலகையும் மாற்றும் விதமாக மாணவர்களுக்கு பொதுவானதாக வடிவமைக்கப் படுகின்றன. அந்தவகையில், அபிவிருத்திக் கல்வி, மனித உரிமைக் கல்வி, பேண்தகு கல்வி, முரண்பாடுகளைக் களைதல் மற்றும் சமாதானத்துக்கான கல்வி, கலாசாரங் களுக்கிடையேயான கல்வி, மொழிக் கல்வி, அனர்த்தக் கல்வி, ஆன்மீகக் கல்வி என பூகோள கல்வியின் உள்ளடக்கங்கள் விசாலமானவை. இவற்றை இன்று உலகில் பல்வேறு சர்வதேச அமைப்புக்கள் வலியுறுத்தியும், நடைமுறைப்படுத்தியும் வருகின்றன.

### பூகோளமய கல்விக்கான கற்றல் கருவிகள்

ஒரு மனிதனுக்குப் படைக்கப்பட்டுள்ள பௌதீகப் பார்வையானது வரையறைக் குட்பட்டது. ஆனால் இன்று உலகில் வளர்ந்துள்ள அறிவியலும், தொழில் நுட்பமும் பூகோள கல்வி ஒன்றினுக்கூடாக அந்த வரையறைகளைத் தகர்த்து முழு உலகையும் கண்களாலும், மனதாலும் ஒரே பார்வையில் பார்த்து, பகுத்தறியும் அளவுக்கு திறனைத் தோற்றுவித்துள்ளது. அதனை முறையாக அணுகுவதற்கு அடிப்படையாகவும், ஆதாரமாகவும் அமையும் கற்றல் கருவிகள் ஏராளம். அந்தவகையில், Smart Books, புவியிடத் தொழில் நுட்பம், புலக்காட்சி நுட்பம், களத் தரிசிப்புக்கள், ஆராய்ச்சி அணுகு முறைகள், பூகோள வலையமைப்புகள், சர்வதேச தினங்களை நினைவுகூருதல் போன்ற இன்னோரன்ன வழிமுறைகள் உலகை சுலபமாக அணுக வழிசமைத்துள்ளன. அதன் ஊடாக பூகோள கல்வி புதுப் பொலிவு பெற்று திகழுகின்றது.

முக்கியமான எடுத்துக்காட்டாக Smart Books பிரயோகம் தனித்துவமான ஒன்று. இது கல்விப் புலத்தில் பிரமிக்கத்தக்க ஒரு நூல் வடிவமைப்பு என்றே குறிப்பிடலாம். நடைமுறையில் நாம் கையாளும் புத்தகங்களில் இருந்து முழுமையாக வேறுபட்ட ஒரு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்மின் (Digital) வடிவமைப்பாக இது மிளிர்கின்றது. அவை இன்று உலகின் பல பாகங்களிலும் வியாபித்து இருந்தாலும் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் எம் மத்தியில் அவற்றின் பிரயோகம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்று என்றுதான் குறிப்பிட வேண்டும்.

எடுத்துக்காட்டாக மேலே காட்டப்பட்டுள்ள Smart புத்தகம் ஒரு எண்மின் வடிவமைப்பு. அதில் துல்லியமான விளக்கங்களும், அசையும் படங்களுடனான புரிதலும், ஒளிப்படக் காட்சிகளுடன் கூடிய தெளிவும் QR குறியீடுகள் மூலம் செயற்படுத்தி கற்கக்கூடிய பாங்கும் கொண்டதாகக் காணப்படுகின்றது. அத்தோடு இவ்விடயங்களை அந்தந்த பக்கங்களிலேயே இயக்கக்கூடிய விதத்தில் அவை அமைந்தும் காணப்படுகின்றன. இன்றுள்ள கற்றல் கருவிகளில் பூகோள கல்விக்கு இலக்கணமாய் அறிவினை உலகெங்கினும் வினைத்திறனாகக் கொண்டு சேர்க்கும் ஊடகமாய் Smart Books விளங்குகின்றன.

அடுத்து பூகோள கல்வியை மாணவர் மனங்களில் இலகுவாகவும் தெளிவாகவும் உட்செலுத்துவதற்கு புலக்காட்சிப்படுத்தல் மிகச் சிறந்த ஒரு நுட்பம். அதனாலேயே அனைத்திலும் இந் நுட்பம் அனுசரிக்கப்பட்டுள்ளது. வாசிப்பதனாலோ அல்லது ஒருவர் கற்பிப்பதனாலோ எட்ட முடியாத அடைவினை ஒரு மாணவர் பல்லூடக கருவி மூலம்



காட்சிப்படுத்துவதனால் அவை தெளிவாக மனதில் பதிந்து விடுகின்றன. நேரடியாக களத்துக்குச் சென்று பௌதீகம் சார்ந்த அல்லது சமூக சார்ந்த விடயங்களை புலன்களால் அவதானித்து கற்பதனால் அடையும் பயன் மற்றுமொரு வகையில் அளப்பரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய வழிமுறைகள் பூகோள கல்வியில் கடைப்பிடிக்கப்படுவதே பொருத்தமானது. அவ்வாறு கடைப்பிடிக்கின்ற பொழுதுதான் அதனுடைய இலக்குகள் சமுதாயத்தைச் சென்றடையும். இல்லையேல் பூகோள கல்வியின் அறிமுகம் பயனற்று போகவே வாய்ப்புண்டு. அதனைப் பயனுள்ள ஒன்றாக மாற்றியமைப்பதற்கு ஆசிரியர்களின் பங்கு மகத்தானது. ஆகவேதான் ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் "ஒவ்வொரு கல்வி முறைமையின் இதயம் ஆசிரியர்கள்" எனப் போற்றப்படுகின்றது. ஒரு மனிதனின் பலமும் பலவீனமும் அவனது இதயம்தான் என்பது போல இன்று உலகில் தோற்றுப் போன பல கல்வி முறைமைகள் காணப்படுகின்றன. அதேபோன்று வெற்றி கண்ட பல கல்வி முறைமைளும் காணப்படுகின்றன அந்த வெற்றிகளுக்கும் தோல்விகளுக்கும் ஆசிரியர்களே காரணமாவார். ஏனெனில் அறிமுகப்படுத்துகின்ற கல்வி முறைமைக்கு ஏற்ப அதன் இலக்கை எட்டக்கூடிய வகையில் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதிலேயே வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளது.

புவியிடத் தொழில் நுட்பமானது அனைத்து கல்வி முறைமைகளுக்கும் பொருத்தமான தகல் தொழில் நுட்பமாகும். உலகில் வளர்ந்துள்ள எந்த ஒரு கல்விப் புலத்திலும் பிரயோகிக்கத்தக்க ஒன்றாக இது காணப்படுகின்றது. இத்தொழில் நுட்பக் கட்டமைப்பினுள் புவியியல் தகவல் முறைமை (Geographic Information System),



**புவியியல் தகவல் முறைமை (GIS)**

கணினியை அடிப்படையாகக் கொண்ட இடம்சார் பகுப்பாய்வு (Spatial analysis), எண்மின் படமாக்கல் (Digital mapping) மற்றும் தீர்மானம் எடுத்தலுக்கான (Decision Making) தொழில்நுட்பம்.

**தொலை உணர்வு (RS)**

புவிசார் தகவல்களை எவ்விதமான பௌதீகத் தொடர்புமின்றி செய்மதி மற்றும் அதனை ஒத்த மேடைகளைக் (Platform) கொண்டு பெற்றுக்கொள்ளுகின்ற தொழில்நுட்பக் கட்டமைப்பு.





**பூகோள நகர்வுச் செய்மதி முறைமை (GNSS)**

நிலையம்சார் தகவல்களை புவிவட்டப்பாதையில் வலம் வந்துகொண்டிருக்கும் செய்மதித் தொடரின் மூலமாகப் பெற்று பூமியில் நகர்வதற்கான வழிகாட்டலைச் செய்யும் ஒரு வகை உயர் தொடர்பாடல் தொழில்நுட்பக் கட்டமைப்பு.

தொலை உணர்வு தொழில் நுட்பம் (Remote Sensing Technology), பூகோள நகர்வுச் செய்மதி முறைமை (Global Navigation Satellite System) போன்றவை உள்ளடங்குகின்றன. துல்லியமான தகவல்களையும், நேர்த்தியான பகுப்பாய்வுகளையும் மேற்கொண்டு சிறந்த தீர்மானங்களை நிறைவேற்ற உதவும் ஒப்புயர்வற்ற தொழில் நுட்பங்கள் இவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தொழில் நுட்பம் பாடசாலை மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் 12 வருடங்கள் கடந்த நிலையிலும் இன்றுவரை மாணவர்களும் ஆசிரியர்களும் ஒரு சரியான தெளிவினைப் பெறமுடியாதவர்களாகவே காணப்படுகின்றனர். ஒரு தசாப்பதம் கடந்தும் ஏன் இந்த நிலை எனப் பார்த்தால். ஆசிரியர்கள் இன்னும் இதற்கு முறையாகப் பயிற்றுவிக்கப்படவில்லை என்பதே பிரதான காரணமாகும்.

## பூகோள கல்வியின் பயன்கள்

பூகோளக் கல்வி முழு உலகுக்கும் பொதுவானவை, ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அத்தியாவசியமானவை, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அடிப்படையில் தேவையானவை. இதனை முறையாக முன்னெடுக்கின்ற பொழுது மூன்று விடயங்களில் மாற்றத்தை காண முடியும் முதலாவது மனப்பாங்கில் பரந்தளவிலான மாற்றம், இரண்டாவது வினைத்திறனான தகவல் பரிமாற்றம், மூன்றாவதாக திறன் விருத்தி இவை மூன்றும் ஒருங்கே வளரப் பெற்றால் அந்தச் சமுதாயம் நாளைய சவால்களை எதிர்கொள்ளத்தக்க சமுதாயமாக, பேண்தகு சமுதாயமாக மாற்றமடையும். இதற்காகவே பூகோள கல்வி காலத்தின் தேவை எனக் கருதப்படுகின்றது. பூகோள கல்வி மூலம் வெற்றி கண்ட பல நாடுகள் தனது சமுதாயத்தை பல நிலைகளில் தயார்படுத்தியுள்ளமையை பல ஆதாரங்களுக்கூடாக கண்டுகொள்ள முடியும். அதேபோன்று தன்னுடைய சூழலில் தனக்குள்ள சவால்களையே புரிந்துகொள்ள முடியாத, பூகோள கல்வியில் இருந்து சற்று தொலைவில் இருக்கின்ற சமுதாயங்களும் இன்று வாழ்ந்துகொண்டிருப்பதற்கு எடுத்துக் காட்டாகவும் பல நாடுகள் காணப்படுகின்றன.

பூகோள கல்வியின் வெற்றிக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக, Tilly Smith 10 வயது சிறுமியாக இருக்கின்ற பொழுது ஐக்கிய இராச்சியத்திலிருந்து தனது விடுமுறையைக் கழிக்க தாய்லாந்துக்கு வந்திருந்த சமயம் ஒரு நாள் 2004.12.26 ஆம் திகதி காலை 10 மணியளவில் தாய்லாந்தில் உள்ள கடற்கரை ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்தாள். அச்சமயத்தில் கடற்கரையில் சில அசாதாரண மாற்றங்களை அவதானித்த அந்தச் சிறுமி தன் பெற்றோரை அழைத்து சுனாமி வரப்போகின்றது உடனடியாக நாம் இவ்விடத்தை விட்டு வெளியேறியே ஆக வேண்டும் எனக் கூறி தனது பெற்றோரை அவ்விடத்திலிருந்து தாம் தங்கியிருந்த விடுதிக்கு அழைத்துச் சென்றாள்.

பெற்றோர் தம்முடன் கடற்கரையில் இருந்த பலருக்கும் இத்தகலைப் பகிர்ந்துவிட்டு தமது குழந்தையின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து உடன் சென்றனர். சிறுமி எதிர்வு கூறியபடி சில நிமிடங்களின் பின்னர் சுனாமிப் பேரலையின் பேரழிவுக்கு அப்பிரதேசம் உட்பட்டது. தாய்லாந்து மக்களுக்கோ, தாய்லாந்து அரசாங்கத்துக்கோ அறிந்துகொள்ள முடியாத இவ்விடயத்தை இச்சிறுமியால் எவ்வாறு அறிந்துகொள்ள முடிந்தது? அதுதான் பூகோள கல்வி கொடுத்த போராற்றல் என்று குறிப்பிடலாம். பாடசாலையில் சுனாமி பற்றி செயற்பாடு மற்றும் பரிசோதனைகளுக்கூடாக கற்ற அறிவை தான் நின்ற சூழலில் பிரயோகித்து தன்னையும், தனது குடும்பத்தையும், மேலும் பல நூறு உயிர்களையும் காப்பாற்ற முடிந்தது. இவைபோன்றுதான் பூகோள கல்வியின் இலக்குகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. தன்னுடைய நாட்டில் சுனாமி அச்சுறுத்தல் தேவைப்படாத ஒன்று எனினும் அங்கு மாணவர்களுக்கு சிறப்பாகப் போதிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கான காரணம் தன்னுடைய பிரஜைகள் உலகில் சுனாமி ஆபத்துமிக்க எந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையிலும் அதனை எதிர்கொள்ளத்தக்க ஆற்றலையும், ஆளுமையையும் பெற்றிருத்தல் வேண்டும் என்ற நோக்கமே ஆகும். அதற்கமைய பூகோள ரீதியான சிந்தனையில் கல்வித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேசமயம், வட சுமாத்திராவில் தோன்றிய நிலநடுக்கம் 2 மணித்தியாலங்களுக்கு பின்னர் சுனாமி பேரலையாக இலங்கையின் கரையோரத்தைத் தாக்கியதால் சுமார் 40000 உறவுகளை இழக்க நேரிட்டது. அந்த 2 மணித்தியாலங்கள் பூகோள தொடர்பற்ற சமுதாயமாகவே நாம் வாழ்ந்துள்ளோம். சுனாமி என்னும் சொற்பதம் கூட அன்றுதான் எமக்குத் அறிமுகமாகின்றது. மேலும் சுனாமி ஏற்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னதாக மட்டக்களப்பு நகரில் அமைந்த கல்லடி பாலத்துக்கு ஊடாக பாம்புகள் போன்ற கடல்வாழ் உயிரினம் (ஈல் மீன்கள்) கடலில் இருந்து வெளியேறி வாவியினுள் படை படையாக பயணித்தன. அதனை அனைவரும் உல்லாசமாகக் கண்டு கழித்தனர். ஆனால் ஒருவருக்குக் கூட அது பேரனர்த்தம் ஒன்றுக்கான அறிகுறி என்று தோன்றவில்லை. ஆகவே பூகோள கல்வி எம்மிலிருந்து எவ்வளவு தொலைவில் இருந்திருக்கின்றது என்பதற்கு இந்நிகழ்வு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இன்று கூட அதனை நெருங்கி விட்டோமா என்றால் இல்லை என்றுதான் பதில் சொல்ல வேண்டியுள்ளது. சமீப காலங்களாக இலங்கையில் குறிப்பாக எமது பிரதேசங்களை அண்டி தொடர்ச்சியாக நிலநடுக்கங்கள் பதிவாகிக்கொண்டே இருக்கின்றன. அவை தொடர்பிலான முன்னாயத்தம் எங்காவது முன்னெடுக்கப் படுகின்றதா? அது சார்ந்த அறிவு சமுதாய மட்டத்தில் பரப்பப்படுகின்றதா? விழிப்புடன் செயற்படுவதற்கான வழிகாட்டல்கள் மாணவர்களுக்கோ, மக்களுக்கோ வழங்கப் படுகின்றதா என்றால் இல்லவே இல்லை. இதனைக் கூட இன்றும் புரிந்துகொள்ளாத சமுதாயமாக எமது சமுதாயம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இவற்றுக்கும் அப்பால் கொள்ளைகள், கொலைகள், கற்பழிப்புகள், சமூக நல்லிணக்கமற்ற செயல்கள், போதைவஸ்துக்கள், ஸ்திரமற்ற அரசியல், பொருளாதார நெருக்கடி அனைத்துக்கும் பூகோள கல்வி ஒரு இடைவெளியாக இருந்து வருவதே பிரதான காரணமாகும்.

**முடிவுரை**

உலகில் பூகோள கல்வியின் பயணம் சுமார் 60 ஆண்டுகளைக் கடந்து பயணிக்கும் நிலையில் அதன் வெற்றியை அனைத்து நாடுகளும் எட்டிக்கொள்ள வில்லை. பூகோள முறைமைக்கு ஏற்றாற் போல் இயைந்து போக முடியாத நிலை, போதுமான பயிற்சி இல்லாத தன்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை, வளப் பற்றாக்குறை என பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துவரும் இலங்கை போன்ற நாடுகளுக்கு இக்கல்வி முறைமை சவாலான ஒன்றாகக் காணப்படுகின்றது. இருப்பினும் சகல மட்டக் கல்வியிலும் பூகோள கல்வி தொடர்பில் கவனம் செலுத்துவது எதிர்கால சமுதாயத்தின் சுபீட்சமான வாழ்க்கைக்கு வழிசமைத்துச் செல்லும். ஆகவே! சவால்களை வெற்றிகொள்ள பூகோள கல்விக்குள் நம்மை நாம் உள்வாங்கி எதிர்கால உலகின் மாற்றங்களுக்கு முகம் கொடுக்க ஒவ்வொருவரும் தம்மை தயார்படுத்திக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கியமான வாழ்விற்கு உகந்த உணவுப் பழக்கவழக்கங்கள்

சி. சிவன்சுதன்,
*வைத்திய நிபுணர்.*

## ஆட்டமா உணவுகள் உடல் நிறையை கட்டுப்படுத்த உதவுமா?

ஆட்டாமா என்பது கோதுமை அரிசியை தீட்டாது தவிடு சேர்த்து திரிப்பதன் மூலம் பெறப்படுகிறது. பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் இந்த ஆட்டாமாவை பலரும் ஆர்வத்துடன் வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள்.

ஆட்டாமா உணவுவகைகளை உண்டால் உடல் மெலியும் என்று நம்பி தமது அன்றாட உணவில் அதிகளவு ஆட்டாமாவை சேர்த்து ரொட்டியாகவும் பிட்டு ஆகவும் உண்டு உடல் பருத்துப் போனவர்கள் பலர்.

கோதுமை அரிசியை தீட்டியபின் திரிப்பதன் மூலம் பெறப்படும் கோதுமை மாவுடன் ஒப்பிடும் பொழுது ஆட்டாமாவிலே தவிட்டுத்தன்மையும் நார்த்தன்மையும் அதிகமாக காணப்படுகிறது.

இதனால் ஆட்டாமா உடலினுள் அகத்துறிஞ்சப்படும் வேகம் ஒப்பீட்டளவிலே சற்றுக் குறைவாகும். ஆனால் குறைந்த வேகத்திலே ஆட்டாமாவில் இருக்கும் மாப்பொருள் அனைத்தும் அகத்துறிஞ்சப்பட்டு உடலினுள் செல்லும். எனவே உடல்நிறை குறைப்பிற்கு ஆட்டாமா உணவு வகைகள் உகந்தவை அல்ல.

சாதாரண நிறையுடைய நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கு கோதுமைமாவுடன் ஒப்பிடும் பொழுது ஆட்டாமா சிறந்தது எனக் கொள்ளலாம். ஆனால் எமது பிரதேசங்களில் விளையும் உழுந்து, பயறு, கௌப்பி, பருப்பு வகைகள் போன்றவை ஆட்டாமாவுடன் ஒப்பிடும் பொழுது எமது உள்ளூர் உற்பத்திகள் பல வழிகளிலும் சிறந்தவை ஆகும்.

தீட்டாத தவிடு சேர்க்கப்பட்ட ஊர் அரிசிமா வகைகளும் ஆட்டாமாவுக்கு ஒப்பானவை. எனவே நாம் உள்ளூரில் விளையும் உணவுவகைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது பயனுடையதாக அமையும்.

## நஞ்சு அன்று கொல்லும். சோடா நின்று கொல்லும்

“அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்” என்பதன் உண்மையை நாம் எம் முன்னோர்களிடமிருந்தும், அனுபவரீதியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துவைத்திருக்கிறோம். ஆனால், நஞ்சு அன்று கொல்லும். சோடா நின்று கொல்லும் என்ற விடயம் எம்மில் பலருக்குத் தெரியாது. சோடா சக்தி தரும் ஓர் ஆரோக்கிய பானம் என்று நம்பி ஏமாந்துகொண்டிருக்கின்றோம்.

பெருகிவரும் சோடா குடிக்கும் பழக்கம் சுகாதாரத்துறைக்குப் பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது. இதன் காரணமாகப் பல சுகதேகிகள் இளம் வயதிலேயே பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு ஆளாகிவருகிறார்கள்.

சோடா குடிப்பதால் முக்கியமாகப் பற்சிதைவும், பல் சம்பந்தமான நோய்களும், எலும்பு பலவீனமடைதலும், மூட்டு சம்பந்தமான நோய்களும், உடல் நிறை அதிகரிப்பு, சலரோகம், குருதியில் PH மட்டத்தில் ஏற்படும் மாறுபாடுகள், குருதி அமுக்க நோய், குருதியில் கொழுப்பின் அளவு அதிகரித்தல், இருதய நோய்கள், ஒஸ்ரியோ போறோசிஸ் போன்ற நோய்களும் ஏற்படும்.

இவ்வாறான ஆபத்தான பானங்கள் திருமண வீடுகளிலும் பொது நிகழ்வுகளிலும் ஏன் நோயாளர்களுக்குக்கூட பரிமாறப்பட்டுவருகின்றன என்பது ஒரு வேதனையான விடயமாகும். இளம் வயதிலேயே பலருக்கு நீரிழிவு நோய், கொலஸ்ரோல் அதிகரிப்பு, நிறை அதிகரிப்பு போன்றவை ஏற்படுவதற்கு அதிகரித்த சோடாப் பாவனை ஒரு முக்கியமான காரணமாக விளங்குகின்றது.

அற்புதமான உணவுகளான முட்டையையும் பாலையும் குடிக்கப் பயப்படும் நம்மவர்களுக்கு ஆபத்தான சோடா வகைகளை போத்தல் போத்தலாக வாங்கிக்குடிக்கும் துணிவு எங்கிருந்து வந்தது? அனைவரும் சுகமாக இருக்கவேண்டும் என்ற சிந்தனை உள்ள எமக்கு பிறருக்கு சோடா கொடுக்க எப்படி மனம் வந்தது? வேலைச் சுகத்துக்காகச் சோடாவைக் கொடுத்து உடற்சுகத்தைக் கெடுத்துக் கொள்வதா? எங்கும் எதற்கும் சோடா கொடுக்கும் பழக்கத்தைப் பார்க்கும்போது "வை திஸ் கொலைவெறி" என்னும் பாடல்தான் ஞாபகம் வருகிறது.

நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து முழுவியளம் பார்த்து சகுனம் பார்த்து மங்கலகரமாகச் செய்யும் சுபகாரியங்களுக்கும்கூட இந்த ஆபத்தான சோடா வகைகளைப் பரிமாறும் பாரம்பரியம் எங்கிருந்து வந்தது? சோடா குடிக்க வேண்டாம் என்று சொன்னால் "அப்போ தாகத்துக்கு எதைக் குடிப்பது?" என்று கேட்பவர்களுக்கு பதிலாக எதைச் சொல்வது? எம் சந்ததியின் சுகத்துக்காக நாம் சிந்திக்கவேண்டி இருக்கிறது.

காலம் காலமாக நாம் பாவித்துவந்த இயற்கையான பாதுகாப்பான குடிபான வகைகளை நாம் மீண்டும் பாவிக்க முயலுவோம். நின்று கொல்லும் பானமான சோடாவைக் குடிப்பதையும் கொடுப்பதையும் நிறுத்துவோம். இயற்கையான பானங்களான பழரசம், இளநீர், தேசிக்காய்த் தண்ணீர், மழைநீர், மோர், குத்தரிசிக்கஞ்சி, வீட்டிலே தயாரித்த கூழ், சுட்டு ஆறிய நீர், பால், சீனி சேர்க்காத தேநீர், தோடம்பழத்தண்ணீர், ரசம், குடிநீர், சூப் போன்ற பானங்களை அருந்துவது சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவு சீனிச் சத்தும் இரசாயனப் பதார்த்தங்களும் சுவையூட்டிகளும் நிறமூட்டிகளும் சேர்க்கப்பட்டு பல்வேறு வகையான விளம்பரங்களுடன் விற்பனையாகும் சோடா வகைகளிடம் நாம் ஏமாறப்போகிறோமா? வருத்தத்தை விலை கொடுத்து வாங்கப்போகிறோமா? இளம் வயதில் எமது பிள்ளைகளை நீரிழிவு நோயாளியாகப் பார்க்க ஆசைப்படுகிறோமா? எலும்பு, மூட்டு நோய்களுக்கு ஆளாகி நோவால் அவதிப்படப்போகிறோமா? சோடாவை வாங்கும் முன் இவற்றைச் சிந்திப்போம். அமங்கல பானமான சோடாவை மங்கலகரமான நிகழ்வுகளிற் பரிமாறுவதை நிறுத்துவோம். பொது நிகழ்வுகளில் சுலபமாகப் பரிமாறக்கூடிய ஆரோக்கியமான பானங்களைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பிராணாயாமத்தின் பங்களிப்பு


கலாநிதி கு. கேதீஸ்வரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
*விளையாட்டு விஞ்ஞான அலகு, யாழ் பல்கலைக்கழகம்*


உயிரினங்களின் வாழ்க்கைக்குப் பிரதானமானது மூச்சுக்காற்று உள்ளிழுக்கும் வெளிவிடும் செயற்பாடு ஆகும். இந்தச் செயலைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதே மூச்சுப்பயிற்சி என்ற பிராணாயாமம் என்பதாகும்.

பிராணன் என்றால் உயிர் என்றும் பொருள்படும். உயிராக மூச்சுக்காற்று இருப்பதால் பிராணன் எனப்படுகின்றது. பொதுவாகக் காற்று எங்கும் பரந்து இருக்கின்றது. காற்று இல்லாத இடத்தில் உயிர்கள் வாழமுடியாது. காற்று மிகுந்த பலம்வாய்ந்தது.

இந்த வலுவான காற்றுத்தான் எளிய உயிர்மூச்சாக நம்மை இயங்க வைக்கிறது. தண்ணீர்கூட காற்றினால் ஆனதேயாம். சாதாரணமாக நாம் உயிர்மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுகிறோம். நாம் மூச்சை உள்ளிழுக்கும்போது 500 க.செ.மீ காற்று நுரையீரலுக்குள் போகிறது.

ஒரு நிமிடத்திற்கு ஆறு லீட்டர் காற்றை நாம் உள்ளிழுக்கிறோம். ஆழ்ந்த உள்மூச்சின்போது 2500 க.செ.மீ காற்று உள்ளே போகிறது. நுரையீரலில் எப்போதும் 1000 க.செ.மீ காற்று தங்கியிருக்கின்றது. சாதாரணமாகக் காற்று வெளிவிடும்போது 500 க.செ.மீ முறைகள் காற்று வெளியேறுகிறது.

மூச்சுத்தான் நமது ஆயுளை நிர்ணயிக்கிறது. ஒரு நிமிடத்திற்கு நாம் 18 முறை சுவாசிக்கின்றோம். ஒருமணி நேரத்திற்கு 1080 முறைகள் ஒரு நாளைக்குச் சுமார் 25920 தடவைகள் சுவாசிக்கிறோம். உதாரணத்திற்கு நமக்கு 10 கோடி சுவாசமே வாழ்நாள் என்றால் அது எத்தனை வருடங்கள் என்றால் நாம் சுவாசிப்பதை மெல்ல மெல்ல விட்டுப்பழகி அதே சுவாசத்தை நாட்களை நீட்டி ஆயுளை வளர்த்துக் கொள்ளலாம்.

மூச்சே நமக்குப் பலம் கொடுக்கின்றது. சக்தியைக் கொடுக்கிறது. முறைப்படியான மூச்சுப்பயிற்சி நமக்கு நீண்ட ஆயுளைக் கூட்டித் தருகின்றது. உடலுக்கு தேஜஸ் என்ற ஒளியைத் தருகிறது. உணவு உண்ணாமல் ஒருமாதம்கூட இருக்கலாம். உறங்காமலும் பல நாட்கள் இருந்துவிடலாம். தண்ணீர் அருந்தாமல் ஒருவாரமேனும் இருந்துவிடலாம். மூச்சுவிடாமல் பத்துநிமிடம்கூட இருக்கமுடியாது. மூச்சே உணவாகப் பல முனிவர்கள் வாழ்ந்ததாகப் பழைய நூல்கள் கூறுகின்றன. ஆகவே அனைத்துக்கும் அடிப்படை மூச்சுக் காற்றுத்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்த நூல்கள் காற்றுக்குப் பத்துவிதமான பெயர்களிட்டு ஒவ்வொன்றின் செயல்களையும் விளக்கிக் கூறும். மூச்சுப்பயிற்சி செய்வதால் வீணாகும் உயிர்ச்சக்தி கட்டுப்படுத்தப்படுகிறது.

சிலர் உட்கார்ந்திருக்கும்போது கால்களை ஆட்டிக்கொண்டிருப்பர். வாய் முணுமுணுத்துக்கொண்டிருக்கும். நடந்து செல்கையில் ஏதாவது ஒன்றினைத் தட்டிவிட்டுச் செல்வதும், யாரையாவது சீண்டிவிட்டுச் செல்வதும் உயிர்ப்பிராணிகளை மிதிப்பதும் அடிப்பதும் தேவையில்லாமல் சத்தமிட்டு கத்துதலும் வீண் அரட்டை அடித்தலும் தொடர்பில்லாத வேலைகளில் சம்பந்தப்படுவதும் ஆகிய செயல்களால் நமது உயிர்சக்தி பலவிதங்களில் வீணாகிறது.

மூச்சுப்பயிற்சியால் இந்த வீணாகும் சக்தியைக் கட்டுப்படுத்தலாம். அது நம் உடலுக்கு மேலும் மெருகூட்டும். அடிக்கடி உயிர்சக்தி வீணாக்கினால் கைகள் நடுங்கும், குரலும் நடுங்கும், கண்கூசும், தலையாட்டம்போடும், கால்கள் தள்ளாடும், உடல் களைப்படையும் எதிலும் வெறுப்பும் நம்பிக்கை இழப்பும் எதையோ பறிகொடுத்த உணர்வும் பயஉணர்வும் பற்றிக்கொள்ளும். வாழ்வில் சலிப்பு ஏற்படும். இதையெல்லாம் வென்று பூரண வாழ்க்கை வாழ பிராணாயாமம் துணைசெய்யும்.

பத்துவித வாயுக்களாவன பிராண, அபான. சமான, வியான, உதான மற்றும் நாகன்,, கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பதாகும்.

கர்ப்பத்திலிருந்து குழந்தை வெளித்தள்ளுவது இதய இயக்கம், உணவு உண்ணல் இப்பணிகள் முகத்திலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் அபான வாயுவால் நடக்கிறது. பிராணவாயு சுவாசமாகிறது. இதனாலே மற்ற வாயுக்கள் வலிமை பெறுகிறது. உண்ணும் உணவு எச்சிலுடன் கலந்து வயிற்றில் ஜடராக்கினியுடன் கலந்து உடலெங்கும் வியாபித்திருக்கிறது.

உடலைத்தாங்கும் சக்தியுடன் இதயத்திலிருந்து உடலின் எல்லா செல்களுக்கும் சென்று இயக்குகிறது. உதானவாயு ஒளிவடிவமானது நெஞ்சிலிருந்து மேல்நோக்கி சலனப்படுகிறது. உடலிலிருந்து ஜீவனை வெளியேற்றும் பணியும் இது செய்கிறது. நாகன் வாயு, சோம்பல் முறித்தல், கொட்டாவி விடல் போன்ற செயல்களைச் செய்கிறது. கூர்மன் வாயு விக்கல் ஏப்பம் போன்ற செயல்களுக்குக் காரணமாகிறது. கிரகரன் வாயு தும்மல் இருமல் போன்ற செயல்களைச் செய்கின்றது. தனஞ்செயன் வாயு இன்பதுன்பமான செயல்களை இயக்குகிறது.

உடலில் எங்கும் பரவியுள்ள பிராணனே ஐம்புலன்களால் நாம் அறிவுபெறவும் காரணமாகிறது. நமது உடலில் நகம், முடி தவிர எல்லா உடல் உறுப்புக்களிலும் இயக்கச் செல்களிலும் இந்தப் பிராணன் கலந்திருக்கின்றது. இந்த மூச்சுக் காற்றான பிராணனைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தி ஒழுங்குசெய்தால் நோய் விலகி ஆயுள் கூடி, உடல் வலுவாகி ஒளிபெற்று நினைத்த காரியம் கைகூடுகிறது. மூச்சுப்பயிற்சியால் நாடிகள் சுத்தமாகின்றன. நாசியும் சுத்தப்படுவதால் சளி, ஆஸ்த்துமா இருமல் போன்றவை உடனே விலகுகிறது. பிராணாயாமம் எத்தனையோ முறைகளாக முனிவர்களாலும் ஆன்மீக பெரியவர்களாலும் சொல்லப்பட்டுள்ளன அவற்றை முறையாகத் தெரிந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடமே பயிற்சி பெற்று செய்ய வேண்டும். நாம் எளிய முறையான மூச்சுப்பயிற்சி செய்யலாம். அதாவது சுவாசித்தலை முறைப்படுத்தலே மூச்சுப்பயிற்சி செய்யலாம் என்னும் பிராணாயாமம். சுவாசித்தல் மூன்று வழியில் இயங்குகிறது. உள்ளே சிறிது நேரம் நிறுத்தி வைத்தல் கும்பகம், வலதுகை சுட்டுவிரல் மோதிரவிரல் தவிர மற்ற விரல்களை மடக்கி அந்த இருவிரல்களாலும் ஒரு நாசியை ஒரு விரலால் மூடி அடுத்து, அடுத்த நாசியை மூடி மாறி மாறிச் செய்யலாம்.

முதலில் ஏதேனும் ஒரு ஆசனத்தில் அல்லது அதற்கென தயார் செய்து கொள்ளும் துணி இவற்றில் ஒன்றில் தியானம் செய்வதுபோல் அமர்ந்து ஒரு பக்கம் நாசியைச் சுட்டுவிரலாலும் மறுபக்க நாசியை மோதிர விரலாலும் தொடுவதுபோல வைத்துக்கொண்டு விரலால் அழுத்தம் தந்து ஒரு நாசியை மூடி அடுத்த நாசி விரலைத் தளர்த்தி வைக்க வேண்டும்.

வலதுநாசியின் வழிமூச்சை மெதுவாக ஒரே சீராக மெல்ல உள்ளே இழுக்க வேண்டும். (அப்போது இடது நாசியை மோதிர விரல் மூடியிருக்கும்) இது ஐந்து மாத்திரை நேரம் அல்லது ஐந்து விநாடிகள் அப்படியே மூச்சை உள்ளே வைத்திருக்க வேண்டும். பின்னர் இடது நாசி வழியாக வழியாக முன் சொன்னதுபோல் மெல்ல மெல்ல பத்து மாத்திரை நேரம் வெளியில் விட வேண்டும். இப்படிப் பத்து தடவை செய்யலாம்.

பின்னர் இடதுநாசி வழியாக ஐந்து மாத்திரை உள்ளிழுத்து ஐந்து மாத்திரை உள்ளே வைத்திருந்து வலதுநாசி வழியே பத்து மாத்திரை வெளிவிட வேண்டும். இப்படிப் பத்து தடவைகள் பின்னர் கையை எடுத்து பின் வெளியே விடவேண்டும். அடிக்கடி விரதமிருத்தல், இயற்கை உணவு உண்ணல், அமைதி, அன்பு, கடைப் பிடித்தல் செய்வது நலம்.

**சூரியபேதனா மூச்சுப்பயிற்சி - மாணவர்களின் உடல் திறன்களை விருத்தி செய்கின்ற பயிற்சி முறையாகும்.**

- முதுகெலும்பு நிமிர்ந்த நிலையில் வசதியாக உட்காரவும்
- இடது நாசியை அடைத்துக்கொண்டு வலதுநாசியின் மூலம் காற்றை உள்ளிழுக்கவும்.
- வலது நாசியை அடைத்துக்கொண்டு இடதுநாசியின் மூலம் காற்றை வெளியேற்றவும்.
- மூச்சை உள்ளிழுத்தலும் வெளிவிடலும் மெதுவாக ஆழமாக எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் செய்தல் வேண்டும்.
- மேற்கூறியபடி 10 சுற்றுகள் செய்யவும்

**சந்திரபேதனா மூச்சுப்பயிற்சி - மாணவர்களின் ஞாபகசக்தியை அதிகரிக்கின்ற பயிற்சி முறையாகும்.**

- முதுகெலும்பு நிமிர்ந்த நிலையில் வசதியாக உட்கார்ந்து கொள்ளவும்.
- வலது நாசியை அடைத்துக்கொண்டு இடதுநாசியின் மூலம் காற்றை உள்ளிழுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இடதுநாசியை அடைத்துக்கொண்டு வலதுநாசியின் மூலம் காற்றை வெளிவிடவும்.
- காற்றை உள்ளிழுத்தலும் வெளிவிடலும் மெதுவாக ஆழமாக எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் செய்தல் வேண்டும்.
- மேற்கூறியபடி 10 சுற்றுகள் செய்யவும்.

## பிராணாயமம் பற்றிய சில முக்கிய விடயங்கள்

- யோகப்பயிற்சியில் அமரும் முன்னர் காலைக்கடன்களை முடித்துவிட வேண்டும்.
- தூய காற்றோட்டம் உள்ள இடத்தில் அமர்ந்து செய்தல்.
- படுக்கையை விட்டு எழுந்தவுடன் பிராணாயாமம் செய்யலாம்.
- அதிகமாகப் பேசுதல், அதிக உணவை எடுத்துக் கொள்ளல், அதிக நேரம் உறங்குதல், அதிக உழைப்பு ஆகியவற்றை சாதகன் கண்டிப்பாக விலக்குதல் அவசியம்.
- உடல் களைப்படையும் வரை பிராணாயாமல் பயிற்சி செய்தல் கூடாது.
- பிராணாயாமப் பயிற்சி செய்த உடனேயே குளிக்கக் கூடாது.
- இப் பயிற்சியின் போது மெதுவாக காற்றை உள்ளெடுத்தலும், வெளிவிடுதலும் அவசியம்.

## பிராணயாமாவினால் உடலில் ஏற்படுகின்ற நன்மைகள்

- இதயத் துடிப்பினை சீராக்கும்
- சோர்வை நீக்கி சுறுசுறுப்பை அதிகரிக்கச் செய்யும்
- ஆண்மை, பெண்மை அதிகரிக்கும்
- நீண்ட ஆயுள் அதிகரிக்கும்.
- நரம்பு சம்பந்தமான நோய்கள் குணப்படும்.
- ஆளுமை விருத்தியடைகின்றது.
- ஜீரண சக்தி கூடும்.
- கோபம் குறைவடையும்.
- மனக்குழப்பம், தாழ்வு மனப்பாண்மை நீங்கி தூய சிந்தனை உருவாகும்.
- இரத்தத்தினை தூய்மைப்படுத்துகிறது.
- உடல், மனதுக்கு குளிர்ச்சி தருகின்றது.
- நுரையீரல் சம்பந்தமான நோய்கள் இல்லாமல் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால மாணவரும் ஆசிரியர்களின் வகிபாகமும்



பொன்னம்பலம் அருணகிரிநாதன்
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், முன்னாள் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்.

ஒரு தேசத்திற்கு பயன்தரககூடிய ஆக்கபூர்வமான எதிர்கால மனிதவள சந்ததியினரை உருவாக்குவதே கல்வியின் பிரதானநோக்கமாகும். அதற்கென செயலாற்றும் பிரதான நிறுவனமாக இருப்பது பாடசாலையாகும். எத்தனை பெரிய கல்வித் திட்டங்களும் கல்விச் சீர்திருத்தங்களும், கல்விக் கொள்கைகளும் உருவாக்கப்பட்டாலும் அது நடைமுறைப்படுத்தப்படும் களம் பாடசாலையேயாகும்.

இந்தியாவின் கொத்தாரி கல்வி ஆணைக்குழு பின்வருமாறு குறிப்பிடுகின்றது. ஒரு நாட்டின் தலைவிதி அந்த நாட்டின் பாடசாலைகளின் வகுப்பறையில் தீர்மானிக் கப்படுகின்றது. பாடசாலையில் உள்ள மாணவர்களை வல்லவர்களாக்குவதும் நல்லவர்கள் ஆக்குவதும் பாடசாலையில் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்களை சார்ந்ததாகும். பல் வேறுப்பட்ட சமூக, மற்றும் பொருளாதார சூழல்களில் இருந்து வருகை தரும் பிள்ளைகளின் தேர்ச்சிகளை விருத்தி செய்து அவர்களின் அடைவுகளை ஆளுமைகளை மேம்படுத்துவது பாடசாலைகளின் பொறுப்பாகும்.

சமகால சூழலில் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் தளம்பல் நிலைகள் ஏற்பட்டுள்ளன. கல்வித்துறை பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. மாணவர்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் பல இடர்களை சந்தித்துள்ளார்கள். இதற்கு பல காரணங்கள் உள்ளன.

1) 2019 தொடங்கிய கொவிட் -19 பெருந்தொற்று
2) நாட்டின் பொருளாதார நலிவு
3) பல குடும்பங்களின் தொழில் இழப்பு
4) பணவீக்கமும் விலைவாசி அதிகரிப்பும்
5) நீண்ட நாட்கள் பாடசாலைகள் இயங்காமை
6) ஆசிரியர் - மாணவர் உறவு இடைவினைகள் துண்டிக்கப்படல்
7) தகவல், தொடர்பாடல், தொடர்பாடல் சாதனங்கள் அதிகரித்தமை
8) கல்விப் பரிமாற்ற ஊடகச் செயற்பாடுகளின் செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) கல்வி பெறும் முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

10) போதைப்பொருள் பயன்பாடும் வழிதவறுதல்களும் மாணவர்களின் கல்வியிலும் நடத்தைக் கோலங்களிலும் பாரிய விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

மாணவர்களை ஆற்றுப்படுத்த வேண்டிய, வழிகாட்ட வேண்டிய மாபெரும் கடமைப் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. இழக்கப்பட்ட கல்வி நாட்கள் இழக்கப்பட்ட வகுப்பறைக் கற்றல் என்பவற்றுக்கு துரித திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக ஆரம்பக் கல்வியில் தரம் 1, தரம் 2 வகுப்புக்களில் சரியான கற்றல் செயற்பாடுகளின்றி தரம் 3 இற்கு வகுப்பேற்றப்பட்ட சம்பவங்கள் உண்டு. இது காலப்போக்கில் பாரிய தாக்க விளைவை ஏற்படுத்தும்.

**சமகால மாணவ சமுதாயம்**

- சுவாரசியமான குணாதிசயங்களை கொண்டிருக்கிறார்கள்.
- தகவல் தொடர்பாடல் சாதனங்களுடன் கொண்டிருக்கும் பரிச்சயம் பிரமிக்கத்தக்கது.
- சிறிய வயதில் தொலைபேசி, வலைத்தளம் நுகர்தலுக்கு பழக்கப்பட்டுள்ளார்கள்.
- நாளாந்த தொடர்பாடல், எண்ணங்கள், விருப்பங்கள் கட்டின்றி பகர்தல்
- நாகரிகம் என்ற போர்வையில் அந்நிய பண்பாடுகளை உள்வாங்குதல்
- ஆடை, அணிகலன்கள், தலையலங்காரம் என்பவற்றில் அதீத அக்கறை கொள்ளல்
- குழு உணர்வுகளில் அதீத அக்கறை கொண்டு தவறான வழிகளில் பயணித்தல்.
- தனிப்பட்ட உடல், உள ஆராக்கியத்தில் மட்டுமன்றி சமூகத்தின் கூட்டு ஆரோக்கியத்தில் தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

தடுமாறி நிற்கின்ற மாணவர்களுக்கு ஆலோசனையும் வழிகாட்டலும் நெறிப்படுத்தலும் இன்று அவசிய தேவையாக உள்ளது. ஆசிரியர்கள் இந்த அனர்த்த கால செயற்பாடுகளில் அதீத கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு ஆசிரியர்களும் பயிற்றுவிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளார்கள். மாணவர்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக ஆசிரியர்கள் திட்டமிட்ட அடிப்படையில் பயிற்று விக்கப்பட வேண்டும்.

நடத்தையில், அறிவில், ஆற்றலில், மனப்பாங்கில் நிரந்தரமான மாற்றங்களை ஏற்படுத்தினால் அங்கு கற்றல் நடைபெற்றிருக்கிறது என்று அர்த்தம். வெறுமனே பரீட்சைக்காக மட்டும் கற்பிப்பது அல்ல கல்வி வாழ்க்கைக்கு வழிகாட்டுவதே கல்வி அதற்கு ஏற்ப ஆசிரியர்களின் பங்கு மாற்றமுற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்களை கற்பித்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு ஒன்று மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகின்றது. அது பின்வரும் விடயங்களை வலியுறுத்துகிறது.

1. சிந்தனைக்கான வழிமுறைகள்
   ஆக்கத்திறன், திறனாய்வுச் சிந்தனை, பிரச்சினை தீர்த்தல், தீர்மானம் எடுத்தல், கற்றலுக்காகக் கற்றல்

2. பணிபுரியும் வழிமுறைகள்'
   தொடர்பாடல், இணைந்து செயற்படல்

3. பணி செய்வதற்கான கருவிகள்
   தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம், தகவல் கல்வியறிவு

4. உலகில் வாழ்வதற்கான திறன்கள்
   குடியுரிமை, வாழ்வும் தொழிலும், கலாசார விழிப்புணர்வு, தனிப்பட்ட, சமூக பொறுப்புகள்

உலகளாவிய மாற்றங்கள் பல்வேறு, துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சி
- அறிவுப் பிரவாகம்
- உலக மயமாதல்
- கொவிட் 19 க்கு பின்னரான நாடுகளின் பொருளாதார தளம்பல் நிலைகள்.
- இயற்கைப் பேரிடர்கள்

இதனால் மனித வாழ்வு துரிதமான மாற்றங்களுக்கு உள்ளாகி வந்தது. இதற்கேற்ப பாடசாலைக் கட்டமைப்புகளில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். தொழிற்பாடுகள், ஆசிரியர்கள் வகி பங்கு, ஆசிரியர், மாணவர் உறவு, ஆசிரியர் உருமாற்றம் பெற வேண்டும். பாடசாலை கற்பிக்கும் நிறுவனமாக இல்லாமல் கற்கும் நிறுவனமாக மாற்றப்படவேண்டும்.

**ஆசிரியர்களின் நிலை மற்றும் வகிபாகம்**

- மாணவர்களிடையே தரிசன நோக்கை (Vision) விருத்தி செய்து மாணவர்களை ஊக்குவித்தல்
- மாணவர் மீது நம்பிக்கை விசுவாசமாக இருப்பதோடு உடன்பாடான மனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்குகளை வெளிப்படுத்தல்.

- மாணவர்களின் சிறிய வெற்றிகளையும் முதன்மைப்படுத்தி கொண்டாடுதல்.
- நடத்தை, நட்பு, சகிப்புத்தன்மை, பண்புடமை, மனிதநேயம், நெகிழ்ச்சி, ஜனநாயகப் பண்பு, இயைந்து பணியாற்றல், ஜனநாயகப் பண்பு கொண்டிருத்தலும் வெளிப் படுத்தலும்
- பாடசாலை அமைப்பில் பொறுப்புமிக்க உறுப்பினராக செயற்படுத்தல்.
- தேவையான மாற்றங்களை ஏற்று நடைமுறைப்படுத்தி ஒத்துழைத்தல்.
- பாடசாலை சமூகத்துடன் இடைவினை கொள்ளல்.
- மாணவர்களின் கற்றல் பூரண விருத்தி பெற வகை கூறலும், பொறுப்புக் கூறலும்
- பொருத்தமான நடத்தைக் கோலங்களை கொண்டிருத்தல்
- தனது வாண்மையை தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்ளல்

### பாடசாலை ஒழுக்க விழுமியங்களை, நடத்தைகளை முகாமை செய்தல்

- மாணவர்களுக்கு அறிவு திறமையை வழங்குவது மட்டுமன்றி சமூக ஒழுக்க விழுமியங்களுடன் வாழ்வதற்கேற்ற விழுமியங்களை விருத்தி செய்தல்.
- நடத்தை தொடர்பான தெளிவான திட்டம் இருக்க வேண்டும்.
- மாணவர்கள் நடத்தை தொடர்பாக ஆசிரியர்களும், பெற்றோர்களும் தொடர்பு டையவர்களாக இருத்தல் வேண்டும்.
- மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைகளை நியாயமாகவும், நேர்மையாகவும் ஒழுங்குவிதிகளின் படி அணுகுதல் வேண்டும்.
- பொருத்தமற்ற நடத்தைகளை தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்
- ஒவ்வொரு மாணவனதும் தனித்துவம், பொருத்தமற்ற நடத்தை, தோன்றிய சூழல், சந்தர்ப்பம் கருத்தில் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுத்தல்.
- ஒழுக்கம் என்பது ஆசிரியரால் எதிர்பார்க்கப்படும் ஒரு மனித நடத்தையாகும்.

விடயங்களை கற்பதல்ல கல்வி மனிதனை சிந்திக்கத் தூண்டுவதே. கல்வி. பரீட்சைக்காக, தொழிலுக்காக கற்பது மட்டுமல்ல கல்வி வாழ்கைக்கு உதவுவனவற்றை கற்பதோடு அறிவில், ஆற்றலில் நடத்தை கோலங்களில் நிலைத்து நிற்கக்கூடிய நேர் மனப்பாங்குடைய மனிதனை உருவாக்க கல்வி வழிகாட்ட வேண்டும். மாணவர்கள் பாடமாக்கும் இயந்திரங்கள் அல்ல.

கல்வி இன்று போட்டி நிறைந்ததாகவும், பணம் சம்பாதிக்கும் யந்திரமாகவும் மாறிவிட்டது. பெற்றோர்களும் மாணவர்களும் ஓட்டப் பந்தயத்தில் சிக்கியிருக்கிறார்கள் மாணவர்கள் பலர் மகிழ்ச்சியை தொலைத்தவர்களாக உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை 5 மணியில் இருந்து இரவு 10 மணி வரை மாணவர்களும், பெற்றோர்களும் அலைந்து திரிகிறார்கள். வீதிகளில் மோட்டார் சைக்கிள்களுடன் பெற்றோர்கள் தவம் கிடக்கிறார்கள். பல மாணவர்களுக்கு காலை உணவு கூட வீட்டில் சமைக்கப்படுவதில்லை. கடையில் சென்று சாப்பாட்டு பெட்டியில் துரித உணவுகளை வைத்து பாடசாலையில் கொண்டு சென்று இறக்கி விடுகிறார்கள். பாடசாலை முடிவுற்றதும் மாணவர்கள் பல இடங்களுக்கும் காவிச் செல்லப்படுகின்றார்கள். அன்பு, அரவணைப்பு, பாசம் இவர்களுக்கு கிடைக்கிறதா என்பது ஆய்வுக்குரியது.

இது மாற்றியமைக்கப்பட வேண்டும். இது பற்றி ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் ஆறுதலாக அமர்ந்து கலந்துரையாட வேண்டும்.

## 21 ஆம் நூற்றாண்டு ஆசிரியர்களின் பங்கு

- வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பவர்
- மாற்றத்தினை பிரதானமாக செயற்படுதல்
- ஆய்வாளர்
- டிஜிற்றல் (எண்ணிம) வடிவமைப்பாளர்
- தலைவர்
- சிறந்த ஒத்துழைப்பாளர்
- சிறந்த துலங்குபவர்
- ஆக்கத் திறனுடையவர்
- கதை சொல்லி
- தொடர்ச்சியாக கற்பவர்
- உறவுகளை கட்டி எழுப்புபவர்
- சிறந்த தொடர்பாளர்
- தூர நோக்குடையவர்
- முன்னுதாரன மாதிரி
- இடர் ஏற்கும் தன்மையுடையவர்

இப்பண்புகளை உடையவர்களாக ஆசிரியர்கள் மாற்றமடைய வேண்டும். புதிய நூற்றாண்டுக்குரிய கல்வி புதிய வழிமுறைகளை பெற்று வருகிறது. அதற்கேற்ப ஆசிரியர்களின் பங்கும் பணியும் மாற்றமடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- SMART தொழில்நுட்பம்
- செயற்கை நுண்ணறிவு (Artificial Interlligances)
- கணனி ஒழுங்கமைப்பு ஊடாக மனித நுண்ணறிவை ஒத்த இயந்திரங்களினூடாக செயலொழுங்கை உருவாக்குதல்

- மேலதிகமான பிரத்தியோக கற்றல்
- மேலதிகமான தொலைக்கல்வி சந்தர்ப்பங்கள்
- அதிகமான கல்விச் சாதனங்கள்
- கைவிரல் ரேகைக்குள் தரவுகள்
- இலகுவான சரியான மதிப்பீடுகள்
- செயற்றிட்ட அடிப்படையான கற்றல்

இவற்றினை மனதில் கொண்டு கல்விச் செயற்பாடுகள் மாற்றமடைய வேண்டும். மரபு ரீதியான விடயங்களில் இருந்து விடுபட்டு மாணவர்கள் புதிய வழிகளில் வழிப்படுத்துவதற்கு ஆசிரியர்களின் பெரும் பங்களிப்பு வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளின் விளையாட்டுக்களை முகாமை செய்வதில் அதிபர்களின் வகிபாங்கு

பா.வாசுதேவன்,
*பிரதிக்கல்விப்பணிப்பாளர்(பொது நிர்வாகம்),*
*வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி தெற்கு.*

## அறிமுகம்

மனித வளத்தினை உயர்தரத்தில் முகாமை செய்யும் திறனும் சிறந்த பௌதீக வளப்பயன்பாடுமே நிறுவனங்களை உயர்தரத்தில் பேணுவதற்கு உதவுகின்றது. இரண்டு கல்வி நிறுவனங்களை உயர்தரத்தில் பேணுகின்ற மதிப்புக்குரிய உயர்திரு.சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்கள் தலைமைத்துவப் பண்பில் ஓர் உயர்ந்த இடத்தில் உள்ளார்.

ஒரு விளையாட்டு வீரனுக்குரிய உடலமைப்பு, ஆளுமைப்பண்புகளையும் கொண்டிருந்தமை விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை நிலைநாட்ட வழிவகுத்தது. தற்பெருமையற்ற மனிதர். எனவே இவரது விளையாட்டுத்துறை தொடர்பான சாதனைகளை இவர் மூலம் அறியமுடியவில்லை. இவரது ஆசிரியர்கள், நண்பர்கள் மூலமாக அறிந்த சிலவற்றினை குறிப்பிடுகின்றேன்.

100m குறுந்தூர ஓட்ட நிகழ்வில் ஆசிரிய கலாசாலையில் இவரது சாதனை இன்றுவரை காணப்படுகின்றது. வடமாகாணத்தின் சிறந்த கரப்பந்தாட்ட வீரர்களில் ஒருவர். உயிரோட்டமான அறிவிப்பாளர், தரமான தொடக்குனர், சிறந்த பூப்பந்தாட்ட வீரர். எனவே விளையாட்டுத்துறைக்கு இவர் ஆற்றிய பங்கு மகத்தானது. இவரையும் விளையாட்டுத்துறையையும் பிரித்துப் பார்க்க முடியாது என்பதுடன், இன்றும் என்னுடன் சேர்த்து பல விளையாட்டு வீரர்களுக்கு குருவாகவும் ஆசிரியர்களுக்கு தலைவராகவும் விளங்குகின்றார். எனவே இவரது மணிவிழா மலரில் விளையாட்டுத்துறையுடன் தொடர்புடைய ஆக்கமான பாடசாலைகளில் விளையாட்டுக்களை முகாமை செய்வதில் அதிபர்களின் வகிபங்கு தொடர்பான ஆக்கம் இடம்பெறுவது பொருத்தமானது என எண்ணுகின்றேன்.

விளையாட்டுக்கள் தொடர்பான பாடசாலை அதிபரது பிரதான வகிபாகத்தை குறிப்பிடும் போது திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், மேற்பார்வை, தொடர்பாடல், தீர்மானம் எடுத்தல், ஆளிடைத்தொடர்பு போன்ற வகிபாகத்தின் ஊடாக பாடசாலையின் இலக்கு, குறிக்கோளை அடையச்செய்தலாகும். அத்துடன் இணைக் கலைத்திட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள அதிபர்களிடம் பின்வரும் தேர்ச்சிகள் காணப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அடிப்படை கோட்பாட்டுத் தேர்ச்சி
2. மனப்பாங்கு ரீதியான தேர்ச்சி
3. மனித இயல்பு சார் தேர்ச்சி
4. தொழில்நுட்ப தேர்ச்சி

01. விளையாட்டுக்களை திட்டமிடுதல் (Plan the sports activities) குறிப்பிடும் போது பாடசாலை முகாமையின் வெற்றி திட்டமிடலில் தங்கியுள்ளது. திட்டமிடல் எனும்போது நோக்கத்ததை அடைந்து கொள்வதற்கு எடுக்க வேண்டிய ஒழுங்குமுறைகளைத் திட்டமிடல் எனலாம். பாடசாலைகளில் விளையாட்டுக்கள் தொடர்பாக திட்டமிடும் போது அதிபர்கள் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். திட்ட செயல்முறைகளில் பிரதானமாக இரண்டு படிமுறைகள் உண்டு.

1. .பாடசாலையில் திட்டம் தயாரித்தல்
2. பாடசாலையில் அதனை நடைமுறைப்படுத்தல்

திட்டமிடல் என்பது ஒரு தொடர்ச்சியான செயற்பாடாகும். நடைமுறைப் படுத்தும்போது கண்காணித்தல், மதிப்பீடும் நடைபெறும் பாடசாலையில் விளையாட்டுத் தொடர்பான திட்டத்தில் திட்டக்குறிக்கோளை அடைய பின்வரும் விடயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சம வாய்ப்பினை வழங்குதல் (Equity), வினைத்திறன் (Efficiency) வெளிப்படைத்தன்மை (Transparacy), வகைகூறலும்,பொறுப்புக்களும், (Accountability and responsibility) பங்கேற்றல் முகாமைத்துவம் (Participation) போன்ற விடயங்களை உள்வாங்கி செயற்பட வேண்டும்.

1. விசேடமானது - Specific
2. அளவிடக்கூடியது - Measurable
3. அடைந்துகொள்ள - Attainable
4. உண்மையானது - Realistic
5. காலம் சார்ந்தது - Timely

பாடசாலை கல்வியின் கேந்திர நிலையமாக விளங்குகின்றது. நேரடி முகாமையாளராக அதிபரின் செயற்பாடுகளும், நெறிப்படுத்தலும், தலைமைத்துவமும், நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கல்விக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக பாடசாலைக்கு தலைமைத்துவத்தை வழங்குதல் அதிபரின் பணியாகும். மேலும் பாடசாலையுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரதும் ஆற்றல்களை மற்றும் திறன்களை இனங்கண்டு உத்தேச நோக்கங்களை அடைந்து கொள்வதற்கென மனித மற்றும் பௌதீக வளங்களை விளைதிறன்மிக்க வகையில் பயன்படுத்துவது அவசியமாகின்றது. திட்டமிடும் விளையாட்டுக்கள் எமது பாடசாலைச் சூழலுக்கு பொருத்தமானதா என்பதனை உறுதி செய்ய வேண்டும். விளையாட்டிற்கான பயிற்சி, உபகரணங்களை எவ்வாறு எங்கு பெறுவது தொடர்பாகவும், திட்டமிட வேண்டும்.குறிப்பிட்ட காலத்தை வரையறை செய்ய வேண்டும். அத்துடன் நடைமுறைச் சாத்திய தன்மையை அறியவேண்டும். குறிப்பிட்ட விளையாட்டை பாடசாலையில் தொடர்ச்சியாக பேணக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. விளையாட்டுக்களை ஒழுங்கமைத்தல் - (Organizing Sports Activities)

குறிக்கோளை அடையும் பொருட்டு செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி செய்வதனையும் அவற்றினை தொகுதிகளாக வகுப்பதனையும் வளங்களை ஒதுக்கீடு செய்வதனையும் குறிக்கும். பாடசாலையில் விளையாட்டுக்களை ஒழுங்கமைக்கும் போது பின்வரும் விடயங்களை கவனத்திற்கொள்ள வேண்டும்.

1. தெளிவான குறிக்கோள் காணப்பட வேண்டும்
2. குறிக்கோள் அடையும் வழிமுறைகளை வரையறை செய்தல் வேண்டும்.
3. செயற்பாடுகளையும் பணிகளையும் எல்லா ஊழியர்களுக்கும் பகிர்ந்தளித்தல்
4. தொடர்ச்சியான செயற்பாடு காணப்படுதல்.
5. பணிகளுக்கான செயலொழுங்கு காணப்படுதல்
6. பொறுப்புகளுக்கான முகாமைத்துவக் கட்டமைப்புக் காணப்படல்
7. வகைகூறும் தன்மை காணப்படல்.

பாடசாலையில் விளையாட்டுக்கான பிரதான குழுவைத் தெரிவு செய்தல், ஒவ்வொரு விளையாட்டுக்கும் உபகுழுக்களைத் தெரிவு செய்தல். குழுக்களுடன் கலந்துரையாடி பொறுப்புக்களை வழங்குதல் குழுக்கள் செயற்படுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். வருடாந்த திட்ட நாட்காட்டியைத் தயாரித்து அதற்கிணங்க செயற்படுதல்.

03. விளையாட்டுக்கான நெறிப்படுததலை மேற்கொள்ளுதல் - (Directing)

குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு ஒழுங்மைப்பின் ஊடாக வழங்கப்பட்ட பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கையாகும். இங்கு வழங்கப்படும் வழிகாட்டல் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நேர்மனப்பாங்கை ஏற்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். வழிகாட்டலை மேற்கொள்ளும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. ஆசிரியர், மாணவர்களின் ஆற்றல்களை அறிந்திருத்தல்.
2. ஜனநாயக ரீதியாக செயற்படுதல்.
3. ஆசிரியர், மாணவர்கள் சுயமாக செயற்பட வழிகாட்டல்.
4. ஆசிரிய, மாணவர்களின் பலம், பலவீனங்களை அறிந்து கொள்ளல்.

மாணவர் ஒருவருக்கு தனது ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைப்பது கல்வி சார்செயற்பாடுகளைப் போன்றே இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதன் மூலமே ஆகும். இதிலும் விளையாட்டுக்களில் ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி ஆர்வத்துடன் மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். எனவே விளையாட்டுக்களை நெறிப்படுத்தி நடாத்துவதன் மூலம் மாணவர்களின் ஆளுமை வளர்த்துக்கொள்ள முடியும்.

04. மேற்பார்வை அல்லது கட்டுப்படுத்தலை மேற்கொள்ளுதல் - (Controlling)

திட்டமிட்டபடி குறிக்கோள்களை அடைவதற்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகிறதா என உறுதிப்படுத்துவது மேற்பார்வை அல்லது கட்டுப்படுத்தல் எனலாம். காலத்தையும் முன்னேற்றத்தையும் காலத்தின் தன்மைக்கு ஏற்ப முன்னேற்றம் நடைபெறுவதை அவதானிக்க வேண்டும். கட்டுப்படுத்தல் மேற்கொள்ளும் போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. பிரச்சினைகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல்
2. நிகழ்கால செயல்கள் மற்றும் செயற்பாடுகளை திட்டமிடல்
3. குறிக்கோளுக்கான வேறுபாடுகளை இனங்கண்டு அதற்கான காரணங்களை அறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

ஒவ்வொரு மாணவனும் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல். விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளுதல். விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர் உட்பட அனைத்து தரப்பினரின் ஒழுக்கத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

05. தொடர்பாடல்

பாடசாலையில் பணியாற்றும் கல்வி, கல்விசாரா ஊழியர்கள் பாடசாலையின் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு நல்லுறவைப் பேணுவது கட்டாயமாகும். சிறந்த தொடர்பாடல் மூலமே நல்லுறவைப் பேண முடியும். சிறந்த தொடர்பாடலைப் பேணுவதற்கு பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

1. பெற்றோர் நலன்விரும்பிகளுடன் நட்புடன் உரையாடுதல்
2. மாணவர்கள் ஆசிரியர்களுடன் அவர்களது பெயரைப் பயன்படுத்தி உரையாடுதல்
3. மாணவர்கள் மீது உண்மையாக இருத்தல்
4. பெற்றோர்களது மாணவர்களது அபிப்பிராயங்களுக்கு மதிப்பளித்தல்
5. விளையாட்டுகள் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ள ஆர்வமாக இருத்தல்

பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் விளையாட்டுக்கள் தொடர்பாக சமூகத்திற்கு தெளிவூட்டுதல், வெற்றிகளை அறிக்கைப்படுத்துதல், விளையாட்டுச் செயற்பாட்டிற்காக வெளிநபர்களை இணைத்துக்கொள்ளும்போது உரிய சுற்றுநிருப விதிகளுக்கு ஏற்ப செயலாற்றுதல்.

06. முடிவுரை

முறைசார்ந்த கலைத்திட்டத்தினுள் அறிவியல் சார் மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிவை மாத்திரம் பெற்றுக்கொள்ளும் பாரம்பரியத்திற்கு மாறாக மனப்பாங்கு ரீதியாக மாணவர்களை அபிவிருத்தி செய்து அறிவு மற்றும் திறன்களில் பரிபூரணமான கூட்டு ஆளுமைகளைக் கொண்ட பிள்ளை ஒன்றை ஒப்படைப்பதற்கு இணைக்கலைத் திட்ட செயற்பாடுகளை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துதல் கட்டாயத் தேவையாகும். அந்த வகையில் மாணவர்கள் தங்களின் திறனை வெளிக்காட்ட பொருத்தமான விளையாட்டுகளில் ஈடுபடச் செய்தல் அதிபர்களின் கடமையாகும். அந்த வகையில் அதிபரின் விளையாட்டுக்கள் தொடர்பான வகிபங்கு திட்டமிடல், ஒழுங்கமைத்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தல், மேற்பார்வை, தொடர்பாடல் தீர்மானம் எடுத்துல், ஆளிடைத்தொடர்பு, போன்ற விடயங்களில் கவனமெடுப்பதன் மூலம் பாடசாலை மாணவர்களை விளையாட்டுச் செயற்பாடுகளில் பங்குபற்றச் செய்வதன் ஊடாக சவால்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய ஆளுமை பொருந்திய அபிவிருத்திக்கு உதவக்கூடியவர்களாக மாணவர்களை உருவாக்க முயற்சி செய்வோம்.

உசாத்துணைகள்


1. பாடசாலைத் திட்டமிடல் பற்றிய வழிகாட்டல் கைநூல் 2013, கல்வி அமைச்சு.
2. கல்வி முகாமைத்துவம், 2010 இலங்கை திறந்த பல்கலைக்கழக வெளியீடு.
3. பாடசாலைக் காரியாலய முகாமைத்துவம் 2014, தேசிய கல்வி நிறுவகம்.
4. பாடசாலை முகாமைத்துவ வழிகாட்டி, 2020, கல்வி அமைச்சு.
5. தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2016, உயர்கல்வி அமைச்சு, இலங்கை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அச்சுறுத்தும் பிறழ்பொருள்கள் (Malware)

இரா. தனஞ்சயன்,
ஆசிரியர்
சயன்ஸ் அக்கடமி, நல்லூர்.




கணினியை அல்லது தொலைபேசிகளை நச்சுநிரல்கள் (Virus) பாதிப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் பிறழ்பொருள்கள் என்பது என்ன? அது ஒரு வைரஸ் தானா? இல்லை பிளழ்பொருள் என்பது ஒரு மென் பொருள். வைரஸ் என்பது பிறழ் பொருள்களின் ஒரு வகையாக அமையும். கணினியை வைரஸ் பாதித்ததாகச் சொல்வோம். அது உண்மையில் பிறழ்பொருள் என்பதே சரியானது.

கணினியில் நாம் நிறுவும் மென்பொருள் எல்லாம் பயனரின் அனுமதியுடனேயே நிறுவப்படும். ஆனால் பிறழ்பொருளானது பயனரின் அனுமதியின்றியே கணினியில் நிறுவப்பட்டுவிடும். பயனரின் கடவுச்சொல் மற்றும், வங்கிக் கணக்கு விபரங்களை அபகரித்தல் போன்ற பல்வேறு தீங்குகளை பிறழ்பொருள் மென்பொருள் செய்யும்.

பிறழ்பொருள்கள் கணினியில் அல்லது திறன்பேசியில் பல்வேறு வழிகளில் நிறுவப்படக்கூடும்

1. மின்னஞ்சலில் வரும் இணைப்புகள் மூலம்
2. தீங்கிழைக்கக்கூடிய இணையத்தளங்கள்
3. பதிவிறக்கப்படும் மென்பொருள்கள் (software) அல்லது செலுத்திகள் (drivers)

பிறழ்பொருள்களை எவ்வாறு நீக்குவது?

இதற்கு இலகுவாக ஒரு வழியைக் கூறிவிடமுடியாது. காரணம், பிறழ்பொருள்கள் பல வகைகளில் காணப்படும். இருந்தாலும் பொதுவாக நச்சுநிரல் எதிர்ப்பு மென் பொருளை (Anti-virus) நிறுவி கணினி நினைவகத்தை வருடி பிறழ்பொருள்களை அழித்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறழ்பொருள் திறன்தொலைபேசிகளையும் தாக்குமா?

ஆம், உண்மையில் திறன் தொலைபேசிகளைக் குறிவைத்தே பல பிறழ் பொருள்கள் அண்மைய காலங்களில் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. நாம் திறன்பேசிகளுக்கு நிறுவும் பிரயோக மென்பொருள்கள் (apps), மின்னஞ்சல் மூலம் இணைத்து அனுப்பப்படும் தொற்றுக்கள், அபாயமான வலைத்தளங்கள் போன்றவற்றில் பிரவேசிப்பதன் மூலமும் எமது கைத்தொலைபேசிகள் தாக்கத்திற்குட்படலாம்.

இவற்றை எவ்வாறு தடுப்பது அல்லது எமது கணினிகள் மற்றும் திறன்பேசிகள் பிறழ்பொருள்களின் தாக்கத்திற்குட்பட்டதா என்பதை எவ்வாறு கண்டுபிடிப்பது?

1. சாதனத்தின் செயற்படு வேகம் மந்தமாகும்
2. இணையத்தளத்தில் பிரவேசிக்கும் போது நாம் விரும்பாத வேறு இணையப் பக்கங்களுக்கு எம்மைத் திசைதிருப்பும்.
3. கணினி shut down ஆதல் அல்லது restart ஆதல்
4. அடிக்கடி (pop-up adds) தேவையற்ற விளம்பரங்கள் தோன்றல்

போன்ற மாற்றங்கள் உங்களது சாதனங்களில் தோன்றுமாயின் அவை பிறழ்பொருகள்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவையாக இருக்கலாம்.

இனி பிறழ்பொருள்களின் வகைகளையும் அவை எவ்வாறு எமது கணினிகளைப் பாதிக்கும் என்பதையும் பார்ப்போம்.

உண்மையில் பெரும் எண்ணிக்கையான வகைகளில் பிறழ்பொருள்கள் காணப்படுகின்றன. இருந்தும் அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் சில வகைப்பாடுகளைப் பார்ப்போம்.

**நச்சுநிரல்** (Virus)

இவ்வகையான பிறழ்பொருள்கள் இன்னொரு ஊடகமொன்றின்மூலமே பரவும். அதாவது விஞ்ஞானத்தில் சொல்லப்படும் வைரசு போன்ற செயற்பாட்டையே இம்மென்பொருள்களும் கொண்டிருக்கும். மின்னஞ்சல் மூலம் இணைப்புகளாக அல்லது பேனாசெலுத்திகள், இறுவட்டுகள் போன்ற தேக்கச் சாதனங்கள் மூலம் இவைபரவலாம். அத்தோடு அனாவசிய வலைத்தளங்களில் பிரவேசிப்பதாலும் உங்கள் கணினிக்கோ திறன் தொலைபேசிக்கோ பதிவிறக்கப்படலாம். நிறைவேற்றத்தக்க கோப்புகளுடன் (Executable file) இவை கணினித் தொகுதியினுள் தொடர்ந்து இயங்கியவண்ணம் இருக்கும். எமக்குப் பயன்படும் கோப்புகளை அழித்தல் நகல் எடுத்தல் போன்ற பல தீங்குகளை இவை செய்வதால் நாம் நிறுவிய கணினி மென்பொருள்கள் மற்றும் வன்பொருள்களுக்குக்கூட பாதிப்பு ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணினி வேம்ஸ்** (Computer worms)

இவை கணினி வைரசுகள் போன்று பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு தனியாக இயங்கவல்லன. மின்னஞ்சல் WhatsApp, Facebook போன்ற சமூக வலைத் தளங்களின் ஊடாக வரும் அனாவசிய இணைப்புகளை சொடக்குவதன் மூலம் பரவலாம்.

**ஒற்றர் பொருள்** (Spyware)

இவ்வகை பிறழ்பொருள்கள் எமது அனுமதியின்றியே கணினியின் பகுதிகளைச் செயற்படுத்தி பயனர் பற்றிய பிரத்தியேகத் தகவல்களை வெளியே அனுப்பவல்லது. உதாரணமாக ஒரு பெண் உடைமாற்றும் காட்சி வலைத்தளங்களில் வருவதைப் பார்த்து அந்தப் பெண் அதிர்ச்சியடைந்திருக்கிறார். எப்படி இது நடந்ததென ஆராய்நத போது நிபுணர்கள் கூறியபதில் மேலும் வியப்படையச் செய்தது. ஒற்றர் பொருள் மூலமே கமெராவை எங்கோ இருந்து குறும்பர்கள் (hackers) இயக்கியிருக்கிறார்கள். றோயன் குதிரைகள் (Trojan horse) என்ற பிறழ்பொருளும் இவ்வகையானதெனக் கொள்ளலாம். பயனருக்கு நன்மையளிப்பதுபோல் அறிமுகமாகி பின்பு கணினித் தொகுதிக்கு தீங்கு பயக்கவல்லது. கிரேக்கர்கள் றோம் இராச்சியத்தை வீழ்த்துவதற்கு மரக் குதிரை யொன்றை போர்க்களத்திலேயே விட்டுவிட்டு வந்து விட்டார்கள். அதனை வெற்றியின் சின்னமாக றோமர்கள் இழுத்துச் சென்றிருக்கிறார்கள். அன்றிரவே அவர்கள் வெற்றிக்களிப்பில் மது மயக்கத்தில் குதூகலித்த வேளை இரவோடு இரவாக மரக்குதிரையினுள் மறைந்திருந்த வீரர்கள் றோமைக் கைப்பற்றியதன் அர்த்தத்தில் றோயன் குதிரைகள் என இவ்வகை ஒற்றர் பொருளுக்குப் பெயரிட்டிருக்கிறார்கள். அதைவிட விளம்பரங்களால் தொல்லைப்படுத்தும் ஒருவகை பிறழ்பொளான adware உம் இந்த ஒற்றர் பொருளின் வகையினதாகும்.

**பொற்ஸ்** (bots)

இவை கணினி வலையமைப்புகளுடன் தொடர்பட்டுக்கொண்டிருக்கும். இணையம் மூலம் கலந்துரையாடப்படும் விடயங்கள் மற்றும் தகவல்களை சேகரித்து அனுப்பும்.

**கொள்ளைக்காரர்** (Hijackers)

வணிக, வர்த்தக போட்டிகளால் இவ்வகை பிறழ்பொருள்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. நாம் ஒரு இணையத்தளத்தினுள் பிரவேசிக்கும் போது இப் பிறழ்பொருள் நம்மை வேறு ஒரு இணையததளத்திற்கு இட்டுச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Fileless malware

இவை மிக ஆபத்தான பிறழ்பொருள்கள். ஏனெனில் ஒரு கோப்பாக தன்னை வெளிக்காட்டினால்தான் அவற்றை தேடி அழிக்கமுடியும். இவை தம் செயற்பாடுகளையோ தன்னையோ வெளிக்காட்டாது. அவற்றை அழைப்பதென்பது சவாலான விடயமாகும்.

**பிஷிங்** (Phishing)

இவைபற்றியே சாதாரணமாக திறன்பேசிகளைப் பயன்படுத்துவபர்கள் அவதானமாக இருக்கவேண்டும். ஒரு நபரை ஏமாற்றி அவரது வங்கிக் கணக்கு, கடவுச்சொற்கள் போன்ற பிரத்தியேக தகவல்களைக் களவாடும் செயலே பிஷிங் ஆகும். உங்களுக்குத் தெரிந்த நண்பனின் மூலமோ அல்லது ஒரு கம்பனியின் பெயரிலோ மின்னஞ்சல் அல்லது WhatsApp, Viber போன்றவற்றில் ஓர் இணைப்பு அனுப்பப்படும். அந்த இணைப்பு ஒரு போலி வலைத்தளத்திற்கு உங்களை இட்டுச்செல்லும். அதில் நீங்கள் தகவல்களை வழங்குவதன் மூலம் உங்களின் பிரத்தியேக தகவல்கள் திருடர்களிடம் சென்று விடும். இதனால் பணமோசடி மற்றும் பல சமூகச் சிக்கல்கள் இன்றும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இதனை வெளியேயும் சொல்லமுடியாமல் எதுவுமே செய்யமுடியாமல் பாதிப்புறும் குடும்பங்கள் ஏராளம்.

காலம் மாறிவிட்டது. அனைவரது கைகளிலும் நவீன சாதனங்கள். எம்மைச் சுற்றி நடக்கும் அபாயங்களை அறியாமலே நாம் இருப்பது தவறாகும். அதே வேளை நவீன சாதனங்களை புறக்கணிக்கவும் முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதற்கு என்ன செய்யலாம்? எப்படி எமது கணினிகளையோ திறன்பேசிகளையோ பாதுகாக்கலாம்? அதற்கான சில வழிகள் இதோ:

1. உங்களது சாதனத்தின் பணிசெயல்முறைமைகளையும் (operating system) பிரயோக மென்பொருள்களையும் (Apps) இற்றைப்படுத்தியபடி (update) இருக்கவேண்டும். எனவே நீங்கள் பயன்படுத்தும் மென்பொருள்களுக்கான புதிய பதிப்புகள் (updates) இருக்கிறதா என அறியவேண்டும்.
2. அனாவசிய வலைத்தளங்களுக்குச் செல்வதையோ அல்லது உங்களுக்கு அறிமுகமில்லாவர்கள் அனுப்பும் செய்திகளை திறப்பதையோ தவிர்க்கவேண்டும்.
3. அளவுக்கதிகமாக தேவையற்ற மென்பொருள்களை கணினியில் நிறவுவதைத் தவிர்க்கவேண்டும். பயன்படுத்தாத மென்பொருள்களை அழித்துவிடவும் (uninstall).
4. நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருளை (antivirus) பயன்படுத்தவேண்டும்.
5. உங்கள் கைப்பேசிகளை யாரிடமும் இரவல் கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுத்தாலும் ஏதும் மாற்றஞ்செய்யப்பட்டிருக்கிறதா எனச் சோதிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கடவுச்சொற்களை மற்றவர்கள் ஊகிக்க முடியாதபடி இடவேண்டும். அடிக்கடி அதனை மாற்றுவதும் நல்லது.
7. எப்போதும் பதிப்புரிமையுடைய மென்பொருள்களையே கணினிகளில் பயன் படுத்துங்கள். சட்டவிரோத மென்பொருள்களைப் பயன்படுத்துவதால் அவற்றுடன் தீங்கு பயக்கும் மென்பொருள்களும் இருக்கும் என்பதை அவதானத்திற் கொள்ள வேண்டும்.
8. பதிப்புரிமையற்ற திறந்த மென்பொருள்களும் உள்ளன. அவற்றைப் பயன் படுத்துவதில் சிக்கலில்லை. உதாரணம் Libre office, Linux OS, GIMP
9. அனாவசியமாக மின்னஞ்சல் அல்லது google form இல் உங்கள் வங்கித் தகவல்கள் போன்ற கணக்குவிபரங்களை கொடுப்பதில் அவதானமாக இருங்கள். கடவுச்சொற்களை யாரிடமும் நீங்கள் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை.
10. உங்கள் வங்கிக் கணக்கினை அடிக்கடி சோதித்துக்கொள்ளுங்கள்.

அதுமட்டுமல்லாமல் அனாவசியமாக இலத்திரனியல் சாதனங்களுக்குச் செலவுசெய்யாதீர்கள். பயன்படுத்தக்கூடிய நிலையில் தொலைபேசியோ கணினியோ இருந்தால் அதனை மிகக் கவனமாகப் பயன்படுத்துங்கள். உங்களக்குப் பயன்படுத்த விருப்பமில்லையென்றால் பயன்பெறக்கூடிய யாருக்கும் கொடுத்துவிட்டு புதிதாக வாங்கிக்கொள்ளுங்கள். வீணே இலத்திரனியல் சாதனங்களை சூழலில் வீசுவதால் நாமும், நமது எதிர்காலச் சந்ததிகளும் பல நோய்களுக்கு முகங்கொடுத்தல், பொருளாதாரச் சுமை போன்ற பாரிய சிக்கலை சந்திக்க நீங்கள் ஒரு காரணியாக இருக்கவேண்டாம்.

மாற்றம் ஒன்றே மாறாதது. மாற்றத்தை ஏற்றுக்கொள்வோம். அச்சுறுத்தல்களை அறிந்துகொண்டு அவதானமாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60
1963 - 2023
years
Diamond Jubilee

# மணிவிழா மலர்

## பின்னிணைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை நாயகன்

கல்விக்காக தன்னை அர்ப்பணித்த சரா.புவனேஸ்வரன் அவர்கள் ஓய்வு பெறுவது துயரான விடயம் ஆகும்.

கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரிவின் சம்பூரணமான தனித்தமிழர்கள் வாழும் சம்பூர் கிராமத்தில் தமிழரின் உரிமைக்கான போராட்டங்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் இருபது ஆண்டுகள் கிராம சபையின் தலைவராக இருந்து பல்வேறு சமூகப்பணிகளைச் செய்து மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து கல்வி, விவசாயம் போன்றவற்றில் வரலாற்றுத் தடங்களைப் பதித்த வடமராட்சி மண்ணின் புதல்வரான அமரர் நா.சி.சரவணமுத்து அவர்களின் ஒன்பதாவது ஆண்மகனாகப் பிறந்தவரே திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள்.

தந்தையைப் போல மண்பற்றும், மக்கள் சேவையும் உரித்தாகக் கொண்டவராக வளர்ந்தவர். கல்வியிலும், விளையாட்டிலும் மிகுந்த ஆர்வமுள்ளவராக இருந்து உயர்தரம் கற்கும் காலத்தில் விடுதலைப்போராட்டம் ஆரம்பமாகி அதனால் பல குடும்ப உறுப்பினர்களை இழந்து! தளராத மன உறுதியோடு 1988 ஆம் ஆண்டு ஆசிரிய தொழிலை விரும்பி ஏற்றுக் கொண்டார்.

அரியாலை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தமது பணியை ஆரம்பித்தார். அப்போது அவருக்குக் கிடைத்த மாதாந்த வேதனம் 1440 ரூபா மட்டுமே. அதில் நானூற்று நாற்பது ரூபாவை மாணவர்களின் நலனுக்காகச் செலவுசெய்தார். பின்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்றார். அக்காலத்தில் விளையாட்டுத் துறையில் 100மீற்றர் ஓட்டப் போட்டியில் புதிய சாதனை படைத்தார்.

விளையாட்டுதுறை மட்டுமன்றி நாடகத்துறையிலும் சிறந்து விளங்கினார். "மூவிராசாக்கள்" என்னும் அமரர் கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளை அவர்களின் நாட்டிய நாடகத்தில் விசேட கதாபாத்திரத்திலும், "வேளம்பெடுத்த வீராங்கனை" எனும் அமரர் மெற்றாஸ் மெயில் அவர்களின் நாட்டிய நாடகத்தில் கட்டியக்காரனாகவும் நடித்து பல ரசிகர்களின் மனங்களை வென்றவர்.

பல்துறை விளையாட்டு வீரரான இவர் கரப்பந்தாட்டத்தில் விசேட தேர்ச்சிபெற்ற ஆட்டக்காரனாகவும் பயிற்றுவிப்பாளராகவும் விளங்கியவர். இவரின் விளையாட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைத் திறமைகளை அறிந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அப்போதைய அதிபர் அமரர் கவிஞர் நாக.சண்முகநாதபிள்ளை அவர்கள் இவரை மத்திய கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியராகப் பெற்றுக்கொண்டார். மிகவும் கண்டிப்பான கருணையுள்ள அன்புள்ள ஆசிரியராக பல முகங்களில் இவரைநாம் பார்த்துள்ளோம்.

விளையாட்டுத்துறையில் அளவிடமுடியாத சாதனைகள் இவரால் நிகழ்த்தப் பட்டமையை நாம் அறிவோம். விளையாட்டுத் துறையில் மட்டுமல்லாது கற்பித்தல் துறையிலும் சிறந்தவர் என்பதனை நிரூபிக்க தனக்கு ஒரு வாய்ப்பைத் தருமாறு அதிபரிடம் கேட்டார். அப்போதைய அதிபரும் அதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுக்க தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 53 ஆண்டுகளுக்குப் பின்னர் பதின்மூன்று மாணவர்களை சித்திபெற வைத்து சாதித்துக் காட்டினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விளையாட்டுத் துறைக்கான பட்டம் பெற்ற இவர் மத்திய கல்லூரியில் பத்து ஆண்டுகள் பணியை நிறைவு செய்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விரிவுரையாளரானார். யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது இவரும் பல்வேறு வழிகளில் பங்காற்றினார். பல அருமையான ஆசிரிய மாணவர்களை உருவாக்கினார். அதன் பின்னர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக இணைந்து கல்லூரியில் பல பணிகளில் பல ஆண்டுகள் முன்நின்று தொழிற்பட்டதோடு பல்லாயிரம் ஆசிரிய மாணவர்களுக்கு வழிகாட்டியானார்.

அத்தருணம் இவரின் துடிப்பான சேவையும் தூய்மையான சிந்தனையும் பலரையும் கவர்ந்திருந்தது. அத்தகைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்ற உயரிய கௌரவ பதவி ஏகமனதான தெரிவின் மூலம் இவருக்கு வழங்கப்பட்டது.

பன்னிரெண்டு ஆண்டுகள் தமிழர் கல்விக்காக அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்களின் நலனுக்காக இரவு பகல் பாராது அயராது உழைத்ததை நாம் அறிவோம். இடையில் பாரிய நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டிருந்த போதும் பீனிக்ஸ் பறவை போல மீண்டெழுந்து இப்போதும் துடிப்போடு உள்ள சரா சேர் எனும் பெரு மகனார் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவது பலருக்கும் கவலை. நம்பமுடியாத செய்தி.

உலகில் உள்ள பல்வேறு நாடுகளுக்கும் கல்வியோடு தொடர்புடைய மகாநாடுகள் ஆய்வரங்குகள் போன்றவற்றில் பங்கெடுத்து பாராட்டுகளைப் பெற்றவர். தன்னால் இயக்கப்படுகின்ற கல்வி நிறுவனமூடாக பலநூறு மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி வழங்கி அவர்களில் பலர் இன்று உயர்வான நிலையில் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுமுழுவதும் உள்ள ஆரம்பப் பாடசாலைக் குழந்தைகளுக்காக முப்பத்தைந்து ஆண்டுகளாக இவரால் தயாரித்து வெளியிடப்படும் வெற்றித்தேர்வு எனும் வினாப் பத்திரம் அது சார்ந்த நூல்கள் இவரின் தொடர் சாதனைக்கும், சமர்ப்பணத்திற்கும் ஆதாரம்.

ஆக நல்ல கண்டிப்பான கருணை உள்ளம்கொண்ட ஆசிரியராக, உதவி செய்யும் உத்தம மனிதராக, எல்லோரையும் சமமாக மதிக்கும் பண்பாளனாக மண்ணின் மீதும் மக்களின் மீதும் தமிழ் குழந்தைகள்மீதும் அளப்பரிய பற்றுதல் கொண்ட உயரிய மனிதனாக உயர்திரு. சரா.புவனேஸ்வரன் அவர்களை எப்பொழுதும் பார்க்கின்றோம். பார்ப்போம். ஓய்வே இல்லாமல் இளைஞனாக என்றும் ஆற்றிய பணிகளைத் தொடர அன்பு மாணவர்களாக வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள்

**இக்கட்டுரை 01.06.2023 மணிவிழா நாயகனின் பிறந்த தினத்தன்று உதயன் பத்திரிகையில் பிரசுரமானது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நிகழ்வுகளை முன்னிட்டு சயன்ஸ் அக்கடமி மாணவர்களிடையே நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளுக்கான முடிவுகள்

<u>கனிஸ்ட பிரிவு</u>

**பேச்சு**

முதலாமிடம் செல்வன் .T.மிதுன் - அரியாலை சயன்ஸ் அக்கடமி
இரண்டாமிடம் செல்வன் .S.கபிஷன் - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
மூன்றாமிடம் செல்வி. U.கஜீனா - அரியாலை சயன்ஸ் அக்கடமி

**கட்டுரை**

முதலாமிடம் செல்வி. V.திவ்யா - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
இரண்டாமிடம் செல்வி. A.தரங்கினி - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
மூன்றாமிடம் செல்வன். S.கபிஷன் - நல்லூர் சயன்ஸ் அக்கடமி

**கவிதை**

முதலாமிடம் செல்வி. T.நிலாழினி - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
இரண்டாமிடம் செல்வி. M.மதுஷி - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
மூன்றாமிடம் செல்வன் T.தருண் - நல்லூர் சயன்ஸ் அக்கடமி

<u>மேற்பிரிவு</u>

**பேச்சு**

முதலாமிடம் செல்வி. J.மகிழினி - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
இரண்டாமிடம் செல்வி. S.கிறேஸ்செலினா - அரியாலை சயன்ஸ் அக்கடமி
மூன்றாமிடம் செல்வி. M.பிரவினா - நல்லூர் சயன்ஸ் அக்கடமி

**கட்டுரை**

முதலாமிடம் செல்வி. V.அபிநயா - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
இரண்டாமிடம் செல்வி. J.மகிழினி - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
மூன்றாமிடம் செல்வன்.S.தர்சிகன் - நல்லூர் சயன்ஸ் அக்கடமி

**கவிதை**

முதலாமிடம் செல்வி. K.குழலிசை - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
இரண்டாமிடம் செல்வி. K.ரிஷானா - நல்லூர் சயன்ஸ் அக்கடமி
மூன்றாமிடம் செல்வன்.K.சஞ்ஜீவ் - அரியாலை சயன்ஸ் அக்கடமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட சயன்ஸ் அக்கடமி மாணவர்களுக்கிடையிலான இலக்கியப்போட்டிகளில் முதலிடம் பெற்ற கட்டுரை**

# எங்கள் இயக்குநர்

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த திருகோணமலையிலே அமரர்களான நா.சி சரவணமுத்து, இரத்தினம் தம்பதியற்கு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து மூன்றாம் ஆண்டு ஆனி மாதம் முதலாம் திகதி ஒன்பதாவது குழந்தையாகப் பிறந்தவரே எங்கள் இயக்குநர் உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்கள். இவரின் தந்தை சரவணமுத்து திருகோணமலை சம்பூர் பாடசாலையை மகாவித்தியாலயமாக்க அரும்பாடுபட்டு வெற்றிகண்டவர். தந்தையாரின் பாணியில் வளர்ந்த எங்கள் இயக்குநர் திருகோணமலை சம்பூர் பாடசாலையில் க.பொ.த உயர்தரத்தை தொடக்கி தன்னைப்போன்ற நல்லாசான்களும், தொழில்வல்லுனர்களும் சமூகசேவகர்களும் உருவாக வித்திட்டவர். சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்தது மட்டுமன்றி அடுக்கடுக்காக நான்கு சகோதரர்களை இழந்த போதும் மனம் சளைக்காமல் நேரிய பாதையில் சென்று வெற்றி கண்டார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து எட்டாம் ஆண்டு அரியாலை கிழக்கு அரிசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார் . பின்னர் யாழ்ப்பாணம் கல்வியற்கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து நற்ப்பணிகளை செய்தபின் ஆசிரியர் கலாசாலையிலும் விரிவுரையாளராகச் செயற்பட்டு இன்று மதிப்பிற்க்குரிய எங்கள் இயக்குநராக உள்ளார்.

தான் பலவருடம் வாழ்ந்த அரியாலை மீதுள்ள பற்றால் தனது கல்வி நிறுவனமாகிய சயன்ஸ் அக்கடமியின் இரண்டாவது கிளையை அரியாலையில் நிறுவினார். இதன் கிளை ஆறுமுகப்பெருமான் ஆட்சிபுரியும் நல்லூரில் நிறுவப்பட்டது. இக்கல்வி நிறுவனத்தை ஓர் ஊடகமாக பயன்படுத்தி பல லட்சம் மாணவர்களின் வாழ்வை ஒளிமயமாக்குகின்றார் எங்கள் இயக்குநர் பல சாமானிய மாணவர்களை சாதனையாளர்களாக்குகின்ற பெருமை எங்கள் இயக்குநர் சரா.புவனேஸ்வரன் அவர்களையே சாரும்.

திருமலையும் யாழ்ப்பாணமும் அறிந்த இவரின் பெருமை இலங்கை முழுதும் அறியக்காரணம் இவரின் திறமையினால் உருவான தரம் ஐந்து மாணவர்களிற்கான "வெற்றித்தேர்வு"வினாப்பத்திரம் ஆகும். இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் பிற்பகுதியில் முதன்முதலில் வெளியான "வெற்றித்தேர்வு"வினாப்பத்திரம் தற்போது தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் மாதிரி வினாப்பத்திரம் அடையாளமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றது. மேலும் தரம் ஐந்து மாணவர்களிற்கு கருந்தரங்குகளும் "சயன்ஸ் அக்கடமி" நிறுவனத்தில் நடைபெறுகின்றன அந்த வகையில் எங்கள் இயக்குநர் புலமைப்பரிசிலின் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றார். அதுமட்டுமன்றி க.பொ.த சாதாரணதரப்பரீட்சை எழுதும் மாணவர்களிற்கும் சிறந்த முறையில் கருத்தரங்குகளும் நடை பெறுகின்றது.

"சயன்ஸ் அக்கடமி"கல்வி நிறுவனத்தினூடாக எங்கள் இயக்குநர் மாணவர் களின் கல்விச் செயற்பாடுகளை சிறந்த முறையில் ஊக்குவிக்கின்றார். இங்கு ஒழுக்க நெறியுடன் கூடிய கற்பித்தல்கள் இடம்பெறுகின்றன ஒருமுறை உயர்திரு.சரா புவனேஸ்வரன் அவர்களின் கல்வி நிறுவனத்தைப் பார்வையிட்ட தேசிய கல்வி நிறுவன முன்னாள் பணிப்பாளர் திருமதி விலானி அமரசிங்க அவர்கள் இது போன்ற கட்டுக்கோப்புடனான கல்வி நிலையத்தை நான் முதன் முதலில் இப்பொழுது தான் காண்கின்றேன் என பெருமையுடன் கூறியுள்ளார். மேலும் எங்கள் இயக்குநர் நிதியுதவி அற்ற மாணவர்களிற்கு அரியாலை அபிவிருத்தி சங்கத்துடன் இணைந்து பல உதவிகள் செய்து வருகின்றார்.

இவ்வாறான இரக்க குணமும் பலதரப்பட்ட திறமையும் உள்ள எங்கள் இயக்குநர் சரா. புவனேஸ்வரன் அவர்கள் சர்வபுவனம் ஆளும் ஈஸ்வரனின் துணையுடன் பல்வேறு தரப்பட்ட மாணவர்களை ஊக்குவிக்க பிராத்திக்கின்றேன்.

**செல்வி. V. அபிநயா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட சயன்ஸ் அக்கடமி மாணவர்களுக்கிடையிலான இலக்கியப்போட்டிகளில் முதலிடம் பெற்ற கவிதை**

# மாண்புறு மணிவிழா

அக்கடமி வாசலிலே
அழகான அலங்காரம்
சங்கதி என்னவென்று
இங்கிதமாய் வினவிடை

பார்போற்றும் எங்களது
பண்பாளச் செல்வரிற்கு
தேரோடும் வீதியிலே
சீரோடும் சிறப்போடும்
ஊர்போற்றும் மணிவிழாவாம்.

வாசலிலே தோரணங்கள்
வந்தோரை வரவேற்க
உருவாக்கி விட்டவர்கள்
உற்சாகக் குரல் கொடுக்க
கருவாக சுமப்பவர்கள்
கரகோசம் தானெழுப்ப
அரங்கத்திலே அமர்ந்திருக்கும்
அன்பரே வாழியநீர்!

அகவை அறுபது
அடங்கிவிடும் வயதுஅல்ல
அனுபவத்தின் வயதுஅது
ஆற்றலின் வயது அது
ஆர்ப்பரிக்க அலைகடலில்
வீறுகொண்டெழும் அலைபோல
வீரமான வயது அது.

கல்வியையும் ஒழுக்கத்தையும்
கலந்தளித்த ஆசானே
எம் சந்ததியும் இங்கு வந்து -உமக்கு
தொல்லைதரும் காலம் வரை அல்லலின்றி நீர்வாழ
நல்லைக்கந்தனையே வேண்டுகின்றேன்.

ஊர்போற்றும் எங்களது
உத்தமரின் பணிபோற்றும் மாண்புமிகு மணிவிழாவை
மகிழ்வுடனே காணவாரீர்
மகிழ்வுடனே காணவாரீர்.

செல்வி. K. குழலிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனின் பிறந்தநாளன்று வலம்புரி நாளிதழில் வழங்கப்பட்ட மணிவிழா வாழ்த்துகள்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர்

## உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களின்

## மணிவிழா வாழ்த்து




அன்புடனே அறிவுநிறை திருவடிவம் நீங்கள்
ஆசிரியர் துயர் துடைக்கப் பிறந்தவரே நீங்கள்
இன்முகமும் இன்சொல்லும் உந்தன்அணி கலன்கள்
எவர்தேடி வந்தாலும் உதவிடும்அன் புள்ளம்

ஆசிரிய கலாசாலை விரிவுரையா ளர்நீர்
ஆயிரமாய் அவர்களினைச் செதுக்கியநற் சிற்பி
தேசமிகும் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கச்
செயலாள ராய்இருந்து செய்தபணி கோடி

ஓய்வுபெறும் காலமது இனிதாக அமைய
இல்லாளும் பிள்ளைகளும் மகிழ்வுடனே இருக்க
தூயஇறை பதம் பணிந்தோம் நூறகவை வாழ்க!
தொண்டினிலே இமயமென நின்றவரே வாழ்க!

அதிபர்கள், ஆசிரியர்கள்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

---

நல்லூர், அரியாலை சயன்ஸ் அக்கடமியின் இயக்குநரும், வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின் பிரதம ஆசிரியருமான

## உயர்திரு சரா. புவனேஸ்வரன்

அவர்களுக்கு

## அகவை 60

## மணிவிழா நல்வாழ்த்துக்கள்




சரவணமுத்தர் செய்மா தவத்தால் கிழக்கினிலுதித்த
புவனேஸ்வரனார் புலமையாற்பெரு மதியதுபெருக்கி சாதித்திடவே - வடக்கினிலேகி
வசந்தினியவரைக் கரமதுபிடித்திட வீசுபுகழுடன் வசந்தம்வீச
வித்தகர் போற்றிடும் பணியினிலமர்ந்தாரே

எழுத்தறிவிக்கும் இறைபணியாற்றி சயன்ஸ் அக்கடமி
ஆணிவேராய் ஒழுங்கினிலுயர்ந்த பல்லறிஞரையே தோற்றுவித்து - நிர்க்கதியான
பிஞ்சுகளைத்தான் இலவசக்கல்வி போதித்துயர்த்தப் பொலிவுபெறவே
புதுவழிகாட்டிய தனிப்பெரும் பொக்கிசம்

வெற்றித்தேர்வு நாயகனாரை வெகுமதியோடே மேதினியெங்கும்
அறிஞரெல்லாம் மாசறுபெருமை மதித்துத் துதிக்க - மணிவிழா நாளில்
நூற்றாண்டு காண இறையருள் இறைஞ்சினோம்
பத்தரை மாற்றுச் சொக்கத்தங்கம்.

ஆசிரியர்கள்
சயன்ஸ் அக்கடமி
நல்லூர், அரியாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற கௌரவிப்பின் பதிவுகள் சில...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனின் பொன்விழாப் பதிவுகள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனின் தொழிற்சங்கப் பணிகளின் பதிவுகள் சில..



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கடமியின் நிகழ்வுகளின் பதிவுகள் சில...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றித்தேர்வு மாணவர்களுக்கான செயலமர்வுப் பதிவுகள் சில...

















வெற்றித்தேர்வு மாணவர்களுக்கான செயலமர்வுப் பதிவுகள் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்காக மணிவிழா நாயகனால் வெளியிடப்பெற்ற வெற்றித்தேர்வு வழிகாட்டி நூல்கள்




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழகம், கலாசாலையில் சில பதிவுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப நிகழ்வுகளின் பதிவுகளில் சில...




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எம் நன்றிகள்

எங்கள் மணிவிழா நாயகன் உயர்திரு சரா. புவனேஸ்வரன் அவர்களின் நயத்தகு சேவைகளுக்கு மதிப்பளித்து மென்மேலும் அவரின் பணி சிறந்தோங்கிட அவரது 60 ஆவது நிறைவில் மணிவிழா நிகழ்வுகளை நடாத்துவதற்கும் அவரின் சிகரம் வைத்தாற் அமைந்த வாழ்க்கைத் தடங்களையும் பதிவு செய்யும் பல்துறை வித்தகர் சரா. புவனேஸ்வரன் எனும் மணிவிழா மலரை வெளியிடுவதற்காகவும் சரா மணிவிழாச் சபையை அங்குரார்ப்பணம் செய்தபோது அதனை செயல் வடிவம் கொடுக்க முன்னின்று உழைத்த அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவிப்பதில் மன நிறைவு அடைகின்றோம்.

எம் மலரில் இடம்பெற்றுள்ள ஆசிச்செய்திகளை வழங்கிய மதகுருமார்கள், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய அரச உயர் அதிகாரிகள், கல்வியாளர்கள் சமூக பெருந்தகைகள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதில் பெரு மகிழ் வடைகிறோம். அத்துடன் விழா நாயகர் பற்றிய குறிப்புக்கள், விழா நாயகர் பற்றிய ஆக்கங்கள், பல்துறைசார் ஆக்கங்கள் என்பவற்றை வழங்கிய பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் விழா நாயகனின் நட்பு வட்டத்தில் உள்ள பெரியோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

அத்துடன் எம் மணிவிழா மலர் சிறப்புற அமைய ஆதரவு நல்கிய அனைத்து தரப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இம்மலரினை குறுகிய காலத்துள் மிக நேர்த்தியாகவும், சிறப்பாகவும் அச்சிட்டு வழங்கிய எஸ். எஸ். ராஜா பிரிண்டர்ஸ் ஸ்தாபஸ்தினருக்கும், உளம் கனிந்த நன்றிகளைத் காணிக்கையாக்குகின்றோம்.

மணிவிழா நிகழ்வுகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கும், மணிவிழா மலரினை வெளியிடுவதற்கும் மனமுவர்ந்து அன்பளிப்புக்களை வழங்கி உதவிய சயன்ஸ் அக்கடமி ஆசிரியர்கள், எஸ். எஸ் ராஜா அச்சக உரிமையாளர், விழா நாயகனின் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதில் பேருவகை அடைகின்றோம்.

மேலும் மணி விழா நிகழ்வுகள் நடந்தேறுவதற்கு இறுதி வரை ஆக்கமும் ஊக்கமும் அளித்து எம்முடன் இணைந்து செயற்பட்ட அனைவருக்கும், விழாவில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் சிரம் தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்து அமைகின்றோம்.



என்றும் அன்புரிமையுடன்
சரா மணிவிழாச்சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org